தமிழ்நாட்டின் மொழிச்சூழல்

எஸ். பூபதி

G5284
007E05

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்– 613 005.

UG-5284

ISBN : 81-7090-265-7

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டு எண் : 205

திருவள்ளுவர் ஆண்டு *2029* பங்குனி - ஏப்பிரல் *1998*

நூல்	:	தமிழ் நாட்டின் மொழிச்சூழல் (தமிழ் நாட்டில் வழங்கும் மொழிகள்)
ஆசிரியர்	:	**எஸ் . பூபதி**
பதிப்பு	:	முதற்பதிப்பு
அச்சுக் கோர்ப்பு	:	கே.பி.டி அச்சகம், சிதம்பரம்.
விலை	:	ரூ. *120/.*
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம் தஞ்சாவூர் - *1.*

முனைவர் **கி. கருணாகரன்** தமிழ்ப் பல்கலைக்கழகம்
துணைவேந்தர் தஞ்சாவூர்

அணிந்துரை

இந்தியாவில் நான்கு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட மொழிகளும், நாலாயிரத்துக்கும் மேற்பட்ட கிளை மொழிகளும் பேசப்படுகின்றன. இதனாலேயே இந்தியாவை மொழியியல் அறிஞர்கள் பன்மொழிச்சூழல் வழங்கும் நாடுகளில் முதன்மையானதாகக் குறிப்பிடுகின்றனர். "ஓரினம், ஒரு மொழி, ஒரு நாடு" என்ற மொழியியற் கொள்கை தளர்ந்துவிட்ட இன்றைய காலச்சூழ்நிலையில் பன்மொழிச்சூழலில் உருவாகியிருக்கும் சமுதாய மொழியியல் தகவல்களை வகைப்படுத்திக் கூறுவதை தனி ஆய்வாகவே சமுதாய மொழியியலாளர் வகைப்படுத்தியுள்ளனர் இத்தகைய சமுதாய மொழியியல் "கருத்துக்கோவை" இந்தியா போன்ற பன்மொழிச்சூழல் நிலவும் நாடுகளில் இன்றியமையாத ஓர் ஆய்வாக அமைகிறது. தமிழ்நாட்டில் வழங்கும் மொழிகளைப் பற்றிய நல்லதொரு - பயனுள்ள ஆய்வாக இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலின் ஆசிரியர் முனைவர் எஸ். பூபதி இந்தியாவில் வழங்கும் பல மொழிகளின் - மொழிக்குடும்பம் தொடர்பான ஆய்வுகளில் மிகுந்த அனுபவம் கொண்டவர். இவர் கிளைமொழியியல், சமுதாய மொழியியல், கள மொழியியல் போன்ற பிரிவுகளில் ஆழ்ந்த ஆய்வு அனுபவமும் புலமையும் கொண்ட சிறந்த ஆய்வியல் ஆறிஞர், இவரது "தமிழ் நாட்டில் வழங்கும் மொழிகள்" எனப்படும் இந்நூல் ஆட்சியாளர்கள், திட்ட வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களுக்குப் பொதுநிலையிலும், மொழியியலாளர்களுக்குச் சிறப்பு நிலையிலும் பயனுறும் என்று நம்புகிறேன். இவ்வாய்வினைச் சிறந்த முறையில் 'டைத்து வெளிக்கொணர்ந்த இந்நூல் ஆசிரியருக்கு எனது பாராட்டுக்கள் - நல்வாழ்த்துக்கள் உரியன. இந்நூல் நல்ல - பரந்த - வரவேற்பினையும் பயன்பாட்டினையும் பெறும் என நம்புகிறேன்.

கி. கருணாகரன்

முன்னுரை

ஒரு சமுதாய அமைப்புக்குள் உருவாகியுள்ள சமுதாய மொழியியல் தகவல்களை வகைப்படுத்தி, தொகுத்துத் தரும் ஆய்வு முறையைச் 'சமுதாய-மொழியியல் கருத்துக் கோவை' (Socio-linguistic profile) என்கிறோம். இவ்வகை ஆய்வுகள் ஒரு நாட்டைப் பற்றிய தகவல்களையோ (Stewart: 1962, 1968) பல நாடுகள் ஒன்றிணைந்த ஒரு பெரும் பகுதியைப் பற்றிய தகவல்களையோ (Brawn, 1988), ஒரு நகரம் பற்றிய தகவல்களையோ (Johnson : 1973) தொகுத்துக் காட்டுவனவாக இருக்கும். ஒரு சமுதாய-மொழியியல் கருத்துக்கோவையின் அடிப்படை விளக்கமாக அமைவது 'மொழிச்சூழல்' எனலாம் (Stefan : 1971, Shopen : 1979). உலகின் பல நாடுகளைப்பற்றிய 'சமுதாய- மொழியியல் கருத்துக்கோவை' ஆய்வுகள் மற்றும் 'வழக்கில் உள்ள மொழிகள்' பற்றிய ஆய்வுகள் பல இதுவரை நடந்துள்ளன (Comrie : 1981, Dixon : 1980, Ferguson : 1981, Trudgill : 1984).

ஒரு மொழியைப் பேசுவோரின் எண்ணிக்கை, எழுத்து, மொழி, நிலைபேறாக்கம், பயிற்சி மொழி, தகவல்-தொடர்பு மொழி பற்றிய தகவல்களைத் தருவனவாக சில ஆய்வுகள் உள்ளன. ஒரு மொழி 'தாய்மொழியாகவும்', 'பிற மொழி யாகவும்' பயன்பாட்டில் உள்ள நிலை, 'மொழி ஆள் குழுமம்' (domains of language use), மொழி பற்றிய மனப்பாங்கு (language attitude) ஆகியவற்றை விளக்குவனவாக வேறு சில ஆய்வுகள் உள்ளன. மொழியியல் கூறுகள், மொழிநிலை (language status), மொழிப்பயன்பாடு (language function), செம்மொழி, அதன் மொழிவகை வழக்குகள் (varieties) ஆகியன பற்றிய தகவல்கள் பிற் ஆய்வுகளில் அடங்கியுள்ளன.

இவ்வாய்வுகளின் முக்கிய கூறுகளையும், தமிழகச் சூழலையும் அடிப்படையாகக்கொண்டு, 'தமிழ்நாட்டில் வழங்கும் மொழிகள்' என்ற ஆய்வு எழுதப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, மொழிச்சூழல், திராவிட மொழிக்குடும்பம், தமிழின் கிளைமொழிகள், தெலுங்கு, கன்னடம் மற்றும் ஏனைய திராவிட மொழிகள் பற்றிய தகவல்கள் இவ்வாய்வில் இடம் பெற்றுள்ளன.

'தமிழ்நாடு' என்ற தலைப்பின்கீழ் தமிழ்நாட்டின் நிர்வாகப் (மாவட்டம் முதலியன) பிரிவுகள், மக்கட்தொகை, எழுத்தறிவு பெற்றோர், தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினர் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில் மொழிச் சூழல், இரு மொழியம் மற்றும் பன்மொழிய சூழல்கள் மாவட்ட வாரியாக விளக்கப் பட்டுள்ளதால் மக்கட்தொகை விவரங்களும், எழுத்தறிவு பெற்றோர் விழுக்காட்டிற்கும், மொழி மாறுபடும் தன்மைக்கும் உள்ள தொடர்பு விளக்கப் பட்டுள்ளதால் எழுத்தறிவு பெற்றோர் பற்றிய தகவல்களும், தமிழ்நாட்டில் வாழும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பேசும் தமிழின் கிளை மொழிகள், மற்றும் திராவிட மொழிகள் பற்றிய விவரங்கள் இவ்வாய்வில் உள்ளதால் 'தாழ்த்தப்பட்டோர்' பற்றிய தகவல்களும் 'தமிழ்நாடு' என்ற தலைப்பில் கொடுக்கப் பட்டுள்ளன. (தமிழ் நாட்டில் **76** தாழ்த்தப்பட்ட இனங்களும், **36** பழங்குடி இனங்களும் உள்ளதென அரசு ஆணை தெரிவிக் கிறது. தாழ்த்தப்பட்ட இனத்தவருள் பழியர், புலையர், ஹரிஜன் ஆகியோர் பேசும் தமிழின் கிளை மொழிகளைப் பற்றிய விளங்கங்கள் இவ்வாய்வில் உள்ளன. பழங்குடி இனத்தவருள் தோடர், கோத்தர், இருளர், பணியர், முள்ளுக்குறும்பர், பெட்ட குறும்பர், காடர் ஆகியோர் தனித்தனி மொழிகளைப் பேசுகின்றனர். கொல்லிமலை மலையாளி, பச்சைமலை மலையாளி, கல்வராயன் மலை மலையாளி, மலசர், மலமலசர், ஊராலி சோழகர் ஆகிய பழங்குடி இனத்தவர் தங்கள் (தமிழின்) கிளை மொழிகளைப் பேசுகிறார்கள். பொது சோழகா மற்றும் ஆலு சோழகா ஆகிய இரு பழங்குடி இனத்தவரும் கன்னடத்தின் கிளைமொழிகளையும், கொண்டா காப்பு, கொண்டா ரெட்டி பழங்குடி இனத்தவர் தெலுங்கின் கிளைமொழிகளையும் பேசுகின்றனர். பழங்குடி இனத்தவராக இருந்தும், அரசால் 'பழங்குடியினர்' என ஏற்றுக்கொள்ளப் படாதவர் 'கசவர்' இனத்தவர் மட்டுமே. இவர்களுடைய மொழி தனி மொழியே.)

'தமிழ்நாட்டின் மொழிச்சூழல்' என்ற தலைப்பின்கீழ், 'மொழிச்சூழல்' பற்றிய சமுதாய-மொழியியலாளர்களின் கருத்துக்களும், தமிழ்நாட்டில் நிலவும் மொழிச்சூழலும் விளக்கப்பட்டு உள்ளன. ஃபெர்கூஸன், நிகோல்ஸ்கி, ஸ்டுவர்ட் ஆகியோரின் கருத்துக்களும், அவ்வறிஞர்களின் கருத்துக்களுக்கிடையே உள்ள மாறுபாடுகளும் தரப் பட்டுள்ளன. மேலும், மொழிச்சூழலை விளக்குவதற்கு எவ்வகையான தகவல்கள் அடிப்படை செய்திகளாகின்றன என்பதும், அந்த செய்திகளில் இருந்து பெறப்படும் சமுதாய-மொழியியல் விளக்கங்கள் எவ்வாறு அமையும் என்பதும் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்து, பல மொழியச் சூழலில் 'மொழிமாறுபடும் தன்மை' கிரீன்பர்க் எவ்வாறு விளக்கு கிறார் என்பதைத் தந்திருக்கிறோம். கிரீன்பர்க்கின் 'தொடர்புச் சாதன சாத்தியக்கூறு', 'மொழி மாறுபடும் தன்மை' பற்றிய அளவீடுகளின் அடிப்படையில் தமிழ்நாட்டின் மொழிச் சூழலை விளக்கி இருக்கிறோம். தமிழ்நாட்டின் மொழிச் சூழலை விளக்க சென்ஸஸ் தகவல் பயன்படும் விதம் பற்றியும், இந்திய சென்ஸஸ் பற்றியும் கூறப்பட்டுள்ளது. மேலும் இந்தியாவின் மொழிச்சூழலை விளக்கும் சில முக்கியமான ஆய்வுகள் பற்றியும் தமிழ்நாட்டில் நிலவும் 'இருமொழியம்' பற்றி நடந்துள்ள ஆய்வுகள் பற்றியும் கருத்துகள் தரப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் மாவட்டங்களில் நிலவும் இரு மொழிய சூழலையும், சில மாவட்டங்களின் இரு மொழியச் சூழலுக்கான காரணங்களையும் தந்திருக்கிறோம். தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களை, அந்த நகரங்களில் வாழ்வோர் பேசும் மொழிகளின் அடிப்படையில், 'ஒரு மொழிய நகரம்', 'பன்மொழிய நகரம்' என்ற பிரிவுகளில் அடக்கி, அதற்கான காரணங்களும் தரப்பட்டுள்ளன. பின்வரும் பகுதிகளில் கிரீன்பர்கின் அட்டவணைகள் - A, H அடிப்படையில் தமிழ்நாட்டின் மொழிச் சூழலும், மொழிகளின் தொடர்புச்சாதன சாத்தியக்கூறுகளும், மொழிமாறுபடும் தன்மையும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. 'மொழிச்சூழல்' என்ற தலைப்பில் தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களுக்கு அடிப்படையாய் அமைந்த சென்ஸஸ் தகவல்கள் பற்றிய அட்டவணைகள் இணைக்கப்பட்டுள்ளன.

அடுத்ததாக உள்ள தலைப்பு 'திராவிட மொழிகள்- ஓர் அறிமுகம்' என்பதாகும். இத்தலைப்பின் கீழ் திராவிட

மொழிகள் பற்றி இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பற்றியும், திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளை வகைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பற்றியும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.'

பின்வரும் பகுதிகளில் தமிழின் வட்டாரக் கிளை மொழிகள், சமுதாயக் கிளை மொழிகள், தொழில் பேச்சு வழக்குகள் போன்ற கிளைமொழிகளைப் பற்றிய மொழியியல் கூறுகள் ஆராயப்பட்டுள்ளன. அவ்வாறே தெலுங்கு, கன்னடம் மற்றும் பிற திராவிட மொழிகள் பற்றிய மொழியியல் விளக்கங்கள் இவ்வாய்வில் இடம் பெற்றுள்ளன.

ஆய்வின் முடிவில் இவ்வாய்வுக்குப் பயன்பட்ட துணை நூல்களின் பட்டியல் ஒன்றும் இடம் பெறுகிறது.

இந்நூல் அச்சு வடிவம் பெற அனுமதி வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கி. கருணாகரன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலின் அச்சுப் பதிவங்களை அழகுற எடுத்துதந்த சிதம்பரம் கேபிடி. அச்சகத்தாருக்கும், செம்மையாக அச்சேற்றம் செய்து உதவிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை மற்றும் அச்சகப் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தஞ்சாவூர் எஸ். பூபதி

துணைநூல்கள்

Brann, Conrad M.B. 1988, ''Sociolinguistic Profile of West Africa". In Amman, U/Dittmar, N. Mattheier, K.J. (eds.) Sociolinguistics/ Soziolinguistik, Vol.2., Berlin/New York: de Gruyter.

Comrie, B. 1981, Languages of the Soviet Union. Cambridge University Press: Cambridge.

Dixon, R.M. 1980, The Languages of Australia. Cambridge University Press. Cambridge.

Ferguson, C.A. 1981, Languages in the U.S.A. Cambridge University Press, Cambridge.

Johnson, Bruce C. 1973, Language use at Larteh, Ghana, Northwestern University Press, Columbus.

Shopen, Timothy (ed.) 1979, Languages and their status, Winthrop Publishers, Inc, Cambridge/ Massachusetts.

Stewart, William, A. 1962, ''An outline of Linguistic Typology for Describing Multilingualism", In Rice, F.A. (ed.) Study of the Role of Second Languages in Asia, Africa and Latin America, Washington.

Stewart, William, A. 1968, ''A Sociolinguistic Typology for Describing National Multilingualism", In Fishman, J.A. (ed.) Readings in the Sociology of Language, Den Haaq/Paris: Monton.

Stefan Warm, ''The Linguistic Situation in Papua New Guinea". In Sebeok, Thomas A. et al (eds.) Current Trends in Linguistics, Vol. 8, The Haque.

Trudgill. Peter, 1980, Languages of the British Isles, Cambridge University Press: Cambridge.

Bibliography

Brann, Conrad M.B. 1988. "Sociolinguistic Profile of West Africa". In Ammon, U/Dittmar, N./Mattheier, K.J. (eds.) Sociolinguistics/ Soziolinguistik. Vol.2. Berlin/New York: de Gruyter.

Comrie, B. 1981. Languages of the Soviet Union. Cambridge University Press: Cambridge.

Dixon, R.M. 1980. The Languages of Australia. Cambridge University Press: Cambridge.

Ferguson, C.A. 1981. Languages in the U.S.A. Cambridge University Press, Cambridge

Johnson, Bruce C. 1973. Language use at Larteh, Ghana. Northwestern University Press, Columbus.

Shopen, Timothy (ed.) 1979. Languages and their status. Winthrop Publishers, Inc. Cambridge/ Massachusetts

Stewart, William, A. 1962. "An outline of Linguistic Typology for Describing Multilingualism". In Rice, F.A. (ed.) Study of the Role of Second Languages in Asia, Africa and Latin America, Washington.

Stewart, William, A. 1968. "A Sociolinguistic Typology for Describing National Multilingualism". In Fishman, J.A. (ed.) Readings in the Sociology of Language. Den Haag/Paris: Mouton.

Stefan Wurm, "The Linguistic Situation in Papua New Guinea". In Sebeok, Thomas A. et al (eds.) Current Trends in Linguistics, Vol. 8. The Hague

Trudgill Peter, 1980. Languages of the British Isles. Cambridge University Press: Cambridge.

உள்ளுறை

1.	தமிழ்நாடு	01
2.	தமிழ்நாட்டின் மொழிச்சூழல்	33
3.	திராவிட மொழிகள் - ஓர் அறிமுகம்	105
4.	தமிழின் கிளைமொழிகள்	117
	1. தமிழின் வட்டாரக் கிளைமொழிகள்	119
	2. தமிழின் சமுதாயக் கிளைமொழிகள்	135
	3. தொழில் பேச்சு வழக்குகள் (தமிழ்)	149
	4. முதுவர் கிளைமொழி (தமிழ்)	156
	5. காணிகாரர் கிளைமொழி (தமிழ்)	161
	6. எருக்கலா கிளைமொழி (தமிழ்)	168
	7. புலையர் கிளைமொழி (தமிழ்)	174
	8. பழியர் கிளைமொழி (தமிழ்)	177
	9. பச்சைமலை மலையாளி பேச்சு வழக்கு (தமிழ்)	179
	10. கல்ராயன் மலையாளி பேச்சு வழக்கு (தமிழ்)	186
5.	தமிழ்நாட்டில் பேசப்படும் தெலுங்கின் கிளைமொழிகள்	193
6.	தமிழ்நாட்டில் பேசப்படும் கன்னடத்தின் கிளைமொழிகள்	201
7.	கசபா மொழி	211
8.	காடர் மொழி	219
9.	முள்ளுக்குறும்பர் மொழி	228
10.	கோத்தர் மொழி	237
11.	பணியர் மொழி	245
12.	தோடா மொழி	259
13.	இருளர் மொழி	265
14.	துணை நூல்கள்	273

1. தமிழ்நாடு

1.1. முன்னுரை

1981 - ஆம் ஆண்டின் சென்ஸஸ் கணக்கீட்டின்படி தமிழ் நாட்டின் மொத்த மக்கட்தொகை 48.4 மில்லியன் ஆகும். இந்தியாவின் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது, மக்கட்தொகை பெருக்கத்தில் தமிழ்நாடு ஏழாவது நிலையில் உள்ளது. ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய தென்னிந்திய மாநிலங்களிடையே, மக்கட்தொகை பெருக்கத்தில் தமிழ்நாடு இரண்டாவது நிலையில் உள்ளது. இந்தியாவின் மக்கட் தொகையில் ஏறத்தாழ ஏழு விழுக்காடு தமிழ்நாட்டில உள்ளதாக மக்கட்தொகை புள்ளிவிவரம் சுட்டிக்காட்டுகிறது. இந்தியாவின் மொத்த பரப்பளவில் தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவை ஒப்பிட்டுப்பார்த்தால், தமிழ்நாட்டின் பரப்பளவு ஏறத்தாழ 3.96 விழுக்காடு மட்டுமே என்பதும் புலப்படும். தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவு 130,058 சதுர கிலோமீட்டர்கள் ஆகும்.

1.2. தமிழ்நாட்டின் மாவட்டங்களும், மககட்தொகையும்

தமிழ்நாட்டின் மாவட்டங்களுக்கிடையே மக்கட்தொகை விகிதம் சீரான அளவில் காணப்படவில்லை. விவசாய செழுமையும், தொழிற்சாலை வளர்ச்சியும் மக்கட்தொகை ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதிகமாக காணப்படுவதற்கான காரணங்கள் எனக் கூறலாம். தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிடையேயும் (தமிழ்நாட்டின் மாவட்டங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது) மதுரை மாவட்டத்தில் மிக அதிகமான மக்கட்தொகை (அதாவது 4.54 மில்லியன்) உள்ளது. இதற்கு எதிர்மாறாக, அதாவது மிகக்குறைந்த மக்கட்தொகையைக் கொண்டுள்ளது நீலகிரி மாவட்டமாகும்.

தமிழ்நாட்டில், சென்னை பெருநகர் மாவட்டத்தைத் தவிர்த்து, 151 வட்டாரங்கள் (தாலுக்காக்கள்) உள்ளன. தமிழ்நாட்டிலேயே மிக அதிகமான மக்கட்தொகையைக் கொண்டுள்ளது கோயம்புத்தூர் வட்டாரமாகும்.

இதன் மக்கட்தொகை ஏறத்தாழ 1.16 மில்லியனையும் விட அதிகமாகும். இதற்கு அடுத்ததாக தென்மதுரை, சைதாபேட்டை, சேலம் வட்டாரங்களைச் சொல்லலாம். மிகக் குறைவான மக்கட்தொகையைக் கொண்ட வட்டாரங்களாக ஏற்காடு (32,746) மற்றும் ராமேஸ்வரம் (48,188) வட்டாரங்களைச் சொல்லலாம்.

1.3. தமிழ்நாட்டின் மக்கட்தொகை பெருக்கம்

இந்தியாவில் மக்கட்தொகை கணக்கீடு பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படுகிறது. எனவே, மக்கட்தொகை பெருக்கத்தின் விகிதாச்சாரம் பத்து ஆண்டுகளில் எவ்வாறு உள்ளது என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. உதாரணமாக, 1981-ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கட்தொகை 48,408,077 ஆகும். 1971-ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டின்படி உள்ள மக்கட்தொகையில் இருந்து (41,199,1768) 1981-ஆம் ஆண்டு மக்கட்தொகை எண்ணிக்கை 7,208,909 ஆக உயர்ந்து உள்ளது. அதாவது 1971 - ஆம் ஆண்டுக்கும் 1981 - ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டின் மக்கட்தொகை பெருக்கத்தின் விகிதாச்சாரம் 17.50 விழுக்காடாக உயர்ந்துள்ளது என்பதைக் கணக்கிட்டு அறிய முடிகிறது. 1961-71க்கு இடைப்பட்ட பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டின் மக்கட்தொகை பெருக்கம் 22.30 விழுக்காடு ஆகும்.

1.4. தமிழ்நாட்டின் மாவட்டங்களில் மக்கட்தொகை

பட்டியல் 2 இல் தமிழ்நாட்டின் மாவட்டங்களின் எண்ணிக்கையாக 21 மாவட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வகைப்பாடு 1981 - ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்நாடு அரசு பழைய மாவட்டங்களில் இருந்து பிரிந்து, புதிதாக உருவாக்கிய 5 மாவட்டங்களையும் உள்ளடக்கியது ஆகும்.

இந்த ஆய்வாளருக்குப் புதிய மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக மக்கட்தொகை எண்ணிக்கை கிடைக்காமையால், 1981 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீடு நடந்தபோது தமிழ்நாட்டின் மாவட்டங்களாக இருந்த 16 மாவட்டங்களின் பெயர்களையும், அவற்றின் மக்கட்தொகை எண்ணிக்கை (ஆண், பெண் வாரியாக),

தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகையில் ஒவ்வொரு மாவட்டத்தின் விழுக்காடு, மக்கட்தொகை விகிதத்தில் அது பெறும் இடம் ஆகிய தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1.5. தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றோர்

ஒரு நாட்டின் மக்கட்தொகை எண்ணிக்கை மட்டுமே அந்நாட்டு மக்களின் வளத்தையும், வாழ்க்கைத் தரத்தையும், சமுதாய மற்றும் பொருளாதார உயர்வையும் உயர்த்திக்காட்டும் அளவுகோல்களாக அமைவது இல்லை. பணியில் ஈடுபட தகுதியுள்ள வயதினர், பணியாளரின் எண்ணிக்கை, எழுத்தறிவு, கல்வித்தரம் ஆகிய இவைதாம் தரமான மக்கட் தொகைக்கான அடிப்படை அளவுகோல்களாக அமை கின்றன. வளர்ச்சிபெற்ற அல்லது வளர்ந்து வரும் எல்லா நாடுகளிலும், எழுத்தறிவு பெற்றோரின் எண்ணிக்கைக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதை பல நாடுகளின் அண்மைக்கால சரித்திரத்திலிருந்து தெளிவாக நாம் உணருகிறோம். எழுத்தறிவு மற்றும் கல்வி நிலையில் அதிக எண்ணிக்கையைக் கொண்ட மக்கள் வாழும் நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் மிகவும் முன்னேறியுள்ளன. தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளிலும் இந்நாடுகள் உயர்நிலையை எட்டியுள்ளன.

எழுத்தறிவு மற்றும் உயர் கல்வி பெற்றோரின் மக்கட் தொகை அதிக அளவில் காணப்படும் சமுதாயங்களில் பொருளாதார, சமுதாய வாழ்க்கைத்தரமும் உயர்ந்துள்ளது. அன்றாட வாழ்க்கைக்கும், மேம்பட்ட வாழ்க்கைத் தரத்துக்கும் கல்வி இன்றியமையாததாகி உள்ளது . கல்வியின் இன்றியமை யாமையைக் கருதித்தான், ஒவ்வொருவரும் அடிப்படை எழுத்தறிவு பெறுவதற்கான வழிமுறைகள் இந்திய அரசியல் சட்டத்திலும் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. அரசின் நேரடித் திட்டக் கொள்கைகள் (Directive Principles of State Policy) என்ற அரசியல் சட்டதின் அமைப்பின் கீழ் கல்வியும் கொண்டு வரப்பட்டுள்ளது. அரசின் கல்வித் திட்டத்தின் கீழ், பதினான்கு வயதுவரை ஆதாரக்கல்வி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் ஆதாரக் கல்வி இலவசமாக்கப்பட்டுள்ளது. பல மாநிலங்களில் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது.

1981 - ஆம் ஆண்டின் சென்ஸஸ் கணக்கீட்டின்படி தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு *46.76* ஆகும். இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் *36.23* விழுக்காட்டினர்தாம் எழுத்தறிவு பெற்றுள்ளனர். இதோடு தமிழ்நாட்டை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, எழுத்தறிவு பெற்றோரின் விகிதம் தமிழ்நாட்டில் அதிகம் உள்ளது என்பது புலப்படும். தமிழ்நாட்டின் மொத்த மக்கட்தொகையில் எழுத்தறிவு பெற்ற ஆண்களின் விழுக்காடு *58.26*-ம், பெண்களின் விழுக்காடு *34.99*-ம் ஆகும்.

மாவட்ட வாரியாக எழுத்தறிவு பெற்றோரின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப்பார்க்கும்போது சில முக்கிய செய்திகள் புலப்படும். அதாவது தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களையும் ஒப்பிடும்போது சென்னை மாவட்டம் தான் மிகவும் அதிகமாக (அதாவது *68.40%*) எழுத்தறிவு பெற்றோரைக் கொண்டுள்ளது. எழுத்தறிவு பெற்றோரின் எண்ணிக்கையில் கன்னியாகுமரி மாவட்டம் இரண்டாவது இடத்தை (அதாவது *63.85%*) பெறுகிறது. இதற்கு அடுத்ததாக முறையே நீலகிரி (*56.52%*), கோயம்புத்தூர் (*53.10%*), திருநெல்வேலி (*52.14%*) மற்றும் தஞ்சாவூர் (*50.36%*) ஆகிய மாவட்டங்கள் முதன்மை வகிக்கின்றன. மேற்கூறிய மாவட்டங்கள் அல்லாது, செங்கல்பட்டு (*48.00%*) மற்றும் மதுரை (*47.36%*) ஆகிய இரண்டு மாவட்டங்களும்கூட குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவில் எழுத்தறிவு பெற்றோரைக் கொண்டுள்ளது. ஏனைய எட்டு மாவட்டங்களும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன. இம்மாவட்டங்களில் எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு, மாநில விழுக்காட்டிலும் (அதாவது *58.26%*) மிகவும் குறைந்த நிலையில் உள்ளது. பின்தங்கிய மாவட்டமாகக் கருதப்படும் தர்மபுரி மாவட்டத்தின் விழுக்காடு *29.00* ஆகும். தென்னாற்காடு, புதுக்கோட்டை மற்றும் சேலம் போன்ற மாவட்டங்களின் விழுக்காடு *30* முதல் *40*க்குள் அடங்கியுள்ளது. *1971* - ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி *9* - ஆம் இடத்தில் இருந்த கோயம்புத்தூர் மாவட்டம் *1981* - ஆம் கணக்கெடுப்பில் *4* - ஆவது இடத்தில் உள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம் பெரியார் மாவட்டம் கோயம்புத்தூர் மாவட்டங்களாக *1971* - ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டமை இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம். இந்த பிரிவினையில் பெரும்

நகர்ப்புறங்களும், கல்வியறிவில் வளர்ச்சியுற்ற பகுதிகளும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இணைக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

1981 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டின்படி தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் எழுத்தறிவு பெற்றோர் பற்றிய விவரங்கள் பட்டிய்ல் -3 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

1.5.1. கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு

கிராமப்புறத்தைவிட நகர்ப்புறங்களில் வாழு வோரிடையே எழுத்தறிவும், கல்வியறிவும் பெற்றோரின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பது இயற்கையே. நகர்ப் புறங்களில் தொழில் மற்றும் வர்த்தகத் துறைகள் வேகமாக வளர்ந்து வருவதால் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் நகர்ப் புறங்களில் அதிகமா‍ உள்ளன. இந்தியாவின் மொத்த மக்கட்தொகையில் கிராமப்புறங்களில் வாழுவோரிடையே எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு 29.65% மட்டுமே. ஆனால் நகர்ப்புறங்களில் எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு 57.40% ஆகும். இது ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு ஆகும். தமிழ்நாட்டில் இந்த வேறுபாடு இந்தியாவின் மொத்த வேறுபாட்டினின்றும் அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு 35.56%உம் நகர்ப்புறங்களில் எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு 63.45%உம் ஆகும்.

1.5.2. தமிழ்நாட்டில் பள்ளி/கல்லூரிகளில் பயில்வோரின் எண்ணிக்கை

முதன்முதலாக 1981-ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தகவலின்படி தமிழ்நாட்டில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நேரடி யாகவோ, அஞ்சல்வழியாகவோ கல்வி பயிலும் மாணவர் களின் எண்ணிக்கையைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள முடிகிறது. இந்த விவரங்கள் பாலர் பள்ளிகளில் படிக்கும் இளஞ்சிறார்களிலிருந்து 24 வயது வரை உள்ளவா களைப் பற்றியதாகும்.

இந்தத் தகவல்களில் இருந்து சில அடிப்படை விவரங்களை நாம் அறிகிறோம். அதாவது, கிராமப்புறங்களைவிட நகர்ப்புறங்களில் கல்வி பயில்வோர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. மேலும் கல்வி பயிலும் மாணவர்களில் பெண்களின் எண்ணிக்கையைவிட ஆண்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் கல்வி பயில்வோர் பற்றிய விவரங்கள் பட்டியல்-4 இல் கொடுக்கப் பட்டுள்ளன.

1.6. தமிழ்நாட்டில் வாழும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்

இந்தியாவில் காணப்படும் சாதிப் பாகுபாடுகளும், சமுதாயத்தில் பலமாக ஊடுருவியுள்ள சாதிகளின் அமைப்பு முறைகளும் சரித்திரக் காலந்தொட்டுத் தொடர்ந்து வருவனவாகும். பலநூறு ஆண்டுகளாக இந்தியச் சமுதாயம் நான்கு வகை பெரும் சாதிப் பிரிவுக்குள் (அதாவது பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்) முடக்கப்பட்டு வந்துள்ளதை நாம் அறிவோம். இந்த நான்கு பெரும் பிரிவுகளுள், ‘சூத்திரர்’ என்று கருதப்பட்ட பல சாதியினர் சமுதாயத்தின் மற்ற பிரிவினரால் தாழ்ந்தவரெனக் கருதப்பட்டு, சமுதாய பொருளாதார ரீதியில் மிகவும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். ஏறத்தாழ **1935** - ஆம் ஆண்டுவரை இந்தச் சாதியினர் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகவே (Depressed Classes) கருதப்பட்டு வந்தனர். **1935** - ஆம் ஆண்டு இந்திய அரசு உருவாக்கிய சட்டத்தின்கீழ் இந்தப் பிரிவினரைக் குறிப்பிடும் ‘depressed classes’ என்ற பெயர் நீக்கப்பட்டு, இவர்களை ‘Scheduled Castes’ என்று குறிப்பிடும் நிலை உருவானது.

மேற்குறிப்பிட்ட வாக்கியத்தில் ‘depressed classes’ என்ற பொருளில் ‘தாழ்த்தப்பட்ட வகுப்பினர்’ என்ற சொற்றொடர் கையாளப்பட்டுள்ளதைக் காண்க. மேலும் பகுதி **1.6** இன் தலைப்பில் ‘Scheduled castes’ என்ற பொருளிலும் தாழ்த்தப் பட்டோர் என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. ‘depressed class’ மற்றும் ‘scheduled caste’ ஆகிய இரண்டு பொருளுக்கும் நாம் பொதுவாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற சொற்றொடரைத்தான் பயன்படுத்துகிறோம்.

மேற்குறிப்பிட்ட இடத்தில் மட்டும்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற சொற்றொடர் 'depressed classes' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மற்றைய எல்லாப் பகுதிகளிலும் 'தாழ்த்தப்பட்டோர்' என்ற சொற்றொடர் 'scheduled castes' என்ற பொருளில் மட்டும்தான் பயன்படுத்தப்படுகிறது. அதே போன்று பழங்குடியினர் என்ற சொற்றொடரும் 'scheduled tribes' என்ற பொருளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. **1936**-ஆம் ஆண்டின் இந்திய அரசின் ஆணைப்படி (Government of India Scheduled Castes) Order, 1936), தாழ்த்தப்பட்டோர் சாதிப்பெயர் களின் பட்டியல் ஒன்றும் வெளியிடப்பட்டது. **1950** ஆண்டு இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட போது தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கும் (Scheduled castes), பழங்குடியினருக்கும் (Scheduled Tribes) குறிப்பிடத்தக்க சில தனிச் சலுகைகளும், உரிமைகளும் வழங்கப்பட்டன.

இந்த அரசியல் சட்டத்தின் விதிகள் **341** மற்றும் **342**-இன் கீழ் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு வெளியிடப்படும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள சாதியினரே தாழ்த்தப்பட்ட இனத்தவராகவும், பழங்குடியினராகவும் கருதப்படுவர். இந்தியக் குடியரசுத் தலைவரால் தாழ்த்தப்பட்ட இனத்தவராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சாதியினரோ, இனத்தினரோ, பழங்குடியினரோ அல்லது அவர்களின் சில பிரிவுகளோ மட்டுந்தான் தாழ்த்தப்பட்ட இனத்தவராவார். அதேபோன்று, குடியரசுத் தலைவரால் பழங்குடியினராக ஏற்றுக்கொள்ளப்பட்ட பழங்குடியினரோ, அவரது கூட்டத்தினரோ அல்லது அவர்களின் சில பிரிவினரோ மட்டுந்தான பழங்குடி இனத்தவராவார்.

1.6.1. தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங் குடியினரின் பட்டியல்கள்

இந்திய அரசு **1950** - ஆம் ஆண்டு அரசியல் சட்டம் (தாழ்த்தப்பட்ட இனத்தவரின்) மற்றும் அரசியல் சட்டம் (பழங்குடியினர்) ஆகிய இரண்டின் கீழ் முதன்முதலாக இந்த பட்டியல்களை வெளியிட்டது. காலப்போக்கில் இந்தப் பட்டியல்களில் மாற்றங்களையும், சேர்க்கைகளையும், இந்திய அரசு செய்துள்ளது. மொழி வாரி மாநிலப் பிரிவினையை அடுத்து, சில மாற்றங்களோடு கூடிய தாழ்த்தப்பட்ட இனத்தவர்

மற்றவர் பழங்குடியினரின் பட்டியல்கள் பற்றிய சட்டம் (1956 - ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20 - ஆம் தேதி யிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. தற்போது நடைமுறையில் உள்ள பட்டியல்கள் 1976 - ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடியினர் பற்றிய அரசு ஆணையை (Scheduled Castes and Scheduled Tribes Orders (Amendment) Act, 1976) அடிப்படையாகக் கொண்டவையாகும்.

1.6.2. தமிழ்நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினர்

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட வகுபபுகளின் மொத்த எண்ணிக்கை 76 ஆகும். இவற்றுள் 14 பிரிவினர் கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்திலும் மட்டுமே தாழ்த்தப்பட்ட பிரிவினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். ஏனைய பிரிவினர் தமிழ்நாடு முழுவதும் தாழ்த்தப்பட்ட பிரிவினர் களாகக் கருதப்படுகின்றனர். தமிழ்நாட்டில் உள்ள பழங்குடி வகுப்புகளின் மொத்த எண்ணிக்கை 36 ஆகும். இவற்றுள் மூன்று பிரிவினர் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம் ஆகியவற்றைத் தவிர்த்து மற்றைய பகுதிகளில் பழங்குடி இனத்தவராக அறிவிக்கப்பட்டுள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் வாழும் 'குறும்பர்' வகுப்பினரும், கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தில் வாழும் 'காணிக்காரன்/காணிக்கர்' எனப்படும் வகுப்பினரும் பழங்குடிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். தர்மபுரி, வட ஆற்காடு, புதுக்கோட்டை, சேலம், தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வாழும் 'மலையாளி' எனப்படும் வகுப்பினர் பழங்குடி இனத்தவராக அறிவிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய 6 பிரிவுகளைத் தவிர்த்து, மற்ற 30 பழங்குடி வகுப்புகளும் தமிழகம் முழுவதும் இனத்தவராக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்புகளைப்பற்றிய தகவல் பட்டியல் - 5 - இல் கொடுக்கப் பட்டுள்ளன.

1.6.3. தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கை

1981 - ஆம் ஆண்டு மக்கடதொகை கணக்கெடுப்பின் படி தமிழ நாட்டில் தாழ்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 8,881,295 ஆகும். அதாவது தமிழ்நாட்டின் மொத்த மக்கட்தொகையில் 18.35 விழுக்காடு தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கை எனலாம்.

தமிழ்நாட்டில் வாழும் பழங்குடி மககளின் எண்ணிக்கை 520,226 ஆகும். தமிழ்நாட்டின் மொத்த மக்கட்தொகையில் 1.07 விழுக்காடு பழங்குடி மக்கள் உள்ளனர் எனலாம்.

1.6.4. தமிழ்நாட்டின் மாவட்டங்களில் தாழ்த்தப் பட்டோர் எண்ணிக்கை

தமிழ்நாட்டின் மாவட்டங்களை ஒப்பிடும்போது, செங்கற்பட்டு மாவட்டத்தில் மிக அதிகமாகவும் (26.21%) கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகக் குறைவாகவும் (4.23%) தாழ்த்தப்பட்டோரின் மக்கட்தொகை காணப்படுகின்றது. தென் ஆற்காடு (25.97%) தஞ்சாவூர் (23.21%) மற்றும் நீலகிரி (23.04) மாவட்டங்களில் ஏறத்தாழ 20 விழுக்காட்டுக்கு அதிகமாக தாழ்த்தப்பட்டோர் வாழுகின்றனர்.

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் பெருமளவில் கிராமப் புறங்களில் வாழுகின்றனர் எனச் சொல்லலாம். கிராமப் புறங்களில் வாழும் தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கை (7.09) மில்லியனாகவும் (79.84%) நகர்ப்புறங்களில் வாழும் தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 1.79% மில்லியனாகவும் (20.16%) உள்ளன. தாழ்த்தப்பட்ட இனத்தவர் பெருமளவில் கிராமபபுறங்களில் வாழ்வதற்கு மிக முக்கியமான காரணம், இவர்கள் விவசாயம் செய்பவர்களாகவும், விவசாயக் கூலி வேலை செய்பவர்களாகவும் இருப்பதுவே ஆகும். தென் ஆற்காடு, தர்மபுரி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் கிராமப்புறங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை மொத்த மக்கட்தொகையில் 90 விழுக்காடு அதிகமாக உள்ளது.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை விவரம் பட்டியல் 7-இல் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

1.6.5. தமிழ்நாட்டின் மாவட்டங்களில் பழங் குடியினரின் எண்ணிக்கை

தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சேலம் மாவட்டத்தில்தான் பழங்குடியினரின் எண்ணிக்கை மிக அதிக அளவில் (அதாவது மாவட்ட மக்கட் தொகையில் **3.31** விழுக்காடு) உள்ளது. சேலம் மாவட்டத்திற்கு அடுத்ததாக, வட ஆற்காடு மாவட்டம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் இவர்களின் எண்ணிக்கை பெருமளவில் உள்ளதை அறியலாம். இவ்விரு மாவட்டங்களிலும் இவர்களது எண்ணிக்கை மொத்த மக்கட் தொகையில் 2.3 விழுக்காடு உள்ளதென **1981** - ஆம் ஆண்டு சென்ஸஸ் புள்ளி விவரம் காட்டுகிறது. செங்கற்பட்டு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இவர்களது எண்ணிக்கை மாவட்ட ரீதியான மொத்த மக்கட் தொகையில் 1-5-9 விழுக்காடு உள்ளதை நாம் அறியலாம். ஏனைய மாவட்டங் களில் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாகவே பழங்குடி இனத்தவர் வாழ்கின்றனர். ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், சென்னை ஆகிய மாவட்டங்களில் 1/4 விழுக்காட்டிற்கும் குறைவாகவே பழங்குடி இனத்தவர் வாழ்கின்றனர். இம்மாவட்டங்களில் காட்டுப் பகுதிகளும், மலைகளும் இல்லாமையே இதற்கு மிக முக்கிய காரணம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டின் பழங்குடி இனத்தவரின் மொத்த மக்கட் தொகையில் எத்தனை விழுக்காட்டினர் எந்தெந்த மாவட்டங் களில் வாழ்கின்றனர் என்பதைக் காண்போம். பழங்குடி இனத்தவர் மிக அதிக அளவில் வாழும் மாவட்டங்களான சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் இவர்களது எண்ணிக்கை விழுக்காடு முறையே **23.54**ம், **18.01**ம் ஆகும். அடுத்து, தென் ஆற்காடு மாவட்டத்தில் ***10.34*** விழுக்கார்ட்டினரும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் **9.28** விழுக்காட்டினரும் வாழ்கின்றனர். பிற மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 9 விழுக்காட்டிற்கும் குறைவான அளவில் தான் பழங்குடி இனத்தவர் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்

தக்கது. உதாரணமாக, ராமநாதபுரம் மாவட்டத்தில் 1.27 விழுக்காட்டினரும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 1.22 விழுக்காட்டினரும், சென்னை மாவட்டத்தில் 1.03 விழுக்காட்டினரும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1.16 விழுக்காட்டினரும் உள்ளனர். மிகக் குறைந்த அளவில் பழங்குடி இனத்தவர் வாழும் மாவட்டம் புதுக்கோட்டை ஆகும். இம்மாவட்டத்தில் 0.29 விழுக்காட்டினர்தாம் வாழ்கின்றனர்.

மலைப்பகுதிகளிலும் மலையோரப் பகுதிகளிலும் வாழ்வதையே நெடுங்காலமாக தங்கள் வாழ்க்கை முறையாகக் கொண்டவர்கள் பழங்குடி இனத்தவர். இன்றைய நிலையிலும் நகர்ப்புறங்களைவிட, பெருமளவில் இவர்கள் கிராமப் புறங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டின் பழங்குடி இனத்தவரின் மொத்த மக்கட்தொகையில் கிராமப் புறங்களில் வாழ்பவரின் விழுக்காடு 90.31 ஆகும்.

தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் வாழும் பழங்குடி மக்களின் எண்ணிக்கை விவரம் பட்டியல் - 8 இல் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

1.6.6. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினரிடையே எழுத்தறிவு

தமிழ் நாட்டின் மொத்த மக்கட்தொகையில் எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு 46.76 என பகுதி 1-5 இல் கண்டோம். கல்வி கற்றோரின் விழுக்காடு தமிழ்நாட்டில் பொதுவாக கணிசமாக உயர்ந்திருந்தாலும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரிடையே எழுத்தறிவு பெற்றோரின் விழுக்கர்டு தற்போது மிகவும் குறைவாகவே உள்ளது. தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்டோரிடையே எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு 29.67 ஆகவும், பழங்குடியினரிடையே 20.46 ஆகவும் மட்டுமே உள்ளது. தாழ்த்தப்பட்டவரிடையே எழுத் தறிவு பெற்றோர்களை ஆண்-பெண் வாரியாகப் பிரித்துப் பார்க்கும்போது, ஆண்களிடையே 40.65 விழுக்காடு எழுத்தறிவு பெற்றவர்களாக இருப்பதையும், பெண்களிடையே 18.47 விழுக்காடு எழுத்தறிவு பெற்றவர்களாக இருப்பதையும் அறிகிறோம். ப்ழங்குடியினரிடையே எழுத்தறிவு பெற்ற ஆண்களின் விழுக்காடு 26.71 ஆகவும், எழுத்தறிவு பெற்ற பெண்களின் விழுக்காடு 14.00% ஆகவும் உள்ளது.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் வாழும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி மக்களிடையே எழுத்தறிவு பெற்றோரின் எண்ணிக்கை விவரங்கள் பட்டியல்கள் - 9 மற்றும் 10-இல் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு என்ற இந்த பொது தலைப்பின்கீழ் தமிழ் நாட்டின் மக்கட்தொகை, மாவட்ட வாரியாகவும், நகர் மற்றும் கிராமப்புற வாரியாகவும் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டில் வாழுவோரிடையே கல்வி அறிவு பெற்றோரின் எண்ணிக்கை விகிதாச்சாரம் மற்றும் அவர் களுள் ஆண்/பெண்களிடையே காணப்படும் விகிதாச்சாரம் ஆகியனவும் கொடுக்கப்பட்டுள்ளன. தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினர் பற்றிய பொதுவான தகவல்களும், தமிழ்நாட்டில் வாழும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பற்றிய புள்ளி விவரங்களும், இவர்களிடையே கல்வி அறிவு பெற்றவர் பற்றிய விவரங்களும் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. 'தமிழ்நாட்டின் மொழிச்சூழல்' என்ற அடுத்த தலைப்பின்கீழ், தமிழ்நாட்டில் பல்வேறு மொழிகளைப் பேசுவோரின் மக்கட்தொகையையும் அதனால் பெறப்படும் மொழிச்சூழலையும் (Linguistics situation) காண்போம்.

பட்டியல் - 2

தமிழ்நாட்டின் மாவட்டங்களின் மக்கட்தொகை 1981 சென்ஸஸ்

வ. எண்	மாநிலம் /மாவட்டம்	மக்கட்தொகை				
		மொத்தம்	ஆண்கள்	பெண்கள்	விழுக் காடு	இடம்
1	2	3	4	5	6	7
	தமிழ்நாடு	48,408,077	24,487,624	23,920,453	100	–
1	சென்னை	3,276,622	1,694,107	1,582,515	6.77	10
2	செங்கல்பட்டு	3,616,508	1,848,124	1,768,384	7.47	5
3	வட ஆற்காடு	4,414,324	2,230,559	2,183,765	9.12	2
4	தென் ஆற்காடு	4,201,869	2,30,444	2,071,425	8.68	3

1	2	3	4	5	6	7
5	தர்மபுரி	1,997,060	1,019,362	977,698	4.13	13
6	சேலம்	3,441,717	1,765,822	1,675,895	7.11	8
7	பெரியார்	2,068,462	1,057,599	1,010,863	4.27	12
8	கோயம்புத்தூர	3,060.184	1,569,570	1,490,614	6.32	11
9	நீலகிரி	630,169	321,995	308,174	1.30	16
10	மதுரை	4,535,897	2,296,614	2,239,283	9.37	1
11	திருச்சிராப்பள்ளி	3,612,320	1,819,668	1,792,652	7.46	6
12	தஞ்சாவூர்	4,063,545	2,043,724	2,019,821	8.40	4
13	புதுக்கோட்டை	1,156,813	576,335	580,478	2.39	15
14	ராமநாதபுரம்	3,335,437	1,648,422	1,687,015	6.89	9
15	திருநெல்வேலி	3.573,751	1,748,321	1,825,430	7.38	7
16	கன்னியாகுமரி	1,433,399	716,958	706,441	2.94	14

பட்டியல் - 3

தமிழ்நாட்டின் மாவட்டங்களில் எழுத்தறிவு பெற்றோர் பற்றிய தகவல்கள் 1981 சென்ஸஸ்

வ. எண்	மாநிலம்/ மாவட்டம்	மொத்தம் கிராமப்புறம் நகர்ப்புறம்	எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு		
1	2	3	4	5	6
	தமிழ்நாடு	மொ	46.76	58.26	34.99
		கி	38.56	51.16	25.80
		ந	63.45	72.50	53.99
1	சென்னை	மொ	68.40	75.60	60.69
		கி	..	..	..
		ந	68.40	75.60	60.69
2	செங்கல்பட்டு	மொ	48.00	59.72	35.75
		கி	38.72	51.44	25.66
		ந	62.56	72.44	51.94
3	வட ஆற்காடு	மொ	40.89	53.48	28.04
		கி	36.14	49.50	22.50
		ந	56.80	66.78	46.60
4	தென் ஆற்காடு	மொ	36.78	49.38	23.81
		கி	32.16	45.33	18.64
		ந	61.57	71.04	51.73
5	தர்மபுரி	மொ	29.00	38.98	18.60
		கி	26.24	36.26	15.81
		ந	55.67	71.04	45.75
6	சேலம்	மொ	39.29	39.95	28.07
		கி	32.69	43.69	21.11
		ந	55.51	65.31	45.18

1	2	3	4	5	6
7	பெரியார்	மொ	39.81	51.76	27.31
		கி	34.33	46.67	21.47
		ந	59.25	69.63	48.21
8	கோயம்புத்தூர்	மொ	53.10	64.04	41.59
		கி	41.94	54.34	29.14
		ந	64.06	73.39	54.05
9	நீலகிரி	மொ	56.52	67.74	44.79
		கி	51.21	63.93	38.28
		ந	62.08	71.62	51.82
10	மதுரை	மொ	47.36	59.48	34.94
		கி	38.13	51.79	24.26
		ந	63.61	72.89	54.00
11	திருச்சிராப்பள்ளி	மொ	45.62	58.43	31.61
		கி	38.00	52.06	23.86
		ந	67.16	76.13	57.81
12	தஞ்சாவூர்	மொ	50.36	62.63	37.94
		கி	45.93	59.11	32.59
		ந	65.13	74.39	55.77
13	புதுக்கோட்டை	மொ	38.69	53.64	23.86
		கி	34.88	50.49	19.45
		ந	63.61	73.89	53.11
14	ராமநாதபுரம்	மொ	45.32	58.92	32.02
		கி	38.90	53.58	24.75
		ந	61.64	72.19	50.97

1	2	3	4	5	6
15	திருநெல்வேலி	மொ	52.14	63.30	41.45
		கி	47.17	59.07	35.94
		ந	61.53	71.12	52.08
16	கன்னியாகுமரி	மொ	63.85	68.55	59.08
		கி	61.80	66.63	56.90
		ந	73.68	77.85	69.49

பட்டியல் - 4

தமிழ்நாட்டில் பள்ளிகள் / கல்லூரிகளில் கல்வி பயில்வோரின் விழுக்காடு – 1981 சென்ஸஸ்

வயது	பள்ளி / கல்லூரி செல்வோரின் விழுக்காடு			
	கிராமப்புறம்		நகர்ப்புறம்	
	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
1	2	3	4	5
0 - 4	0.31	0.25	1.95	1.69
5	19.59	16.69	32.85	31.09
6	58.61	49.72	69.99	67.01
7	69.60	56.09	83.95	79.41
8	73.46	57.51	87.23	82.09
9	79.53	61.11	89.49	83.34
5 - 9	59.69	47.95	72.71	68.35
10 - 14	59.81	34.35	77.38	65.70
15 - 19	21.57	6.56	40.73	25.19
20 - 24	3.72	0.80	10.38	3.41

பட்டியல் -5

தாழ்த்தப்பட்ட வகுப்புகளின் பட்டியல்

1. ஆதி ஆந்திரா
2. ஆதி திராவிடா
3. ஆதி கர்நாடகா
4. அஜிலா
5. அருந்ததியார்
6. அய்யனவர் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)
7. பைரா
8. பகுடா
9. பந்தி
10. பெல்லாரா
11. பாதர் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)
12. சக்கிலியன்
13. சலவாடி
14. சமர், முச்சி
15. சண்டாலா
16. செருமன்
17. தேவேந்திர குலத்தான்
18. டோம், டொம்பரா, பைதி, பனோ
19. தொம்பன்
20. கொட கல்லி
21. கொத்தா
22. கோசங்கி
23. கொலேயா
24. சக்கலி
25. சம்புவலு
26. கடையன்
27. கக்கலன் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)
28. கல்லடி
29. கணக்கன், பதன்னா (நீலகிரி மாவட்டம்)
30. கரிம்பாலன்
31. கவரா (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)
32. கொலியன்
33. கூசா
34. கூடன் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)
35. குடும்பன்
36. குறவன், சிதனார்
37. மாதரி
38. மாடிகா
39. மைலா
40. மாலா
41. மன்னன் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)
42. மாவிலன்
43. மோகர்
44. முந்தலா
45. நளகேயாயா
46. நாயடி
47. படம்மன்

48. பகடை (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)

49. பள்ளன்

50. பள்ளுவன்

51. பம்படா

52. பாணன் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)

53. பஞ்சமா

54. பன்னாடி

55. பன்னியாண்டி

56. பறையன், பறயன், சாம்பவர்

57. பறவன் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)

58. பதியன் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)

59. புலயன், செரமர்

60. புதிரை, வண்ணான்

61. ரானேயர்

62. சாமகரா

63. சாம்பன்

64. சபரி

65. செம்மன்

66. தாண்டன் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)

67. தோட்டி

68. திருவள்ளுவர்

69. வள்ளோன்

70. வள்ளுவன்

71. வண்ணான் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)

72. வத்திரியன்

73. வேலன்

74. வேடன் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)

75. வெட்டியான்

76. வேட்டுவன் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை மாவட்டம்)

பட்டியல் - 6

பழங்குடி வகுப்புக்களின் பட்டியல்

1. அடியன்
2. அறநாடன்
3. ஏறவள்ளன்
4. இருளர்
5. காடர்.
6. கம்மாரா (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் தவிர்த்து)
7. காணிகாரன் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி செங்கோட்டை வட்டம்)
8. கணியன், கன்யன்
9. காட்டுநாயகன்
10. கொச்சுவேலன்
11. கொண்டுகாப்பு
12. கொண்டாரெட்டி
13. கொரகா
14. கோடா (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம்)
15. குடியன், மேலக்குடி
16. குறிச்சன்
17. குறும்பர் (நீலகிரிமாவட்டம்)
18. குறுமன்
19. மலமலன்
20. மலை அறையன்
21. மலை பண்டாரம்
22. மலை வேடன்
23. மலைக்குறவன்
24. மலசர்
25. மலையாளி (தர்மபுரி, வட ஆற்காடு, புதுக்கோட்டை, சேலம், தென் ஆற்காடு மற்றும் திருச்சி மாவட்டங்கள்)
26. மலையக்கண்டி
27. மன்னன்
28. முதுகர், முதுவன்
29. முத்துவன்
30. பல்லயன்
31. பல்லியன்
32. பள்ளியர்
33. பணியன்
34. சோழகன்
35. தோடா (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் தவிர்த்து)
36. உராலி

பட்டியல் - 7

மாவட்டங்களில் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை 1981 சென்ஸஸ்

வ. எண்	மாநிலம் /மாவட்டம்	மொத்தம் கிராமப் புறம் நகர்ப்புறம்	மொத்த மக்கட் தொகை	தாழ்த்தப் பட்டோர் எண்ணிக்கை	மொத்த மக்கட் தொகை விழுக்காடு
1	2	3	4	5	6
	தமிழ்நாடு	மொ	48,408,077	8,881,295	18.35
		கி	32,456,202	7,090,664	21.85
		ந	15,951,875	1,790,631	11.23
1	சென்னை	மொ	3,276,622	437,916	13.36
		கி	..	..	..
		ந	3,276,622	437,916	13.36
2	செங்கல்பட்டு	மொ	3,616,508	947,789	26.21
		கி	2,208,722	732,890	33.18
		ந	1,407,786	214,899	15.27
3	வடஆற்காடு	மொ	4,414,324	877,804	19.89
		கி	3,398,795	741,758	21.82
		ந	1,015,529	136,046	13.40
4	தென் ஆற்காடு	மொ	4,201,869	1,091,353	25.97
		கி	3,542,246	1,011,447	28.55
		ந	659,623	79,906	12.11

1	2	3	4	5	6
5	தர்மபுரி	மொ	1,997,060	276,714	13.86
		கி	1,809,876	260,948	14.42
		ந	187,184	15,766	8.42
6	சேலம்	மொ	3,441,717	560,267	16.28
		கி	2,446,054	463,298	18.94
		ந	995,663	96,969	9.74
7	பெரியார்	மொ	2,068,462	338,477	16.36
		கி	1,613,259	297,057	18.41
		ந	455,203	41,420	9.10
8	கோயம்புத்தூர்	மொ	3,060,184	496,855	16.24
		கி	1,516,013	297,166	19.60
		ந	1,544,171	199,689	12.93
9	நீலகிரி	மொ	630,169	145,174	23.04
		கி	322,321	70,889	21.99
		ந	307,848	74,285	24.13
10	மதுரை	மொ	4,535,897	695,242	15.33
		கி	2,892,285	576,754	20.04
		ந	1,643,612	115,488	7.03

1	2	3	4	5	6
11	திருச்சிராப்பள்ளி	மொ	3,612,320	672,697	18.62
		கி	2,668,596	583,888	21.88
		ந	943,724	88,809	9.41
12	தஞ்சாவூர்	மொ	4,063,545	943,343	23.21
		கி	3,126,588	869,739	27.82
		ந	936,957	73,604	7.86
13	புதுக்கோட்டை	மொ	1,156,813	191,732	16.57
		கி	1,003,145	178,907	17.83
		ந	153,668	12,825	8.35
14	ராமநாதபுரம்	மொ	3,335,437	556,291	16.68
		கி	2,394,483	483,821	20.21
		ந	940.954	72,470	7.70
15	திருநெல்வேலி	மொ	3,573,751	589,468	16.49
		கி	2,335,952	467,804	20.03
		ந	1,237,799	121,664	9.83
16	கன்னியாகுமரி	மொ	1,423,399	60,173	4.23
		கி	1,777,867	51,298	4.36
		ந	245,532	8,875	3.61

பட்டியல் - 8

மாவட்டங்களில் பழங்குடி மக்களின் எண்ணிக்கை – 1981 சென்ஸஸ்

வ. எண்	மாநிலம் /மாவட்டம்	மொத்தம் கிராமப் புறம் நகர்ப்புறம்	மொத்த மக்கட் தொகை	பழங்குடி மக்களின் எண்ணிக்கை	மொத்த மக்கட் தொகை விழுக்காடு
1	2	3	4	5	6
	தமிழ்நாடு	மொ	48,408,077	520,226	1.07
		கி	32,456,202	469,810	1.45
		ந	15,951,875	50,416	0.32
1	சென்னை	மொ	3,276,622	5,373	0.16
		கி	..	..	..
		ந	3,276,622	5,373	0.16
2	செங்கல்பட்டு	மொ	3,616,508	46,050	1.27
		கி	2,208,722	36,874	1.67
		ந	1,407,786	9,176	0.65
3	வடஆற்காடு	மொ	4,414,324	93,690	2.12
		கி	3,398,795	89,557	2.63
		ந	1,015,529	4,133	0.41
4	தென்ஆற்காடு	மொ	4,201,869	53,775	1.28
		கி	3,542,246	51,960	1.47
		ந	659,623	1,815	0.28

1	2	3	4	5	6
5	தர்மபுரி	மொ	1,997,060	46,074	2.31
		கி	1,809,876	44,986	2.49
		ந	187,184	1,088	0.58
6	சேலம்	மொ	3,441,717	122,444	3.56
		கி	2,446,054	121,193	4.95
		ந	995,663	1,253	0.13
7	பெரியார்	மொ	2,068,462	15,191	0.73
		கி	1,613,259	14,193	0.88
		ந	455,203	9,998	0.22
8	கோயம்புத்தூர்	மொ	3,060,184	22,358	0.73
		கி	1,516,013	20,487	1.35
		ந	1,544,171	1,871	0.12
9	நீலகிரி	மொ	630,169	20,874	3.31
		கி	3,322,321	14,433	4.48
		ந	307,848	6,441	2.09
10	மதுரை	மொ	4,535,897	13,646	0.30
		கி	2,892,285	8,778	0.30
		ந	1,643,612	4,868	0.30

1	2	3	4	5	6
11	திருச்சிராப்பள்ளி	மொ	3,612,320	48,294	1.34
		கி	2,668,596	44,627	1.67
		ந	943,724	3,667	0.39
12	தஞ்சாவூர்	மொ	4,063,545	6,012	0.15
		கி	3,126,588	2,653	0.08
		ந	936,957	3,359	0.36
13	புதுக்கோட்டை	மொ	1,156,813	1,516	0.13
		கி	1,003,145	1,217	0.12
		ந	153,668	299	0.19
14	ராமநாதபுரம்	மொ	3,335,437	6,617	0.20
		கி	2,394,483	4,189	0.17
		ந	940,954	2,428	0.26
15	திருநெல்வேலி	மொ	3,573,751	11,954	.33
		கி	2,335,952	8,801	0.38
		ந	1,237,799	3,153	0.25
16	கன்னியாகுமரி	மொ	1,423,399	6,358	0.45
		கி	1,777,867	5,862	0.50
		ந	245,532	496	0.20

பட்டியல் - 9

மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட இனத்தவரிடையே எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை – 1981 சென்ஸஸ்

வ. எண்	மாநிலம் /மாவட்டம்	மொத்தம் கிராமம் நகரம்	தாழ்த்தப் பட்டோர் எண்ணிக்கை	எழுத்தறிவு பெற்றோர் எண்ணிககை	விழுக்காடு
1	2	3	4	5	6
	தமிழ்நாடு	மொ	8,881,295	2,635,149	29.67
		கி	7,090,664	1,837,548	25.92
		ந	1,790,631	797,601	44.54
1	சென்னை	மொ	437,916	227,602	51.97
		கி	. . .	. . .	. . .
		ந	437,916	227,602	51.97
2	செங்கல்பட்டு	மொ	947,789	305,790	32.26
		கி	732,890	202,064	27.57
		ந	214,899	103,726	48.27
3	வடஆற்காடு	மொ	877,804	286,906	32.68
		கி	741,758	224,452	30.26
		ந	136,046	62,454	45.91
4	தென்ஆற்காடு	மொ	1,091,353	235,621	21.59
		கி	1,011,447	205,243	20.29
		ந	79,906	30,378	38.02

1	2	3	4	5	6
5	தர்மபுரி	மொ	276,714	57.989	20.96
		கி	260,948	52,228	20.01
		ந	15,766	5,761	36.51
6	சேலம்	மொ	560.267	151,846	27.10
		கி	463,298	114,267	24.66
		ந	96,969	37,579	38.75
7	பெரியார்	மொ	338,477	58,002	17.14
		கி	297,057	43,110	14.51
		ந	41,420	14,892	35.95
8	கோயம்புத்தூர்	மொ	496,855	119,820	24.12
		கி	297,166	41,438	13.94
		ந	199,689	78,382	39.25
9	நீலகிரி	மொ	145,174	66,968	46.13
		கி	70,889	29,034	40.96
		ந	74,285	37,934	51.07
10	மதுரை	மொ	695,242	178,387	25.66
		கி	576,754	133,889	23.09
		ந	115,488	44,498	38.53

1	2	3	4	5	6
11	திருச்சிராப்பள்ளி	மொ	672,692	210,416	31.28
		கி	583,888	168,941	28.93
		ந	88,809	41,475	46.70
12	தஞ்சாவூர்	மொ	943,343	289,539	30.69
		கி	869,739	261,495	30.07
		ந	73,604	28,044	38.10
13	புதுக்கோட்டை	மொ	191,732	52,915	27.60
		கி	178,907	47,245	26.41
		ந	12,825	5,670	44.21
14	ராமநாதபுரம்	மொ	556,291	157,575	28.33
		கி	483,821	130,913	27.06
		ந	72,470	26,662	36.79
15	திருநெல்வேலி	மொ	587,468	201,181	34.13
		கி	467,804	154,184	32.96
		ந	121,664	46,997	38.63
16	கன்னியாகுமரி	மொ	60,173	34,592	57.49
		கி	51,298	29,045	56.62
		ந	8,875	5,547	62.50

பட்டியல் - 10

மாவட்டங்களில் பழங்குடி இனத்தவரிடையே எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை 1981 – சென்ஸஸ்

வ. எண்	மாநிலம் /மாவட்டம்	மொத்தம் கிராமப் புறம் நகர்ப்புறம்	பழங் குடியினர் எண்ணிக்கை	எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை	எழுத்தறிவு பெற்றோர் விழுக்காடு
1	2	3	4	5	6
	தமிழ்நாடு	மொ	520,226	106,421	20.46
		கி	469,810	89,175	18.98
		ந	50.416	17,246	34.21
1	சென்னை	மொ	5,373	2,854	53.12
		கி	. . .	. . .	. . .
		ந	5,373	2,854	53.12
2	செங்கல்பட்டு	மொ	46,050	6,727	14.61
		கி	36,874	4,656	12.63
		ந	9,176	2,071	22.57
3	வடஆற்காடு	மொ	93,690	10,987	11.73
		கி	83,557	9,770	10.91
		ந	4,133	1,217	29.45
4	தென்ஆற்காடு	மொ	53,775	6,746	12.54
		கி	51,960	6,036	11.62
		ந	1,815	710	39.12

1	2	3	4	5	6
5	தர்மபுரி	மொ	46,074	6,839	14.84
		கி	44,986	6,294	13.99
		ந	1,088	545	50.09
6	சேலம்	மொ	1,22,444	22,039	18.00
		கி	1,21,193	21,302	17.58
		ந	1,251	737	58.91
7	பெரியார்	மொ	15,191	3,113	13.92
		கி	14,193	2,972	20.94
		ந	998	332	33.14
8	கோயம்புத்தூர்	மொ	22,358	3,304	13.92
		கி	20,487	2,259	12.44
		ந	1,871	564	30.14
9	நீலகிரி	மொ	20,874	4,274	20.48
		கி	14,433	3,199	22.16
		ந	6,441	1,075	16.69
10	மதுரை	மொ	13,640	4,473	32.78
		கி	8,778	2,853	32.50
		ந	4,868	1,620	33.28

1	2	3	4	5	6
11	திருச்சிராப்பள்ளி	மொ	48,294	22,204	45.98
		கி	44,627	20,067	44.97
		ந	3,667	2,137	58.28
12	தஞ்சாவூர்	மொ	6,012	1,798	29.91
		கி	2,653	632	23.82
		ந	3,359	1,169	34.71
13	புதுக்கோட்டை	மொ	1,516	447	29.49
		கி	1,217	312	25.64
		ந	299	135	45.15
14	ராமநாதபுரம்	மொ	6,617	2,850	43.07
		கி	4,189	2,083	49.73
		ந	2,428	767	31.59
15	திருநெல்வேலி	மொ	11,954	5,670	47.13
		கி	8,801	4,650	52.83
		ந	3,153	1,020	32.35
16	கன்னியாகுமரி	மொ	6,358	5,670	47.13
		கி	8,801	4,650	52.83
		ந	3,153	1,020	32.35

2. தமிழ்நாட்டின் மொழிச் சூழல்

ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் பல மொழிகள் பயன்படுத்தப்படும்போது, அவற்றின் ஒட்டுமொத்தமான விளக்கத்தை மொழிச் சூழல் எனலாம். எந்த வகையான மொழிகள், மொழிகளின் எண்ணிக்கை, மொழி பேசுவோர் எண்ணிக்கை, எந்தவிதமான சூழலில் மொழி பேசுவோர் தங்கள் மொழிகளைப் பயன்படுத்துகிறார்கள், தங்கள் மொழிகளைப் பற்றி அம்மொழிகளைப் பேசுவோர் கொண்டுள்ள கருத்துக்கள் ஆகிய தகவல்கள் மொழிச் சூழலை விளக்கப் பயன்படும் என்கிறார் ஃபெர்கூஸன் (Ferguson :1971). ஃபெர்கூஸனின் விளக்கத்துக்கு எதிர்மறையான விளக்கத்தை நிகோல்ஸ்கி (Nikolsky : 1967) அளிக்கிறார். கால ஓட்டத்துக்கும், மொழி பேசுவோரின் விருப்பத்துக்கும், நிர்வாகத்தின் மொழிக் கொள்கைகளுக்கும் ஈடு கொடுத்து, ஒரு நாட்டிலோ அல்லது ஒரு சமூக அமைப்பிலோ ஒரு வழக்கில் உள்ள மொழிகள் தங்கள் பயன்பாட்டை மாற்றிக் கொள்கின்றன. இத்தகைய மாற்றங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தாலும்கூட, இம்மாற்றங்களின் ஒவ்வொரு நிலையுமே ஒரு மொழிச் சூழல்தான் என்பது நிகோல்ஸ்கியின் கருத்தாகும்.

மொழிச் சூழலை விவரித்துக் காட்டுவது சமுதாய மொழியியலின் மிக முக்கியமான பிரச்சனைகளுள் ஒன்று என்பது நிகோல்ஸ்கியின் கருத்து. ஒரு நாட்டின் மொழிக் கொள்கையும் (Language Policy), மொழிகளைப் பற்றிய அரசியல் முடிவுகளும், சில மொழிகளின் வளர்ச்சியும், வீழ்ச்சியும், அந்நாட்டில் நிலவும் மொழிச் சூழல்களில் பிரதிபலிக்கிறது என்கிறார் நிகோல்ஸ்கி (1967).

மொழிக் கூறுகள்

இந்த சிக்கலில் இருந்து தீர்வு காண்பதற்கும், மொழிச் சூழல்களைப் பற்றிய வகைப்பாடுகளை விவரித்துக் காட்டு வதற்கும் ஒரு கருவி மொழியை (Metalanguage) வளர்ப்பதுதான் சரியான முறை என்கிறார் சுவேஜர் (Svejer : 1986). மொழிச்

சூழல் வகைப்பாட்டில் கருவிமொழியின் பயனாக்கத்தை முதன் முதல் சுட்டிக் காட்டியவர் ஸ்டூவர்ட் (Sterwart : 1962) ஆவார். ''Outline of Linguistic Typology for Describing Multilingualism'' என்ற தன் ஆய்வில் இக்கருத்தினை விவரித்துள்ளார். மொழியின்பால் சமுதாயத்தின் தாக்கத்தினை நான்கு வகை மொழிக் கூறுகளாகத் (Language Features) தன் ஆய்வில் சுட்டிக் காட்டுகிறார்.

1. *<u>வரலாற்றாக்கம் (Historicity):</u>* தன்னிச்சையாக ஒரு மொழி செயல்படுவதன் மூலம் அந்த மொழியின் வளர்ச்சி உருவாகும் தன்மை, தேசீய பாரம்பரியத்தோடும் இனக் குழுக்களின் பாரம்பரியத்தோடும் அந்த மொழிக்கு உள்ள தொடர்பு.

2. *<u>நிலைபேறாக்கம் (Standardization):</u>* செம்மையான இலக்கணக் கூறுகளும், சொல் வளமும் ஒரு மொழியில் காணப்படும் தன்மை.

3. *<u>இயங்கு திறன் (Vitality):</u>* ஒரு மொழியை தாய் மொழி யாகக் கொண்ட ஒரு சமூகக் குழு இருப்பதன்மூலம் இது நிர்ணயிக்கப்படுகிறது.

4. *<u>ஓரின ஒருமைப்பாடு (Homogeneity):</u>* செம்மையான இலக்கணக் கூறுகளும் சொல்வளமும் கடந்த காலத்தில் ஒரு மொழி அமைப்பினின்று உருவாகி வளர்ந்து வந்துள்ளதன் மூலம் இது நிர்ணயிக்கப்படுகிறது.

மொழிவகைப்பாடு - ஸ்டூவர்ட்

மேற்கூறிய இந்த நான்கு வகை மொழிக் கூறுகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட மொழி வகைப்பாட்டை (Language Typology) ஸ்டூவர்ட் உருவாக்கினார்.

நிலைபேறாக்கம் பெற்ற மொழியும், தொன்மை மொழியும் மிக உயர்வாகக் கருதப்படுவன. இம்மொழிகளில் உருவாகியுள்ள தரம்மிக்க இலக்கியங்களினால், இம்மொழி களின் செம்மையான இலக்கணக் கூறுகள் மொழிப் பயன்பாட்டில் ஓரின ஒருமைப்பாட்டை திட்டவட்டமாக நிலைநிறுத்துகின்றன. உதாரணமாக, கற்றோரின் பேச்சு வழக்கிலும், எழுத்து மொழியிலும் நிலைபேறாக்கம் பெற்ற மொழி ஆங்கிலம் என்று கூறலாம். தொன்மையான மொழிக்கு

கூறுகள் (Features)				மொழிவகை (LanguageType)	குறியீடு (Symbol)
I	II	III	IV		
+	+	+	±	நிலைபேறாக்கம் பெற்றது (Standard)	S
+	+	−	+	தொன்மை வளம் (Classical)	C
+	−	+	+	உள்நாட்டு மொழி (Vernacular)	V
+	−	+	−	கிரியோல் (Creole)	C
+	−	−	−	பிட்ஜின் (Pidgin)	P

உதாரணமாக இலக்கிய அராபிக் மொழியை (literary Arabic) கூறலாம். நிலைபேறாக்கம் பெற்ற மொழிக்கும், தொன்மை வளம் நிறைந்த மொழிக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது. தொன்மை வளம் நிறைந்த மொழியை அதைப் பயன்படுத்துவோர் தாய்மொழியாகக் கொண்டு இருக்காததே அந்த வேறுபாடு ஆகும். உள்நாட்டு மொழியில் செறிவான இலக்கணமும் இல்லை. நிலைபேறாக்கம் பெற்ற மொழிக்கும், தொன்மை வளம் நிறைந்த மொழிக்கும் உள்ள உயர் மதிப்பீடும் இல்லை. இவ்வகை மொழிகளுக்கு உதாரணமாக ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலும் உள்ள பழங்குடி மக்களின் மொழிகளைக் கூறலாம். மேலும், ஆங்கிலத்தின் யார்க்ஷயர் கிளைமொழியையும் அராபிக் மொழியின் வட்டார வழக்குகளையும் இவற்றுக்கு உதாரணமாகக் காட்டலாம்.

பலதரப்பட்ட மொழிகளினின்றும் மொழிக் கூறுகளையும், சொற்களையும் கடன் வாங்கி, சில குறிப்பிட்ட சமுதாய மற்றும் மொழித் தொடர்புகளில் பயன்படுத்தப்படும் இணை மொழிகளாக கிரியோல் மற்றும் பிட்ஜினைக் கூறலாம். இவ்வகை மொழி உருவாக்கத்தின் முந்திய நிலையைப் பிட்ஜின் எனலாம். அந்நிலையில் இரண்டாம் மொழியாக பிட்ஜின் பயன்படுத்தப்படுகிறது. அந்நிலையில் இரண்டாம் மொழியாக ஒரு காலக் கட்டத்தைக் கடந்த நிலையில், கணிசமான மக்கட்தொகையினர் பிட்ஜினைத் தங்கள் தாய்மொழியாகவே பயன்படுத்துவர். அந்நிலையில் பிட்ஜின் 'கிரியோல்' என அழைக்கப்படுகிறது. கிரியோல் மொழிக்கு உதாரணமாக நியோ மாலினேஷியன் அல்லது

மாலினேஷியன் பிட்ஜினையும் (Neomelanesian or Melanesian Pidgin), மத்திய இந்தியாவில் வாழும் பல பழங்குடியினரால் பயன்படுத்தப்படும் சதன்-சத்ரிரபியையும் (ஹிந்தியின் ஒருவகை சிதைந்த பேச்சு வழக்கு) கூறலாம்.

'தொடர்புச் சாதனம்' (Medium of Communication) என்னும் அடிப்படையிலும் மொழிச் சூழலை விளக்க இயலும் என்கிறார் ஸ்டுவர்ட். ஒரு மொழியின் பயன்களை ஸ்டுவர்ட் கீழ்கண்டவாறு பிரிக்கிறார்.

1. ஆட்சிமொழி

நிர்வாகம் மற்றும் அரசு அலுவலகங்களில் ஒரு மொழி பயன்படுத்தப்படும் நிலை;

2. இனக்குழு

ஒரு இனக்குழு அல்லது ஒரு சமுதாயக் கூட்டம் ஒரு மொழியைப் பயன்படுத்துதல்.

3. பெருநிலைத் தொடர்பு (Wide Communication)

ஒரு நாட்டின் பல மொழிகளைப் பேசும் குழுக் களிடையே தொடர்பு மொழியாக ஒரு மொழி பயன்படுத்தப் படும் நிலை;

4. கல்வி

ஆட்சி மொழியாக மட்டும் அல்லாமல், பயிற்று மொழி யாகவும் ஒரு மொழி பயன்படுத்தப்படும் நிலை;

5. இலக்கியம்

ஆட்சி மொழியாக மட்டும் அல்லாமல், பண்பட்ட இலக்கியங்களை இயற்றுவதற்கு ஒரு மொழி பயன்படும் நிலை;

6. மதம்

மதச்சடங்குகளுக்கு ஒரு மொழி பயன்படும் நிலை;

7. தொழில்நுட்பம்

பல நாடுகளிடையே வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவுக்கு ஒரு மொழி பயன்படும் நிலை.

பலமுனை-அம்ச பாகுபாடு: ஃபெர்கூஸன்

ஒரு மொழியின் பயன்பாட்டுத் தன்மையின் அடிப்படையில் சமுதாய-மொழியியல் வகைப்பாட்டினை ஸ்டூவர்ட் உருவாக்கியுள்ளார் என்பதை முந்தைய பகுதியில் இருந்து நாம் அறிகிறோம். மொழி வகையையும், மொழிப் பயன்பாட்டையும் இரு அடிப்படை அளவுகோல்களாகக் கொண்டு ஸ்டூவர்ட் தன் வகைப்பாட்டை விளக்குகிறார். ஸ்டூவர்ட்டின் கருத்தின் அடிப்படையில் ஃபெர்கூஸன் 'பலமுனை-அம்ச பாகுபாடு' (Multi-aspectual taxonomy) எனும் கருத்தை விரிவுபடுத்தினார். பல தரப்பட்ட மொழிச் சூழல்களை வகைப்படுத்துவதற்கு ஃபெர்கூஸனின் "பலமுனை-அம்ச பாகுபாடு" பயன்படுகிறது எனக் கூறலாம். ஃபெர்கூஸனின் கருத்தைச் சற்று விரிவாகக் காண்போம்.

ஒரு மொழிச் சூழலில், சமுதாய-தொடர்புச் சாதனங் களாகப் பயன்படும் மொழிகளை மூன்று வகைப்படுத்தலாம் என்கிறார் ஃபெர்கூஸன். அவை பெரும்பான்மை (Major) மொழிகள், சிறுபான்மை (Minor) மொழிகள் மற்றும் சிறப்பு (Special) மொழிகள் ஆகியனவாகும். மொத்த மக்கட்தொகை யில் 25 விழுக்காட்டினரால் பேசப்படும் மொழி அல்லது ஏறத்தாழ 10 லட்சம் மக்களால் பேசப்படும் மொழி, ஆட்சி மொழி, பயிற்று மொழி, ஆசிரியப் பெருமக்களில் 50 விழுக்காட்டினருக்கும் அதிகமானோரால் பேசப்படும் மொழி ஆகியன பெரும்பான்மை மொழிகளாகும். மேற்கூறியவற்றுள் ஏதாவது ஒரு தகுதியை ஒரு மொழிப் பெற்றிருந்தாலும் அதைப் பெரும்பான்மை மொழி எனக் கூறலாம் என்கிறார் ஃபெர்கூஸன். உதாரணமாக போலிவியாவில் (Bolivia) மூன்றில் ஒரு பகுதியினரால் குசுவா (Quechua) மொழி பேசப்படினும் அந்நாட்டின் ஆட்சி மொழிகளுள் குசுவா இல்லை. எதிர்மறையாக, அயர்லாந்தில் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக அய்ரிஷ் (Irish) மொழி இருப்பினும், மொத்த மக்கட் தொகையினரில் 25 விழுக்காட்டினர் கூட அய்ரிஷ் மொழியைப் பேசவில்லை.

மொத்த மக்கட்தொகையில் 5. 25 விழுக்காட்டினர் அல்லது ஒரு லட்சம் பேரால் பேசப்படும் மொழியைச் சிறுபான்மை மொழி எனலாம். இதற்கு உதாரணமாக

ஸ்பெயின் (Spain) நாட்டில் வழக்கில் உள்ள பாஸ்க் (Basque) மொழியைக் கூறலாம்.

மதச்சடங்குகளில் பயன்படும் மொழி, (ஸ்ரீலங்காவில் பாலி மொழி), பண்பட்ட இலக்கியங்களை இயற்ற பயன்படும் மொழி (தய்வானில் தொன்மை சைனீஸ் மொழி), உயர்நிலைப் பள்ளிகளில் சிறப்புப் பாடமாக கற்றுத்தரப்படும் மொழி (ஸ்பெயின் நாட்டில் ஃப்ரெஞ்ச் மொழி), ஒரு குறிப்பிட்ட வயதினரால் பேசப்படும் மொழி (தய்வானில் ஜப்பானீஸ் மொழி) ஆகியவற்றைச் சிறப்பு மொழிகள் எனலாம்.

மேலே சொல்லப்பட்ட வகைப்பாடுகளின் அடிப்படையில் மொழிச் சூழலை மிக எளிய முறையில் விளக்க இயலும் என்கிறார் ஸ்வேஜர் (1986). எடுத்துக்காட்டாக இரண்டு பெரும்பான்மை மொழிகளும் (அதாவது ஆட்சிமொழியாகவும், நாடு முழுவதும் பெருநிலை தொடர்பு மொழியாகவும் பயன்படும் ஸ்பானிஷ் மொழி மற்றும் ஐம்பது லட்சத்துக்கும் அதிகமானோரால் பேசப்படும் காடலோனியன் (Catalonian) மொழி, எட்டு லட்சம் பேரால் பேசப்படும் சிறுபான்மை மொழியான பாஸ்க் (Basque), கத்தோலிக்க பிரிவினரால் மதச்சடங்குகளில் பயன்படுத்தப்படும் லத்தீன் மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் கற்றுத்தரப்படும் ஃப்ரெஞ்ச் ஆகிய இரு சிறப்பு மொழிகள் ஆகியன ஸ்பெயின் நாட்டில் வழக்கில் உள்ளன. ஸ்பெயின் நாட்டின் மொழிச் சூழலைக் கீழ்கண்ட எளிய சூத்திரத்தில் அடக்கி விடலாம்.

5 மொழிகள் = 2 பெரும்பான்மை மொழிகள்
+ 1 சிறுபான்மை மொழி
+ 2 சிறப்பு மொழிகள்.

மொழியின் சமுதாயப் பயன்பாடுகள்

மொழியின் சமுதாயப் பயன்பாடுகள் என்பது மொழியின் குறியீட்டுப் பயன்பாடுகளே என்பார் கார்வின் (Garvin : 1964). சமுதாயத்தில் தனக்கு உரிய சில சிறப்பான பங்கைத் தன் பக்கம் இழுப்பதுதான் மொழியின் பயன்பாடு என்பதும் இவரது கருத்தாகும். சமுதாய அமைப்பை மட்டும் விளக்கும் கருவியாக மட்டும் அல்லாமல் சமுதாயத்தின் ஒரு அங்கமாகவும், சமுதாயத்தை ஈர்க்கும் கருவியாகவும் கூட மொழி அமைகிறது என்கிறார் கார்வின். செம்மொழியின்

(Standard language) குறியீட்டுப் பயன்பாடுகள் (Symbolic functions) சமுதாயத்தை ஒருங்கிணைப்பதும், பிற மொழிகளினின்று தன்னைத் தனித்துக் காட்டுவதும் (Separating)உயர் மதிப்பீட்டை (Prestige) பெற்றிருப்பதும் ஆகும்.

ஒருங்கிணைத்தல்

ஒரு சமுதாயத்தில் பல்வேறு பேச்சு மொழிகளைப் (அல்லது கிளைமொழிகளை) பேசும் பல இனக்குழுக்கள் ஒருங்கிணைந்து ஒரு செம்மொழியைத்தான் தாம் எல்லோரும் பேசுகிறோம் என்ற நிலையை உருவாக்குதலை 'ஒருங்கிணைத்தல்' என்கிறோம்.

'தனித்துக் காட்டுதல்'

ஒரு சமுதாயத்தை வேறு சமுதாயங்களிலிருந்து பிரித்துக் காட்டும் திறன் அச்சமுதாயத்தினர் பேசும் செம்மொழிக்கு உள்ளது. அதனை 'தனித்துக் காட்டுதல்' என்கிறோம்.

'உயர் மதிப்பீடு'

செம்மொழியைப் பேசுவோருக்கு உள்ள சமூக உயர் மதிப்பீட்டை 'உயர் மதிப்பீடு' என்கிறோம்.

பல்வேறு குழுக்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஒரு தேசத்தின் செம் மொழி பெரும் பங்கு வகிக்கிறது. மொழியியல் கூறுகளின் அடிப்படையில் மிகவும் தொடர்புள்ள மொழிகள் அடுத்தடுத்த வட்டாரங்களில் பேசப்படும்போது, அத்தகைய வட்டாரங்கள் ஒரு மொழியின் நீண்ட நிலப்பரப்புதான் என்று கூறுமளவுக்குத் தோன்றலாம். ரஷ்யன் மற்றும் பைலோரஷ்யன், ஜெர்மன் மற்றும் டச் மொழிப் பகுதிகளை இத்தகைய நிலப் பரப்புகளாகக் கூறலாம். இந்தியாவில் மேற்கில் ராஜஸ்தான் மாநிலம், கிழக்கில் பிஹார், தெற்கில் மத்திய பிரதேஷ், வடக்கில் ஹிமாசல பிரதேஷ் ஆகிய மாநிலங்களுக்கு இடையே உள்ள மாபெரும் நிலப்பரப்பை உதாரணமாகக் கூறலாம். இந்தப் பெரு நிலப்பரப்பில் வாழும் மக்கள் நாற்பத்து ஐந்துக்கும் அதிகமான இந்தோ-ஆரிய மொழி களைப் பேசுகின்றனர். இந்த மொழிகள் ஒவ்வொன்றும், மொழியியல் கூறுகளாலும், இலக்கிய வளத்தாலும், தொன்மைச் சிறப்பாலும் (historicity) தனித்தனி மொழிகள் ஆகும். இம்மொழிகளைப் பேசுவோரிடையே உள்ள தேசிய

உணர்வாலும், இவர்கள் கல்வி மொழியாக ஹிந்தியை ஏற்றுக் கொண்டுள்ள தன்மையாலும், இந்த நிலப்பரப்பில் பேசப்படும் மொழிகளை ஹிந்தி ஒருங்கிணைத்துள்ளது. இன்றைய நிலையில் எல்லா மொழிகளையும் 'கிளைமொழி' நிலைக்கே கொண்டு சென்றுள்ளதையும் உதாரணமாகக் காட்டலாம்.

மொழிச் சூழல், மொழிகள், கிளைமொழிகள்

பல இனக்குழுக்களுக்கிடையே வழக்கில் உள்ள மொழிகளைப் பற்றிய விளக்கமே 'மொழிச் சூழல்' என முன்பு கண்டோம். பல இனக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக வாழ்ந்து வரும்போது, அவர்கள் பல மொழிகளைப் பேசுபவர்களாகவும், பல கிளைமொழிகளைப் பேசுபவர்களாகவும் இருக்கலாம். இத்தகைய சூழ்நிலையில் இம்மொழிகளிடையேயும், கிளைமொழிகளிடையேயும் பலவகையான சமுதாயப் பயன்பாடுகளும் உருவாகி இருக்கலாம். ஒவ்வொரு மொழியும், ஒவ்வொரு கிளைமொழியும் சமுதாயத்தில் தனக்குரிய பங்கை தன் பக்கம் இழுத்துக் கொண்டு தன்னைச் சமுதாயத்தோடு ஒன்றிணைக்கும் கருவியாகக் கூட உருவாக்கிக் கொண்டிருக்கலாம் (கார்வின்: 1964). இத்தகைய வளர்ச்சியையும், மாறுதலையும் கூட 'மொழிச் சூழல் வகைப்பாடு' உள்ளடக்கி இருக்க வேண்டும் என்பார் ஸ்கேஜர் (1986). நைஜீரியாவில், கானோ (Kano dialect) எனப்படும் நகர்ப்புற கிளைமொழி மற்றைய கிளை மொழிகளின் மேம்பட்ட கிளைமொழியாக (Superimposed variety) இருப்பதோடு அல்லாமல், ஹாசா (Hausa) மொழியின் தரமிக்க கிளைமொழியாக இருப்பதை உதாரணமாகக் காட்டலாம் (Laptuxin : 1965). இந்தியாவில் கடிபோலி (Khadi Boli) எனப்படும் ஹிந்தியின் வட்டாரக் கிளைமொழி, ஹிந்தியின் மற்றைய கிளைமொழிகளின் மேம்பட்ட கிளைமொழியாக இருப்பது அல்லாமல் 'ஆட்சி மொழிக்கு' (Official language) அடிப்படையாக இருப்பதையும் உதாரணமாக்க் காட்டலாம்.

மொழியியல், வரலாறு, பண்பாடு, மக்கட்தொகை, நிலப்பரப்பு, பொருளாதாரம், சமூக வரலாற்றுச் சான்றுகள் அரசு கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் 'மொழிச்சூழல்' விளக்கப்படவேண்டும். இவை ஒவ்வொன்றும் தனித்தனியாகவும், ஒட்டு மொத்தமாகவும் மொழிக்ளைப் பாதித்திருப்பதன் விளக்கம்தான் ஒரு மொழிச் சூழல் என்றும் கூறலாம்.

மொழி மாறுபடு தன்மை (Linguistic diversity)

ஒரு சமுதாயத்தினர் பேசும் பலமொழிகள் தங்களுக்குள்ளும், தங்களைச் சார்ந்துள்ள சமுதாயத்தினர்க்குள்ளும் தனித் தனியாகவும், ஒட்டுமொத்தமாகவும் ஏற்படுத்திக் கொள்ளும் பாதிப்புகளை 'மொழிச்சூழல்' என்று கூறலாம் என முன்பு கண்டோம். இவ்வாறு பல மொழிகள் ஒரு சமுதாய அமைப்பிலோ அல்லது ஒரு நாட்டிலோ பரவலாகப் பேசப் படும்போது அவை ஏற்படுத்திக் கொள்ளும் 'மொழிமாறுபடு தன்மையைப்' பற்றி (Linguistic diversity) கிரீன்பர்க் (Greenberg : 1956) விளக்கியுள்ளார். இணை மொழி மாறுபடு தன்மையை விளக்குவதற்கு சில முறைகளையும் அவர் வகுத்துத் தந்துள்ளார். ஒரு சமுதாயம் அல்லது நாட்டினுள் வழக்கில் உள்ள மொழி மாறுபடு தன்மையை, அரசியல், பொருளாதாரம், வட்டாரம், சமுதாயம் போன்ற அமைப்புக்களோடு பொருத்திப் பார்க்கவும் இயலும் என்கிறார் கிரீன்ப்ர்க். கிரீன்பர்க்கின் 'மொழி மாறுபடு தன்மையை' வடஅமெரிக்கா மற்றும் கனடா நாட்டின் மொழி பற்றிய சென்ஸஸ் கணக்கீட்டோடு ஒத்து நோக்கியுள்ளார் லிபர்சன் (Lieberson : 1964).

தொடர்புச் சாதன சாத்தியக்கூறு - அட்டவணை - A:

மொழி மாறுபடு தன்மையின் அளவை அட்டவணை-A என கிரீன்பர்க் குறிப்பிடுகிறார். ஒரு எல்லையில் பேசப்படும் தாய் மொழிகள் எல்லாவற்றின் 'தொடர்பு சாதன சாத்தியக் கூறுகளையும் (Probabilities of Communication) சுட்டி, வரும் மொத்த எண்ணிக்கையை 1-இல் இருந்து கழித்தால் கிடைக்கும் தொகையை 'மொழி மாறுபடு தன்மை' என்கிறார். பல தாய்மொழிகளைப் பேசுவோரின் மொத்த எண்ணிக்கையில் ஒரு தாய்மொழியைப் பேசுவோரின் எண்ணிக்கை விகிதத்தின் வர்க்கத்தை அந்தத் தாய்மொழியின் 'தொடர்புச் சாதன சாத்தியக்கூறு' என்கிறோம்.

---

* Index A, i.e. Measure of linguistic diversity is obtained by the Monolingual Non-weighter method according to which the probabilities of communciation over all the mother tongues are added up and then the total is substracted from 1. The probability of communication in each mother-tongue is the square of the proportion of mother tongue speakers in the total population of all the mother tongue groups under consideration.

கிரீன்பர்க்கின் 'மொழிமாறுபடு தன்மையின்' அடிப்படையில் இந்தியாவில் உள்ள மொழிகளுக்கிடையே காணப்படும் 'தொடர்புச் சாதன சாத்தியக்கூறுகளைப்' பற்றிய ஓர் ஆய்வு வெளிவந்துள்ளது (Dua & Sharma : 1978), இவ்வாய்வில் இந்திய அரசியல் சாசனத்தில் அங்கீகாரம் பெற்ற *14* மொழி களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டன. *1971* - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டின்படி ஒவ்வொரு மொழி பேசுவோரின் மொத்த எண்ணிக்கையும் கணக்கிடப் பட்டது. *14* மொழிகளைப் பேசுவோரின் மொத்த எண்ணிக்கையில் இருந்து ஒவ்வொரு மொழியைப் பேசுவோரின் எண்ணிக்கை விகிதம் கணக்கிடப்பட்டது. அந்த விகிதத்தின் வர்க்கமும் கணக்கிடப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழே அட்டவணை-*1* இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை - 1

ஒவ்வொரு மொழியின் 'தொடர்புச் சாதன சாத்தியக் கூறுகளும்', மொழி மாறுபடு தன்மையின் அட்டவணையும்

வ.எண்	மொழி	தொடர்புச் சாதன சாத்தியக் கூறுகள்
1	ஹிந்தி	0.11068
2	தெலுங்கு	0.01036
3	பெங்காலி	0.00833
4	மராத்தி	0.00785
5	தமிழ்	0.00679
6	உருது	0.00398
7	குஜராத்தி	0.00296
8	கன்னடம்	0.00219
9	மலையாளம்	0.00217
10	ஒரியா	0.00178
11	பஞ்சாபி	0.00071
12	அஸ்ஸாமி	0.00034
13	காஷ்மீரி	0.00003
14	ஆங்கிலம்	0.00004
	மொத்தம்	0.158174

மேலே உள்ள அட்டவணையில் *14* மொழிகள், ஒவ்வொன்றுக்கும் உள்ள 'தொடர்புச் சாதன சாத்தியக் கூறுகள்' கணக்கிடப்பட்டுள்ளன. மேலும் *14* மொழிகள் மொத்தத்துக்கும் உள்ள மொத்த 'தொடர்புச் சாதன சாத்தியக் கூறும்' அடியில் காட்டப்பட்டுள்ளது. கிரீன்பர்க்கின் அளவு கோலின்படி, மொத்த 'தொடர்புச் சாதன சாத்தியக்கூறை 1-இல் இருந்து கழித்தால் கிடைக்கப்பெறும் எண் *0.8419* ஆகும். இதையே அட்டவணை -A என கிரீன்பர்க் குறிப்பிடுகிறார்.

அட்டவணை-*1* இல் காட்டப்பட்டுள்ள விளக்கம் பின்வருமாறு அமையும். அதாவது இந்தியாவில் உள்ள மொத்த மொழிகளின் இடையே உள்ள மாறுபடு தன்மையின் அளவை (அதாவது அட்டவணை A) ***0.8418*** என்று வைத்துக் கொண்டால் ஹிந்தி மொழியின் 'தொடர்புச் சாதன சாத்தியக் கூறு' (அதாவது ***0.11068***) மிக அதிக அளவிலும், ஆங்கிலத்தின் 'தொடர்புச் சாதன சாத்தியக் கூறு' மிகக் குறைந்த அளவிலும் (***0.00004***) உள்ளது என்பதை அறியலாம்.*

மேலும் அட்டவணை - *1* - இல் இருந்து மற்றுமொரு முக்கியச் செய்தியும் கிடைக்கின்றது என்று துவாவும், சர்மாவும் **(1978)** கருதுகிறார்கள். அதாவது அடிக்குறிப்பில் காட்டியுள்ள உதாரணத்தில் மாறுபடு தன்மை பூஜ்யம் ஆக இருப்பது போல்

---

* இதற்கு நேர்மாறான ஒரு உதாரணத்தை இங்கு காண்போம். ஒரு நாட்டில் *100* பேர்கள் மட்டும் உள்ளனர் என்று வைத்துக் கொள்ளுவோம். இவர்கள் பேசுவதும் ஒரே ஒரு மொழிதான் என்றும் வைத்துக் கொள்வோம். இத்தகைய சூழ்நிலையில் அந்த நாட்டில் உள்ள ஒரே ஒரு மொழியின் தொடர்பு சாதன சாத்தியக் கூறு கீழ்கண்டவாறு அமையும்.

$$\text{தொடர்புச் சாதன சாத்தியக் கூறு} = \frac{\text{ஒரே மொழியைப் பேசுவோர்}}{\text{மொத்த மக்கள்தொகை}}$$

தொடர்பு சாதன சாத்தியக் கூறு *1*னின் வர்க்கமும் *1* ஆகும்.

இப்போது தொடர்புச் சாதன சாத்தியக் கூறு *1*யை *1* - இல் இருந்து கழித்தால் கிடைக்கும் பூஜ்யம்தான் மாறுபடு தன்மையின் அட்டவணை (A) எனக்காட்டப்படுகிறது. அதாவது இங்கு உதாரணமாக காட்டப்பட்டுள்ள நாட்டில் மக்களிடையே மொழி அமைப்பில் மாறுபடு தன்மையே கிடையாது என இதன் மூலம் அறிகிறோம்.

அல்லாமல், இந்தியாவின் மாறுபடு தன்மை மிகப் பெரிய அளவில் (0.8418) உள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

தொடர்புச் சாதன சாத்தியக் கூறு-அட்டவணை - 4

ஒரு நாட்டின் தொடர்புச் சாதன சாத்தியக் கூற்றை மற்றொரு அளவுகோல் மூலமும் அறியலாம் என்கிறார் கிரீன்பர்க். ஒரு நாட்டில் பேசப்படும் மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கையிலிருந்து மாறுபடு தன்மையின் அட்டவணையையும், தொடர்புச் சாதன சாத்தியக் கூறுகளையும் அறிய இயலும் என்பதை முன்பு கண்டோம். ஒரு நாட்டில் பேசப்படும் மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்டவர்களையும், அதே மொழிகளை (தாய் மொழியாக அல்லாமல்) அறிந்த ஏனையோரையும் கூட்டிட கிடைக்கும் மொத்த மக்கட்தொகையிலிருந்தும், அம்மொழியின் தொடர்பு சாதன சாத்தியக்கூறுகளைக் கண்டறியலாம் என்பது கிரீன்பர்க்கின் இரண்டாவது அளவுகோலாகும். இதனை 'மொழியின் தொடர்புச் சாதன சாத்தியக் கூறும், தொடர்புச் சாதன அட்டவணை-H அளிக்கும் முறைமையும்' (Probability of Communication according to language and its contribution to communicability Index-H) என கிரீன்பர்க் விளக்குகிறார்.

மேற்கண்ட இரு முறைகளிலிருந்து, பல மொழிகள் வழக்கில் உள்ள ஒரு நாட்டில் நிலவும் மொழிச்சூழல், இரு மொழியம், இரண்டு அல்லது அவற்றுக்கும் அதிகமான மொழிகளைப் பேசுவோரிடையே உள்ள மொழித் தொடர்பு, ஒவ்வொரு மொழியைப் பேசுவோரும் தத்தமக்கே உரியவாறு ஏற்படுத்திக் கொண்டுள்ள இரு மொழிய நிலைமைகள் ஆகியன புலப்படும் என்கிறார் கிரீன்பர்க். கிரீன்பர்க் கணக்கீட்டினைப் பற்றிய விரிவான தகவலையும், கிரீன்பர்க் கணக்கீட்டின் அடிப்படையில் தமிழ்நாட்டின் தொடர்புச் சாதன சாத்தியக் கூறுகளின் தகவல்களையும் பின்பு காண்போம்.

மேற்கண்ட பகுதிகளில் ஃபெர்கூஸனின் 'பல்முனை அம்ச பாகுபாடு', ஸ்டூவர்டின் 'மொழிச் சூழலுக்கான மொழிக் கூறுகள்' கார்வினின் மொழியின் சமுதாயப் பயன்பாடுகள் மற்றும் கிரீன்பர்கின் 'மொழி மாறுபடு தன்மை' ஆகிய விளக்கங்கள்- ஒரு நாடு அல்லது பல மொழிகள் பேசப்படும்

ஒரு பகுதியின் மொழிச் சூழலை விவரிக்கப்பயன்படும் என இதுவரை கண்டோம்.

தமிழ்நாட்டில் வழங்கி வரும் மொழிகளுள் ஏறத்தாழ 4 அல்லது 5 மொழிகள் மட்டுமே ஒரு விழுக்காட்டுக்கும் அதிகமானோரால் பேசப்பட்டு வருகின்றன. இவ்வகை மொழிகள் (வரலாற்றாக்கம், நிலைபேறாக்கம், இயங்கு திறன், ஓரின ஒருமைப்பாடு) ஆகியவற்றினால் ஒரே மாதிரியாக உள்ளமையால் ஸ்டூவர்டின் மொழிக் கூறுகளின் அடிப்படையில் விளக்க இயலாது. ஏனெனில் எல்லா மொழிகளுக்கும் பொதுவான விளக்கமே விடையாகக் கிடைக்கும்.

இரண்டாவதாக, பெர்கூஸனின் 'பெரும்பான்மை', 'சிறுபான்மை,' 'சிறப்பு' மொழிகள் என்ற பிரிவுகளுள்ளும் தமிழ் நாட்டில் வழங்கி வரும் மொழிகளைப் பிரிக்க இயலாது. ஒரு மாநிலத்தில் பெரும்பான்மையாக உள்ள ஒரு மொழி வேறொரு மாநிலத்தில் சிறுபான்மை மொழியாக உள்ள நிலைமை இந்தியாவில் எல்லா மாநில மொழிகளுக்கும் பொதுவான ஒன்றாகும். மேலும் எல்லா மாநில மொழிகளுமே, சிறப்பு மொழிநிலையில்தான் இந்தியாவில் உள்ளன. இவ்வகைக் காரணங்களால் இந்தியாவின் ஒரு மாநிலமாகிய தமிழ் நாட்டினைப் பற்றிய ஒரு ஆய்வுக்கு ஃபெர்கூஸனின் ஆய்வு முறை பொருந்தாது.

கிரீன்பர்க் தன் ஆய்வில் முக்கியமாக சென்ஸஸ் கணக்கீட்டை மட்டுமே எடுத்துக் கொண்டுள்ளார். முறையான எண்ணிக்கை சென்ஸஸ் கணக்கீடு பத்தாண்டுக்கு ஒருமுறை இந்தியாவில் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மொழியின் மாறுபடு தன்மையை ஒரு குறிப்பிட்ட காலக்கட்டங்களுக்கு இடையே ஒத்து நோக்க, இவ்வாய்ப்பு பயன்படும் எனக் கருதுகிறோம். எனவே கீழ்வரும் பகுதிகளில் கிரீன்பர்க் ஆய்வு முறையைப் பயன்படுத்தித் தமிழ்நாட்டின் மொழிச் சூழலைக் காண்போம்.

இந்திய மக்கள்தொகை கணக்கீடு

கிழக்கு இந்திய கம்பெனியினர் (East India Company) தென் இந்தியாவில் தங்கள் வர்த்தக, அரசியல் ஆதிக்கத்தை நிலை நிறுத்திய போதுதான் முதன் முறையாக சென்ஸஸ் கணக்கீடு இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டது எனலாம்.

1687-ஆம் ஆண்டு தென் இந்திய கம்பெனியின் நிர்வாகக் குழுவினர் சென்னை நகரில் உள்ள மக்கள்தொகையைப் பற்றிய சென்ஸஸ் கணக்கீட்டைத் தொடங்கினர். அதுமுதல், ஆங்கிலப் பேரரசு இந்தியாவின் பல பகுதிகளில் குறிப்பிட்ட காலக் கட்டங்களில் சென்ஸஸ் கணக்கீட்டை மேற்கொண்டுள்ளது எனலாம். ***1802***, ***1822***, ***1826***, ***1836***, ***1837***, ***1851***, ***1856***, ***1881***, ***1866*** ஆகிய ஆண்டுகளில் இந்தியாவின் பல பகுதிகளில் சென்ஸஸ் கணக்கீடு நடந்துள்ளது. ***1871***-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட சென்ஸஸ் கணக்கீடுதான் மக்கட் தொகை பற்றிய விரிவான, முறையான நிரந்தரமான சென்ஸஸ் வரலாற்றின் முதல் கட்டமாகும். இந்த சென்ஸஸ் கணக்கீட்டில் மக்கட்தொகை வயது, மதம், ஜாதி, கல்வியறிவு பற்றிய பல தகவல்கள் சேகரிக்கப்பட்டன. பத்து ஆண்டு களுக்கு ஒருமுறை இடைவிடாது நடந்துவரும் இந்திய சென்ஸஸின் முதல் சென்ஸஸாகவும் ***1871***-ஆம் ஆண்டின் சென்ஸஸ் கணக்கீட்டைச் சொல்லலாம்.

சென்ஸஸ் கணக்கீட்டில் மக்கள் பேசும் மொழிகளைப் பற்றிய தகவல் சேகரிப்பு பல துறை வல்லுநர்களால் பயன்படுத்தப்படுகிறது. மக்களின் இனக்குழு பிரிவுகளை பிரித்தறிதல் முதல் ஒரிடத்தில் இருந்து வேறொரு இடத்துக்கு இடம் பெயரும் தன்மைகளை (Migration patterns) பல காலக் கட்டங்களில் அறிந்து கொள்வது போன்ற பல சமூகச் செய்திகளை மொழிக் கணக்கீட்டின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

ஆனால், தாய்மொழியைப் பற்றிய தகவலை சேகரிப்பது அவ்வளவு எளிதுமல்ல. கல்வி அறிவு அற்றோரின் மக்கட் தொகை மிகப்பெரிய அளவில் உள்ள இந்தியாவில் தங்களின் தாய்மொழி என்ன என்று அறியாதிருப்பவர்களின் எண்ணிக்கையும் மிகப்பெரிய அளவில் இருப்பது இயற்கையே. தாய்மொழியைப் பற்றிய எளிதான விளக்கமும், தாய்மொழி என்னவென்று புரிந்து கொண்டு விடையளிக்கும் வகையில் உருவான களவேடும் இந்தியா போன்ற நாடுகளில் மிகவும் அவசியமான ஒன்றாகும். இந்த நோக்கத்தை மனதில் கொண்டுதான் இந்திய சென்ஸஸ் கணக்கீடும் தன் தாய்மொழி விளக்கத்தை உருவாக்கியுள்ளது. அதாவது: ஒருவரின் குழந்தைப் பருவத்தில் அவரது தாய் (அவரிடம்) பேசிய

மொழியே தாய்மொழியாகும். தாய் இல்லையென்றால் குடும்பச் சூழலில் பேசப்பட்ட மொழியே தாய்மொழியாகும். குழந்தை, செவிடு, ஊமை போன்றவர்களின் தாய்மொழி அவர் தம் தாய் பேசும் மொழியே ஆகும். 'இந்திய சென்ஸஸ் கணக்கீடு தாய்மொழி பற்றிய தகவலை மட்டும் சேகரிப்பதில்லை இதோடு இணைந்து, ஒருவருக்குத் தெரிந்த பிறமொழிகளைப் பற்றிய தகவல்களையும் (Subsidiary languages) சென்ஸஸ் கணக்கீடு சேகரிக்கிறது.

சென்ஸஸ் கணக்கீடும் இந்தியாவில் இருமொழிய, பன்மொழிய ஆய்வுகளும்

சென்ஸஸ் கணக்கீட்டில் சேகரிக்கப்படும் 'தாய்மொழி' 'அறிந்த பிறமொழிகள்' பற்றிய தகவல்கள் தாம் இந்தியாவில் வழக்கில் உள்ள 'இருமொழியம்' மற்றும் 'பன்மொழியச்' சூழல்களை அறிந்து கொள்ள ஆதாரமாய் உள்ளன எனக்கூறலாம். கல்வியறிவு அற்றோர் அதிக அளவில் உள்ள நாடான இந்தியாவில் தாம் பேசுகின்ற தாய்மொழியின் பெயரைக்கூட அறியாதோர் அதிகமுள்ளனர் என்று முன்பு கூறினோம். இத்தகைய நாடுகளில் தாம் பேசும் மொழி அல்லது கிளைமொழியின் பெயரைக்கூட சொல்லத் தெரியாமல், தங்களின் ஊர்ப் பெயரையோ, அல்லது சாதிப் பெயரையோ கூட தங்களின் தாய்மொழியாக கூறுகிறார்கள். மேலை நாடுகளில் தாங்கள் பேசுவதாகக் கூறும் 'ஜெர்மன்' 'ஆங்கிலம்' 'பிரெஞ்சு' ஆகிய மொழிகளை மொழியியல் அடிப்படையில் பிரித்தறிவது எளிதாக உள்ளது. இந்தியா போன்ற நாடுகளில் சென்ஸஸ் கணக்கீட்டின்போது மக்கள் தங்கள் தாய் மொழி களெனக் கூறும் 'மதராஸி' 'கள்ளர்' போன்ற சொற்களில் இருந்து, அவர்கள் பேசும் தாய்மொழியை அறிந்து கொள்வது கடினமாக உள்ளது. மேலும் ஒரே மொழியைத் தாங்கள் பேசும் சாதிக்கு ஏற்பவும், சமயத்துக்கு ஏற்பவும் பலவாறு குறிப்பிடும் வழக்கும் இந்தியாவில் உள்ளது. உதாரணமாக, மொழியியல் கூறுகளின் அடிப்படையில் ஹிந்தி, ஹிந்துஸ்தான், உருது ஆகிய மூன்றும் ஒரே மொழியைக் குறிப்பதாக மொழியியல் அறிஞர்கள் கருதினாலும், இம்மொழியைப் பேசும் இஸ்லாம் மதத்தினர் இம்மொழியைப் பேசும் இந்து மதத்தினர் தாங்கள் 'ஹிந்தி/ ஹிந்துஸ்தானி' மொழி பேசுவதாகவும் தாங்கள் 'உருது' மொழியைப் பேசுவ

தாகவும், கூறுவது இந்திய சென்ஸஸ் கணக்கீடுகளில் காணப் படுகிறது. இதுபோன்ற குறைகள் சென்ஸஸ் கணக்கீட்டில் காணப்படினும், இருமொழியம், பன்மொழியம் பற்றிய ஆய்வுக்கு அடிப்படையாக அமைவது சென்ஸஸ் கணக்கீடே என்று சொல்லலாம்.

இந்தியாவில் வழக்கில் உள்ள 'இருமொழியம்' 'பன்மொழியம்' பற்றிய ஆய்வுகளுக்கு அளவுகோலாக சென்ஸஸ் கணக்கீட்டை அடிப்படையாக கொண்ட முதல் ஆய்வு ஹட்ஸன் (Hudson : 1936), **1931**ஆம் ஆண்டு சென்ஸஸ் வெளியீட்டை அடிப்படையாகக் கொண்டு நடத்திய ஆய்வே யாகும். பல இனத்தவர், குறிப்பாக பழங்குடியினரிடையே, ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகள் தெரிந்தவர்கள் அதிகமாய் உள்ளனர் என்று தன் ஆய்வில் ஹட்ஸன் சுட்டிக்காட்டுகிறார். தமிழ் நாட்டில் சௌராஷ்டிரா வகுப்பினரிடையே 85%க்கும் அதிகமானோருக்கு வேறு மொழிகளும் தெரியும் என்பார் ஹட்ஸன். மேலும், இளஞ்சிறுவர்கள் கூட 'இருமொழியத் தேர்ச்சி' பெற்று இருப்பதும் இயற்கை என்கிறார். நாகாலாந்தில் வசிக்கும் சிறுவர்கள், அங்குள்ள பன்மொழிச் சூழலின் காரணமாக, ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ளதையும், இவர் உதாரணமாக குறிப்பிடு கிறார். ஹிந்தி மொழிக்கும், அதன் கிளைமொழிகளுக்கும் இடையே உள்ள மொழியியல் கூறுகளின் வேறுபாட்டினையும் இவர் குறிப்பிட்டுக் காட்டி, அந்தக் கிளைமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கும் மக்கள் 'நிலைபேறு பெற்ற' (Standard) ஹிந்தியிலும் மொழித்திறன் கொண்டிருப்பதை விளக்குகிறார். இவர்கள் தாம் பேசும் கிளைமொழியையும் 'ஹிந்தி' என்றே அழைப்பதால் இவர்களின் இருகிளைமொழி தேர்ச்சி (bi-dialectal) அல்லது 'இருமொழித் தேர்ச்சி' (bilingual) பற்றி சென்ஸஸ் கணக்கீடு மூலம் அறிய வாய்ப்பில்லை என்கிறார் ஹட்ஸன்.

ஹட்ஸனின் இருமொழிய ஆய்வைப் பின்பற்றி **1951**ஆம் சென்ஸஸ் கணக்கீட்டை ஆதாரமாகக் கொண்டு, வீயின்ரிச் (Weinreich : 1957) தன் இருமொழிய ஆய்வை மேற்கொண்டார். பலமொழிகளைப் பேசுவோரிடையே ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசுவோர் மட்டும் ஏன் இருமொழித் திறன் கொண்டுள்ளார்கள் என்பது பற்றியும், இருமொழிச் சூழலில் ஒரு மொழியின் திறன் (functional load) எவ்வாறு

உள்ளது என்பது பற்றியும், தன் ஆய்வில் வீயின்ரிச் விளக்கி யுள்ளார். சமுதாயத்தில் வாழும் பல மொழியினரிடையே எந்த மொழியினர் இருமொழித்திறன் கொண்டவராக ஆகிறார்கள் என்பதற்கு ஒரு மொழியின் சமூக உயர்வுதான் காரணமாகும் என்றார் ஹட்ஸன். ஒரு சமுதாயத்தில் மிகக் குறைந்த அளவினரால் பேசப்பட்டும், ஏனைய மொழி யினரால் பெருமளவில் அறிந்திராததுமான ஒரு மொழியைப் பேசுவோர், பெருமளவில் இருமொழித் திறன் கொண்டவராகயிருப்பர் என்பது இயற்கை. ஆனால் அம்மொழிக் கூட்டத்தினர் தங்கள் மொழியைப் பற்றிய மிக உயர்வான சமூக உணர்வும், தங்களுக்குள் மிகவும் இறுக்கமான பிணைப்பும் உள்ளவராயிருப்பின், இருமொழித் திறன் குறைந்தவர்களாகவே இருப்பர் என்கிறார் வீயென்ரிச். இதற்கு உதாரணமாக தோடர் மொழியை உவமையாகக் காட்டுகிறார். தாய்மொழிப் பேசுவோரின் எண்ணிக்கையும், இருமொழித் திறனும் எதிரானவை என்பார் இவர். அதாவது தாய்மொழிப் பேசுவோர் அதிக எண்ணிக்கையில் உள்ளவராயின் அவர்களிடையே இருமொழித் திறன் உள்ளவர்கள் குறைவாகவும், தாய்மொழி பேசுவோர் குறைந்த அளவினராயின், இருமொழித் திறன் உள்ளவர்கள் அதிகமாகவும் இருப்பர். ஒருமொழி 'தாய்மொழியாகப்' பயன்படும்போதும், அதே மொழி 'இருமொழிய மொழியாகப்' பயன்படும்போதும், உள்ள 'மொழித்திறனின்' வேறுபாடு களைக் கண்டறிந்த போதும் இவ்வறிஞர் மிகக் குறைந்த அளவினரால் தாய்மொழியாகப் பேசப்படும் ஒரு மொழி கூட மிகப் பெரும்பாலோரால் 'இருமொழிய மொழியாக' இருக்கும் நிலைமையை இந்தியச் சூழலில் உதாரணங்களுடன் விளக்கி யுள்ளார். ஆங்கிலத்தை விட மிகப்பெரும் மக்கட்தொகையால் தாய்மொழியாக பேசப்படுவது ஹிந்தி ஆகும். ஆனால் 'மொழித் திறனைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் மிகப் பெரும்பாலோரால் இருமொழிய மொழியாகப் பேசப்பட்டு வருகிற நிலைமையை இவர் இதற்கு உதாரணமாகக் காட்டுகிறார்.

சென்ஸஸ் கணக்கீடும், தமிழ்நாட்டில் இரு மொழிய ஆய்வுகளும்

சென்ஸஸ் கணக்கீட்டின் புள்ளி விவரஙகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள மொழிகளைப் பற்றியும், அம்மொழிகளைப் பேசுவோர் அறிந்துள்ள பிறமொழிகள், இரண்டாம் மொழிநிலையில் உள்ள மொழிகளிடையே முதன்மையான மொழிகள், மேலும் தாய்மொழி பேசுவோர் எண்ணிக்கைக்கும் அவர்கள் அறிந்த பிற மொழிகளின் எண்ணிக்கைக்கும், உள்ள விகிதாச்சாரம் ஆகியவைப் பற்றிய இருமொழிய ஆய்வுகள் மிகக் குறைந்த அளவே நடந்துள்ளன எனச் சொல்லலாம்.

தென்னிந்தியாவில் உள்ள பெரு நகரங்களான சென்னை, பெங்களூர், ஹைதராபாத், திருவனந்தபுரம் ஆகிய ஊர்களில் உள்ள மொழிநிலையை 1961-ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டின் அடிப்படையில் பூபதி (1980) தன் ஆய்வில் விளக்கியுள்ளார். இந்த நான்கு நகரங்களிலும் தத்தம் மாநில மொழிகளைப் பேசுவோர் மிகப்பெரும்பாலராக உள்ள நகரம் திருவனந்தபுரம் (95.4%) என்றும், இரண்டாவது நிலையில் சென்னை நகரம் (70.9%) என்றும் சுட்டிக் காட்டுகிறார். ஹைதராபாத் நகரில் தெலுங்கு பேசுவோரின் விழுக்காடு 61.4% என்றும், பெங்களூரில் கன்னடம் பேசுவோரின் விழுக்காடு 50.8% என்றும் தன் ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

சீனுவாச வர்மா (1980) வெளியிட்டுள்ள 'இருமொழியம்' என்னும் புத்தகத்தில் தமிழ்நாட்டில் உள்ள இருமொழிய நிலைபற்றி நன்கு விளக்கியுள்ளார். தமிழ்நாட்டில் ஹிந்தி-உருது இருமொழி நிலை பெரும்பயன் அளிக்கவில்லை என்றும், ஹிந்தி-உருதுவை இரண்டாம் மொழியாக அறிந்தவர்கள் மிகக் குறைவாக உள்ளதே இதற்கான காரணமென்றும், இவர் கூறுகிறார். மாறாக, தமிழ் நாட்டில் வாழும் ஹிந்தி, மராத்தி, குஜராத்தி ஆகிய மொழிகளைப் பேசுவோர் தமிழையும் ஆங்கிலத்தையும் பிற மொழிகளாக பெருமளவில் அறிந்துள்ளனர். 1961-ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டின் அடிப்படையில் தன் ஆய்வு முடிவுகளைச் சீனுவாச வர்மா தந்துள்ளார். 1961-ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டின் புள்ளி விவரப்படி, தமிழைத் தாய்மொழி

யாகக் கொண்டவர்களிடையே 86.1% மக்கள் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகவும் 7.9% மக்கள் தெலுங்கை இரண்டாம் மொழியாகவும் கொண்டுள்ளதாக அறிகிறோம்.

உயர் கல்வி கற்ற, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களிடையே தமிழ் - ஆங்கிலம் இருமொழிய நிலையே காணப்படுகின்றது. மற்றவர்களிடையே தமிழ்-தெலுங்கு, தமிழ்-கன்னடம், தமிழ்-மலையாளம் ஆகிய இருமொழிய நிலைகள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டின் எல்லையோரங்களில் வாழுவோர் அண்டைய மாநில மொழியை இருமொழிய மொழியாக பெருமளவில் அறிந்துள்ளனர். மேலும், தமிழ் நாட்டில் வாழும் சிறுபான்மை யினோர், தங்கள் தாய்மொழியைத் தவிர, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளையும் அறிந்திருக்கும் நிலையையும் நாம் காண்கிறோம். மாநில மொழியாக தமிழ், பயிற்று மொழியாக ஆங்கிலம் என வெவ்வேறு நிலைகளில் பல மொழிகளைக் கற்ற, கற்க வேண்டிய சூழ்நிலையே இதற்கு காரணமாக இருக்கலாம். அண்டை மாநிலங்களை ஒட்டிய தமிழ்நாட்டின் எல்லை ஓரங்களில் வாழ்ந்து வருவோரின் இருமொழிய நிலை பற்றி முன்பு கூறினோம். தர்மபுரி மாவட்டத்தில் ஓசூர் வட்டத்தில் வாழுவோர் தமிழ், தெலுங்கு, கன்னடம், உருது என பல மொழிகளை அறிந்திருப்பதையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவன்கோடு பகுதியில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளோர், மலையாளத்தை முதல் மொழி போன்ற சமுதாய உணர்வுடன் பொதுத் தொடர்பு மொழியாக ஏற்றுக் கொண்டுள்ளதையும் இதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

தமிழ் நாட்டில் ஆங்காங்கே வாழ்ந்து வரும் சிறுபான்மை யினரின் இரு மொழிய நிலைகளை விளக்கியும் சில ஆய்வுகள் தமிழ்நாட்டில் நடந்துள்ளன என்று இங்கே குறிப்பிட வேண்டும். மதுரை மாவட்டத்தில் வாழ்ந்து வரும் சௌராஷ்டிரா மக்களின் இருமொழியம் பற்றிய ஆய்வை பண்டிட் நடத்தியுள்ளார். தஞ்சை நகரில் வாழ்ந்து வரும் மராத்தி மக்களின் மராத்தி-தமிழ் இருமொழியம் பற்றியும், தஞ்சை நகரைச் சுற்றிய பகுதிகளில் வாழ்ந்து வரும் தெலுங்கு மக்களின் தெலுங்கு-தமிழ் இருமொழியம் பற்றியும் தமிழ்ப் பல்கலைக்கழகம் (1989) ஆய்வுகளை நடத்தியுள்ளது.

சென்ஸஸ் கணக்கீட்டுத் தகவலும், மொழிச்சூழலை விளக்குவதில் உள்ள குறைகளும்

இந்தியாவில் ஆங்கிலப் பேரரசினால் 1871 - ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சென்ஸஸ் கணக்கீடுதான் இந்தியாவில் மக்கட்தொகை பற்றிய விரிவான முறையான நிரந்தரமான சென்ஸஸ் வரலாற்றின் ஆரம்பம் என்று முன்பு கூறினோம். இந்தியாவில் பேசப்படும் மொழிகளைப் பற்றிய முழுத் தகவல்களையும், மக்கள் தங்கள் மொழிகளை அழைக்கும் பல பெயர்கள் பற்றிய முழு விவரங்களையும் வெளியிட்டது 1961 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீடுதான் என்று சொல்லலாம். மேலும், பல மொழிகளைப் பற்றிய பொதுத் தகவல்கள் மட்டுமே பயனுள்ள தகவல்களாக இருக்காது என்று முடிவு செய்யப்பட்டதும் 1961 - ஆம் சென்ஸஸ் கணக்கீடு தான். அதனால் பல மொழிகளின் பெயர்களை மொழியியல் அடிப்படையில் பிரித்தறிந்து, 1961 - ஆம் சென்ஸஸ் கணக்கீடு வெளியிட்டது. கிரியெர்ஸனின் 'இந்திய மொழிகளின் ஆய்வு' வெளிவந்து ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு பிறகும், இந்தியாவில் வழக்கில் உள்ள சிறுபான்மை மொழிகளைப் பற்றிய தகவல்கள் மொழியியல் அறிஞர்களுக்கும், கல்வியாளர்களுக்கும், இந்திய மற்றும் மாநில அரசுகளுக்கும் முழுமையாக கிடைக்காமல் இருந்த ஒரு சூழ்நிலையில் 1961 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீடு முதன்முறையாக எல்லா மொழிகளையும் வெளியிட்டதோடு அல்லாமல் அவை பற்றிய முந்தைய பாகுபாடுகளை அறிந்து, அவற்றுள் உள்ள குறைகளை நீக்கி, தற்கால மொழியியல் விளக்கங்களின் அடிப்படையில் புது பாகுபாடுகளுடன் இந்திய மொழி பற்றிய செய்திகளையும், அவற்றைப் பேசும் மக்களின் எண்ணிக்கையும் வெளியிட்டது.

உதாரணமாக, 1961 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டு அறிக்கையின் அடிப்படையில் தமிழ் நாட்டில் வழக்கில் உள்ள மொழிகளைப் பற்றிப் பார்ப்போம். தமிழ் நாட்டில் தாய் மொழிகள் என 159 பெயர்கள் சேகரிக்கப் பட்டுள்ளதாக 1961 - ஆம் ஆண்டு சென்ஸஸ் அறிக்கை தெரிவிக்கிறது. இவற்றுள் வெளி நாட்டு மொழிகளாக கணக்கெடுக்கப்பட்ட 59 தாய் மொழிகளைத் தவிர்த்து, பாக்கி உள்ள 100 மொழிகளில் 7 தாய்மொழிகளைப் பற்றிய முழுத் தகவல்கள் கிடைக்கப் பெறாண்மையினால் அவைகளை

மொழியியல் அடிப்படையில் அறிந்த மொழிகளோடு (Known languages) இணைக்க இயலவில்லை. இவை தவிர்த்து, பாக்கி உள்ள 97 தாய்மொழிகள், மொழிக் குடும்பங்களின் கீழும், அறிந்த மொழிகளின் கீழும், தனி மொழிகளாயிருப்பின் தனித்தனி மொழிகளாகவும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. உதாரணமாக கூற வேண்டுமானால், கீழ்க்கண்ட மொழி களையும் (Languages) அவற்றோடு இணைக்கப்பட்ட தாய்மொழிகளையும் (Mother tongues) கூறலாம். தமிழ், குறவர், வள்ளுவ மொழி, உடையார் மொழி, கஸ்தூரி ஆகியன தமிழின் தாய்மொழிகளாக குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. தெலுங்கு கொடுவர், மிஜை, தீவாரி, வடுகர், மாதரி, எகிடி ஆகியன தமிழ் நாட்டில் பேசப்படும் தெலுங்கின் தாய்மொழி களாகவும், கன்னடம், உராலி, சோளகா, மொன்டதன் செட்டி, ஹலியன், செட்டி பாஷை கொனவர் ஆகியன தமிழ் நாட்டில் பேசப்படும் கன்னடத்தின் தாய்மொழிகளாக 1961 - ஆம் ஆண்டு சென்ஸஸ் குறிப்பிடுகிறது. அடுத்த நிலையில் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுபான்மை மொழிகளைப் பார்ப்போம். இம்மொழிகள் மொழியியல் மற்றும் மானுடவியல் அடிப்படையில் சிறப்பான மொழிகள் எனக் கருதப்படுகின்றன. இம்மொழிகளைப் பேசுவோர்கள் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. குறும்பா, படகா, இருளா, கோதா, தோடா, காட்டு நாயக்கன் ஆகிய இரண்டும் குறும்பரின் தாய் மொழிகளெனவும், படகா, பல்லக்கல் ஆகிய இரண்டும் படகாவின் தாய்மொழிகள் எனவும், இருளா, இருளிகா, கஸ்பர், கொசவன் ஆகியன இருளாவின் தாய் மொழிகள் எனவும், கோதா, கோபாஷை ஆகியன கோதாவின் தாய்மொழிகள் எனவும் சென்ஸஸ் தகவல் தெரிவிக்கின்றது.

மேற்கண்ட சிறுபான்மை மொழிகளைப் பற்றிய முழுத் தகவல்களையும், இந்த தாய்மொழிகளைப் பேசுபவர்கள் அறிந்த பிற மொழிகளையும் மாவட்டம், வட்டம் வாரியாக 1961 - ஆம் சென்ஸஸ் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதன் பிறகு 1971, 1981 - ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சென்ஸஸ் அறிக்கைகள் பெரும்பாலான தாய்மொழிகள் பற்றிய தகவல்களையும், சிறுபான்மை மொழிகள் பற்றிய தகவல் களையும் வெளியிடவில்லை. இந்திய அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள 14 மொழிகள் மற்றும் ஏனைய

மொழிகள் எனக் கருதப்படும் 91 மொழிகளைப் பேசுவோா எண்ணிக்கை மட்டுமே சென்ஸஸ் வெளியீட்டில் தெரிவிக்கப் படும் என்று இந்திய அரசு 1971 - ஆம் ஆண்டு முடிவு செய்தது. ஒரு தாய்மொழி 10,000 பேருக்கும் அதிக மானோரால் பேசப்பட்டு, அந்தத் தாய்மொழி மேற்கூறிய 105 மொழிகளில் ஒன்றுடன் இணைக்கப்படுமானால், அந்தத் தாய்மொழியின் பெயரும் வெளியிடப்படுமெனவும் அரசு முடிவு செய்தது. அரசின் மேற்கூறிய முடிவினால் பலமொழி களைப் பற்றிய தகவல்கள் 1971, 1981 - ஆம் ஆண்டுகளுக் கான சென்ஸஸ் கணக்கீட்டு அறிக்கைகளில் இடம் பெறவில்லை. தாய்மொழிகள் தமிழ்நாட்டில் எத்தனைப் பேரால், எந்தெந்த இடங்களில் பேசப்படுகின்றன என்ற தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை. 10,000 பேருக்கு அதிகமானோர் 'படகா' தாய்மொழியைப் பேசுவதால், 'படகா' தாய்மொழி கன்னடத்தோடு இணைக்கப்பட்டுள்ள விவரம் மட்டுமே சென்ஸஸ் அறிக்கையில் உள்ளது. ஆனால் 'படகா' தாய்மொழி குறிப்பாக, எத்தனை பேரால், எங்கெங்கு பேசப்படுகிறது என்ற தகவல்களும் சென்ஸஸ் அறிக்கையில் இடம்பெற வில்லை.

இந்த ஆய்வில் 1961 - ஆம் ஆண்டு சென்ஸஸ் அறிக்கையில் உள்ள கணக்கீடு எடுத்துக் கொள்ளப்பட வில்லை. ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்குப் பிறகு 1961 - ஆம் ஆண்டு மக்கட்தொகையின் அடிப்படையில் தமிழ்நாட்டின் மொழிச்சூழலை விவரிப்பது பொருத்தமில்லாதது என்பதே காரணமாகும். 1981 - ஆம் ஆண்டு சென்ஸஸ் அறிக்கையில் தாய்மொழியினர் பேசும் பிறமொழிகள் பற்றிய தகவல்கள் இடம்பெறவில்லை. பல தாய்மொழிகளைப் பேசுவோர் அறிந்த பிறமொழிகளையும் கணக்கிலெடுத்து தமிழ்நாட்டின் மொழிச்சூழலை நாம் கீழே உள்ள பகுதிகளில் விளக்கி இருக்கிறோம். எனவே 1971 - ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கீட்டின் அடிப்படையில் இந்த ஆய்வு அமைந்துள்ளது.*

---

* 1981 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டின் அடிப்படையில் 'தமிழ்நாடு' ஓர் அறிமுகம் என்ற ஆய்வுப்பகுதி அமைந்துள்ளது தமிழ்நாட்டின் அரசு பொருளாதார அமைப்பு, மக்கட்தொகை, கல்வி, பிற்படுத்தப்பட்ட மக்கள் எண்ணிக்கை போன்ற பொதுச் செய்திகள் தாம்' 'தமிழ்நாடு-ஓர் அறிமுகம்' என்ற தலைப்பின் கீழ் தரப் பட்டுள்ளன. 1981-ஆம் ஆண்டு சென்ஸஸ் சூழலை விவரிக்க 1971-ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மொழிச்சூழல்

1971, 1981-ஆம் ஆண்டுகளின் சென்ஸஸ் கணக்கீடு களில் **105** மொழிகள் பற்றிய மக்கட்தொகை விவரங்களே கொடுக்கப்பட்டுள்ளன என்று முன்பு கண்டோம். அவற்றுள் தமிழ்நாட்டில் **37** மொழிகள் பேசப்படுவதால் **1971** - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீடு தகவல் வெளியிட்டுள்ளது. அட்டவணைகள் - I & II - இல் இடம்பெற்ற இவை இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட *14* மொழிகளும், ஏனைய *23* மொழிகளும் ஆகும். இவற்றுள் **5** மொழிகள் மட்டுமே *1.00%* விழுக்காட்டுக்கும் அதிகமானோரால் பேசப்படுகின்றன. அவை கன்னடம் (2.6%), மலையாளம் (1.4%), தமிழ் (84.5%), தெலுங்கு (8.7%), உருது (1.8%) ஆகும். இந்த புள்ளி விவரங்களில் இருந்து, தமிழ் மிகப் பெரும்பான்மை மக்களால் பேசப்படும் செய்தி தெளிவாகிறது. தென்னிந்திய மாநிலங்களான ஆந்திரப்பிரதேஷில் தெலுங்கு *86.00%* விழுக்காட்டினராலும், கேரளாவில் மலையாளம் *95.00%* விழுக்காட்டினராலும், கர்நாடகாவில் கன்னடம் *65%* விழுக்காட்டினராலும் பேசப்படுவதைப் பார்க்கும்போது, தமிழ்நாடு **3**வது நிலையில் உள்ளது. அதாவது கர்நாடகாவைத் தவிர, மற்றைய மூன்று மாநிலங்களிலும் ஏறத்தாழ ஒரு மொழிய (monolingual) சூழலே காணப்படுகிறது என்று கூறலாம். தமிழ்நாட்டின் மற்றைய சிறுபான்மை மொழிகளில் தெலுங்கு முதலிடம் வகிக்கிறது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் வந்து தெலுங்கு பேசுவோர் குடியேறியுள்ளதும், தமிழகத்தின் அண்டை மாநிலமாக ஆந்திரா இருப்பதால் எல்லையோரங்களில் தெலுங்கு மொழியினர் வாழ்வதும், **1954**க்கு முன்னர் ஆந்திராவின் ஒரு பகுதி இணைந்து சென்னை மாநிலமாக (Madras Presidency) இருந்ததும் இதற்கு காரணங்களாக இருக்கும். அடுத்த நிலையில் கன்னடமும், மலையாளமும் உள்ளன. கர்நாடகா, கேரளா எல்லையோரங்களில் கன்னடம் மற்றம் மலையாளம் பேசுவோர் வாழ்ந்து வருவது இதற்கு காரணமாகும். உருது மொழியைப் பேசும் இஸ்லாம் மதத்தினர் தமிழகத்தில் நீண்ட காலமாய் வாழ்ந்து வருவது, உருது மொழி ஒரு குறிப்பிடத்தக்க சிறுபான்மை மொழியாக உருவாக காரணமாய் இருக்கலாம். நாம் முன்பு குறிப்பிட்டதுபோல, ஏனைய *23* மொழிகளும்

'சிறுபான்மை மொழிகள்' என்று கூறும் அளவுக்குக்கூட கணிசமான மக்கட்தொகையினரால் பேசப்படவில்லை.

அடுத்து, மாவட்ட வாரியாக தமிழ்பேசுவோரின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, தஞ்சாவூர் (97.00%) முதல் இடம் வகிப்பதை அறிகிறோம். தமிழகத்திலேயே ஒரு மொழிச் சூழல் முழுமையாக உள்ள மாவட்டம் தஞ்சாவூர் எனலாம். இங்கு தெலுங்கைத் தவிர (1.2%) ஏனைய சிறுபான்மை மொழிகளைப் பேசுவோர் 1.00% விழுக்காட்டினர் கூட இல்லை. தஞ்சாவூர் மாவட்டத்துக்கு அடுத்த நிலையில் திருநெல்வேலி (95.2%) தென்ஆற்காடு (93.7%), திருச்சிராப்பள்ளி (92.8%) ஆகிய மாவட்டங்களில் தமிழ் மிகப்பெருமளவில் பேசப்படுவது புலப்படும். இம்மூன்று மாவட்டங்களிலும் உள்ள சிறுபான்மை மொழி தெலுங்கு (தெ.ஆற்காடு 3.9%, திருச்சிராப்பள்ளி 5.6%, திருநெல்வேலி 4.00%) ஆகும். தென்ஆற்காட்டில் 1.8%-ம், திருச்சிராப்பள்ளியில் 1.2%-ம் உருதுபேசுவோர் உள்ளனர். தமிழ்நாட்டின் மாவட்டங்களிலேயே தமிழ் பேசுவோர் மிகக்குறைவாக உள்ள மாவட்டம் நீலகிரி (38.1%) ஆகும். இம்மாவட்டத்தில் பெரும்பாலோரால் பேசப்படும் படகா மொழியை 1971 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கன்னடத்தின் ஒரு தாய் மொழியாக இணைத்துள்ளது என்பதை நாம் அறிகிறோம். இதனால் நீலகிரி மாவட்டத்தில் கன்னடம் பேசுவோரின் விழுக்காடு 31.9 ஆக உயர்ந்துள்ளது. கேரள மாநிலத்தை ஒட்டி நீலகிரி அமைந்துள்ளதால் மலையாளம் பேசுவோரும் பெருமளவில் (19.4%) இங்கு வாழ்கிறார்கள். இந்த சூழ்நிலையில் தமிழ் பேசுவோரின் எண்ணிக்கை குறைந் திருப்பதின் காரணம் புலப்படும். எவ்வாறு இருப்பினும், தமிழகத்தின் மாவட்டங்களுள் நீலகிரி மாவட்டம்தான் பன்மொழிய (multilingual) சூழலுக்குச் சிறந்த உதாரணமாய் இருக்கிறது.

நீலகிரி மாவட்டத்துக்கு அடுத்த நிலையில் தமிழ் குறைந்த அளவில் பேசப்படும் மாவட்டங்கள் தர்மபுரி (65.99%) மற்றும் கோயம்புத்தூர் (69.00%) ஆகும். தர்மபுரி மாவட்டம் அண்டை மாநிலங்களின் எல்லைகளில் உள்ளதால் அங்கு கணிசமான அளவில் தெலுங்கு பேசுவோரும் (18.25%), கன்னடம் பேசுவோரும் (10.48) வாழ்ந்து வருவது இயற்கையே. உருது பேசுவோர் எண்ணிக்கையும் (4.40%) இங்கு உள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் தெலுங்கு பேசுவோர் 18.84%

பேரும், கன்னடம் பேசுவோர் 7.91% பேரும், மலையாளம் 2.67 % பேரும், உருது பேசுவோர் 1.11% பேரும் உள்ளனர். மக்கட் தொகையின் அடிப்படையில் தமிழ்நாட்டின் ஐந்து பெரும் நகர்களாக முறையே சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களைக் கூறலாம். (அட்டவணை- III & IV).

சென்னை மாநகரில் 25 மொழிகள் பேசப்படுவதாய் 1971 - ஆம ஆண்டு சென்ஸஸ் வெளியீடு குறிப்பிடுகிறது. இவற்றில் மாநகரின் மொத்த மக்கட்தொகையில் 1% அதிகமானோரால் பேசப்படும் மொழிகள் ஹிந்தி (1.26%), மலையாளம் (3.07%) தமிழ் (73.47), தெலுங்கு (11.99%), உருது (5.72%) ஆகிய ஐந்து மொழிகள் ஆகும். தமிழ்நாட்டின் மாநில மொழியான தமிழ் சென்னையின் மக்கட்தொகையில் ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கு மக்களால் பேசப்படுகிறது. 1961 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டு விவரப்படி சென்னையில் தமிழ் பேசுவோரின் விழுக்காடு 70.9% என முடிவு கண்டோம். சென்னை நகரின் ஒரு மொழிநிலை 1961 ஆம் ஆண்டில் உள்ளதுபோலவே 1971 - ஆம் ஆண்டிலும் இருக்கிறது என இதன் மூலம் அறியலாம். தென்னிந்திய நகரில் திருவனந்தபுரம் ஒருமொழிய நிலையில் முதல் இடத்தில் உள்ளது என்றும் முன்பு கண்டோம். திருவனந்தபுரத்துக்கு அடுத்த (அதாவது இரண்டாவது) நிலையில் சென்னை ஒரு மொழிய நிலையில் உள்ளது என இதன் மூலம் விளங்குகிறது. சென்னை நகரில் பேசப்படும் சிறுபான்மை மொழிகளில் முதல் இடத்தில் இருப்பது தெலுங்கு மொழியாகும். முன்பு கூறியதுபோல், தெலுங்கு மொழி பேசுவோர் பன்னெடுங் காலமாக சென்னை நகரில் வாழ்ந்து வருவதே இதற்கு காரணமாக இருக்கலாம்.

தமிழ்நாட்டில் இரண்டாவது பெருநகராகக் கருதப் படுவது மதுரையாகும். இந்நகரில் 21 மொழிகள் பேசப்படு கின்றன. இவற்றுள் 1% இற்கும் அதிகமானோரால் பேசப் படும் மொழிகள் குஜராத்தி (13.11%), தமிழ் (74.65%), தெலுங்கு (7.2%), உருது (3.09%) ஆகிய நான்கு மொழிகள் ஆகும். சென்னை மாநகரை விட மதுரையில் தமிழ் பேசுவோரின் விழுக்காடு அதிக அளவில் இருந்தபோதும் மதுரையை ஒரு ஒருமொழிய நகரம் என கூற இயலாது. ஏனெனில், சென்னையைவிட மதுரையில் சிறுபான்மை மொழிகளைப்

பேசுவோரின் விழுக்காடு அதிக அளவில் உள்ளது. சிறுபான்மை மொழிகளில் குஜராத்தியும், தெலுங்கும் கணிசமான விழுக்காட்டினரால் பேசப்படுகின்றன. மதுரை நகரில் பல நூற்றாண்டுகளாக நெசவுத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் சௌராஷ்டிரர்களும், தெலுங்கர்களும் வாழ்ந்து வருகின்றனர். 1971 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டில் சௌராஷ்டிரா தாய் மொழி குஜராத்தியுடன் இணைக்கப் பட்டுள்ளது. இதனால் சௌராஷ்டிரா தாய்மொழி யின் தனித்த மக்கட்தொகை விவரம் கிடைக்காததோடு குஜராத்தி மொழியின் மொத்த எண்ணிக்கையும் கூடுதலாய் தோன்றுகிறது. மதுரையில் வாழும் சௌராஷ்டிரா தாய்மொழியைப் பேசுவோரின் எண்ணிக்கை குஜராத்தி மக்கட்தொகையுடன் சுட்டிக்காட்டப்பட்டதால், 1971-ஆம் ஆண்டு சென்ஸஸ் வெளியீட்டில் மதுரையில் குஜராத்தி பேசுவோரின் விழுக்காடு 13.11% எனக் காண்கிறோம்.

தமிழ்நாட்டின் மூன்றாவது பெருநகரமாக கருதப்படும் கோயம்புத்தூரில் 20 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் ஒரு விழுக்காட்டிற்கும் அதிகமானோரால் பேசப்படும் மொழிகள் கன்னடம் (7.14%), மலையாளம் (12.79%), தமிழ் (51.28%), தெலுங்கு (22.95%), உருது (2.84%) ஆகிய 5 மொழிகள் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள 5 பெரிய நகரங்களுள் தமிழ் பேசுவோர் குறைந்த அளவில் காணப்படும் நகரம் கோயம்புத்தூர் ஆகும். மேலும் பெரும்பான்மை மொழிகளும் ஏனைய நகரங்களில் உள்ளதைவிட இங்கு கணிசமான அளவில் பேசப்படுகின்றன. உதாரணமாக, தமிழ்நாட்டிலேயே முதலாவது சிறுபான்மை மொழியாகக் கருதப்படும் தெலுங்கு கோயம்புத்தூரில்தான் அதிக அளவில் பேசப்படுகின்றது. மற்றொரு சிறுபான்மை மொழியான மலையாளமும் ஏனைய நகரங்களையும்விட இங்குதான் பெருமளவில் பேசப்படுகின்றது. தமிழ்நாட்டின் நகர்களுள் சேலத்தை அடுத்து இரண்டாவது நிலையில் கன்னடமும் கூட இங்கு அதிக அளவில் பேசப்படுவது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டின் நான்காவது பெருநகராகக் கருதப்படும் சேலத்தில் ஒரு விழுக்காட்டிற்கும் அதிகமான மக்களால் பேசப்படும் மொழிகள் குஜராத்தி (4.92%), கன்னடம் (10.85%), மலையாளம் (1.23%), தமிழ் (59.33%), தெலுங்கு (6.65%) உருது (6.37%) ஆகிய மொழிகள் ஆகும். தமிழ்நாட்டின்

நகரங்களுள் கோயம்புத்தூருக்கு அடுத்ததாக இருமொழிய நகரமாக இருப்பது சேலம் ஆகும். சிறுபான்மை மொழிகளாக தெலுங்கும் கன்னடமும் அதிகமானோரால் பேசப்படுகின்றன. அண்டை மாநிலங்களான ஆந்திராவும், கர்நாடகமும் இருப்பதும் இதற்கு காரணமாகலாம். மதுரையைப் போன்றே சௌராஷ்டிரா மொழி பேசுவோரும் கணிசமாக உள்ள நகரம் சேலம் ஆகும். அதனால் குஜராத்தி பேசுவோரும் 4.92% பேர் இங்கு உள்ளதாக சென்ஸஸ் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

எல்லா நகரங்களையும் விட ஒரு மொழியச் சூழல் முழுமையாக உள்ள நகரம் திருச்சிராப்பள்ளி எனலாம். தமிழ் நாட்டின் மற்ற எல்லா நகரங்களையும் விட அதிகமான அளவில் (79.92%) தமிழ் இங்கு பேசப்படுகிறது. சிறுபான்மை மொழிகளான குஜராத்தி (2.14%) மலையாளம் (1.46%), தெலுங்கு (6.9%), உருது (7.93%) ஆகியவை மிகக் குறைந்த அளவிலேயே பேசப்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட 5 நகரங்களிலும் காணப்படும் மொழிச் சூழலை ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது சில பொதுவான செய்திகள் புலப்படும். கோயம்புத்தூரும், சேலமும் இரு மொழியச் சூழல் உள்ள நகரமென்றும், இவ்விரு நகர்களிலும் மற்றைய சிறுபான்மை மொழிகளும் கணிசமான அளவிலே காணப்படுகின்றன என்பதும் தெளிவாகும். சென்னை, மதுரை, திருச்சி ஆகிய மூன்றும், மொழிச் சூழலைப் பொறுத்தவரை, ஏறத்தாழ ஒரே மாதிரியான சூழலைத்தான் பிரதிபலிக்கின்றன. இந்த ஐந்து நகரங்களிலும் சிறுபான்மை மொழியாக இருப்பது தெலுங்கு மொழியே ஆகும். சௌராஷ்டிரா தாய்மொழியைக் குஜராத்தி மொழியுடன் இணைத்து 1971 - ஆம் சென்ஸஸ் வெளியிட்டிருப்பதுதான் மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் குஜராத்தி ஒரு சிறுபான்மை மொழியாக வளர்ந்துள்ளதற்கான காரணம் என்று கூறலாம்.

தமிழ்நாட்டில் 'தொடர்புச் சாதன சாத்தியக்கூறும்' மொழி மாறுபடு தன்மையும்

ஒரு நாட்டில் பேசப்படும் பல மொழிகளும் அவை களைப் பேசும் மக்கள் எண்ணிக்கையும் அந்நாட்டில் நிலவி வரும் 'மொழி மாறுபடு தன்மையின்' (linguistic diversity)

அளவை நமக்குப் புலப்படுத்தும். உதாரணமாக நியூகினி, ஆங்கில, எகிப்திய சூடான் எல்லையில் உள்ள நுபா மலைப் பகுதிக்ளில் மொழி மாறுபடு தன்மை பெருமளவில் உள்ளது. ஏனெனில் இவ்விடங்களில் பல மொழிகளைப் பேசுவோர் வாழ்ந்து வருகின்றனர். வட அமெரிக்கா போன்ற நாடுகளில் 'மொழி மாறுபடு தன்மை' மிகச் சீராக உள்ளதைக் காண்கிறோம். ஏனெனில் இந்நாடுகளில் உள்ள மக்கட் தொகையில் மிகப் பெரும்பாலோர் ஒரே மொழியைப் பேசுவதே இதற்குக் காரணமாகும். ஒரு நாட்டில் நிலவும் 'மொழி மாறுபடு தன்மையை' துல்லியமாக அறியலாம் என்கிறார் கிரீன்பர்க். மொழி மாறுபடு தன்மைகளின் கணிப்பு களை அரசியல் பொருளாதாரம், சரித்திரம் மற்றும் ஏனைய மொழியியல் அல்லாத கூறுகளோடு ஒப்பிட்டுப் பார்த்து, மொழி மாறுபாடு தன்மைக்கான காரணங்களையும் அறிய இயலும் என்பது இவ்வறிஞரின் கருத்தாகும்.

பலமொழிகளைப் பேசும் குழுவினரிடையே அவர்களது தாய்மொழி பற்றிய மக்கட்தொகையை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டு அக்குழுவினரின் 'மொழி மாறுபடு தன்மையை' அளந்தறிவுதை <u>வழிமுறை - A</u> இன் மூலமாக கிரீன்பர்க் விளக்குகிறார். உதாரணமாக ஒரு மக்கட் தொகையில் இரண்டு பேரை மட்டும் எடுத்துக்கொள்வோம். இவ்விரண்டு பேரும் ஒரே தாய்மொழியைப் பேசுவார்கள் என்று வைத்துக் கொண்டு இவ்விருவரிடையே உள்ள 'மொழிமாறுபடும் தன்மையை' அளந்தறியலாம். குறிப்பிட்ட மக்கட்தொகையில் எல்லாரும் ஒரே தாய்மொழியைப் பேசுபவர்கள் என்று வைத்துக் கொண்டால், மேலே சொன்ன இரண்டு பேரும் ஒரே தாய்மொழியைப் பேசுவதற்காக உள்ள சாத்தியக்கூற்றை (Probability) <u>1</u> என வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொருவரும் தனித்தனி மொழிகளைப் பேசுபவர்களாக இருந்தால், சாத்தியக் கூறு <u>0</u> எனலாம். ஒருமைப்பாட்டை விட வேறுபாட்டை நாம் கணக்கிடுவதால் 'மொழி மாறுபடும் தன்மையின்' அளவை <u>1</u> - இல் இருந்து கழிக்கலாம். முழுமை யான ஒருமைப்பாட்டு அளவிலிருந்து (அதாவது <u>0</u> இல் இருந்து) முழு வேறுபாட்டு அளவுக்குள் (அதாவது <u>1</u> வரை) 'மொழி மாறுபடும் தன்மையின்' அளவு இருக்கும்.

ஒவ்வொரு மொழியின் தொடர்புச் சாதன சாத்தியக் கூறுகளின் கூட்டல்தொகைதான் மொத்த தொடர்புச் சாதன

சாத்தியக் கூறாகும். உதாரணமாக M, N, O எனப்படும் மொழிகளின் சாத்தியக் கூறுகள் m^2, n^2, O^2 ஆகும். இங்கு m என்பது M மொழிப் பேசுவோரின் எண்ணிக்கை மொத்த மக்கட்தொகையில் உள்ள விகிதமாகும். அதே போல் n எனப்படுவது N மொழி பேசுவோரின் மொத்த மக்கட் தொகையில் உள்ள விகிதமாகும். இவ்வகை வர்க்கங்களின் கூட்டு எண்ணிக்கையை *1* இல் இருந்து கீழ்க்கண்டவாறு கழிக்கலாம்.*

$$1. \quad A = 1\ \Sigma i\,(i^2)$$

மேலே உள்ள சூத்திரத்தில் A எனப்படுவது தொடர்புச் சாதன சாத்தியக் கூறாகும். i எனப்படுவது m, n,o ஆகியவற்றின் மதிப்பாகும். இதைக் கீழ்கண்ட உதாரணத்தின்மூலம் கிரீன்பர்க் விளக்குகிறார். ஒரு மக்கட்தொகையில் 1/8 பகுதியினர் M தாய் மொழியையும், 3/8 பகுதியினர் N தாய்மொழியையும் 1/2 பகுதியினர் O தாய்மொழியையும் பேசுவதாக வைத்துக் கொண்டால் A-இன் மதிப்பு கீழ்வருமாறு அமையும்.

$$\underline{A} = \left\{(\frac{1}{8})^2 + (\frac{3}{8})^2 + (\frac{1}{2})^2\right\} = 1 \frac{26}{64} = \frac{38}{64}, \text{ அல்லது } 593...$$

---

* வேறொரு உதாரணத்தின் மூலம் இதை விளக்குவோம். ஒரு நாட்டில் *100* பேர்கள் மட்டும் உள்ளனர் என வைத்துக்கொள்வோம். இவர்கள் அனைவரும் பேசுவதும் ஒரே ஒரு மொழிதான் என வைத்துக் கொள்வோம். இத்தகைய சூழ்நிலையில் அந்த நாட்டில் உள்ள ஒரே ஒரு மொழியின் தொடர்புச் சாதன சாத்தியக் கூறு கீழ்கண்டவாறு அமையும்.

$$\text{தொடர்புச் சாதன கூறு} = \frac{\text{ஒரே மொழியைப் பேசுவோரின் எண்ணிக்கை}}{\text{மொத்த மக்கட்தொகை}}$$

$$= \frac{100}{100} = 1$$

தொடர்புச் சாதன சாத்தியக் கூறு *1* இன் வர்க்கம் *1* ஆகும். இப்பொது தொடர்புச் சாதன சாத்தியக் கூறு *1* ஐ *1* இல் இருந்து கழித்தால் கிடைக்கும் விடையான *0* இந்த மக்கட்தொகையின் தொடர்புச் சாதன சாத்தியக் கூறு ஒருமைப்பாட்டு அளவில் (அதாவது *0* அளவில்) உள்ளது எனக் காட்டுகிறது. அதாவது இங்கு உதாரணமாக காட்டப்பட்டுள்ள மக்கட்தொகையில் மொழி மாறுபடு தன்மையே கிடையாது என்பதை இது காட்டுகிறது.

ஒரு நாட்டில் பேசப்படும் மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் இருந்து மொழி மாறுபடும் தன்மையின் அட்டவணைA-யையும், தொடர்புச் சாதன சாத்தியக் கூற்றையும் அறிய இயலும் என்பதை மேலே கண்டோம். அட்டவணை A - போன்று மேலும் பல அளவு கோல்களாலும் தொடர்புச் சாதன சாத்தியக் கூறு அறியலாம் என்பது கிரீன்பர்க்கின் கருத்தாகும். அவற்றை அட்டவணைகள்- B, C, D, E, F, G எனக் கீரீன்பர்க் விளக்கு கிறார். அவற்றுள் இந்திய நாட்டின் மொழிச் சூழலைப் பற்றி நமக்கு கிடைக்கும் செய்திகளை ஆதாரமாக்கிக் கொண்டு அட்டவணைகள் A,B,H ஆகியவற்றைத் தயாரிக்க இயலும். கீழ் உள்ள பகுதிகளில் அட்டவணைகள் B,H ஆகியவற்றைப் பற்றி பார்ப்போம்.

அட்டவணை-B

அட்டவணை-A - இல் கூறப்பட்டுள்ளதுபோலவே, அட்டவணை-B-க்கான தகவல்கள் அமைகின்றன. அதாவது அட்டவணை B-யிலும் பல தாய்மொழிகளைப் பேசும் மக்கட் தொகை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. ஆனால் அட்டவணை B-இல் மற்றுமொரு தகவலும் கணக்கில் எடுக்கப்படுகிறது. அதாவது மொழியியல் ஒற்றுமை சில மொழிகளுக்குள் காணப்படின், அம்மொழிகளைப் பேசும் மக்கட் தொகையின் அடிப்படையில் அட்டவணை-B கணக் கிடப்படுகிறது. பல மொழி நாடுகளில் பேசப்படும் மொழி களின் கிளைமொழிகளையும் கூட மக்கள் 'தனிமொழிகள்' என தங்கள் சென்ஸஸ் தகவலில் தருவது இயற்கையே. (உதாரணமாக 'கள்ளர்' எனும் 'தாய்மொழியை' தமிழ்நாட்டின் பகுதிகளில் மக்கள் பேசுவதாக 1961ஆம் ஆண்டு சென்ஸஸ் குறிப்பிடுகிறது). ஒரு நாட்டில் வழங்கும் மொழிகளைப் பற்றியும், அவற்றின் கிளைமொழிகளைப் பற்றியும் மொழியியல் ஆய்வுகள் முழுமையாக நடைபெற்றிருக்கா விடின் மொழியியல் அடிப்படையில் பல கிளைமொழிகளை வகைப்படுத்துவது கடினமாகிறது. இத்தகைய சூழ்நிலையில் மொழிகளும், கிளைமொழிகளும் மொழியியல் கூறுகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுவதில்லை.

இத்தகைய சென்ஸஸ் தகவல்களை வகைப்படுத்தி 'மொழி மாறுபடு தன்மையை' அறிந்துகொள்ள அட்டவணை - B உதவுகிறது.

உதாரணமாக மொழியியல் கூறுகளின் அடிப்படையில் ஒற்றுமைகளை உடைய M, N, O என்ற மொழிகள் பேசப்படும் ஒரு மக்கட்தொகையை எடுத்துக்கொள்வோம். இம்முறைப் பேசுவோரின் எண்ணிக்கை விகிதத்தை (Proportion) m,n,o என வைத்துக்கொள்வோம். மேலும் m-இன் மதிப்பு அதாவது, மொத்த மக்கட்தொகையில் M-மொழியைப் பேசுவோரின் விகிதம் 1/8 எனவும் n - இன் மதிப்பு, அதாவது மொத்த மக்கட்தொகையில் N-மொழியைப் பேசுவோரின் விகிதம் 3/8 எனவும், o-ன் மதிப்பு அதாவது, மொத்த மக்கட்தொகையில் O-மொழியைப் பேசுவோரின் மதிப்பு 1/2 எனவும் வைத்துக் கொள்வோம். இப்போது இந்த விகிதங்களின் வர்க்கம் முறையே 1/64, 9/64, 1/42 ஆகும். மேலும், சொற்கோவை புள்ளியியல் (glottochronology) அடிப்படையில் இயற்கை மொழி களில் உள்ள ஆதார சொற்களின் பட்டியல் ஒன்றை தயாரித்துக் கொண்டு, இந்தப் பட்டியலல்ல் உள்ள சொற்களில் எத்தனை சொற்கள் M, N, O மொழிகளுக்கிடையில் பொதுவாக உள்ளன என வரையறுத்துக்கொள்ள. வேண்டும். இதனை 'ஒத்திருக்கும் தன்மை' (resemblance factor) எனலாம். ஒத்திருக்கும் தன்மை முழுமையாக இருப்பின் 1 எனவும், ஒத்திருக்கும் தன்மை முழுமையாக இல்லை எனின் 0 எனவும் உள்ள அளவுகோலின் அடிப்படையில் இருமொழிகளுக்கிடையே உள்ள ஒத்திருக்கும் தன்மையைக் கணக்கிட வேண்டும். உதாரணமாக M மொழிக்கும் N மொழிக்கும் இடையில் ஒத்திருக்கும் தன்மையின் அளவு ***0.85*** எனவும், M மொழிக்கும் N மொழிக்கும் இடையில் ஒத்திருக்கும் தன்மை ***0.30*** எனவும், N மொழிக்கும் O மொழிக்கும் இடையில் ஒத்திருக்கும் தன்மை ***0.25*** எனவும் வைத்துக்கொள்வோம்.

இப்போது M, N, O மொழிகளுக்கிடையே மொழி மாறுபடு தன்மையை அளவிடுவது எவ்வாறு? இரு மொழி களுக்குள் ஒத்திருக்கும் தன்மை முழுமையாக இருப்பின் ஒரு மொழியின் வர்க்கத்தை 1 ஆல் பெருக்கிக் கொள்ளவும், இரு மொழிகளுக்கிடையே ஒத்திருக்கும் தன்மை முழுமையாக இல்லை எனின், வர்க்கத்தை 0 ஆல் பெருக்கிக் கொள்ளவும் வேண்டும். இப்போது கிடைக்கும் விடையை 1 இல் இருந்து

(அட்டவணை *1* இல் காட்டப்பட்டுள்ளது போல்) கழித்தால் M, N, O மொழிகளுக்கிடையே உள்ள மொழி மாறுபடு தன்மையின் அளவு கிடைக்கும். இதை கீழ்கண்ட சூத்திரத்தின் மூலம் குறிப்பிடலாம்.

$$B = 1 - \Sigma\ \underline{mn}\ (mn)\ (\underline{rMN})$$

M, N, O மொழிகள் பேசப்படும் மொழிச் சூழலில் கிடைக்கப்பெறும் மொழி மாறுபடு தன்மையை மேலே உள்ள சூத்திரத்தின் மூலம் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

$$B = 1 - \Big[(1/64 \times 1) + (3/64 \times 0.85) + (1/16 \times 0.30) + (3/64 \times 0.85) + (9/64 \times 1) + (3/16 \times 0.25) + (1/16 \times 0.30) + (3/16 \times 0.25) + (1/4 \times 1)\Big] = 0.381$$

விளக்கம் பின்வருமாறு: முதல் அடைப்புக்குறியில் (bracket) உள்ள 1/64, M மொழியின் விகித வர்க்கமாகும். M மொழியும் N மொழியும் ஒன்றாக இருந்தால் 1/16யை *1* ஆல் பெருக்க வேண்டும். அடுத்த அடைப்புக்குறியில் M, N மொழிகள் *0. 85* அளவு ஒத்திருப்பதால் M, N விகித வர்க்கத்தை *0.85* ஆல் பெருக்க வேண்டும். அடுத்த அடைப்புக் குறியில் M, O மொழிகள் *0.30* அளவு ஒத்திருப்பதால் M, O விகித வர்க்கத்தை *0.85* ஆல் பெருக்க வேண்டும். இவ்வாறு N மொழிக்கும் O மொழிக்கும் கணக்கீடு செய்யப்பட்டு 'மொழி மாறுபடு தன்மை' *0.381* என கணக்கிடப்பட்டுள்ளது.

அட்டவணை-*H*

தொடர்புச் சாதன சாத்தியக் கூற்றை, மொழிகளின் எண்ணிக்கையின் மூலம் கணக்கிடுவதை அட்டவணைகள் A, B ஆகிய இரண்டிலும் கண்டோம். ஒரு தாய்மொழியைப் பேசுவோர், மற்ற (ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட) மொழிகளையும் அறிந்திருக்கலாம். பல தாய்மொழிகளைப் பேசுவோர் அறிந்த பல மொழிகளின் எண்ணிக்கையும் நமக்குத் தெரிந்திருக்குமேயானால் 'இரு மொழியம்' மற்றும் 'பல மொழியம்' தகவல்களின் மூலமும் ஒரு மக்கட்தொகையின் தொடர்புச் சாதன சாத்தியக் கூற்றை நாம் கண்டறிய இயலும் என்கிறார் கிரீன்பர்க். இத்தகைய கணக்கீடுகளை அட்டவணைகள் - C, D, E, F, G, H ஆகியவற்றின் மூலம்

விளக்குகிறார். ஒரு தாய்மொழியினர் இரண்டு அல்லது அதற்கு மேலும் அறிந்த மொழிகள் பற்றிய புள்ளி விவரங்கள் நமக்கு கிடைக்குமேயானால் அந்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் அட்டவணைகள் - C, D, E, F, G ஆகியவற்றை தயாரிக்க இயலும். ஒரு தாய்மொழியினர் அறிந்த மற்றமொழி பற்றிய புள்ளி விவரங்களையே இந்திய சென்ஸஸ் வெளியிடு கிறது. சென்ஸஸ் கணக்கீட்டின்போது தனக்குத் தெரிந்த பிற மொழிகள் என இரண்டு மொழிகளை ஒருவர் கூறுகையில் இந்திய சென்ஸஸ் புள்ளி விவரம் ஒரு மொழி பற்றிய தகவலை மட்டும் வெளியிடுகிறது. இத்தகைய சூழ்நிலையில் நாம் அட்டவணைகள் C, D, E, F, G ஆகியவற்றை இந்திய சென்ஸஸ் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தயாரிக்க இயலாது.

அட்டவணை - H, ஒருவர் அறிந்த பிற மொழி ஒன்றை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொண்டு தயாரிக்கப்படுவதாலும், இத்தகைய புள்ளிவிவரம் இந்திய சென்ஸஸ் அறிக்கையில் கிடைக்கப்பெறுவதாலும், தமிழ்நாட்டின் தொடர்புச் சாதன சாத்தியக் கூற்றை அட்டவணை-H இன் மூலம் காட்ட இயலும்.

அட்டவணை - H எனப்படுவது தொடர்புச் சாதன சாத்தியக் கூறு முழுமையாக இருப்பதைக் குறிக்கிறது. அதாவது ஒரு மக்கட் தொகையில் உள்ள இரண்டு பேர் தாங்கள் அறிந்த ஒரு மொழியில் பேசி, முழு தொடர்புச் சாதன சாத்தியக் கூற்றைப் பெற முடியுமெனில், அவ்விருவருக்குமிடையே தொடர்புச் சாதன சாத்தியக்கூறு H = 1.00 எனலாம். அதாவது, தொடர்புச் சாதன சாத்தியக் கூறு H = O ஆக இருக்குமே யானால், அந்த மக்கட் தொகையில் ஒரு மொழியை எல்லோரும் அறிந்துள்ளனர் என்பது உறுதியாகும். இதற்கு எதிர்மாறாக, ஒரு மக்கட் தொகையில் தொடர்புச் சாதன சாத்தியக் கூறு H = O ஆக இருக்குமேயானால், அந்த மக்கட் தொகையினர் ஒவ்வொருவரும் மற்றொருவருக்குப் புரியாத மொழியைப் பேசுகின்றனர் என்பது தெளிவாகும். மாண்ட்ரீல் நகரின் இருமொழியச் சூழலை விளக்க, விபர்ஸன் (1973) அட்டவணை - H முறையைத் தயாரித் துள்ளார். அவர் தன் ஆய்வில் அட்டவணை H-யைப் பின்வரும் உதாரணத்தின்மூலம் விளக்குகிறார்.

ஆங்கிலம் பேசுவோரின் மக்கட்தொகை விகிதத்தை a என வைத்துக்கொள்வோம். பிரெஞ்ச் பேசுவோரின்

மக்கட்தொகை விகிதத்தை b என வைத்துக் கொள்வோம். ஆங்கிலம், பிரெஞ்ச் ஆகிய இரண்டு மொழிகளையும் பேசும் இருமொழியாளரின் மக்கட்தொகை விகிதத்தை c என வைத்துக் கொள்வோம். ஆங்கிலம், பிரெஞ்ச் இரு மொழிகளையும் அறியாதோரின் மக்கட்தொகை விகிதத்தை d என வைத்துக் கொள்வோம். இத்தகைய சூழ்நிலையில், அந்த மக்கட் தொகையின் தொடர்புச் சாதன சாத்தியக்கூறு பின்வருமாறு அமையும்.

$$H = a^2 + b^2 + c^2 + 2ac + 2bc$$

பின்வரும் பகுதிகளில் கிரீன்பர்க்கின் கணக்கீட்டு முறையில், தமிழ்நாட்டின் தொடர்புச் சாதன சாத்தியக்கூற்றைக் காணலாம். அட்டவணை-A-இன் மூலமாக, தாய்மொழிகளின் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் ஒவ்வொரு மொழி பேசுவோரின் தொடர்புச் சாதன சாத்தியக் கூற்றையும், அட்டவணை -H இன் மூலமாக, இரு மொழிய புள்ளி விவரத்தைக் கணக்கில் எடுத்து ஒவ்வொரு மொழி பேசு வோரின் தொடர்புச் சாதன சாத்தியக்கூற்றையும் காண்போம்.

தமிழ்நாட்டில் தொடர்புச் சாதன சாத்தியக்கூறு*

தமிழ்நாட்டின் தொடர்புச் சாதன சாத்தியக்கூறுகள் அட்டவணை -A முறையிலும், அட்டவணை - H முறை யிலும் கணக்கிடப்பட்டுள்ளன. அத்தகவல்கள் முறையே

தமிழ்நாட்டின் தொடர்புச் சாதன சாத்தியக்கூறுகளை அட்டவணை - H முறையில் கணக்கிடுவதற்கு ஒரு தாய்மொழியினர் பேசும் மற்ற மொழிகளின் எண்ணிக்கையும் தேவைப்படுமென்பதை முன்பு கண்டோம். தமிழ்நாட்டில் 38 மொழிகள் பேசப்படுவதாக 1971 - ஆம் சென்ஸஸ் தகவல் வெளியிட்டியிருப்பினும் 38 தாய்மொழியாளரின் அறிந்த பிற மொழிகள் பற்றிய தகவலை சென்ஸஸ் வெளியிட வில்லை. 38 தாய்மொழிகளில் 19 தாய்மொழிகளைப் பேசுவோர் அறிந்த பிற மொழிகள் பற்றிய தகவலையே சென்ஸஸ் வெளியிட்டுள்ளது. அட்டவணை - A மற்றும் அட்டவணை - H முறைகளில் தொடர்புச் சாதன சாத்தியக்கூறு வேறுபடும் அளவை கணக்கிட வேண்டியுள்ளதால் ஒப்புமையுடைய புள்ளி விவரங்களையே கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இந்தப் பகுதியில் 19 மொழிகள் பற்றிய புள்ளி விவரங்களே கொடுக்கப் பட்டுள்ளன. ஏனைய மொழிகள் மிகச் சிறுபான்மையினரால் பேசப்படுவதால், அந்த மொழிகள் பற்றிய புள்ளிவிவரங்களின் மிக முக்கியமானவையும் இல்லை.

அட்டவணை - VI இலும், அட்டவணை - VII இலும் காட்டப் பட்டுள்ளன. அட்டவணை - A - இல் தாய்மொழிகள் பற்றிய புள்ளி விவரங்கள் மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. அட்டவணை - H இல் இரு மொழியாளரின் எண்ணிக்கையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே அட்டவணை - A-யைவிட அட்டவணை - H இல் ஒரு மொழியின் தொடர்புச் சாதன சாத்தியக் கூற்றின் அளவு அதிகமாக தோன்றுவது இயற்கையே. இதன் மூலம் தமிழ்நாட்டின் தொடர்புமொழி பற்றிய தகவலையும் ஓரளவு கணிக்க இயலும்.

தமிழ்நாட்டில் 'மொழி மாறுபடும் தன்மை' (அட்டவணை-A) 0.28 என்ற அளவில்தான் உள்ளது. அதாவது தமிழ்நாடு ஏறத்தாழ ஒரு 'ஒரு மொழிய மாநிலமாகவே' உள்ளது என்று கூறும் அளவுக்கு மொழிமாறுபடும் தன்மை உள்ளது. இரு மொழியச் சூழலை அட்டவணை - H) கணக்கில் எடுத்துக் கொண்டாலும் கூட இந்த அளவின் வேறுபாடு கணிசமாக இல்லை. மொழி மாறுபடும் தன்மையின் அளவு (அட்டவணை - H)0.2623542 மட்டுமே உள்ளது. அதாவது இம்மாநிலத்தின் இரு மொழியச் சூழலைக் கணக்கில் எடுத்துக் கொண்டாலும் கூட மிகக்குறைந்த அளவிலேயே (0.03) மொழி மாறுபடும் தன்மை அதிகரிக்கிறது.

அடுத்ததாக, அட்டவணை - A - இன் மூலமாகவும், அட்டவணை-H இன் மூலமாகவும் தொடர்புச் சாதன சாத்திய கூற்றில் ஒவ்வொரு மொழியும் எவ்வாறு வேறுபட்ட அளவுகளைத் தருகிறது என்பதைப் பார்ப்போம். ஆங்கிலம், ஹிந்தி, உருது ஆகிய மொழிகள் தமிழ்நாட்டில் 0.07%, 0.18%, 1.84% விழுக்காட்டினரால் மட்டுமே தாய்மொழியாகப் பேசப் படுவதை அட்டவணை - II-இன் மூலம் அறியலாம். ஆனால் இம்மொழிகளின் இருமொழிய பயன்பாட்டைக் கணக்கில் கொள்ளும் அட்டவணை - H தொடர்புச் சாதன சாத்தியக் கூறுகள் அட்டவணை-A யைவிட 1.00, 2.03, 10.3 மடங்கு அதிகரித்திருப்பதைக் காட்டுகிறது. அதாவது, தாய்மொழி களாக இம்மூன்று மொழிகளும் மிகக் குறைந்த எண்ணிக்கையினரால் பேசப்பட்டாலும், தொடர்புச் சாதன சாத்தியக் கூறுகளைப் பொறுத்தவரை, இரு மொழிய மொழிகள் அதிகமானோரால் பேசப்படுவதை இந்தப் புள்ளி விவரங்கள் மூலம் அறிய முடிகிறது.

ஆனால், தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் இதே வேறுபாடு ஏறத்தாழ ஒரே மாதிரியாகத்தான் அதிகரித்துள்ளது. அட்டவணை A-இன் அளவுக்கும், அட்டவணை-Hஇன் அளவுக்கும் *1.03* மடங்கு தமிழும், *1.02* மடங்கு தெலுங்கும், *1.00* மடங்கு மலையாளமும் அதிகரித்துள்ளது.

மாவட்டங்களில் 'தொடர்புச் சாதன சாத்தியக்கூறும்' மொழி மாறுபடு தன்மையின் அட்டவணையும்

	தொடர்புச்சாதன சாத்தியக்கூறு	மொழி மாறுபடு தன்மையின் அட்டவணை
தமிழ்நாடு	0.7231238	0.2768762
சென்னை	0.5628856	0.4371144
செங்கல்பட்டு	0.8479354	0.1520646
வடஆற்காடு	0.6962933	0.3037067
தென் ஆற்காடு	0.8789006	0.1210994
தர்மபுரி	0.4707391	0.5292609
சேலம்	0.7196225	0.2803775
கோயம்புத்தூர்	0.5125796	0.4874205
நீலகிரி	0.1870338	0.8129663
மதுரை	0.6825135	0.3174865
திருச்சிராப்பள்ளி	0.97196317	0.02803683
தஞ்சாவூர்	0.9470728	0.1772735
ராமநாதபுரம்	0.8227266	0.1772735
திருநெல்வேலி	0.9079258	0.207421
கன்யாகுமரி	0.8189343	0.1810657

தமிழ்நாட்டின் மாவட்டங்களின் தொடர்புச் சாதன சாத்தியக்கூறுகளும், மொழி மாறும் தன்மையின் அளவும் மேலே தரப்பட்டுள்ள பட்டியலில் காட்டப்பட்டுள்ளன. தொடர்புச் சாதன சாத்தியக் கூறு அதிகமாக இருக்கும்

மாவட்டங்களில் மொழிமாறுபடும் தன்மை குறைவாக இருப்பது இந்த பட்டியலில் இருந்து தெளிவாகிறது. உதாரணமாக, திருநெல்வேலி மாவட்டத்தில் பேசப்படும் ஒவ்வொரு மொழியும் மிக அதிக அளவில் தொடர்புச் சாதன சாத்தியக் கூற்றினைக் கொண்டிருப்பதால், இது ஒரு மொழிய மாவட்டம் என்பது தெளிவாகிறது. இந்நிலையில், மொழி மாறுபடும் தன்மையும் (linguistic diversity) மிகக் குறைந்த அளவிலே உள்ளது. இதற்கு எதிர்மாறாக நீலகிரி மாவட்டம் உள்ளது. இந்த மாவட்டத்தில் தமிழ்மொழி **38.1** விழுக்காட்டினராலும், கன்னடம் **31.92** விழுக்காட்டினராலும் மலையாளம் **19.36** விழுக்காட்டினராலும் பேசப்படுகின்றன. தமிழ்நாட்டின் மாவட்டங்களிலேயே 'மொழி மாறுபடும் தன்மை' மிக அதிக்மான அளவில் நீலகிரி மாவட்டத்தில்தான் காணப்படுகிறது. அதனாலேயே, பல மொழிகள் பேசப்படும் இந்த மாவட்டத்தில் 'தொடர்புச் சாதன சாத்தியக் கூறும்' மிகக் குறைந்த அளவில் உள்ளது.

நீலகிரி மாவட்டத்துக்கு அடுத்ததாக, தர்மபுரி, கோயம்புத்தூர், சென்னை, மதுரை ஆகிய மாவட்டங்களைச் சொல்லலாம். தெலுங்கும் கன்னடமும் தர்மபுரியிலும், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியன கோயம்புத்தூரிலும், தெலுங்கு, உருது, மலையாளம் ஆகியன சென்னையிலும், தெலுங்கும், கன்னடமும் மதுரையிலும் மொழி மாறும் தன்மையின் அளவு இம்மாவட்டங்களில் அதிகமாக உள்ளதற்குக் காரணமாகும்.

<u>மாவட்டங்களில் எழுத்தறிவு பெற்றோர் விழுக்காடு, மொழி மாறுபடும் தன்மையும்</u>

	எழுத்தறிவு பெற்றோர் விழுக்காடு	மொழி மாறுபடு தன்மையின் அட்டவணை
தமிழ்நாடு	39.46	0.2768762
சென்னை	62.01	0.4371144
செங்கல்பட்டு	39.73	0.1520646
வடஆற்காடு	34.66	0.3037067
தென்ஆற்காடு	31.14	0.1210994

	எழுத்தறிவு பெற்றோர் விழுக்காடு	மொழி மாறுபடு தன்மையின் அட்டவணை
தர்மபுரி	22.32	0.5292609
சேலம்	31.71	0.2803775
கோயம்புத்தூர்	38.10	0.4874205
நீலகிரி	47.03	0.8129663
மதுரை	41.51	0.3178465
திருச்சிராப்பள்ளி	37.50	0.02803683
தஞ்சாவூர்	39.66	0.1772735
ராமநாதபுரம்	39.74	0.1772735
திருநெல்வேலி	44.83	0.207421
கன்யாகுமரி	58.22	0.1810657

'இருமொழிய' அளவுக்கும், 'இருமொழிய' தேவைக்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றி வீன்ரிச் (Weinreich) விளக்கியுள்ளார். மேலும் 'இருமொழியம்' செயல்படும் விதத்தையும், இருமொழிய சூழலின் பயன்களை அளந்தறியும் முறைகளையும் வீன்ரிச் தன் ஆய்வில் காட்டியுள்ளார். இருமொழிய அளவும், மொழி மாறுபடும் தன்மையும், ஒன்றோடொன்று தொடர்பு உள்ளவை என்பதை நாம் அறிவோம். இருமொழிய அளவும், மொழி மாறுபடு தன்மையும் எவ்வாறு உள்ளவை என்பதை டேவிட்ஸன் (Davidson : 1969) தன் ஆய்வில் விளக்கியுள்ளார். இந்தியாவில் வழக்கில் உள்ள இரு மொழியச் சூழலையும், மொழி மாறுபடும் தன்மையையும் இவர் தம் ஆய்வில் எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார். அதாவது, கர்நாடகம், உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் இவ்விரண்டுக்கும் உள்ள தொடர்பு அதிக அளவில் உள்ளது என சுட்டிக் காட்டுகிறார். அதனால் ராஜஸ்தான், ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் இருமொழியம் அதிக அளவில் காணப்படினும், மொழி மாறுபடும் தன்மை மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. இத்தகைய எதிர்மறையான சூழ்நிலைகளுக்கு இவர் விளக்கம் தரவில்லை. ஆனால் மாறுபட்ட இந்தச் சூழ்நிலைக்குக் 'கல்வி' ஒரு

காரணமாக அமையலாம் என்று கருத்து தெரிவிக்கிறார். பிரிட்டன் ஏறத்தாழ ஒரு மொழிச் சூழல் நாடாக இருந்தபோதும் கூட 'இருமொழியம்' அதிக அளவில் காணப்படுவதற்கு 'கல்வி' ஒரு காரணமாக இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். 'ஒரு மொழிச் சூழல்' நிறைந்துள்ள ஒரு நாட்டில் இரு மொழிய அளவு அதிகமாகக் காணப்படின், இரு மொழியத்துக்கும், மொழி மாறுபடும் தன்மைக்கும் தொடர்பு இல்லை என்றுகூடச் சொல்லலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரை இருமொழிச் சூழலுக்கும், கல்விக்கும் அதிகமாக தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. பஞ்சாப் மாநிலத்தில் இரு மொழியச் சூழல் மிக அதிக அளவில் காணப்படினும், எழுத்தறிவு பெற்றோரின் விகிதம் மிகக்குறைந்த அளவில் உள்ளதை உதாரணமாகக் கூறலாம். மேலும் மேற்கு வங்காளத்தில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை அதிக அளவில் இருந்தாலும், இரு மொழியச் சூழல் மிகக் குறைவாகவே உள்ளது.

மற்ற மாநிலங்களைப் போன்றே, தமிழ்நாட்டிலும் மொழி மாறுபடும் தன்மையும், எழுத்தறிவும் தொடர்பற்ற நிலை யிலேயே உள்ளது. மேலே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலைப் பார்த்தோமேயானால், இந்தத் தொடர்பற்ற நிலை விளங்கும். சென்னை மற்றும், நீலகிரி மாவட்டங்களில் எழுத்தறிவு பெற்றோர் விழுக்காடும், மொழி மாறுபடும் தன்மையும் சீராக உயர் நிலையில் உள்ளன. ஆனால் ஏனைய மாவட்டங்களில் இத்தகைய தொடர்பு காணப்படவில்லை. உதாரணமாக எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கையில் மதுரை மாவட்டம் தமிழ்நாட்டில் மூன்றாவது நிலையில் உள்ளது. ஆனால் இம்மாவட்டத்தின் மொழி மாறுபடும் தன்மை ஐந்தாவது நிலையில் தான் உள்ளது. மேலும், மொழிமாறுபடும் தன்மையில் கடை நிலையில் உள்ள தென் ஆற்காடு மாவட்டம் **31.14** விழுக்காடு எழுத்தறிவு பெற்றோரைக் கொண்டுள்ளது. மேலும் தர்மபுரி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங் களில் கணிசமான அளவில் இரு மொழியச் சூழல் நிலவிய போதும் கூட, அதற்கு ஒப்பான அளவில் எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு காணப்படவில்லை. தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில், மொழி மாறுபடும் தன்மையின் அளவு **0.53** ஆகும். ஆனால் இம்மாவட்டத்தில் எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு 22.32% ஆகும்.

இத்தகைய மாறுபட்ட சூழ்நிலைகளுக்கு மற்றொன்றும் காரணமாக இருக்கலாம். அண்டை மாநிலங்களில் எல்லைகளில் உள்ள மாவட்டங்களிலும், பன்னெடுங்காலமாய் வேற்று மொழியினர் வாழ்ந்து வரும் மாவட்டங்களிலும் இருமொழியச் சூழல் அதிக அளவில் காணப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், இம்மாவட்டங்கள் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களாக இருப்பின், எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை மிகக்குறைந்த அளவிலே காணப்படும். இத்தகைய சூழ்நிலையில் கல்வியறிவும், இரு மொழியமும் தொடர்பற்றே இருக்கும் எனலாம்.

அட்டவணை - VI

தமிழ்நாட்டில் வழங்கும் மொழிகளின் 'தொடர்புச்சாதன சாத்தியக்கூறும்'. தொடர்புச்சாதன அட்டவணை – H இல் அவற்றின் பங்கும்

(Probability of communication in Tamil Nadu according to language and its contribution to communicability index H)

	தொடர்புச்சாதன சாத்தியக்கூறு	தொடர்புச்சாதன அட்டவணை-H இல் விழுக்காடு-
அஸ்ஸாமி	1.22 –11	.0000033
பெங்காளி	8.640 –9	.0000878
குஜராத்தி	.0000241	.0048324
ஹிந்தி	.0000071	.0018802
கன்னடா	.0007962	.0256501
மலையாளம்	.0001855	.0135760
மராத்தி	.0000021	.0014558
ஒரியா	2.02 – 10	.0000102
பஞ்சாபி	.0000001	.0001218
சிந்தி	.0000372	.0002028
தமிழ்	.7352999	.8452997
தெலுங்கு	.0077883	.0874029
உருது	.0035048	.0184418
ஆங்கிலம்	.0000005	.0007312
கூர்கி	5.06 – 11	.0000070
டோக்கி	1.15 – 11	.0000033
கொக்காரி	3.28 – 9	.0000572
கொங்கணி	2.061 – 8	.0001434
துளு	9.044 – 9	.0000932
மொத்தம் (அட்டவணை-H)	0.7476458	

அட்டவணை - I

தமிழ்நாட்டின் மாவட்டங்களில் தாய்மொழி பேசுவோர் எண்ணிக்கை 1971–ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கீடு

வ. எண்		தமிழ்நாடு	சென்னை	செங்கல்பட்டு	வ.ஆற்காடு	தெ.ஆற்காடு	தர்மபுரி	சேலம்
1	அஸ்ஸாமி	134	27	78	5	–	–	1
2	பெங்காளி	36.15	1,554	1,139	48	84	7	37
3	குஜராத்தி	199,045	19,913	3,828	5,091	845	175	17,997
4	ஹிந்தி	77,445	31,252	11,696	7,113	2,918	5,345	1,756
5	கன்னடம்	1,056,512	17,703	8,215	27,749	7,425	175,882	92,348
6	காஷ்மீரி	94	46	26	4	–	–	–
7	மலையாளம்	559,186	92,081	34,749	6,137	9,055	2,425	10,677
8	மராத்தி	59,965	16,794	4,503	10,474	1,336	6,460	1,189
9	ஒரியா	422	195	109	8	2	–	–
10	பஞ்சாபி	5,018	2,237	1,499	83	54	1	53
11	சமஸ்கிருதம்	254	28	31	27	23	–	6
12	சிந்தி	8,353	5,559	61	62	14	–	416
13	தமிழ்	38,817,421	1,820,274	2,435,409	3,103,986	3,388,050	1,107,156	2,518,298

அட்டவணை - I - தொடர்ச்சி

வ. எண்		தமிழ்நாடு	சென்னை	செங்கல்பட்டு	வ.ஆற்காடு	தெ.ஆற்காடு	தர்மபுரி	சேலம்
14	தெலுங்கு	3,600,078	297,188	351,209	368.494	139,677	306,205	303,778
15	உருது	759,607	141,896	48,849	224,613	60,566	73,935	44,680
16	அங்காமி	1	1	–	–	–	–	–
17	அரபி	1,228	247	44	12	55	9	23
18	பால்டி	2	–	–	–	–	–	–
19	சீனி	259	173	–	1	28	–	–
20	கூர்கி/குடகு	288	67	41	2	3	–	5
21	டோக்ரி	135	1	105	–	–	–	2
22	ஆங்கிலம்	30,117	15,532	3,326	991	964	22	697
23	நேபாளி	2,354	897	679	35	46	9	38
24	காசி	4	–	–	2	–	–	–
25	கொங்கணி	5,908	3,266	336	70	78	29	194
26	குருக்	2	–	–	–	–	–	–

அட்டவணை - I - தொடர்ச்சி

வ. எண்		தமிழ்நாடு	சென்னை	செங்கல்பட்டு	வ.ஆற்காடு	தெ.ஆற்காடு	தர்மபுரி	சேலம்
27	லஹறண்டா	20	4	4	1	–	–	–
28	லோதா	1	–	1	–	–	–	–
29	லூஷாய்	1	1	–	–	–	–	–
30	மணிப்பூரி	21	16	4	1	–	–	1
31	நாகா	1	–	–	–	–	–	–
32	நிகோபாரி	5	5	–	–	–	–	–
33	பர்ஷியன்	187	62	62	3	1	–	–
34	சந்தாலி	3	–	–	1	–	108	145
35	சிக்கிம்	5	–	–	–	–	7	274
36	டிபேடன்	35	5	1	2	–	–	–
37	துளு	3,837	1,235	270	413	220	–	–
38	மற்றவை	7,605	1,190	1,325	369	279	–	–

அட்டவணை - I - தொடர்ச்சி

வ. எண்		கோயம்புத்தூர்	நீலகிரி	மதுரை	திருச்சி	தஞ்சாவூர்	ராமநாதபுரம்	திருநெல்வேலி	கன்யாகுமரி
1	அஸ்ஸாமி	14	6	–	1	2	–	–	–
2	பெங்காளி	251	182	38	201	34	7	32	1
3	குஜராத்தி	3,743	305	92,843	9,116	22,340	15,674	6,082	1,093
4	ஹிந்தி	5,973	2,989	1,988	2,712	1,359	578	1,659	107
5	கன்னடம்	345,968	157,672	161,506	18,198	4,018	34,070	5,009	749
6	காஷ்மீரி	–	6	3	3	5	–	–	–
7	மலையாளம்	116,617	95,638	13,538	15,601	5,884	3,302	6,865	146,617
8	மராத்தி	3,933	2,235	1,517	3,214	7,473	507	265	65
9	ஒரியா	17	80	5	3	2	–	1	–
10	பஞ்சாபி	509	403	48	72	23	10	21	5
11	சமஸ்கிருதம்	29	2	18	32	51	3	4	–
12	சிந்தி	1,263	198	342	374	59	4	1	–
13	தமிழ்	3,017,666	188,221	3,226,045	3,572,245	3,737,312	2,584,976	3,047,001	1,070,782

அட்டவணை - I - தொடர்ச்சி

வ. எண்		கோயம்புத்தூர்	நீலகிரி	மதுரை	திருச்சி	தஞ்சாவூர்	ராமநாதபுரம்	திருநெல்வேலி	கன்யாகுமரி
14	தெலுங்கு	824,302	31,004	409,952	176,967	46,426	216,913	125,598	2,365
15	உருது	48,539	9,618	–	46,030	15,108	3,888	7,092	329
16	அங்காமி	–	–	132	–	–	–	–	–
17	அரபி	294	28	–	129	98	36	121	–
18	பால்டி	–	2	13	–	–	–	–	–
19	சீனி	10	11	9	2	10	4	7	–
20	கூர்கி/குடகு	40	104	–	2	–	2	6	7
21	டோக்ரி	11	13	1,138	1	1	–	1	–
22	ஆங்கிலம்	1,965	2,147	44	2,656	192	94	333	60
23	நேபாளி	284	158	–	68	31	8	56	1
24	காசி	2	–	125	–	–	–	–	–
25	கொங்கணி	1,208	330	2	96	17	23	127	9
26	குருக்	–	–	–	–	–	–	–	–

அட்டவணை - I - தொடர்ச்சி

வ. எண்		கோயம்புத்தூர்	நீலகிரி	மதுரை	திருச்சி	தஞ்சாவூர்	ராமநாதபுரம்	திருநெல்வேலி	கன்யாகுமரி
27	லஹண்டா	–	7	–	4	–	–	–	–
28	லோதா	–	–	–	–	–	–	–	–
29	லூஷாய்	–	–	–	–	–	–	–	–
30	மணிப்பூரி	6	38	–	14	–	–	–	–
31	நாகா	–	1	2	–	–	–	–	–
32	நிகோபாரி	1	–	–	–	–	–	4	–
33	பர்ஷியன்	–	27	–	–	–	–	–	–
34	சந்தாலி	434	289	75	81	6	42	149	330
35	சிக்கிம்	99	2,361	350	994	241	66	81	29
36	டிபேடன்	–	–	–	–	–	–	–	–
37	துளு	–	–	–	–	–	–	–	–
38	மற்றவை	–	–	–	–	–	–	–	–

அட்டவணை - II

தமிழ்நாட்டின் மாவட்டங்களில் தாய்மொழி பேசுவோர் விழுக்காடு 1971–ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீடு

வ. எண்		தமிழ்நாடு	சென்னை	செங்கல்பட்டு	வ.ஆற்காடு	தெ.ஆற்காடு	தர்மபுரி	சேலம்
1	அஸ்ஸாமி	0.0003	0.0011	0.0027	0.0001	–	–	0.0003
2	பெங்காளி	0.0088	0.0629	0.0391	0.0013	0.0023	0.0004	0.0012
3	குஜராத்தி	0.4831	0.8063	0.1316	0.1355	0.0233	0.0104	0.6013
4	ஹிந்தி	0.1880	1.2655	0.4023	0.1894	0.0806	0.3186	0.0586
5	கன்னடம்	2.5644	0.7169	0.2825	0.7388	0.2052	10.4830	3.0859
6	காஷ்மீரி	0.0022	0.0019	0.0009	0.0001	–	–	0.00003
7	மலையாளம்	1.3573	3.7280	1.1951	0.1634	0.2502	0.1445	0.3568
8	மராத்தி	0.1455	0.6800	0.1549	0.2789	0.0370	0.3850	0.0397
9	ஒரியா	0.0010	0.0078	0.0037	0.0002	0.00006	–	–
10	பஞ்சாபி	0.0122	0.0906	0.0516	0.0022	0.0015	0.00006	0.0018
11	சமஸ்கிருதம்	0.0006	0.0011	0.0010	0.0007	0.0006	–	0.0002
12	சிந்தி	0.0203	0.2251	0.0020	0.0017	0.0004	–	0.0139
13	தமிழ்	84.5000	73.7148	83.7601	82.6452	93.6515	65.9895	84.1504

அட்டவணை - II - தொடர்ச்சி

வ. எண்		தமிழ்நாடு	சென்னை	செங்கல்பட்டு	வ.ஆற்காடு	தெ.ஆற்காடு	தர்மபுரி	சேலம்
14	தெலுங்கு	8.7382	12.0348	12.0790	9.8113	3.8609	18.2507	10.1509
15	உருது	1.8437	5.7460	1.6800	5.9804	1.8400	4.4067	1.4930
16	அங்காமி	0.000002	0.00004	–	–	–	–	–
17	அரபி	0.0030	0.0100	0.0015	0.0003	0.0015	0.0005	0.0008
18	பால்டி	0.0000005	–	–	–	–	–	–
19	சீனி	0.0006	0.0070	–	0.00002	0.0008	–	
20	கூர்கி/குடகு	0.0050	0.0029	0.0014	0.00005	0.0008	–	0.0001
21	டோக்ரி	0.0003	0.00001	0.0036	–	–	–	0.00007
22	ஆங்கிலம்	0.0731	0.6290	0.1143	0.0264	0.0266	0.0013	0.0233
23	நேபாளி	0.0057	0.0363	0.0234	0.0009	0.0013	0.0005	0.0013
24	காசி	0.0001	–	–	0.00005	–	–	–
25	கொங்கணி	0.0143	0.1323	0.0116	0.0018	0.0022	0.0017	0.0065
26	குருக்	0.00005	–	–	–	–	–	–

அட்டவணை - II - தொடர்ச்சி

வ. எண்		தமிழ்நாடு	சென்னை	செங்கல்பட்டு	வ.ஆற்காடு	தெ.ஆற்காடு	தர்மபுரி	சேலம்
27	லஹண்டா	0.00005	0.0002	0.0001	0.00002	-	–	–
28	லோதா	0.000002	–	0.00003	–	–	–	–
29	லூஷாய்	0.000002	0.00004	–	–	–	–	–
30	மணிப்பூரி	0.00005	0.00006	0.0003	0.00003	–	–	–
31	நாகா	0.000002	–	–	–	–	–	–
32	நிகோபாரி	0.00001	0.0002	–	–	–	–	–
33	பர்ஷியன்	0.0005	0.0025	0.0021	0.00008	0.00002	–	0.00003
34	சந்தாலி	0.000007	–	–	0.00002	–	–	–
35	சிக்கிம்	0.00001	–	–	–	–	–	–
36	டிபேடன்	0.00009	0.0002	0.00003	0.00005	–	–	–
37	துளு	0.0093	0.0500	0.0093	0.0110	0.0061	0.0064	0.0048
38	மற்றவை	0.0185	0.0482	0.0456	0.0098	0.0077	0.0004	0.0092

அட்டவணை - II - தொடர்ச்சி

வ. எண்		கோயம்புத்தூர்	நீலகிரி	மதுரை	திருச்சி	தஞ்சாவூர்	ராமநாதபுரம்	திருநெல்வேலி	கன்யாகுமரி
1	அஸ்ஸாமி	0.0003	0.0012	–	0.00002	0.00005	–	–	–
2	பெங்காளி	0.0057	0.0368	0.0010	0.0052	0.009	0.0002	0.0010	0.00008
3	குஜராத்தி	0.0855	0.0617	2.3575	0.2369	0.5817	0.5480	0.1900	0.0894
4	ஹிந்தி	0.1366	0.6050	0.0505	0.0705	0.0354	0.0202	0.0518	0.0876
5	கன்னடம்	7.9111	31.9164	4.1010	0.4728	0.1046	1.1911	0.1565	0.0613
6	காஷ்மீரி	–	0.0012	0.00008	0.00008	0.0001	–	–	–
7	மலையாளம்	2.6666	19.3593	0.3438	0.4053	0.1532	0.1154	0.2145	11.9927
8	மராத்தி	0.0899	0.4524	0.0385	0.0835	0.1946	0.0177	0.0083	0.0053
9	ஒரியா	0.0003	0.0162	0.0001	0.00008	0.00005	–	0.00003	–
10	பஞ்சாபி	0.0116	0.0816	0.0012	0.0019	0.0006	0.0003	0.0007	0.0007
11	சமஸ்கிருதம்	0.0007	0.0004	0.0004	0.00018	0.0013	0.0001	0.0001	–
12	சிந்தி	0.0289	0.0400	0.0087	0.0097	0.0015	0.0001	0.00003	–
13	தமிழ்	69.0039	38.1002	81.9168	92.8141	97.3073	90.3772	95.2035	87.5860

அட்டவணை - II - தொடர்ச்சி

வ. எண்		கோயம்புத்தூர்	நீலகிரி	மதுரை	திருச்சி	தஞ்சாவூர்	ராமநாதபுரம்	திருநெல்வேலி	கன்யாகுமரி
14	தெலுங்கு	18.8490	6.2759	10.4096	5.5980	1.2088	7.5838	3.9243	0.1934
15	உருது	1.1099	1.9409	0.7228	1.1900	0.3933	0.1359	0.2216	0.0269
16	அங்காமி	–	–	–	–	–	–	–	–
17	அரபி	0.0067	0.0057	0.0034	0.0034	0.0026	0.0013	0.0038	–
18	பால்டி	–	0.0004	–	–	–	–	–	–
19	சீனி	0.0002	0.0022	0.0003	0.00005	0.0002	0.0001	0.0002	–
20	கூர்கி/குடகு	0.0009	0.0210	0.0002	0.00005	–	0.00007	0.0002	0.0006
21	டோக்ரி	0.0002	0.0210	–	0.00002	0.00002	–	0.00003	–
22	ஆங்கிலம்	0.0449	0.4346	0.0289	0.0690	0.0050	0.0033	0.0104	0.0049
23	நேபாளி	0.0065	0.0320	0.0011	0.0018	0.0008	0.0003	0.0017	0.00008
24	காசி	0.00004	0.0320	–	–	–	–	–	–
25	கொங்கணி	0.0276	0.0668	0.0032	0.0025	0.0004	0.0008	0.0040	0.0007
26	குருக்	–	–	0.00005	–	–	–	–	–

அட்டவணை - II - தொடர்ச்சி

வ. எண்		கோயம்புத்தூர்	நீலகிரி	மதுரை	திருச்சி	தஞ்சாவூர்	ராமநாதபுரம்	திருநெல்வேலி	கன்யாகுமரி
27	லஹண்டா	–	0.0014	–	0.0001	–	–	–	–
28	லோதா	–	–	–	–	–	–	–	–
29	லூஷாய்	–	–	–	–	–	–	–	–
30	மணிப்பூரி	–	–	–	–	–	–	–	–
31	நாகா	–	0.0002	–	–	–	–	–	–
32	நிகோபாரி	–	–	–	–	–	–	–	–
33	பர்ஷியன்	0.0003	0.0077	–	0.0004	–	–	–	–
34	சந்தாலி	–	0.00005	–	–	–	–	–	–
35	சிக்கிம்	0.00002	–	–	–	–	–	–	0.0001
36	டிபேடன்	–	0.0055	–	–	–	–	–	–
37	துளு	0.0090	0.0585	0.0010	0.0021	0.0012	0.0015	0.0047	0.0270
38	மற்றவை	0.0023	0.4058	0.0089	0.0258	0.0063	0.0023	0.0025	0.0024

அட்டவணை - III

தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் தாய்மொழி பேசுவோரின் எண்ணிக்கை 1971 – ஆம் ஆண்டு மக்கள்தொகை

வ. எண்	மொழி	சென்னை	மதுரை	கோயம்புத்தூர்	சேலம்	திருநெல்வேலி
1	அஸ்ஸாமி	27	–	–	–	1
2	பெங்காளி	1554	29	104	2	2
3	குஜராத்தி	19913	71961	2472	15190	6759
4	ஹிந்தி	31252	989	3011	849	1339
5	கன்னடம்	17703	2870	25432	33495	1082
6	காஷ்மீரி	8300	2	–	–	–
7	மலையாளம்	92801	4812	45563	3807	4485
8	மராத்தி	16794	981	1653	497	1116
9	ஓரியா	195	1	–	–	1
10	பஞ்சாபி	2237	31	336	26	5
11	சமஸ்கிருதம்	28	2	9	–	–
12	சிந்தி	5559	292	1061	379	373

அட்டவணை - III - தொடர்ச்சி

வ. எண்	மொழி	சென்னை	மதுரை	கோயம்புத்தூர்	சேலம்	திருநெல்வேலி
13	தமிழ்	1820274	409900	18736	183158	245676
14	தெலுங்கு	247188	39514	81775	41429	21214
15	உருது	141896	16949	10108	19675	24393
16	அரபி	247	7	134	11	5
17	சைனீஸ்	173	5	4	–	2
18	கூர்கி/குடகு	67	2	28	–	–
19	ஆங்கிலம்	15532	619	678	60	993
20	கொர்க்காலி	897	14	44	8	9
21	கொங்கணி	3266	57	919	57	45
22	லஹீண்டா	4	–	–	–	2
23	பர்ஷியன்	62	–	6	–	–
24	டிபேடன்	5	–	–	–	–
25	துளு	1235	24	263	41	22
26	மற்றவை	1190	53	32	14	56

அட்டவணை - VII

தமிழ்நாட்டின் மாவட்டங்களில் 'தொடர்பு சாதன சாத்தியக் கூறும்' மொழிமாறு தன்மையின் அட்டவணயும்

(Probability of communication to language and Index of Diversity in the districts of Tamil Nadu)

தமிழ்நாடு	
அஸ்ஸாமி	1.0589 e – 11
பெங்காளி	7.699 e – 9
குஜராத்தி	2.334 e – 5
ஹிந்தி	3.534 e – 6
கன்னடா	6.5762 e – 4
மலையாளம்	1.8422 e – 4
மராத்தி	2.118 e – 6
ஒரியா	1.049 e – 10
பஞ்சாபி	1.483 e – 8
சிந்தி	4.111 e – 8
தமிழ்	0.71419
தெலுங்கு	7.6357 e – 3
உருது	3.3994 3 – 4
ஆங்கிலம்	5.344 e – 7
கூர்கி/கொடகு	4.887 e – 11
டோக்கி	1.074 e – 11
கோர்காளி/நேப்பாளி	3.265 e – 8
கொங்கணி	2.056 e – 8
துளு	8.674 e – 5
மொத்தம்	0.7231238

மொழிமாறுபடு தன்மையின் அட்டவணை

A = 1 – 0. 7231238 = 0.2768762

சென்னை	
அஸ்ஸாமி	1.195 e – 10
பெங்காளி	3.960 e – 7
குஜராத்தி	6.502 e – 5
ஹிந்தி	1.6016 e – 4
கன்னடா	5.139 e – 5
மலையாளம்	1.3904 e – 3
மராத்தி	4.625 e – 5
ஒரியா	6.235 e – 9
பஞ்சாபி	8.206 e – 7
சிந்தி	5.067 e – 6
தமிழ்	0.54334
தெலுங்கு	1.4483 e – 2
உருது	3.3017 e – 3
ஆங்கிலம்	3.956 e – 5
கூர்கி/கொடகு	7.361 e – 10
டோக்கி	1.640 e – 13
கோர்காளி/நேப்பாளி	1.319 e – 7
கொங்கணி	1.749 e – 6
துளு	2.501 e – 7
மொத்தம்	0.5628856

மொழிமாறுபடு தன்மையின் அட்டவணை

$$A = 1 - 0.5628856 = 0.4371144$$

அட்டவணை - IV

தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் தாய்மொழி பேசுவோரின் எண்ணிக்கை 1971 – ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கீடு

வ. எண்		சென்னை	மதுரை	கோயம்புத்தூர்	சேலம்	திருச்சி
1	அஸ்ஸாமி	0.0011	0.0053	0.0292	–	0.0003
2	பெங்காளி	0.0627	13.1050	0.6937	0.0006	0.0007
3	குஜராத்தி	0.8037	0.1801	0.8450	4.9207	2.1402
4	ஹிந்தி	1.2613	0.5227	7.1364	0.2750	0.4356
5	கன்னடம்	0.7145	0.004	–	10.8504	0.3520
6	காஷ்மீரி	0.3350	0.8763	12.7854	–	–
7	மலையாளம்	3.07163	0.1787	0.4638	1.2332	1.4590
8	மராத்தி	0.6778	0.0002	–	0.1610	0.3630
9	ஒரியா	0.0079	0.0056	0.0943	–	0.0003
10	பஞ்சாபி	0.0903	0.0004	0.0025	0.0084	0.0016
11	சமஸ்கிருதம்	0.0011	0.0532	0.2977	–	–
12	சிந்தி	0.2244	74.6475	51.2773	0.1228	0.1213
13	தமிழ்	73.4661	7.1960	22.9468	59.3324	79.9206
14	தெலுங்கு	11.9945	3.0866	2.8364	16.6510	6.9011

அட்டவணை - IV - தொடர்ச்சி

வ. எண்		சென்னை	மதுரை	கோயம்புத்தூர்	சேலம்	திருசசி
15	உருது	5.7270	–	–	6.3735	7.9352
16	அங்காமி	0.00004	0.0013	0.376	–	–
17	அரபி	0.0100	0.0009	0.0011	0.0036	0.0016
18	சீனி	0.0070	0.0004	0.0079	–	–
19	குடகு	0.0028	–	–	–	–
20	டோக்ரி	0.00004	0.1127	0.1903	–	–
21	ஆங்கிலம்	0.6269	0.0025	0.0123	0.0194	0.3230
22	கொர்க்காலி	0.0362	0.0104	0.2579	0.0026	0.0029
23	கொங்கணி	0.1318	–		0.0185	–
24	லஹீண்டா	0.0016	–		–	0.0146
25	லூஷாய்	0.00004	–		–	0.0006
26	மணிப்பூரி	0.0006	–		–	–
27	நிகோபாரி	0.0002	–		–	–
28	பார்ஷியன்	0.0025	–	0.0017	–	–
29	டிபேடன்	0.0002	–	–	–	–
30	துளு	0.0498	0.0044	0.0738	0.0133	0.0072
31	மற்றவை	00480	0.0096	0.0090	0.0045	0.0182

செங்கல்பட்டு	
அஸ்ஸாமி	7.196 e – 10
பெங்காளி	1.535 e – 7
குஜராத்தி	1.733 e – 6
ஹிந்தி	1.618 e – 5
கன்னடா	7.983 e –6
மலையாளம்	1.4283 e – 4
மராத்தி	2.398 e – 9
ஒரியா	1.405 e – 9
பஞ்சாபி	2.658 e – 7
சிந்தி	4.401 e – 10
தமிழ்	0.70158
தெலுங்கு	0.14590
உருது	2.8226 e – 4
ஆங்கிலம்	1.309 e – 6
கூர்கி/கொடகு	1.988 e – 10
டோக்கி	1.304 e – 9
கோர்காளி/நேப்பாளி	5.453 e – 8
கொங்கணி	1.335 e – 8
துளு	8.623 e – 9
மொத்தம்	0.8479354

மொழிமாறுபடு தன்மையின் அட்டவணை

A = 10. 8479354 = 0.1520646

வட ஆற்காடு	
அஸ்ஸாமி	1.772 e – 12
பெங்காளி	1.633 e – 10
குஜராத்தி	1.837 e – 6
ஹிந்தி	3.587 e – 6
கன்னடா	5.459 e – 5
மலையாளம்	2.670 e – 6
மராத்தி	7.777e – 6
ஒரியா	4.537 e – 12
பஞ்சாபி	4.884 e – 10
சிந்தி	2.725 e – 10
தமிழ்	0.68302
தெலுங்கு	9.6262 e – 3
உருது	3.5766 – 3
ஆங்கிலம்	6.962 e – 8
கூர்கி/கொடகு	2.836 e – 13
டோக்கி	0
கோர்காளி/நேப்பாளி	8.684 e – 11
கொங்கணி	3.474 e – 10
துளு	1.209 e – 9
மொத்தம்	0.6962933

மொழி மாறுதன்மையின் அட்டவணை

A = 0. 6962933 = 0.3037067

தென் ஆற்காடு	
அஸ்ஸாமி	0
பெங்காளி	5.391 e – 10
குஜராத்தி	5.456 e – 8
ஹிந்தி	6.506 e – 7
கன்னடா	4.212 e – 6
மலையாளம்	6.265 e – 6
மராத்தி	1.364 e – 7
ஒரியா	3. 056 e – 13
பஞ்சாபி	2.228 e – 10
சிந்தி	1.498 e – 11
தமிழ்	0.87706
தெலுங்கு	1.4907 e – 3
உருது	3.3856 e – 4
ஆங்கிலம்	7.100 e – 8
கூர்கி/கொடகு	6.877 e – 13
டோக்கி	0
கோர்காளி/நேப்பாளி	1.617 e – 10
கொங்கணி	4.649 e – 10
துளு	3.698 e – 9
மொத்தம்	0.8789006

மொழி மாறுதன்மையின் அட்டவணை

$$A = 1 - 0.8789006 = 0.1210994$$

தர்மபுரி	
அஸ்ஸாமி	0
பெங்காளி	1.741 e – 11
குஜராத்தி	1.088 e – 8
ஹிந்தி	1.015 e – 5
கன்னடா	1.0989 e – 6
மலையாளம்	2.089 e – 6
மராத்தி	2.483 e – 5
ஒரியா	0
பஞ்சாபி	3.552 e – 13
சிந்தி	0
தமிழ்	0.43546
தெலுங்கு	3.3309 e – 2
உருது	1.9419 e – 3
ஆங்கிலம்	1.719 e – 10
கூர்கி/கொடகு	0
டோக்கி	0
கோர்காளி/நேப்பாளி	2.878 e – 11
கொங்கணி	2.988 e – 10
துளு	4.144 e – 9
மொத்தம்	0.4707391

மொழி மாறுதன்மையின் அட்டவணை

$$A = 1 - 0.4707391 = 0.5292609$$

சேலம்	
அஸ்ஸாமி	0
பெங்காளி	1.117 e – 13
குஜராத்தி	1.529 e – 10
ஹிந்தி	3.617 e – 8
கன்னடா	3.443 e – 7
மலையாளம்	9.5225 e – 4
மராத்தி	1.273 e – 5
ஒரியா	0
பஞ்சாபி	3.137 e – 10
சிந்தி	1.932 e – 8
தமிழ்	0.70813
தெலுங்கு	1.0304 e – 2
உருது	2.2291 e – 4
ஆங்கிலம்	5.425 e – 8
கூர்கி/கொடகு	2.792 e – 12
டோக்கி	4.466 e – 13
கோர்காளி/நேப்பாளி	1.612 e – 10
கொங்கணி	4.202 e – 9
துளு	2.348 e – 9
மொத்தம்	0.7196225

மொழி மாறுதன்மையின் அட்டவணை

$$A = 1 - 0.7196225 = 0.2803775$$

கோயம்புத்தூர்	
அஸ்ஸாமி	1.025 e – 11
பெங்காளி	3.294 e – 9
குஜராத்தி	7.326 e – 7
ஹிந்தி	1.865 e – 6
கன்னடா	6.2586 e – 5
மலையாளம்	7.110 e – 4
மராத்தி	8.088 e – 7
ஒரியா	0
பஞ்சாபி	1.511 e – 11
சிந்தி	1.355 e – 8
தமிழ்	0.47615
தெலுங்கு	3.5529 e – 2
உருது	1.2319 e – 3
ஆங்கிலம்	2.019 e – 7
கூர்கி/கொடகு	8.366 e – 11
டோக்கி	6.327 e – 12
கோர்காளி/நேப்பாளி	4.217 e – 9
கொங்கணி	7.630 e – 8
துளு	9.849 e – 9
மொத்தம்	0.5125796

மொழி மாறுபடு தன்மையின் அட்டவணை

$$A = 1 - 0.4874205 = 0.5125794$$

நீலகிரி	
அஸ்ஸாமி	1.475 e – 10
பெங்காளி	1.357 e – 7
குஜராத்தி	3.812 e – 7
ஹிந்தி	3.661 e – 5
கன்னடா	1.0187 e – 7
மலையாளம்	3.7478 e – 2
மராத்தி	2.047 e – 5
ஒரியா	2.622 e – 8
பஞ்சாபி	6.655 e – 7
சிந்தி	1.606 e – 7
தமிழ்	0.14516
தெலுங்கு	3.9387 e – 3
உருது	3.7904 e – 4
ஆங்கிலம்	1.889 e – 5
கூர்கி/கொடகு	4.432 e – 8
டோக்கி	6.925 e – 10
கோர்காளி/நேப்பாளி	1.023 e – 7
கொங்கணி	4.462 e – 7
துளு	3.422 e – 7
மொத்தம்	0.1870338

மொழி மாறுபடு தன்மையின் அட்டவணை

$$A = 1 - 0.1870338 = 0.8129663$$

மதுரை	
அஸ்ஸாமி	0
பெங்காளி	9.310 e – 11
குஜராத்தி	5.5578 e – 4
ஹிந்தி	2.548 e – 7
கன்னடா	1.6818 e – 5
மலையாளம்	1.182 e – 5
மராத்தி	1.484 e – 7
ஒரியா	1.612 e – 12
பஞ்சாபி	1.486 e – 10
சிந்தி	7.541 e – 9
தமிழ்	0.67104
தெலுங்கு	1.0836 e – 2
உருது	5.224 e – 5
ஆங்கிலம்	8.350 e – 8
கூர்கி/கொடகு	5.223 e – 12
டோக்கி	0
கோர்காளி/நேப்பாளி	1.248 e – 10
கொங்கணி	1.007 e – 9
துளு	3.627 e – 10
மொத்தம்	0.6825135

மொழி மாறுபடு தன்மையின் அட்டவணை

$$A = 1 - 0.6825135 = 0.3174865$$

திருச்சிராப்பள்ளி	
அஸ்ஸாமி	6.75 e – 14
பெங்காளி	2.727 e – 9
குஜராத்தி	5.610 e – 6
ஹிந்தி	4.965 e – 7
கன்னடா	2.236 e – 5
மலையாளம்	1.643 e – 1
மராத்தி	6.973 e – 7
ஒரியா	6.076 e – 13
பஞ்சாபி	3.500 e – 10
சிந்தி	9.443 e – 9
தமிழ்	0.86145
தெலுங்கு	2.1141 e – 3
உருது	1.4303 e – 4
ஆங்கிலம்	4.762 e – 7
கூர்கி/கொடகு	2.700 e – 9
டோக்கி	6.75 e – 14
கோர்காளி/நேப்பாளி	3.122 e – 10
கொங்கணி	6.221 e – 10
துளு	4.429 e – 10
மொத்தம்	0.97196317

மொழி மாறுபடு தன்மையின் அட்டவணை

A = 1 – 097196317 . = 0.02803683

தஞ்சாவூர்	
அஸ்ஸாமி	2.712 e – 13
பெங்காளி	7.837 e – 11
குஜராத்தி	3.383 e – 5
ஹிந்தி	1.252 e – 7
கன்னடா	1.094 e – 6
மலையாளம்	2.347 e – 6
மராத்தி	3.786 e – 6
ஒரியா	2.712 e – 13
பஞ்சாபி	3.586 e – 11
சிந்தி	2.360 e – 10
தமிழ்	0.94687
தெலுங்கு	1.4611 e – 4
உருது	1.547 e – 5
ஆங்கிலம்	2.499 e – 9
கூர்கி/கொடகு	0
டோக்கி	6.78 e – 14
கோர்காளி/நேப்பாளி	6.515 e – 11
கொங்கணி	1.956 e – 11
துளு	1.434 e – 10
மொத்தம்	0.9470728

மொழி மாறுபடு தன்மையின் அட்டவணை

$$A = 1 - 0.9470728 = 0.0529272$$

ராமநாதபுரம்	
அஸ்ஸாமி	0
பெங்காளி	5.990 e – 12
குஜராத்தி	3.003 e – 5
ஹிந்தி	4.084 e – 8
கன்னடா	1.4189 e – 4
மலையாளம்	1.333 e – 6
மராத்தி	3.142 e – 8
ஒரியா	0
பஞ்சாபி	1.222 e – 11
சிந்தி	1.956 e – 12
தமிழ்	0.81680
தெலுங்கு	5.7514 e – 3
உருது	1.848 e – 6
ஆங்கிலம்	1.080 e – 9
கூர்கி/கொடகு	4.890 e – 13
டோக்கி	0
கோர்காளி/நேப்பாளி	7. 823 e – 12
கொங்கணி	6.466 e – 11
துளு	2.156 e – 10
மொத்தம்	0.8227266

மொழி மாறுபடு தன்மையின் அட்டவணை

$$A = 1 - 0.8227266 = 0.1772735$$

திருநெல்வேலி	
அஸ்ஸாமி	0
பெங்காளி	9.997 e – 11
குஜராத்தி	3.611 e – 6
ஹிந்தி	2.687 e – 7
கன்னடா	2.449 e – 6
மலையாளம்	4.601 e – 6
மராத்தி	6.856 e – 9
ஒரியா	7.76 e – 14
பஞ்சாபி	4.305 e – 11
சிந்தி	9.76 e – 14
தமிழ்	0.90637
தெலுங்கு	1.5400 e – 3
உருது	4.910 e – 6
ஆங்கிலம்	1.083 e – 8
கூர்கி/கொடகு	3.514 e – 12
டோக்கி	9.76 e – 14
கோர்காளி/நேப்பாளி	3.062 e – 10
கொங்கணி	1.575 e – 9
துளு	2.167 e – 9
மொத்தம்	0.9079258

மொழி மாறுபடு தன்மையின் அட்டவணை

A = 1– 0.9079258 = 0.207421E – 20

கன்னியாகுமரி	
அஸ்ஸாமி	0
பெங்காளி	6.691 e – 13
குஜராத்தி	7.993 e – 7
ஹிந்தி	7.660 e – 9
கன்னடா	3.753 e – 7
மலையாளம்	1.4383 e – 2
மராத்தி	2.827 e – 9
ஒரியா	0
பஞ்சாபி	1.673 e – 11
சிந்தி	0
தமிழ்	0.76713
தெலுங்கு	3.742 e – 2
உருது	7.242 e – 8
ஆங்கிலம்	2.409 e – 9
கூர்கி/கொடகு	3.278 e – 11
டோக்கி	0
கோர்காளி/நேப்பாளி	6.691 e – 13
கொங்கணி	5.419 e – 11
துளு	7.286 e – 8
மொத்தம்	0.8189343

மொழி மாறுபடு தன்மையின் அட்டவணை

$$A = 1 - 0.8189343 = 0.1810657$$

3. திராவிட மொழிகள் - ஓர் அறிமுகம்

கால்டுவெல்

திராவிட மொழிகள் தனி மொழிக் குடும்பத்தைச் சார்ந்தன என்னும் கருத்தை முதன் முதல் கால்டுவெல் (1856) தன் ஆய்வில் தெரிவித்தார். இவர் வாழ்ந்த காலத்தில் பல திராவிட மொழிகள் வெளி உலகத்துக்குத் தெரியப்படாமல் இருந்ததாலும், அவை பற்றிய இலக்கண விளக்கங்களும் அப்போது உருவாகவில்லையாதலாலும், இவற்றைப் பற்றிய செய்திகளைக் கால்டுவெல் தன் ஆய்வில் குறிப்பிடவில்லை.

கிரியெர்சன்

கால்டுவெல் அறிமுகப்படுத்திய திராவிட மொழிகளின் வகைப்பாட்டின் அடிப்படையில் கிரியெர்ஸனும் திராவிட மொழிகளை வகைப்படுத்தினார். தமிழ், மலையாளம், துளு, குடகு, கன்னடம், தோடா மற்றும் கோடா மொழிகள் தென் திராவிட குழுவைச் சேர்ந்தன என்று வகைப்படுத்தினார். தற்போது மத்திய திராவிட மொழிக் குழுவைச் சேர்ந்த (ஆனால் கால்டுவெல்லால் மத்திய திராவிட மொழிக் குழு என பெயரிடப்படாத) மொழிகளென குருக், மால்தோ, கோண்டி, கூய், கொலாமி மற்றும் தெலுங்கு ஆகியவற்றை வகைப் படுத்தினார். பிராஹூய் மொழி தனிக் குழுவைச் சேர்ந்தது எனவும் பிரித்துக் காட்டியுள்ளார்.

கிரியெர்சனின் திராவிட மொழிகள் பற்றிய வகைப்பாடு சொல்லியல் அடிப்படையில் அமைந்துள்ளது. எனவேதான், ஒரே மாதிரியான பெண்பால் உருபுகளைக் கொண்ட தமிழ், கன்னடம் இரண்டையும் ஒன்றாக இணைத்து கிரியெர்சன் காட்டியுள்ளார். மேலும் குருக், மால்தோ இரண்டிலும் வினையோடு காலங்காட்டும் உருபுகள் இணைவதில் உள்ள ஒற்றுமையை அடிப்படையாக வைத்து இவை இரண்டும் ஒரே கிளைமொழிகளெனவும் கூறுகிறார். கால்டுவெல்-கிரியெர்சன் வகைப்பாட்டிற்குப் பிறகு, ஏறத்தாழ

1950 வரை, திராவிட மொழிகளின் வகைப்பாட்டில் எந்தவித குறிப்பிடத்தக்க மாற்றங்களும் ஒப்புமை இலக்கணவியலாளரால் புகுத்தப்படவில்லை.

பர்ரோ-பட்டாச்சார்யா

எல். வி. ராமசாமி ஐயர், இ. ஹெச். டட்டில் (E.H. Tuttle) மற்றும் டி. பர்ரோ ஆகியோர், இடைஇடையே, வரலாற்று மொழியியல் அடிப்படையில், திராவிட மொழிகளின் வகைப்பாட்டில் செய்யப்பட வேண்டிய சில மாற்றங்களைப் பற்றிய கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். பர்ரோ, பட்டாச்சார்யா (Burrow & Bhattacharya : 1953) இருவரும் இணைந்து வெளியிட்ட 'பர்ஜி மொழி' என்னும் நூலில்தான், பர்ஜி (Parji) ஒல்லாரி (Ollari) கதபா (Gadaba) கொலாமி (Kolami) நாய்கி (Naiki), கோண்டி-கோண்டா (Gondi-Konda) மற்றும் கூய்-கூவி (Kui-Kuvi) ஆகிய மொழிகளுக்கிடையே உள்ள மொழியியல் ஒற்றுமைகளும், இம்மொழிகளைப் புதிய மொழியியல் தகவல்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து வகைப்படுத்துவதற்கான காரணங்களும் விளக்கப் பட்டுள்ளன.

எமனோ

கொலாமி-நாய்கி, பர்ஜி மற்றும் ஒல்லாரி ஆகிய மொழிகளுக்கிடையே உள்ள தொடர்பை மொழியியல் ஒற்றுமைகளினால் அரிதியிட்டு, இம்மொழிகளை எமனோ (Emenau: 1955) ஓர் உட்பிரிவின் கீழ் குறிப்பிட்டார். மத்திய திராவிட மொழிகளிடையேயும் சில புதிய உட்பிரிவுகளை இவர் தற்காலிகமாக அறிமுகப்படுத்தினார்.

திராவிட ஒப்புமை மொழியியல் வரலாற்றில் தெலுங்கு மொழி தன் திராவிட மொழியாகவே கருதப்பட்டு வந்தது. கூய்-கூவி-கோண்டா உட்பிரிவினோடு தெலுங்கு மொழிக்கு உள்ள ஒற்றுமைகளை வரையறுத்துக் கூறி, தெலுங்கு மத்திய திராவிட மொழியென கிருஷ்ணமூர்த்தி (1961) கூறினார்.

குருக்-மால்தோ மொழிகளோடு பிராகூய் மொழியைச் சேர்த்து ஒரு உட்பிரிவைத் திராவிட ஒப்புமை மொழியியல் ஆய்வில் அறிமுகப்படுத்துவதன் அவசியத்தை எமனோ (1962) எடுத்துக்கூறினார். ஒலியனியல் பாகுபாட்டுக்கோடுகள்

மற்றும் இம்மூன்று மொழிகளிடையேயும் பொதுவாக அமைந்துள்ள மொழியியல் கூறுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தான் எமனோவின் மேற்கூறிய கருத்து அமைந்துள்ளது.

ஆன்ட்ரனோவ்

திராவிட மொழிக் குடும்பத்தில் இவ்வாறான குழுக்கள் மற்றும் உட்பிரிவுகளைப் பற்றிய பல கருத்துகள் நிலவி இருந்தாலும், இவற்றினை எல்லாம் ஒன்றிணைத்து ஒட்டுமொத்தமான ஒரு திரண்ட கருத்தினை ஆன்ட்ரனோவ் (Andronov, 1962, 1963, 1964) முதன்முதலாக தம் ஆய்வுகளின் மூலம் வெளியிட்டார். இவர்தம் ஆய்வுகள் புலப்படுத்திய பிரிவுகளாவன:

1. குருக், மால்தோ மற்றும் பிராகூய் மூன்றும் தற்போது வட திராவிடக் குழு எனக் கருதப்படும் பிரிவின் கீழ் அடங்கும் மொழிகளாகும்.
2. தென் திராவிட மொழிகளிடையே நடுநிலை மொழி யாகக் கருதப்பட்ட துளு மொழி தெலுங்கின் அருகில் இணைத்து பார்க்கப்படவேண்டிய மொழியாகும்.
3. தோடாவும், கோடாவும் தமிழ்-மலையாளத்தின் அண்டை மொழிகளாகக் கருதப்படவேண்டியன.
4. கொலாமி, நாய்கி, பர்ஜி, கதபா, கோண்டி, கோண்டா, கூய் மற்றும் கூவி ஆகிய மொழிகள் மத்திய திராவிடக் குழுவில் அடங்கும்.

திராவிட மொழிகளை ஆண்டரனோவ் (1964) வகைப் படுத்திய முறையை ஆய்வோமானால் கீழ்க்கண்ட கருத்தினைக் கூறலாம். திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி களைத் தென், மத்திய வட திராவிட மொழிகள் என்ற பெரும் குழுக் களின் கீழ் பிரித்து, ஒவ்வொரு குழுவின் கீழும் தனித்தனி மொழிகளுக்கிடையே உள்ள மொழியியல் கூறுகளின் நெருக்கத்தை அடிப்படையாக வைத்து பல உட்பிரிவுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ்-மலையாளம் இரண்டும் கோடா-தோடாவுடன் இணைந்து உட்பிரிவாக பகுக்கப்பட்டு, கன்னடம்-குடகுடன் இணைந்து ஒரு மற்றுமொரு உட்பிரிவுக்குள் காட்டப்பட்டுள்ளன. துளு,

தெலுங்கு ஆகிய இரு மொழிகளும் தனித்தனியாக வகைப்படுத்தப்பட்டு, மேற்கூறிய எல்லா மொழிகளையும், ஒன்றிணைத்து தென் திராவிடக்குழு என்ற பெரும்பிரிவின் கீழ் ஆண்ட்ரனோவ் வகைப்படுத்தினார். கோலாமி-நாய்கி இரண்டும் பர்ஜி - கதாபாவுடன் இணைந்து ஓர் உட்பிரி வாகவும், கோண்டி - கோண்டா இரண்டும் கூய்-கூவியுடன் இணைந்து ஓர் உட்பிரிவாகவும் தனித்தனியாக வகைப் படுத்தப்பட்டு, இவை எல்லாம் மத்திய திராவிடக் குழு என்ற பெரும்பிரிவின் கீழ் அடங்கும் மொழிகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. குருக்-மால்தோ இரண்டும் பிராகூய் மொழியுடன் இணைந்து வட திராவிடக் குழுவின் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளன.

1970-ஆம் ஆண்டு பதிப்பித்த தன் ஆய்வில் ஆன்ட்ரனோவ் திராவிட மொழிக் குடும்பத்தைப் பற்றிய பிரிவுகளில் சில மாற்றங்களைச் செய்துள்ளார். வட திராவிட மொழிகள், கோண்டி-கோண்டா-கூய்-கூவீ மற்றும் கோலாமி-நாய்கி-பர்ஜி கதபா போன்ற உட்பிரிவுகள் ஏற்பட்ட காலக்கட்டத்திலேயே தென் திராவிடக் குழுவிலிருந்து தெலுங்கும், துளுவும் பிரிந்திருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் தெலுங்கையும், துளுவையும் தென் திராவிடக் குழுவினின்றும் பிரித்துக் காட்டினார். மேலும் இப்புதிய கருத்தினடிப்படையில், தமிழ், மலையாளம், கோடா, தோடா, குடகு மற்றும் கன்னடம் அடங்கிய பிரிவினை தென் பிரிவு என்றும், துளுவைத் தென் மேற்கு பிரிவு என்றும், தெலுங்கைத் தென் கிழக்குப் பிரிவு என்றும், கொலாமி, நாய்கி பர்ஜி கதபாவை மத்திய பிரிவு என்றும், கோண்டி, கோண்டா, கூய், கூவியைக் 'கோண்ட்வானா' என்றும், குருக், மால்தோவை வட கிழக்குப் பிரிவு என்றும், பிராகூய் மொழியை வட மேற்கு பிரிவு என்றும் பிரித்துக் காட்டினார்.

மத்திய திராவிட மொழிகளை இரண்டு உட்பிரிவுகளாக பிரித்தாராய வேண்டும் என்ற கருத்தினை முதன் முதலாக பர்ரோவும் பட்டாச்சார்யாவும் (Burrow and Bhattacharya : 1953) தெளிவுபடுத்தினர். பி.எஸ். சுப்ரமணியம் (1969) திராவிட மொழிக் குடும்பத்தில் பெங்கோ (Pengo), மண்டா் எனப்படும் இரு புதிய மொழிகளைச் சேர்த்து, அவற்றை மூலத்திராவிட மொழியின் கிளைவழிப்படத்தில் அறிமுகப்படுத்தினார். கிருஷ்ணமூர்த்தி (1961) ஆய்வில் கண்டறிந்த சொல்லியல்

சான்றுகளின் அடிப்படையில் தெலுங்கு மொழியைத் தென் திராவிடப் பிரிவினின்றும் பிரித்து, மத்திய திராவிடப் பிரிவில் சேர்க்க வேண்டுமென்றும் சுப்ரமணியம் கருதுகிறார்.

எமனோவின் **(1967)** ஆய்வுதான் தென் திராவிட மொழிகளின் உட்பிரிவுகளை வகைப்படுத்தி அறிவதற்கு மிகவும் அடிப்படையாக அமைந்துள்ளது. இவரது ஆய்வு முடிவுகளுக்குச் சொல்லியல் விளக்கங்களே ஆதாரமாக அமைந்துள்ளன. குறிப்பாக, பல மொழிகளில் வழக்கில் உள்ள காலங்காட்டும் விகுதிகளின் ஒலியன் அமைப்புக்களின் அடிப்படையில்தான் இவரது ஆய்வு முடிவுகள் அமைந்துள்ளன. தென் திராவிட மொழிகளை இவர் வகைப் படுத்தியமையின் திரண்ட கருத்தாக, மலையாளம்-தமிழோடு தோடா-கோடா இரண்டையும் இணைத்து ஒரு உட்பிரிவாக ஆக்கியமையும், அவற்றினோடு குடகு மொழியைச் சேர்த்து ஒரு பிரிவாகவும், இவை எல்லாவற்றினோடு கன்னடம்-படகா உட்பிரிவினை இணைத்து, 'தென் திராவிடபிரிவு' என்று பெயரிட்டமையையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

தென் திராவிட மொழிகளுக்கிடையே அமைந்துள்ள கொடிவழிமுறை (geneological) நெருக்கத்தையும், இம்மொழி களுக்கிடையே உள்ள கூட்டியக்கப்புரிபாட்டின் (interaction) அளவையும் எமனோ விளக்கியுள்ளார்.

சுவலபெல்

சுவலபெல் (Zvelebil : 1970) திராவிட மொழிகள் பற்றிய தன்னுடைய பட்டியலில் இதுவரை வெளிக்கொணரப்பெறாத பல மொழிகளை இணைத்துள்ளார். தென், மத்திய, வட திராவிடக் குழுக்கள் என்று எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட பிரிவுகளின் படியே இவரது வகைப்பாடு அமைந்து இருந்தாலும், தெலுங்கையும், துளுவையும் தென் திராவிடக் குழுவிலோ அல்லது மத்தியத் திராவிடக் குழுவிலோ சேர்க்காமல், இவை இரண்டுக்கும் இடைப்பட்ட தனிப்பிரிவு களாக இவ்விரண்டு மொழிகளையும் வகைப்படுத்தியுள்ளார். மற்ற திராவிட மொழிகளைச் சுவலபெல் வகைப் படுத்தியமையின் விளக்கம் பின்வருமாறு:

தென் திராவிடக் குழுவின் அடிப்படை உட்பிரிவுகளாக தோடா-கோடா, இருளா-தமிழ்-மலையாளம், குடகு மற்றும்

கன்னடம்-படகா பிரிவுகள் அமைந்துள்ளன. முன்பு கூறியது போல் துளு தென் திராவிடக் குழுவினின்றும் தனித்துக் காட்டப்பட்டிருந்த போதிலும் அதன் மொழியியல் கூறுகள் தென் திராவிட மொழிகளின் அமைப்பை ஒட்டியே அமைந்துள்ளன. சவரா (Savara) எனப்படும் மொழி தெலுங்கின் ஒரு வட்டார வழக்காக இருக்கக் கூடும் எனும் ஐயப்பாடு இருப்பினும், அதை தெலுங்கினோடு மிக நெருங்கிய ஒரு மொழியாகக் கருதி இவை இரண்டையும் கூட தென் மற்றும் மத்தியக் குழுக்களுக்கு இடைப்பட்ட ஒரு நிலையில் சுவலபெல் அமைந்துள்ளார்.

மேலும் மத்தியத் திராவிட மொழிகளின் உட்பிரிவு களாக கீழ்க்கண்ட மொழி உட்பிரிவுகளைச் சுவலபெல் அமைத்துள்ளார். கொலாமி மற்றும் ''சந்தா'' நாய்கி (Naiki of Chanda) அடங்கிய ஓர் உட்பிரிவு: ஒல்லாரி (Ollari), பொட்டங்கி (Pottangi), போயா (Poya) ஆகிய கதாபாவின் வட்டார வழக்குகள் இணைந்த கதபாவுடன் பர்ஜி அடங்கிய ஓர் உட்பிரிவு: கூய்-கூவியுடன் கோண்டா (கூபி) அடங்கிய ஓர் உட்பிரிவு: டொரியா கோண்டி, கோயா கோண்டி, மரியா கோண்டி முரியா கோண்டி, ராஜ் கோண்டி ஆகியன ஓர் உட்பிரிவு: என பல்வேறு வகைப்படுத்தியுள்ளார்.

குருக் (ஒராவோன்)-மால்தோ உட்பிரிவுடன் பிராகூய் மொழியை இணைத்து வட திராவிடப் பிரிவென வகை செய்துள்ளார்.

சுவல்பெல் திராவிட மொழிகள் பற்றிய தனனுடைய பட்டியலில் இதுவரை வெளிக்கொணரப் பெறாத பல மொழி களை இணைத்துள்ளார் என்று முன்பு கண்டோம். அவற்றுள் கய்க்காடி (Kaikadi), காடர், எருகலா (Yerukala) என்பனவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். காடர் மொழியைப் பற்றிய ஆய்வை துண்டில் (Thundyil: 75) நடத்தியுள்ளார். இம்மொழி மலையாளம் அல்லது தமிழின் வட்டார வழக்கில் இல்லை என்பதும், ஒலியனியல், இலக்கணம், சொல்லடைவு ஆகிய அமைப்புகள் இதை ஒரு தனித் தென் திராவிட மொழியாகவே உணர்த்துகிறது என்பதும் துண்டிலின் கருத்தாகும். எருகலா பற்றிய இரண்டு மாறுபட்ட கருத்துக்கள் அறிஞரிடையே நிலவுகிறது. சி.வி. குருரெட்டியும் **(1968)** தமிழின் ஒரு வட்டார வழக்கே எருகலா என்று கூறுகிறார். எருகலா பற்றிய

விளக்கமான செய்திகளை இவ்வாய்வின் 'தமிழின் வட்டார வழக்குகள்' என்ற பகுதியில் விவரமாகக் காண்போம்.

பி.எஸ். சுப்பிரமணியம்

திராவிட மொழிக் குடும்பத்தில் உள்ள மொழிகளை குழு மற்றும் உட்பிரிவுகளாகப் பிரித்து பி.எஸ். சுப்பிரமணியம் (1971) வகைப்படுத்தியுள்ளார். திராவிட மூல மொழி ஒன்றிலிருந்து தென் திராவிட மூல மொழி, மத்திய திராவிட மூல மொழி, வட திராவிட மூல மொழி எனும் மூன்று பிரிவுகள் கிளைத்திருக்கும் என்பது இவரது கருத்து. தென் திராவிட மூல மொழியிலிருந்து துளு தனித்து உருவாகியது என்றும், மற்றைய தென் திராவிட மொழிகள் தமிழ்-கன்னட மூல மொழியினின்றும் தோன்றிய இரு பிரிவுகளாவன

1. கனனட மொழி.
2. தம்/ழ-தோடா மூல மொழி. தமிழ்-குடகு மூல மொழி மற்றும் கோடா-தோடா மூல மொழி எனப்படும் இரு பிரிவுகள் தமிழ்-தோடா மூல மொழியினின்றும் பிரிந்தன. தோடா-கோடா மூல மொழியினின்றும் உருவாகிய மொழிகள் தாம் இன்றைய வழக்கில் உள்ள கோடா மற்றும் தோடா மொழிகள். தமிழ்-குடகு மூல மொழியினின்றும் தோன்றிய பிரிவின் ஒரு மொழியாக குடகுவையும், மற்றொரு பிரிவில் தோன்றிய மொழிகள் தமிழும்-மலையாளமும் ஆகும் எனத் தென் திராவிட மொழிகளை இவர் வகைப்படுத்தியுள்ளார்.

மத்திய திராவிட மொழியை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்து, அவற்றைத் தெலுங்கு-கூவி மூல மொழி என்றும், கொலாமி-பர்ஜி மூல மொழி என்றும் பெயரிட்டுள்ளார். தெலுங்கு-கூவி மொழியினின்றும் உருவாகிய இரண்டு பிரிவுகளுள் ஒன்று தெலுங்கு மொழியாக வளர்ந்துள்ளது. மற்றொரு பிரிவு கோண்டி-கூவி மூல மொழியாகும். இப்பிரிவினின்றும் கோண்டா-கூவி மூல மொழி என்னும் பிரிவும், இன்று வழக்கில் உள்ள கோண்டி மொழியும் உருவாகின. இந்த உட்பிரிவினின்றும் பெங்கோ-மண்டா மூல மொழி, கூய்-கூவீ மூல மொழி என்னும் இரண்டு உட்பிரிவுகளும், இவற்றுள் முதலாவது உட்பிரிவிலிருந்து பெங்கோ, மண்டா என்னும் மொழிகளும், இரண்டாவது

உட்பிரிவிலிருந்து கூய், கூவி எனப்படும் மொழிகளும் உருவாயின என்பது சுப்ரமணியத்தின் கருத்தாகும்.

வட திராவிட மூல மொழியிலிருந்து பிரிந்த இரு பிரிவுகளுள் ஒன்று பிராகூய் மொழியாக வளர்ந்துள்ளது என்றும், மற்றொரு பிரிவு குருக்-மால்தோ மூல மொழியாக உருவாகி, பிறகு குருக், மால்தோ என்னும் தனித்தனி மொழிகளாக வள்ர்ந்துள்ளன என்றும் சுப்ரமணியம் கூறுகிறார்.

திராவிட மொழிகளின் வகைப்பாட்டில் ஏற்கனவே அறிஞர்களால் சொல்லப்பட்ட கருத்துகளினின்றும் மாறுபட்ட சில புதிய சிந்தனைகளைச் சுப்ரமணியம் தனது வகைப் பாட்டில் சுட்டிக் காட்டியுள்ளார். பெங்கோ, மண்டா போன்றவைகளைத் திராவிட மொழி வகைப்பாட்டில் அறிமுகப்படுத்தியுள்ளார். முந்தைய அறிஞர்களால் கோண்டி, கோண்டா மொழிகளுக்கு இடைப்பட்ட நிலையில் பெங்கோ, மண்டா மொழிகள் வகைப்படுத்தப்பட்டு இருந்தமையை மாற்றி, கோண்டி, கோண்டாவை அண்மை மொழிகளாகக் காட்டியுள்ளார். மேலும் இவரது பகுப்பில் இருந்து தமிழ்-மலையாளத்தோடு குடகு மொழி மிக நெருங்கிய மொழியியல் ஒப்புமைகளை கொண்டுள்ளது என்பதும் புலனாகிறது. தெலுங்கு, கோண்டி, கோண்டா மொழிகளைப் பெரும்பாலும் சொல்லியல் கூறுகளின் அடிப்படையில் இவர் வகைப்படுத்தியுள்ளார். இவர் தம் ஆய்வில் 'தமிழ்-குடகு' உட்பிரிவை ஒரு தற்காலிக வகைப்பாடே என்றும் இவரது இந்த தற்காலிக முடிவுக்கு முன்னோடியாக அமைவது பி.ஹெச். கிருஷ்ணமூர்த்தியின் **(1969)** கருத்துதான் என்றும் கூறுகிறார். எனினும் இதற்காக பி.ஹெச். கிருஷ்ணமூர்த்தி கூறும் காரணத்தை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது வினைச் சொற்களில் காணப்படும் ஆக்க உருபான (derivative suffix) /a/ ஒலியன் மற்ற மொழிகளில் மறைந்து விட்டது என்றும், ஆனால் 'தமிழ்-குடகு' உட்பிரிவில் இன்றும் காணப்படுகிறது எனும் கிருஷ்ணமூர்த்தியின் கருத்து ஏற்புடையதல்ல என்றும் கூறுகிறார். சிற்சில இடப்பெயர் விகுதிகளோடு இணையும் /kal/ என்ற பன்மை உருபன் இந்த இரு மொழிகளிலும் உருவான ஒரு புதுமையாக்கம் (innovation) என்றும், அதனடிப்படையில் 'தமிழ்-குடகு' என்ற உட்பிரிவு

ஏற்றுக் கொள்ளக் கூடியது என்றும் கிருஷ்ணமூர்த்தி கூறுகிறார்.

திராவிட மொழிகளின் பிரிவுகளையும், உட்பிரிவு களையும் பற்றிய கிருஷ்ணமூர்த்தி (*1969*), சுப்ரமணியம் (*1971*) மற்றும் பலரது கருத்துக்களுக்குப் போதிய ஆதாரங்கள் இல்லை என்று ஸவுத்வொர்த் (Southworth : 1976) கூறுகிறார். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால், துளு மொழியைத் தென் திராவிடக் குழுவிலோ, மத்தியத் திராவிடக் குழுவிலோ இணைப்பது ஒரு முதிர்ந்த முடிவாக இருக்காது என்பது இவரது கருத்து. பல பொதுவான மொழியியல் கூறுகளின் புத்தாக்கம் (innovation of shared linguistic features) இம்மொழிகளிடையே காணப்படும் இன்றைய நிலையில் மத்தியத் திராவிட உட்பிரிவு என்று குறிப்பாக பிரிப்பதும், இதிலிருந்து தென் திராவிடக் குழு என சில மொழிகளைப் பொதுவாக வகைப்படுத்திக் காட்டுவதும் இயலாது என்று ஸவுத்வொர்த் கருதுகிறார். மொழியியல் கூறுகளின் புத்தாக்கம் இம்மொழிகளில் பரந்து கிடக்கும் நிலையைப் புறக்கணிப் பதாய்தான் கிருஷ்ணமூர்த்தி மற்றும் சுப்ரமணியத்தின் வகைப்பாடுகள் அமைந்து உள்ளன. மேலும் திராவிட மொழிகளில் உட்கிளைகளாக பல மொழிகள் வளர்ந்த பிறகு தோன்றிய மொழி மாற்றத்தையும், புதியாதாகத் தோன்றிய உட்கிளை மொழிகளுக்கிடையே அமைந்துள்ள வெளி மொழித் தொடர்புகளையும் கூட இவ்விருவரது வகைப் பாடுகள் புறக்கணிக்கின்றன என்றும் ஸவுத்வொர்த் கருதுகிறார்.

திராவிட மொழிகளைப்பற்றிய தனது புதிய வகைப் பாட்டினைக் கிருஷ்ணமூர்த்தி (*1976*) விளக்கியுள்ளார். கன்னடம், தோடா, குடகு, மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளை 'முதலாவது' தென் திராவிடக் குழு என்றும், தெலுங்கு, கோண்டி, கோண்டா, கூய் பெங்கோ, மால்தோ ஆகிய மொழிகளை 'இரண்டாவது' தென் திராவிடக் குழு என்றும் கிருஷ்ணமூர்த்தி இவ்வாய்வில் வகைப்படுத்தி யுள்ளார். முதலாவது தென் திராவிடக் குழுவைச் சேர்ந்த மொழிகளிலும், இரண்டாவது தென் திராவிடக் குழுவைச் சேர்ந்த மொழிகளிலும் காணப்படும் 'ஒலியன்நிலை புத்தாக் கங்களின் (Phonological innovation) அடிப்படையில்

இவ்விரண்டு வகைப்பாடுகள் அமைகின்றன என்பது இவரது கருத்தாகும். அவையாவன:

1. /e*/ /o*/ - Ca என்ற ஒலியன்நிலை அமைப்பில் உள்ள */e/ உடன் */i/ C/யும் மயங்குகின்றன.
2. */e/ என்ற ஒலியன் தனது முழு உச்சரிப்பினின்றும் குறைந்து [s] போன்ற ஒலியாக உச்சரிக்கப்படுவதும், அதுவே சொல்லின் முதல் நிலையில் [h] என்ற ஒலியாக (மாறி முழுமையான இழப்புக்கு ஆளானதும் ஆகும். இத்தகைய ஒலியன் மற்றும் ஒலி மாற்றங்கள் முதலாவது தென் திராவிடக் குழுவைச் சேர்ந்த மொழிகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும்) இரண்டாவது தென் திராவிடக் குழு மொழிகளில் வரலாற்றுக்கு உட்பட்ட காலத்திலும் தோன்றின. (இரண்டாவது தென் திராவிடக் குழுவைச் சேர்ந்த மொழிகளில் கிடைக்கப் பெறும் வரலாற்றுச் சான்றுகள் இக்கருத்தை உறுதிப் படுத்துகின்றன). திராவிட மூல மொழி வழக்கில் உள்ளதாகக் கருதப்படும் ஒருமை தன்மை இடப்பெயர்ச் சொல் பிற்கால திராவிட மொழிகளிலும் காணப்படு கிறது. இருப்பினும், திராவிட மூல மொழியில் உள்ள தன்மை பன்மை உளப்பாடு (first person inclusive plural) பெயர் சொல்லின் அடிப்படையில் ஒரு புதிய ஒருமை தன்மை இடப்பெயர்ச்சொல் ஒப்புமையாக்க மாற்ற முறையில் (anologic change) பிறகு உருவாகியதை மூன்றாவது புத்தாக்கமாக கிருஷ்ணமூர்த்தி கருதுகிறார்.

திரண்ட கருத்து

திராவிட ஒப்புமை மொழியியலில் திராவிட மொழி களின் வகைப்பாடுகள் பற்றி இன்றைய நிலையில் வளர்ந்துள்ள சிந்தனைகளின் திரண்ட கருத்தாக கீழ் கண்டவற்றைக் கூறலாம்.

திராவிட மொழிகள் தனிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்னும் கருத்தை முதன் முதல் கூறியவர் கால்டுவெல் ஆகும். இவர் காலத்தில் பல திராவிட மொழிகள் வெளி உலகத்துக்குத் தெரியப்படாமல் இருந்ததனாலும், அவை பற்றிய இலக்கண விளக்கங்கள் உருவாகவில்லையாதலாலும், கால்டுவெல் பல திராவிட மொழிகள் பற்றி தன் ஆய்வில் குறிப்பிடவில்லை.

கால்டுவெல்லின் ஆய்வின் அடிப்படையில்தான் கிரியெர்சன் திராவிட மொழிகளை வகைப்படுத்தினார். இவர்தம் வகைப்பாடு சொல்லியல் அடிப்படையில் அமைந் துள்ளது. திராவிட மொழிகளைத் தென் திராவிடக் குழு, மத்திய திராவிடக்குழு என இருபிரிவாக வகைப்படுத்தியுள்ளார். பிராஹூய் மொழியைத் தனிக்குழுவாக காட்டியுள்ளார்.

கால்டுவெல்-கிரியெர்சன் வகைப்பாட்டிற்குப் பிறகு, ஏறத்தாழ 1950 வரை திராவிட ஒப்புமை மொழியியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்களோ, புதிய விளக்கங்களோ உருவாகவில்லை. பர்ரோ, பட்டாச்சார்யா (1953) இருவரும் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் விளைவாக பர்ஜி, ஒல்லாரி, கதபா, கொலாமி, நாய்கி, கோண்டி கோண்டா மற்றும் கூய்-கூவீ மொழிகளுக்கிடையே உள்ள ஒற்றுமை களும், வகைப்பாட்டு அணுமுறையில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களும் தெளிவாயின.

கொலாமி-நாய்கி, பர்ஜி மற்றும் ஒலலாரி ஆகிய மொழிகளுக்கிடையே உள்ள மொழியியுல் கூறுகளின் அடிப்படையில் இம்மொழிகளை ஒர் உட்பிரிவின் கீழ் எமனோ (1955) அமைத்தார். மேலும் குருக்-மால்தோ மொழிகளோடு பிராகூய் மொழியையும் இணைத்து ஒரு தனி உட்பிரிவாக்க வேண்டும் என்று எமனோ (1962) விளக்கியுள்ளார்.

திராவிட மொழிகளின் வகைப்பாடுகள் பற்றிய பல கருத்துக்களை ஒன்றிணைத்து, சில புதிய வகைப்பாடுகளை ஆன்ட்ரனோவ் (1964) அறிமுகப்படுத்தினார். தமிழ்-மலையாளம், கோடா-தோடா, கன்னடம்-குடகு, துளு, தெலுங்கு ஆகிய மொழிகளைத் தென் திராவிட குழு என்றும், கொலாமி-நாய்கி, பர்ஜி, கதபா, கோண்டி-கோண்டா, கூய்-கூவி ஆகிய மொழிகளை மத்திய திராவிடக் குழு என்றும், குருக்-மால்தோ, பிராகூய் மொழிகளை வட திராவிடக் குழு என்றும் இவர் வகைப்படுத்தினார். மேலும் தன் முந்தைய வகைப்பாடுகளினின்றும் வேறுபட்டு சில புதிய மாற்றங்களை ஆன்ட்ர்னோவ் (1970) விளக்கியுள்ளார்

சுவலபெல் (1970) தன்னுடைய வகைப்பாட்டில் பல புதிய திராவிட மொழிகளை (அதாவது கய்க்காடி, காடர், எருகலா போன்றவை) இணைத்துள்ளார். இவரது ஆய்வுக்கு

முன்னர் தெலுங்கு, துளு மொழிகளைப் பற்றிய வகைப்பாடு பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும், இவ்விரு மொழிகளையும் தென், மத்தியக் குழுக்களில் இணைக்காமல், தனிப்பிரிவுகளாக இவர் வகைப்படுத்தி இருப்பது குறிப்பிடத் தக்கது.

பி. எஸ. சுப்ரமணியம் (1971) திராவிட மொழிகள் பற்றிய வகைப்பாட்டில் சில புதிய சிந்தனைகளைத் தன் வகைப்பாட்டு முறையின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளார். கோண்டி, கோண்டா ஆகிய இரண்டையும் அண்மை மொழிகளாக வரையறுததிருப்பதும், தமிழ்-மலையாளத்தோடு குடகு மொழி பல மொழியியல் கூறுகளை நெருக்கமாக பகிர்ந்து கொள்வதைச் சுட்டிக்காட்டுவதும், 'தமிழ்-குடகு' வகைப்பாடு ஒரு தற்காலிகமான வகைப்பாடே என்பதும் இவரது முக்கியமான கருத்துக்களாக கருதத்தக்கனவாகும்.

கிருஷ்ணமூர்த்தி, சுப்ரமணியம் ஆகியோரின் கருத்துக் களை ஸவுத்வொர்த் (1976) ஏற்புடையதல்ல என மறுக்கிறார். துளு மொழியைத் தென் திராவிடக் குழுவிலோ, மத்திய திராவிடக் குழுவிலோ இணைப்பது தவறு என ஸவுத்வொர்த் கருதுகிறார். திராவிட மொழிகளில் உட்கிளைகளாக பல மொழிகள் வளர்ந்த பிறகு தோன்றிய மொழி மாற்றத்தையும், புதிதாகத் தோன்றிய உட்கிளை மொழிகளுக்கிடையே அமைந்துள்ள வெளிமொழித் தொடர்புகளையும் கிருஷ்ணமூர்த்தி மற்றும் சுப்ரமணியத்தின் ஆய்வுகள் விளக்க வில்லை என்பது இவரது கருத்தாகும்.

கிருஷ்ணமூர்த்தி (1976) திராவிட மொழிகள் பற்றிய தனது முந்தைய வகைப்பாடுகளினின்றும் மாறுபட்ட சில புதிய கருத்துக்களை இவ்வாய்வில் விளக்கியுள்ளார். தென் திராவிட மொழிகளை இரு பிரிவாக சுட்டிக்காட்டி, 'முதலாவது' தென் திராவிட மொழிகள் என்றும், 'இரண்டாவது' தென் திராவிட மொழிகள் என்றும் வகைப்படுத்துகிறார். இவ்விரு பிரிவைச் சேர்ந்த மொழிகளிடையே காணப்படும் ஒலியன் நிலை புத்தாக்கங்கள் இம் முடிவுக்குச் சான்றுகளாகின்றன என்பது இவர்தம் கருத்தாகும்.

4. தமிழின் கிளை மொழிகள்

திராவிட மொழிக் குடும்பத்தில் உள்ள மொழிகளிலேயே மிகப் பழமையானதும், திராவிட மொழிக் குடும்பத்தின் பண்டைய மொழிக் கூறுகளைப் பிரதிபலிக்கும் மொழியாகவும் விளங்கி வரும் தமிழ், வரலாற்றுக்கும் எட்டாத காலந்தொட்டு தென்னிந்தியாவிலும், இலங்கையிலும வட பகுதிகளிலும் பேசப்பட்டு வருகின்றது. அசோகன் காலத்தில் (200 கி.மு) பிராமி எழுத்துக்களால் உருவாக்கப்பட்ட கல்வெட்டுக்களில் தமிழைப் பற்றிய முதல் செய்திகளைக் காண்கிறோம். அந்தக் கல்வெட்டுகளை முதன்மையாகக் கொண்டு இன்று வரை வளர்ந்து வரும் தமிழ் இலக்கியம் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாய் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டும், படிப்போர் மனப்பாடம் செய்து கற்பிப்பதின் மூலம் பாதுகாக்கப்பட்டும் வந்துள்ளது. வட மொழி இலக்கணக் கொள்கைகளினின்றும் மாறுபட்டு வளர்ந்த தமிழ் இலக்கணக் கொள்கைகளும் இந்த நீண்ட, தொன்மையான, வளம் சார்ந்த இலக்கியக் கருவூலத்தில் உள்ளன. இந்தத் தமிழ் இலக்கணப் பாரம்பரியத்திற்கு ஆதாரமான 'தொல்காப்பியம்', 'நன்னூல்' ஆகிய இரண்டு இலக்கண நூல்களும் தமிழ் இலக்கணக் கொள்கை ஒரு தனி மரபாகவே வளர்க்கப்பட்டு வந்தமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன. தமிழ் இலக்கியங்களின் அடிப்படையில் தமிழ் மொழியின் வரலாற்றை

1. பண்டைத் தமிழ்,
2. இடைக்காலத் தமிழ்,
3. தற்காலத்தமிழ் என்று மூன்று பெரும் பிரிவுகளாக அறிஞர்கள் பிரிக்கிறார்கள்.

ஏறத்தாழ 800 கி.பி-1000 கி.பி. ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலக் கட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு அப்பால் உள்ள பகுதிகளில் பேசப்பட்டு வந்த தமிழின் மேற்கத்திய கிளை மொழிகள் பிரிந்து, மலையாள மொழியாய் உருவாயின.

எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே உள்ள உடன்பாட்டை மலையாளம் இழந்தது. வடமொழிச் சொற்கள் பெருமளவில் மலையாள மொழியில் நுழைந்தன.

இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேற்பட்ட தமிழ் மொழியின் வரலாற்றில், தமிழின் கிளை மொழிகள்

1. வட்டாரக் கிளை மொழிகள்,
2. சாதிக் கிளை மொழிகள் மற்றும்
3. தரமான பேச்சுத் தமிழ் என மூன்று பெரும் பிரிவுகளாக வளர்ந்துள்ளன. இன்றைய நிலையில் தமிழில் ஆறு வட்டாரக் கிளை மொழிகள் உள்ளன என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். (Steever: 1987). அவையாவன:
    1. ஈழத்தமிழ்.
    2. செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் பேசப்படும் வட பகுதி தமிழ்.
    3. கோயமபுத்தூர், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் பேசப்படும் மேற்குப்பகுதி தமிழ்.
    4. திருச்சி, தஞ்சாவூர், மதுரை மாவட்டங்களில் பேசப் படும் மத்திய பகுதி தமிழ்.
    5. புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பேசப்படும் கிழக்குப் பகுதி தமிழ்.
    6. கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் பேசப்படும் தென்பகுதி தமிழ். மேற்குறிப்பிட்ட ஆறு வட்டாரக் கிளைமொழிகளிலும் ஈழத் தமிழ்தான் மொழிக் கலப்புக்கு பெருமளவு இடந்தராமலும், பண்டை மொழிக் கூறுகளைக் காத்தும் வருகிறது எனலாம். உதாரணமாக, 'இவன்', 'அவள்', 'உவன்', 'எவள்' எனப்படும் நான்கு வகை பிரிவுகளும் ஈழத் தமிழில் இன்றும் உள்ளன. தமிழ் நாட்டின் கிளை மொழிகளில் 'தோசை' என்ற சொல்லில் உள்ள முதல் மெய் ஒலியன் ஒலிப்புடை அடைப்பொலி யாக உச்சரிக்கப்படும்போது, ஈழத் தமிழில் மட்டும் ஒலிப்பிலா அடைப்பொலியாகவே உச்சரிக்கப் படுகிறது.

தமிழின் சமுதாயக் கிளை மொழிகள்

1. பிராமணர் தமிழ்

2. பிராமணர் அல்லாதோர் தமிழ் என்ற பெரும் பிரிவில் தொடங்கி பல உட்பிரிவுகளாக பிரிந்து உள்ளன.

கீழ்வரும் பகுதிகளில் தமிழின் கிளை மொழிகள் பற்றிக் காண்போம்.

4.1. தமிழின் வட்டாரக் கிளை மொழிகள்

கிரியெர்ஸன் தன்னுடைய 'இந்திய மொழிகள் ஆய்வு' (Linguistic Survey of India : 1903-28) என்ற ஆய்வு வெளியீட்டில், தமிழின் கிளை மொழிகளாக பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இன்றைய மொழியியல் அறிஞர்களால் தனி மொழிகளாகக் கருதப்படும் சில மொழிகளையும் கூட கிரியெர்ஸன் தமிழின் கிளை மொழிகளாகவே குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கது. கிரியெர்ஸன் வகைப்படுத்தியுள்ள கிளை மொழிகளாவன

1. எருகலா அல்லது குறவர் மொழி
2. இருளர் மொழி
3. கசவர் மொழி
4. கைக்காடி மற்றும்
5. பர்கண்டி மொழி ஆகியன.

மீனாட்சி சுந்தரம் (1965) தற்கால பேச்சு வழக்கில் உள்ள தமிழின் கிளை மொழிகளாக பத்து கிளை மொழி களையும், ஏனைய பேச்சுத் தமிழ் வழக்குகளையும் குறிப்பிட்டுள்ளார். ஈழத்தில் பேசப்படும் பல தமிழின் கிளை மொழிகள், மலேசியா தமிழ், பர்மிய தமிழ், தென் ஆப்பிரிக்கத் தமிழ், பெங்களூரில் பேசப்படும் 'திகளு' எனப்படும் தமிழின் கிளை மொழி, பெங்களூரில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரால் பேசப்படும் தமிழ், மைசூரில் பேசப்படும் 'சங்கேதி' தமிழ், 'ஹெப்பர்' எனப்படும் பிராமண வகுப்பினரால் பேசப்படும் தமிழ், ஆந்திராவில் குடியேறிய பிராமண வகுப்பினரால் செகந்திராபாத் நகரில் பேசப்படும் தமிழ் மற்றும் தமிழ் நாட்டில் வழக்கில் உள்ள பல்வேறு கிளைமொழிகள் ஆகியவற்றை மீனாட்சி சுந்தரம் குறிப்பிடுகிறார்.

சுவலபெல், விஸ்வநாதன் ஆகியோர் இருவரின் ஆய்வு (Zvelebil & Viswanathan : 1959) மற்றும் சுவலபெல்லின் (*1959, 19960, 1963, 1964, 1966*) ஆய்வுகளும் தமிழின் கிளை மொழிகளை ஒன்பது பிரிவுகளாக வகைப்படுத்திக் காட்டு கின்றன. இலக்கியச் செந்தமிழ் (Literary standard Tamil), நிலைபேறான பேச்சு வழக்கு, (Colloquial standard), பிராமணர் பேச்சு வழக்கு, வட பகுதி கிளை மொழி, மேற்குப் பகுதி கிளை மொழி, கிழக்குப் பகுதி கிளை மொழி, தெற்குப் பகுதி கிளை மொழி, ஈழத்தில் பேசப்படும் பல கிளை மொழிகள் மற்றும் கொச்சைத் தமிழ் என்பன அப்பிரிவுகளாகும். ஒலியனியல், மற்றும் சொல் வேறுபாடு ஆகிய கூறுகளின் அடிப்படையில் சுவலபெல் தமிழின் கிளை மொழிகளை வகைப்படுத்தி யுள்ளார்.

ஆன்ட்ரனோவ் (1962) தன் ஆய்வில் தமிழின் கிளை மொழிகளை வகைப்படுத்திய முறையும் சுவலபெல்லின் வகைப்பாட்டோடு பொருந்துகின்றது. இன்றைய தமிழில் வழக்கில் இருக்கும் சமுதாய கிளை மொழிகளோடும், இலக்கியச் செந்தமிழோடும் ஒப்பிட்டு, இவை மூன்றுக்கும் இடையே தோன்றியுள்ள மொழியியல் கூறுகளையும் வரை யறுத்துக் கூறுகிறார். பிராமணர் கிளை மொழி, பிராமணரல்லாதோர் கிளை மொழி, மற்றும் தாழ்த்தப் பட்டோர் கிளை மொழி என சமுதாய கிளை மொழிகளை மூன்று பெரும் பிரிவுகளாகவும் ஆன்ட்ரனோவ் வகைப் படுத்துகிறார். மேலும் ஒவ்வொரு கிளை மொழியிலும் தோன்றியுள்ள குறிப்பிடத்தக்க மொழியியல் கூறுகளையும் ஆன்ட்ரனோவ் சுட்டிக்காட்டுகிறார். வருடொலி/வடபகுதி கிளை மொழியில் /Y/ ஆக ஒலிக்கப்படுவதையும், தென் பகுதி கிளை மொழியில் நிகழ்காலங் காட்டும் உருபன்/-t/ இருப்பதையும், வருடொலி /r/ வருடொலி /l/ ஆக மேற்குப் பகுதி கிளைமொழியில் ஒலிக்கப்படுவதையும் கிளை மொழிகளில் காணக்கிடக்கும் சில முக்கியமான மொழியியல் கூறுகளாகக் குறிப்பிட்டுச் சொல்லலாம். பிராமணரின் சமுதாய கிளை மொழிகளோடு இடைநிலை மற்றும் கீழ்நிலை சமுதாய கிளை மொழிகளை ஒப்பிட்டுக் காட்டி, பிராமணரால் தமிழ்நாடு முழுவதும் பேசப்படும் சமுதாய கிளை மொழிகளுக்கிடையே அடிப்படை மொழியியல் கூறுகளின் ஒற்றுமை பரவிக்கிடப்பதையும் இவர்

விளக்குகிறார். ஆனால் பிராமணரல்லாதோர் பேசும் சமுதாய கிளை மொழிகளுக்கிடையே இவ்வாறான மொழியியல் கூறுகளின் ஒற்றுமையைக் காண இயலவில்லை.

சீனிவாச வர்மா (1977) தமிழின் கிளைமொழிகளை வட்டாரக் கிளை மொழிகள், சாதிக் கிளைமொழிகள் மற்றும் தொழில் கிளை மொழிகள் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பெரும் பிரிவிலும் அடங்கியுள்ள உட்பிரிவுகளின் குறிப்பிடத்தக்க மொழியியல் கூறுகளை விளக்கியுள்ளார். (சாதிக் கிளை மொழிகள் மற்றும் தொழில் கிளை மொழிகள் பற்றிய இவரது ஆய்வு விளக்கங்களை இவ்வாய்வின் வேறு பகுதிகளில் காணலாம். வட்டாரக் கிளை மொழிகள் பற்றிய இவரது கருத்துக்களை மட்டும் கீழ்க்கண்ட பகுதிகளில் காண்போம்.)

தமிழின் வட்டாரக் கிளைமொழிகளை ஐந்து பெரும் பிரிவுகளாக சீனிவாச வர்மா வகைப்படுத்தி, ஒவ்வொரு பெரும் பிரிவும் பல உட்கிளைகளைக் கொண்டுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் நாட்டில் வழக்கில் உள்ள வட்டாரக் கிளை மொழி களையும், அவற்றில் காணப்படும் மொழியியல் கூறுகளின் சிறப்பியல்புகளையும் கீழ்க் கண்ட பகுதிகளில் காணலாம்.

தென்கிளை மொழி

தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களான மதுரை திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங் களில் வழங்கி வரும் பேச்சு வழக்கைத் தென் கிளைமொழி எனக் கூறலாம். இந்தக் கிளை மொழி ஒரு பெரிய நிலப் பரப்பில் வழக்கில் உள்ள கிளை மொழியாகும். /l/ ஒற்றுமை /l/ இழப்பு, படர்க்கை பன்மை வடிவம் மற்றும் வேற்றுமை உருபுகள் போன்ற மிக முக்கியமான மொழியியல் கூறுகள், இந்தக் கிளை மொழியை மற்ற தமிழின் கிளை மொழி களினின்றும் வேறு படுத்திக் காட்டுகின்றன. தென் கிளை மொழி பேசப்படும் பகுதியிலும் சில உட்கிளைமொழிகள் வழக்கில் உள்ளன. அவற்றுள் கன்னியாகுமரி மாவட்டத்து உட்கிளை மொழி மற்றும் விளவங்கோடு உட்கிளை மொழி ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவை.

ஏசுதாசன் (1976) தன் ஆய்வுக் கட்டுரையில் கன்னியா குமரி பேச்சு வழக்கில் காணப்படும் சிறப்பியல்புகளை எடுத்துக்காட்டி, இந்த பேச்சுத் தமிழை ஒரு வட்டாரக் கிளை மொழியாகக் கொள்ளலாம் எனக் கூறுகிறார்.

இந்தக் கிளை மொழியை எழுத்து மொழியுடன் ஒப்பிட்டு, மொழியியல் கூறுகளில் காணப்படும் வேறுபாடுகளை ஏசுதாசன் தன் கட்டுரையில் விளக்கியுள்ளார்.

ஒலிபனிபல் நிலை

/n̲/ கன்னியாகுமரி கிளை மொழியில் /r/, /n̲/, /ḷ/ /n

ஆகிய மெய்யொலியன்கள் காணப்படவில்லை. [ṅ] மற்றும் [n̲] ஆகிய இரண்டு ஒலிகளும் ஒலிநிலையில் வழக்கில் உள்ளன. ஆனால் அவை மாற்றொலியன்களாக மட்டுமே மொழி அமைப்பில் உள்ளன. /r̲/ ஒலியன் கன்னியாகுமரி கிளை மொழியில் மட்டுமே நிலைத்துள்ளது. தமிழின் மற்ற எல்லாக் கிளை மொழிகளிலும் இந்த ஒலியன் வழக்கிழந்து விட்டது.

இலக்கண நிலை

பன்மை விகுதி, ஆண்பால் விகுதி, பெயர்ச் சொல்லுடன் வரும் வடிவங்கள் ஆகியன இக்கிளை மொழியில் புது வடிவங்களைத் தந்துள்ளது.

(உ.ம்) ஒருமை பன்மை

நாடார் நாடாமககார்/நாடாமார்

மூன்றாம் வேற்றுமை உருபு பல வடிவங்களை இக்கிளை மொழியில் கொண்டுள்ளது.

(உ.ம்) கத்தியாலே

கத்தியிட்டு

கத்தியெவச்சி

வினை முற்றுக்களில் பன்மை காட்டும் விகுதிகளாக 'இனம்/உனம்' ஆகியன வழக்கில் உள்ளன.

(உ.ம்) வந்துனம 'வந்தோம்'

போவினம் 'போவீர்கள்'

பன்மை விகுதிகளாக கீழ்க்கண்ட விகுதிகள் செயல்படு கின்றன.

ஆண்பால் பன்மை - ஆனுவள்

(உம்) அவனுவள் போவானுவள்

பெண்பால் பன்மை - ஆளுவள்

(உ.ம்) அவளுவள் போவாளுவள்

அருஞ்சொற்கள்

கன்னியாகுமரி பேச்சு வழக்கில் காணப்படும் அருஞ் சொற்களை ஏசுதாசன் (1976) தொகுத்துக் கொடுத்துள்ளார்.

அணடே	'அடுப்பு'
அரி	'அரிசி'
ஆத்தா	'அக்கா'
இப்பம்	'இப்பொழுது'
ஈச்சி	'ஈ'
எல்லு	'எலும்பு'
கண்ணம்மெ	'பாட்டி'
கண்ணப்பச்சி	'பாட்டி'
கொச்சி	'சிறு தேங்காய்'
சக்கெ	'பலாப்பழம்'
சுண்டு	'உதடு'
செரட்டே	'தேங்காய் ஓடு'
தொங்கச்சி	'உன் தங்கை'
தொம்பி	'உன் தம்பி'

தென் கிளை மொழியின் மற்றொரு உட்கிளை மொழி யாக கருதப்படுவது திருநெல்வேலி, மதுரை ஆகிய பகுதிகளில் வழக்கில் உள்ள பேச்சு மொழியாகும். இந்த உட்கிளை மொழிப் பாகுபாட்டினை உணர்த்தும் முக்கிய ஒலியன் பாகு பாட்டுக் கோடாக (isogloss) கருதப்படுவது நிகழ்காலங்காட்டும் /-t-/ உருபாகும்.

(உ.ம்) சொல்லுதான்	'சொல்லுகிறான்'
புடுங்குதே	'பிடுங்குகிறாய்'

இலக்கண நிலை

இக்கிளை மொழியில் நீ, நீரு, நீங்கள் என மூன்று முன்னிலைப் பெயர்ச் சொற்களும், இவன், இவரு, இவுகள், இது, இதுகள் என்ற படர்க்கைப் பெயர்ச் சொற்களும் வழக்கில் உள்ளன.

அருஞ்சொற்கள்

இக்கிளை மொழியில் வழக்கில் உள்ள சில அருஞ் சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அத்தம்	'முடிவு'
அம்மானை	'தாய்மாமன்'
இண்ணெ	'இன்று'
ஈராங்கம்	'வெங்காயம்'
ஊளி	'தலை'
ஓராட்டு	'தாலாட்டு'
களவாணி	'திருடன்'
கூதலு	'குளிர்'
சவட்டு	'மிதி'
தவக்கா	'தவளை'

மத்தியக் கிளைமொழி

புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில் வழக்கில் உள்ள பேச்சுத் தமிழை மத்தியக் கிளைமொழி எனலாம். இந்தக் கிளை மொழிப் பாகுபாட்டினை உணர்த்தும் முக்கிய ஒலியன் பாகுபாட்டுக் கோடாக கருதப்படுவது /ḻ/ ஒலியனாகும். இதனாலேயே இக்கிளை மொழியை 'ழகரக் கிளை மொழி' என மொழியியலாளர் அழைக்கின்றனர். மேலும் தமிழின் எல்லாக் கிளை மொழிகளுள்ளும் /l/, /ḷ/ மற்றும் /ḻ/ ஆகிய மூன்று

ஒலியன்களும் வழக்கில் உள்ள கிளை மொழி இது ஒன்றேயாகும். இக்கிளை மொழியில் உள்ள மொழியியல் சிறப்புக் கூறுகளை கீழ்க்கண்டவாறு கூறலாம்.

ஒலிபனியல் நிலை

/k/ ஒலியன் /v/ ஒலியனாக இக்கிளை மொழியில் 'ஒலியன் மாற்றம்' அமைந்துள்ளது.

/P/ ஒலியன் /v/ ஒலியனாக 'ஒலியன் மாற்றம்' அடைந்துள்ளது.

இலக்கண நிலை

மத்தியக் கிளைமொழிப் பகுதியில் ஒரு சில சமூகத் தினரால் பேசப்படும் பேச்சு வழக்கில், முற்று வினைகளில் பால் காட்டும் விகுதிகள் மாற்றமும், இட மாற்றமும் அடைந்து வழங்கி வருகின்றது.

(உ.ம்) அண்ணன் வந்திச்சி / வந்தது

அக்கா வந்திச்சி / வந்தது.

மூவிடப் பெயர்களில் வரும் பன்மை விகுதிகள் மத்தியக் கிளை மொழியில் மாறுபட்டுள்ளது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும். இந்த அமைப்பு முறை, இலக்கியத் தமிழில் காணப்படும் அமைப்பினின்றும் வேறுபட்டுள்ளது.

இலக்கியத் தமிழில் காணப்படும் 'அவன்' 'அவள்' 'அது' ஆகிய படர்க்கை ஒருமைப் பெயர்கள், இக்கிளை மொழியில் 'அவெ(ன்)' 'அவள்' 'அது' என வழங்கப்படுகின்றன. இலக்கிய தமிழில் படர்க்கை உயர்திணைப் பன்மையைச் சுட்டும் 'அவர்' என்ற பெயர்ச்சொல்லுக்குப் பதிலாக மத்தியக் கிளை மொழியில் 'அவனுவோ' என்கிற ஆண்பால் பெயர்ச் சொல்லும், 'அவளுவோ' என்கிற பெண்பால் பெயர்ச் சொல்லும் வழக்கில் உள்ளன.

நிகழ்கால உருபாக -க்கு-, -க்ர்-, -ர்- ஆகியன வழக்கில் உள்ளன. உயர்திணையில் -க்ர்-, -ர்-, ஆகிய இரண்டு உருபு களும், அஃறிணையில் -க்கு-, -வு- ஆகிய இரண்டு உருபுகளும் வழக்கில் உள்ளன.

(உ.ம்) பாக்ரான் 'பார்க்கிறான்'

போரான் 'போகிறான்'

பாக்குது 'பார்க்கிறது'

போவுது 'போகிறது'

அருஞ்சொற்கள்

இக்கிளை மொழியில் வழக்கில் உள்ள சில அருஞ் சொற்கள் கீழே தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அம்மாயி	'அம்மாவின் அம்மா'
எம்பளது	'எண்பது'
கொட்டாஞ்சி	'தேங்காய் ஓடு'
கெடேறி	'பசுங்கன்று'
குந்து	'உட்கார்'
கொடக்கல்லு	'ஆட்டுக்கல்'
கவுளி	'நூறு வெற்றிலை உள்ள ஒரு கட்டு'
நொவத்தடி	'நுகத்தடி'

மத்தியக் கிளை மொழி-புதுக்கோட்டை உட்கிளை மொழி

புதுக்கோட்டை மாவட்டம் பலகாலம் முடி ஆட்சியின் கீழ் 'சமஸ்தானம்' என்ற அமைப்பில் இருந்ததால் அங்குள்ள மக்களின் பேச்சு வழக்கு மற்ற வட்டார வழக்குகளினின்றும் மாறுபட்டுள்ளது. மத்தியக் கிளை மொழியின் ஒரு உட்கிளை மொழியாகக் கருதப்படும் இந்த பேச்சு வழக்கில் தனி ஒலியன் மற்றும் சொல் பாகுபாட்டுக் கோடுகள் உள்ளன.

ஒலியன் நிலை

1. சொல்லில் இரண்டு மெய்களுக்கு இடையில் வரும் ககர மெய் யகரமாகத் திரிகிறது.

(உ.ம்) மகன் > மயென்

2. சொல்லில் இரண்டு மெய்களுக்கு இடையில் வரும் ககர மெய் வகரமாகத் திரிகிறது.

   (உ.ம்) தோகை > தோவெ

3. சொல்லின் முதலில் வரும் வகரமெய் இந்த உட்கிளை மொழியில் மறைந்து விடுகிறது.

   (உ.ம்) வியாழன் > சாளன்

4. சொல்லின் முதலில் வரும் இகர உயிர் மறைந்து விடுகிறது.

   (உ.ம்) இலக்கு > லக்கு

5. சொல்லின் முதலில் வரும நகர மெய் மறைந்து விடுகிறது.

   நிலாவெளிச்சம் -> லாவெளிச்சம்

இலக்கண நிலை

1. இந்த உட்கிளை மொழியில் வேற்றுமை உருபுகள் வடிவம் திரிந்து வழங்குகின்றன. கீழ்க்கண்டவற்றை உதாரணமாகக் கூறலாம்.

   இரண்டாம் வேற்றுமை

   (உ.ம்) உன்னை > உன்னயெ

   ஐந்தாம் வேற்றுமை

   (உ.ம்) என்னோடு > என்னூடே

2. /-க/ எனும் பன்மை விகுதி காலங்காட்டும் வினை முற்றுக் களிலும் வருகிறது.

   (உ.ம்) இவர்கள் > இவுக

   சொன்னார்கள் > சொன்னாக

அருஞ்சொற்கள்

இந்த உட்கிளை மொழியில் உள்ள அருஞ்சொற்கள் கீழே தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அப்பச்சி	'அம்மாவின் அப்பா'
அப்புத்தா	'அப்பாவின் அம்மா'

அம்மாயி	'அம்மாவின் அம்மா'
அய்யா	'அப்பாவின் அப்பா'
ஆத்தா	'அக்கா'
மயென்	'மகன்'
நன்னியம்மா	'பாட்டி'
ஈஞ்சி	'ஈச்ச மரம்'
கண்மா	'ஏரி'
முக்கொம்	'மூன்று பாதைகள் கூடும் இடம்'
லக்கு	'திசை'
பாவு	'நடு'
கிட்டம்	'அருகில்'
இங்கனே	'இப்படி'
அங்கனே	'அப்படி'
எங்கனே	'எப்படி'
எனப்பத்து	'உறவு'
இங்கிட்டு	'இந்தப்பக்கம்'
எங்கிட்டு	'எந்தப்பக்கம்'
அருந்தர	'கணவனை இழந்தவள்'

மேற்குக் கிளை மொழி

சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் வழக்கில் உள்ள பேச்சுத் தமிழை மேற்குக் கிளை மொழி எனலாம். தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகள் இக்கிளை மொழி வழங்கும் பகுதியில் பேசப்படுவதால், அம்மொழிகளின் மொழியியல் கூறுகளின் தாக்கம் இக்கிளை மொழியில் காணப்படுகிறது. மேலும் இந்தக் கிளை மொழி வழங்கும் ஒரு மாவட்டமான நீலகிரி மாவட்டத்தில் தோடா, கோத்தா, இருளா, கசபா, பணியா, காட்டு நாயக்கா, பெட்டா குறும்பா, பால் குறும்பா மற்றும் முள்ளு குறும்பா ஆகிய பழங்குடி மொழிகளும்,

கன்னடத்தில் ஒரு கிளை மொழியான படகாவும் பேசப்படு கின்றன.

எழுத்துத் தமிழில் உள்ள லகரம், ணகரம், ழகரம் ஆகிய மூன்று ஒலியன்களும் இக்கிளை மொழியில் திரிந்து, ஒலியன் நிலையில் லகரமாகவே ஒலிக்கப்படுகிறது. எனவே, இக்கிளை மொழியை லகரக் கிளை மொழி என சீனிவாச வர்மா அழைக்கிறார்.

ஒலியன் நிலை

இக்கிளை மொழியில் ஒலியன் நிலையில் கீழ்க்கண்ட மாற்றங்கள் காணப்படுகின்றன.

1. னகரம் ணகரமாதல்

(உ.ம்) எணக்கு 'எனக்கு'

மூணு 'மூன்று'

நாணு 'நான்'

2. ணகரம் னகரமாதல்

(உ.ம்) சானாத்தி 'சாணாத்தி'

பென்னு 'பெண்'

வென்னெ 'வெண்ணெய்'

3. ழகரம் ளகரமாதல்

(உ.ம்) களுதே 'கழுதை'

வளி 'வழி'

வாளெ 'வாழை'

4. ழகரம் ரகரமாதல் (இம்மாற்றம் ஒரு சொல்லில் மட்டும்தான் காணப்படுகிறது.)

(உ.ம்) பொருவடெ 'புழக்கடை'

5. லகரம் ளகரமாதல்

(உ.ம்) காளெ 'காலை'

கவளெ 'கவலை'

கூளி 'கூலி'

6. ஜகாரம் ஸகரமாதல்

(உ.ம்) ராஸா 'ராஜா'

ஸோலி 'ஜோலி'

ஸோடி 'ஜோடி'

7. இகரம் உகரமாதல்

(உ.ம்) புள்ளெ 'பிள்ளை'

உடு 'விடு'

8. எகரம் ஒகரமாதல்

(உ.ம்) பொட்டி 'பெட்டி

9. உகரம் இகரமாதல்

(உ.ம்) பிரியும் 'புரியும்'

மிண்ணாடி 'முன்னாடி'

பில்லு 'புல்'

10. ஒகரம் எகரமாதல

(உ.ம்) பெளுது 'பொழுது'

செல்லு 'சொல்'

இலக்கண நிலை

இக்கிளை மொழியில் வழக்கில் உள்ள குறிப்பிடத்தக்க இலக்கணக் கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. அஃறிணையைக் குறிக்க முற்று வினையுடன் வரும் விகுதி /-ச்சி/ ஆகும். ஆனால், 'அண்ணாச்சி' போன்று பெயர்ச் சொல்லுடனும் சேரும் இந்த விகுதி, வந்திச்சி, செஞ்சிச்சி போன்ற வினைச் சொற்களுடன் சேரும் போது, வினையைச் செய்தவரின் பால், திணை ஆகிய இலக்கணக் கூறுகளைப் பிரித்தறிவது கடினமாக உள்ளது.

2. 'வேண்டும்' என்ற சொல்லின் மாறுபட்ட வடிவமாக /-ஒணும்/ வழங்கப்படுகிறது.

   (உ.ம்) வரோணும் 'வர வேண்டும்'

   பாக்கோணும் 'பார்க்க வேண்டும்'

3. 'பொழுது' என்ற சொல் ஒரு செயலுடன் உடன் நிகழும் நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போது பயன்படுத்தப்படுகிறது.

   (உ.ம்) நான் வந்தபொழுது இராமனைப் பார்த்தேன்

   ஆனால், இக்கிளை மொழியில் 'புடி' என்ற விகுதி வழக்கில் உள்ளது.

   (உ.ம்) 'வரும்புடி'

   'கேக்கும்புடி'

4. மூவிடப் பெயாகள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது இரண்டு வகையான வடிவங்களை அவை பெறுகின்றன. அதாவது மேற்கு கிளை மொழி வழக்கில் உள்ள பெரும் பிரிவில் கோயம்புத்தூர், ஈரோடு பகுதிகளில் ஒரு வடிவமும், சேலம், தர்மபுரி, பகுதிகளில் வேறொரு வடிவமும் பெறுகின்றன. இவ்வகை மாற்றங் களினால் இரு உட்கிளைமொழிகள் மேற்கு கிளை மொழியில் உள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது. மலையாள மொழியில் ஆறாம் வேற்றுமையில் உள்ள/-ன்ற/ விகுதி ஈரோடு, கோயம்புத்தூர் பகுதிகளில் வழக்கில் உள்ளது. ஏழாம் வேற்றுமை விகுதியாக

/-ஆனெந்து/ சேலம் தர்மபுரி ஆகிய பகுதிகளில் வழக்கில் உள்ளது.

5. தன்மை ஒருமை மற்றும் பன்மைப் பெயர்கள் நான்காம் வேற்றுமை உருபை ஏற்கும்போது தம் வடிவங் களினின்றும் மாறாதது குறிப்பிடத்தக்கது.

(உ.ம்) நான்-கு > நான்கு 'எனக்கு'

நாங்கள் - கு > நங்களுக்கு 'எங்களுக்கு'

அருஞ்சொற்கள்

அன்னாடி	'அன்றாடம்'
அட்டாதி	'மேல்மாடம்'
அட்டாவ|	'சமையல் அறை'
இக்கிலு	'இடுப்பு'
ஓரம்பரெ	'உறவுமுறை'
ஓதெக்கான்	'ஒணான்'
கொடிக்காயி	'வேர்க்கடலை'
சேவா	'பனம்பழம்'
பொருவடை	'புழக்கடை'
இசுக்குட்டி	'பன்றிக்குட்டி'
ஆக்கெ	'பனையோலை'
விய்யி	'வில்'
மறுகாளி	'மறுபடியும்'
துண்டி	'தடியான பெண்'
தலை மூட்டை	'தலையணை'
சொலுந்து	'விளக்கு'
புட்டு	'இட்லி'
சல்லே	'துறடு'

வடக்குக் கிளைமொழி

வட ஆற்காடு, செங்கற்பட்டு மற்றும் சென்னை மாவட்டங்களில் வழக்கில் உள்ள பேச்சுத் தமிழை வடக்குக் கிளை மொழி எனலாம். இக்கிளை மொழியில் உருது மற்றும் தெலுங்கு மொழிச் சொற்கள் கலந்துள்ளன. வடக்குக் கிளை மொழியை யகரக் கிளை மொழி என்று அழைக்குமளவுக்கு இக்கிளைமொழியில் ழகரம் யகரமாகவும், ளகரமாகவும், ஸகரமாகவும் மாறி வழங்கி வருகிறது.

ஒலியன் நிலை

வடக்குக் கிளை மொழியில் ஒலியன் மாற்றங்கள் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளன.

1. அகரம் எகரமாதல்

   (உ.ம்) செக்கிலி 'சக்கிலி'

2. சொல்லின் இறுதியில் ளகரம் கெடல்

   (உ.ம்) மஞ்சா 'மஞ்சள்'

3. முதல், இரண்டாம் அசைகளில் இகரம் எகரமாதல்

   (உ.ம்) வெளெசலு 'விளைச்சல்'

4. ஈரிதழ் ஒலிகளுடன் வரும் இகரம் ஒகரமாதல்

   (உ.ம்) பொயப்பு 'பிழைப்பு'

5. சில சொற்களில் வகரம் கெடல்

   (உ.ம்) இக்கலு 'விக்கல்'

6. ழகரம யகரமாதல்

   (உ.ம்) கய்தே 'கழுதை'

   கொயா 'குழாய்'

   பொயப்பு 'பிழைப்பு'

இலக்கண நிலை

1. பல கிளை மொழிகளில் பெண் பால் விகுதியாகப் பயன்படும் /-ச்சி/ இக்கிளை மொழியில் திரிந்து ஸி/சி என காணப்படுகிறது.

(உ.ம்)	துலக்கசி	'துலக்கச்சி'
	செட்டிசி	'செட்டிச்சி'
	பரசி	'பறைச்சி'

2. பல வினைச் சொற்களில் நிகழ்கால உருபாக /ϕ/ காணப் படுகிறது.

(உ.ம்)	கீது	'இருக்கிறது'
	கீயுது	'கிழிகிறது'

3. /-கினுரு/ என்ற சொல் தொடர்கால நிகழ்ச்சியைக் குறிக்க வினைச்சொற்களுடன் துணைவினையாக சேர்ந்து வருகிறது.

(உ.ம்)	சொல்லிக்கினுருக்கான்	'சொல்லிக் கொண்டிருக்கிறான்'

4. /-ஆண்டே/, /-கையிலே/ என்ற இரு உருபுகள் ஏழாம் வேற்றுமையைக் குறிக்கப்பயன்படுகின்றன.

(உ.ம்)	ஊட்டாண்டே	'வீட்டில்'
	என் கையிலே	'என்னிடம்'

அருஞ்சொற்கள்

அம்டன்	'அம்பட்டன்'
ஆயா	'அம்மாவின் அம்மா'
எடெயெ	'தூரே'
கட்டெதொட்டி	'விறகுக்கடை'
கய்தே	'கழுதை'
கொடக்கூலி	'வீட்டு வாடகை'
சின்னா	'சித்தப்பா'
ஜளூப்பு	'நீர் கொள்ளுதல்'

தொத்தா	'சின்னம்மா'
துட்டு	'பணம்'
மூங்குலு	'மூங்கில்'
லாராவதி	'பாலம்'
நயினா	'அப்பா'

4.2. தமிழின் சமுதாயக் கிளை மொழிகள்

தமிழ் நாட்டிலும், மற்றைய நாடுகளிலும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தமிழைப் பேசும் விதத்தில் ஏற்பட்டுள்ள மொழியியல் கூறுகளின் அடிப்படையில் தமிழ் மொழி மாறுபட்டுள்ளதையும், அவ்வாறு இடத்தால் மாறுபட்டிருக்கும் தமிழின் கிளை மொழிகளை மீனாட்சி சுந்தரம், சுவலபெல், ஆன்ட்ரனோவ் மற்றும் சீனிவாச வர்மா ஆகியோர் எத்தனை பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளனர் என்பதையும் முன்பு கண்டோம். மேலும், குறிப்பிட்ட சமுதாயத்தினர் (உதாரணமாக பிராமணர், தாழ்த்தப்பட்டோர்) தமிழைப் பேசும் விதத்தில் வேறுபாடுகள் உள்ளதையும், அவ்வேறுபாடுகளின் அடிப்படையில் தமிழில் பல சமுதாய கிளை மொழிகள் உருவாகி இருப்பதையும் மீனாட்சி சுந்தரம், ஆன்ட்ரனோவ் இருவரும் சுட்டிக்காட்டி இருப்பதையும் பார்த்தோம். ஒரு மொழியைப் பேசும் குழுவினரிடையே ஏற்பட்டுள்ள சமுதாய அமைப்பு முறைகளினால் பல சமுதாயப் பிரிவுகள் உருவாகின்றன. இத்தகைய சமுதாயப் பிரிவுகள் ஒரு மொழிக் குழுவினரிடையேயும் பல பிரிவுகளையும் (அல்லது வகுப்புக்கள் அல்லது சாதி அமைப்புகளையும்) தோற்று விக்கின்றன. ஒரே மொழியை அம்மொழிக் குழுவில் தோன்றி யுள்ள பல சமூக வகுப்பினர் பயன்படுத்தும்போது பல மொழியியல் கூறுகள் வேறுபட்டும், ஒவ்வொரு வகுப்பினரின் பேச்சு வழக்கிலும் குறிப்பிட்டுக் காட்டத்தக்க அளவுக்குப் பல மொழியியல் கூறுகள் பயன்பாட்டில் உள்ளதையும் எல்லா மொழிக் குழுவினரிடமும் காணலாம்.

மொழிப்பயன்பாட்டில் காணப்படும் சமுதாய வேறுபாடுகளுக்கு அடிப்படையாக அமைவது, சாதி அமைப்பே என்பதை இந்தியாவில் இதுவரை செய்து முடிக்கப்பட்ட எல்லாச் சமுதாய மொழியியல் ஆய்வுகளும் தெளிவாக விளக்குகின்றன. வட இந்தியாவில் வழக்கில்

உள்ள சாதிக் கிளைமொழிகளுக்கும், தென் இந்தியாவில் வழக்கில் உள்ள சாதிக் கிளைமொழிகளுக்கும் இடையில் ஓர் அடிப்படை வேறுபாடு காணப்படுகிறது. வட இந்தியாவில் 'பிற்படுத்தப்பட்டோர் பேச்சு வழக்கு' 'ஏனையோர் பேச்சு வழக்கு' என்ற இரு பெரும் பிரிவுகளுக்குள் ஏறத்தாழ சாதிக் கிளை மொழிகளை அடக்கி விடலாம். தென் இந்தியாவில் 'பிராமணர்' 'பிராமணரல்லாதவர்' மற்றும் பிற்படுத்தப் பட்டோர்' என்ற மூன்று பெரும் பிரிவுகளில் ஒரு மொழியின் சாதிக் கிளை மொழிகள் பாகுபடுத்தப்படுகின்றன.

'தமிழின் சாதிக் கிளைமொழிகள்' என்ற தலைப்பில் பிளாக் (Block: 1910) வெளிக்கொணர்ந்த ஆய்வே, இந்தியாவில் இத்துறையில் வெளிவந்த முதல் மொழியியல் ஆய்வாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் சமஸ்கிருதம் வழக்கில் இருந்த காலக்கட்டத்திலிருந்தே சாதிக் கிளைமொழிகள் வளர்ந்துள்ளன என்று பிளாக் தன் ஆய்வில் சுட்டிக்காட்டுகிறார். இதற்கு உதாரணமாக, அந்தக் காலக்கட்டத்தில் உயர் சாதி ஆண்கள் சமஸ்கிருத மொழியில் பேசியதையும், பெண்களும் வேலைக் காரர்களும் பிராகிரத மொழியில் பேசியதையும் இவர் குறிப்பிடுகிறார். மேலும், பிராமணர், பிராமணரல்லாதவர் மற்றும் தாழ்த்தப்பட்டவர் என்ற சமுதாய வேறுபாடுகள் தமிழ் மொழியின் சாதிக்கிளை மொழிகளின் மூலம் புலப்படுகின்றன என்று பிளாக் தன் ஆய்வில் விளக்குகிறார்.

பல சாதி அமைப்புகளை வேறுபடுத்திக் காட்டும் ஒலியனியல், பொருளியல் கூறுகளையும், சொல் வழக்கு நிலைகளையும் பிளாக் வகைப்படுத்தியுள்ளார். இவர் தன் ஆய்வின் முடிவுகளாக மூன்று கருத்துக்களைத் தெரிவிக்கிறார். அவையாவன:

1. பண்டைய தமிழின் ஒலியன்நிலை அமைப்புகள் பிராமணர் கிளைமொழியில் அதிக அளவில் தக்கவைக்கப்பட்டுள்ளன.
2. மற்ற மொழியியல் கூறுகளின் வேறுபாடு களையும் விட உருபன்நிலை வேறுபாடுகள் பல சாதியினரிடையே உள்ள மொழியியல் கூறுகளின் வேறுபாடுகளை அறிய உதவுகின்றன. ஏனெனில், உருபன்நிலை வேறுபாடுகள் வரையறுத்துக் கூறுமளவுக்கு முறையாக அமைந்துள்ளன.

3. தமிழ் மொழி வழக்குகளின் அடுக்குகளுக்கும் சாதி அமைப்புகளுக்கும் இடையே திட்டவட்டமான இணை நிலை உள்ளது. சமுதாய அமைப்பில் மேல் நிலையில் உள்ள சாதியினரின் மொழி வழக்கிலும், கீழ் நிலையில் உள்ள சாதியினரின் மொழி வழக்கிலும் மாற்றங்கள் காணப்படவில்லை. ஆனால் தாங்கள் சமுதாய அமைப்பில் மேலும் உயர வேண்டும் என்ற உந்துதல் இடைநிலை சாதியினருக்கு இருப்பதால், இவர்களது பேச்சு வழக்கில் சிற்சில மாற்றங்கள் காணப்படுகின்றன.

தமிழின் சமுதாயக் கிளைமொழிகளை வரையறுத்துக் கூறுவதற்குச் சாதி என்ற மாறி (Variable) மற்றுமல்லாத வேறு சில சமுதாய மாறிகளும் உருவாகின்றன. உதாரணமாக இடைநிலை சாதியினரிடையே கல்வி மற்றும் வாழ்க்கைத்தரம் ஆகியவையும் கூட மொழிப் பயன்பாட்டை வேறுபடுத்திக் காட்டும் மாறிகளாக ஆகலாம். சமுதாய அமைப்பில் இடைநிலையில் உள்ள சாதிகளைச் சேர்ந்த பெண்களுக்குக் கல்வி வாய்ப்பு பெருமளவில் கிடைக்காத காரணத்தால், பெண்களின் பேச்சு மொழியில் பெரிய அளவில் மாற்றங்கள் நிகழ வாய்ப்புக்கள் இல்லாமல் இருந்தன எனக் கொள்ளலாம்.

தமிழின் சாதிக்கிளை மொழிகளைப் பற்றிய பிளாக்கின் ஆய்வு இந்தியாவில் சாதிக்கிளை மொழிகளைப் பற்றி பொதுவர்கவும், தமிழின் சாதிக்கிளை மொழிகளைப் பற்றி சிறப்பாகவும் பிற்கால மொழியியல் அறிஞர்கள் மேலும் பல ஆய்வுகளை மேற்கொள்ள வழி வகுத்தது.

தமிழின் சமுதாயக் கிளை மொழிகளைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஆன்ட்ரனோவ் (1962) சண்முகம் பிள்ளை (1965, 1968) ராமானுஜம் (1968), ஏசுதாசன் (1975) மற்றும் சீனுவாச வர்மா (1971) ஆகியோரின் ஆய்வுகளை இங்கு குறிப்பிட்டுச் சொல்லலாம். ஆன்ட்ரனோவ் தன் ஆய்வில் பேச்சுத் தமிழினைப் பற்றியும், அதன் வட்டாரக் கிளை மொழிகளைப் பற்றியும் அதிக அளவில் விவரித்து உள்ளார். தமிழின் சமுதாயக் கிளை மொழி களைப் பற்றிய அவரது செய்திகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றன. நகர்ப்புறங்களில் வாழும் படித்த பிராமணர் களின் பேச்சு வழக்கைப் பிராணமரல்லாதோர் மற்றும் கீழ் நிலைச்சாதியினரின் பேச்சு வழக்கோடு ஆன்ட்ரனோவ்

ஒட்பிட்டு சில கருத்துக்களைத் தன் ஆய்வில் கூறி இருக்கிறார். பிராமணரல்லாதோர் பேச்சு வழக்கில் காணப்படாத மொழிச் சீர்மை (Linguistic Uniformity) பிராமணர் பேச்சு வழக்கில் பெருமளவில் உள்ளது என்பது இவ்வறிஞர் தம் கருத்தாகும்.

சில குறிப்பிட்ட உறவு முறைச் சொற்கள் சில குறிப்பிட்ட சாதியினரிடையே பயன்படுத்தப்படுவதை முன் மாதிரியாக வைத்து, சாதிப்பாகுபாட்டைப் பிரித்தறியும் புள்ளி விவரப் பட்டியலைச் சண்முகம் பிள்ளை (1965) தன் ஆய்வில் தந்து இருக்கிறார். முகமதியர்களின் பேச்சுத் தமிழைத் தவிர்த்துப் பார்க்கும்போது, மற்ற வகுப்பினரிடையே பரவலாகப் பயன்படுத்தப்படாத பல உறவுமுறைச் சொற்கள் பிராமணர் பேச்சுத் தமிழில் காணப்படுகின்றன. சமுதாய அமைப்பு முறையில் கீழ் நிலையில் உள்ள சாதியினரிடையே, தனிப்பட்ட உறவு முறைச் சொற்களின் பயன்பாடு காணப்படவில்லை. இத்தகைய நிலைமைக்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். அவையாவன:

1. பிராமணச் சாதியினருக்கும், கீழ்நிலை சாதியினருக்கும் ஒரு நெருக்கமான சமூகத் தொடர்பு இல்லை
2. பிராமணர்கள் தாங்கள் உயர்நிலை வகுப்பைச சேர்ந்தவர்கள் என்ற தங்கள் கருத்தை வலியுறுத்து வதற்குத் தங்கள் சாதிக்கே உரிய கிளைமொழிச் சொற் களைப் பயன்படுத்துகின்றனர். சமுதாய அமைப்பில் மேல்நிலையில் உள்ள பிராமணர் அல்லாத ஏனைய வகுப்பினர் பிராமணரால் பயன்படுத்தப்படும் பல சொற்களைத் தங்கள் பேச்சு வழக்கில் பயன்படுத்து கின்றனர். சமுதாய அமைப்பில் தங்களின் மேல்நிலை செல்வாக்கை மேலும் கூட்டிக் காட்ட வேண்டுமென்பது இதற்குக் காரணமாக இருக்கலாம். இந்த நிலைக்கு முற்றிலும் எதிரான ஒரு சூழல் கீழ்நிலை சாதியினரிடையே நிலவுகிறது. இவர்கள் மேல்மட்ட வகுப்பினர் வழக்குகளில் உள்ள சொற்களைப் பயன்படுத்துவதில்லை. மேலும் தங்கள் சாதிக்கிளை மொழிக்கே உரிய, தங்கள் நிலையைப் புலப்படுத்து வதாய் அமையும் சொற்களையும் பயன்படுத்துவது மில்லை.

கன்னியாகுமரி பகுதியில் வாழும் மீனவர்களின் பேச்சுத் தமிழ் பற்றிய சண்முகம் பிள்ளையின் ஆய்வும் (1968) இங்கு குறிப்பிடத்தக்கது. பிராமணர், மேல் வகுப்பினர் சேர்ந்த பிராமணரல்லாதோர் மற்றும் ஏனைய பிராமணர் அல்லாதோர் ஆகியோரின் பேச்சு வழக்குகளுடன் மீனவரின் பேச்சு வழக்கை ஒப்புமைப்படுத்தி சில ஆய்வு முடிவுகளை இக்கட்டுரையில் இவர் தந்திருக்கிறார். மொழியியல் கூறுகளின் அடிப்படையில் கன்னியாகுமரி மீனவர்களின் பேச்சு வழக்கு தமிழின் ஒரு கிளை மொழியாகும் என்பதையும், இக்கிளை மொழிப் பயன்பாட்டில் குறித்தாவல் (Code Switching) வழக்கில் உள்ளது என்பதையும் தன் கட்டுரையில் இவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழின் சாதிக் கிளைமொழிகளைப் பற்றிய ஏசுதாசனின் (1975) ஆய்வும் இங்கு சிறப்பாக குறிப்பிடத் தக்கது. கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவன்கோடு பகுதியில் பேசப்படும் வட்டாரக் கிளை மொழியைப் பற்றிய இந்த ஆய்வில் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த மக்களிடையே, அவர்களது பொது வயதுக்கேற்றவாறு மொழி வழக்கு மாறுபட்டுள்ளது என்பதை ஏசுதாசன் சுட்டிக் காட்டியுள்ளார். அதாவது இந்தக் கிளை மொழியில் வயது ஒரு சமுதாய மாறியாக (Social variable) உள்ளது என்பதைப் பல உதாரணங்களுடன் இவர் விளக்குகிறார்.

விளவன்கோடு கிளைமொழி தமிழ் நாடு, கேரளா மாநிலங்களின் எல்லைப்பகுதிகளில் வழக்கில் உள்ளது. கிருஷ்ணவகை போன்ற சில உயர் வகுப்புகளைச் சேர்ந்த வர்கள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தாலும், மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்ட சில வகுப்பினரோடு திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு இருந்தனர். இதனாலேயே இந்தப் பகுதியில் பேசப்படும் தமிழில் மலையாள மொழிக்கூறுகளின் கலப்பு மிகுதியாகக் காணப்படுகிறது. இளம் வயதினரின் மொழிப்பயன்பாட்டில் இத்தகைய கலப்பு காணப்படவில்லை. இவர்களின் பேச்சு வழக்கில் இந்த வட்டார வழக்கிற்கே உரிய மொழிக் கூறுகள் மிகுந்து காணப்படுகின்றன. நடுத்தர வயதினரின் பேச்சு வழக்கில் அந்தப் பகுதியில் நிலைபெற்ற வட்டாரக் கிளை மொழியின் (Regional standard dialect) மொழிக்கூறுகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட

வகுப்பினரிடையே முதியவர்கள் தம் பேச்சு வழக்கில் சில மலையாள மொழிக் கூறுகளைக் கையாளுகின்றனர். மேலும் இவர்களின் பேச்சு வழக்கில் பல மொழியியல் புத்தாக்கங்களும் (innovations) காணப்படுகின்றன.

ஐயங்கார் பிராமணர் தாம் பேசும் தமிழுக்கும் முதலியார் வகுப்பினர் பேசும் தமிழுக்குமிடையே காணப்படும் மொழிக் கூறுகளின் வேறுபாடுகளைப் பற்றிய இராமானுஜனின் (1968) ஆய்வும் இங்கு குறிப்பிட்டுக் கூறத்தக்கது. இவ்விரு வகுப்பினரால் பேசப்படும் கிளை மொழிகளுக்கிடையே நீண்ட காலமாய்த் தோன்றியுள்ள மொழியியல் கூறுகளின் புதுமையாக்கங்கள் மாறுபட்டுள்ளன. ஒலியன் வேறுபாடு, சொற்கள் பயன்பாடு ஆகியவற்றில் பிராமணர்களின் கிளை மொழி பெரிதும் வேறுபட்டுள்ளது. சொல் அமைப்பு முறையில் புதுமையாக்கததை (innovations by levelling paradigms) தழுவியுள்ள பிராமணர் அல்லாதோரின் கிளை மொழி இலக்கிய நிலைபேறான செந்தமிழினின்றும் வேறுபட்டுள்ளது. இன்றைய நிலையில் பல்வேறு மொழியியல் கூறுகளினால் வேறுபட்டுள்ள தமிழ்க் கிளை மொழிகள் யாவும் முந்தைய பேச்சு வழக்குகளில் இருந்து உருவாகியமைதாம் வேறுபாடுகளுக்கு முக்கிய காரணமாய் அமைகின்றது என்றுகூடச் சொல்லலாம்.

தமிழின் சாதிக்கிளை மொழிகளைப் பற்றி அண்மைக் காலத்தில் வெளியான ஆய்வுகளில் மிகச்சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது சீனுவாசவர்மாவின் (1977) ஆய்வாகும். இவர்தம் ஆய்வில் பிராமணர், வேளாளர், நாட்டுக்கோட்டை நகரத்தார், படையாச்சி, கள்ளர், அரிசனர் ஆகியோரின் சாதிக் கிளை மொழிகளில் காணப்படும் மொழியியல் கூறுகளின் வேறுபாடுகளைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறார்.

பிராமணர் பேச்சுமொழி

பிராமணர்களுக்குள் அய்யர், அய்யங்கார், தீட்சிதர் என உட்பிரிவுகள் உள்ளன. தமிழ்நாட்டின் மக்கட்தொகையில் பிராம்ணர்கள் மிகக் குறைவாக உள்ளனரேயாயினும் தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இவர்கள் வாழ்கிறார்கள். இருப்பினும், தமிழ் நாட்டின் எந்த மாவட்டத்தில் இவர்கள் வாழ்ந்து வந்த போதும் அவர்கள் பேச்சில் ஒரு பொதுத்தன்மை காணப்படுகிறது. பிராமணர்களின் பேச்சுத்தமிழ் ஒலி

அமைப்பிலும், சொற்களிலும் மற்றைய கிளை மொழி களினின்றும் பெரிதும் வேறுபட்டுள்ளது என்று இராமானுஜன் (1968) சுட்டிக்காட்டியுள்ளதை மேலே கண்டோம். ஆனால், செந்தமிழின் இலக்கண அமைப்போடு பிராமணர் பேச்சுத்தமிழை ஒப்பிடும்போது மிகக்குறைவான மாற்றங்கள் காணப்படுகின்றன என்பதைச் சீனுவாச வர்மா சுட்டிக்காட்டுகிறார். இன்றும் கூட, மிகப்பழைய சொற்களை வழக்கில் தக்க வைத்துக் கொண்டுள்ள சிறப்பு பெற்ற கிளைமொழி இதுவென்றும் அவர் குறிப்பிடுகிறார்.

(/b, d, d, j, g) என்கிற குரலோசையுடைய மெய் ஒலியன் களும், ஸ், ஷ், ஹ், ழகரம் ஆகிய ஒலிகளும் இந்த பேச்சு வழக்கில் உள்ளன. மெய்யொலியன்கள் மொழி முதலில் மயங்குதலும் காணப்படுகிறது.

(உ.ம்)	ப்ராமணன்	ஸ்வீகாரம்
	த்யாகம	ஸ்நேகிதம்
	க்ராம்பு	ஸ்ரமம்
	த்வாரம்	வியாழன்
	ன்யாயம்	ப்ரீதி
	த்ராசு	தியானம்

பிராமணர் பேச்சுத் தமிழில் குறிப்பிடத்தக்க இலக்கணக் கூறுகளாக் கீழ் கண்டவற்றைக் கூறலாம். தமிழின் ஏனைய பேச்சு வழக்குகளில் ஆண்பால் விகுதி டா, பெண்பால் விகுதி - டி ஆகியன பயன்படும்போது பேசுவோருக்கும் கேட்போருக்கும் இடையில் உள்ள வயது வேற்றுமை புலப்படும். அதாவது கேட்போர் வயது குறைந்தவராயின் மட்டுமே இவ்விகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் இவ்விகுதிகள் அவமரியாதையான விகுதிகள் என்றும் கருதப்படுகின்றன. ஆனால் பிராமணர் பேச்சுத் தமிழில் இவ்விகுதிகள் ஆண்பால், பெண்பாலை மட்டுமே குறித்து, பேசுவோருக்கும் கேட்போருக்கும் இடையில் உள்ள வயது வேற்றுமையைக் காட்டுவதில்லை.

அலம்பு 'கை கழுவு', தோய் 'துணி துவை' சேவி 'வணங்கு' ஈஷூ'பூசு' ஆகிய வினைச் சொற்கள் இந்த பேச்சு மொழியில் அதிக அளவில் வழக்கில் உள்ளன. முன்னிலை

விகுதிகளாக -ஏள்-ஈர் ஆகிய இரண்டும் வழக்கில் உள்ளன. -ஏள் என்கிற விகுதி உயர்வையும், -ஈர் என்கிற விகுதி அடுத்த நிலையிலும் பயன்படுத்தப்படுகின்றன. படர்க்கை விகுதிகளான -ஆர், -ஆ ஆகியன பெண்பால் ஒருமையையும், உயர்வு பன்மையையும் சுட்டுகின்றன.

வேறு எந்தப் பேச்சு வழக்கிலும் காணப்படாத ஓகார ஈற்றுடன் கூடிய-ங்கோ என்கிற ஏவல் பன்மை பிராமணர் பேச்சு வழக்கில் உள்ளது.

பிராமணர் பேச்சுத் தமிழில் வழங்கும் அருஞ்சொல் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தோப்பனார்	'தந்தை'	ஷீணம்	'தளர்ச்சி'
ஆத்துக்காரர்	'கணவர்'	சங்காத்தொம்	'உறவ'
ஆத்துக்காரி	'மனைவி'	தூளி	'தொட்டில்'
ஆம்படையா	'மனைவி'		
அம்மாஞ்சி	'அத்தை மகன்'	அக்ரகாரம்	'பிராமணர் குடியிருப்பு'
அத்தங்காள்	'அத்தை மகள் மூத்தவள்	கஷ்ணம்	'துண்டு'
		சேஷம்	'மீதி'
அத்திம்பேர்	'அக்கா/ அத்தையின் கணவர்'	வைதிகாள்	'வைதிகர்'
		நாந்தி	'ஒரு சடங்கு'
மித்தம்	'முற்றம்'	சேவ	'இடியாப்பம்'
கல்மிஷம்	'விஷமம்'	எச்சல்	'எச்சில்'
மடி	'சுத்தமான நிலை'	பரிஜாரன்	'கோவிலில் சமையல் செய்கிறவர்'
விழுப்பு	'அசுத்தமானநிலை'		
மோதகம்	'கொழுக்கட்டை'		

வேளாளர் பேச்சுமொழி

இம்மக்கள் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். கல்வியறிவில் மிகவும் முன்னேறி யுள்ள இப்பிரிவினர் வேளாண்மை தொழிலைப் பரம்பரை யாய் செய்து வருவதுடன், உயர் பதவிகளிலும் உள்ளனர். சமூக அமைப்பில் பிராமணர் அல்லாத வகுப்பினரிடையே வேளாளர் மேலான நிலையில் இருப்பவராகக் கருதப்படு கிறார்.

வேளாளர் பேச்சு மொழியில் ஒலிமாற்றம் மிகக் குறைந்த அளவே காணப்படுகிறது. பிறமொழிச் சொற்கள் இவர்தம் பேச்சு மொழியில் கலந்து உள்ளதால் /b,g,j/ ஆகிய ஒலியன்கள் 'எல்லை ஒலியன்களாக' (marginal phonemes) உள்ளன. தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் வழக்கில் உள்ள வேளாளர் பேச்சு மொழியில் ழகரம் இல்லை. தமிழ் நாட்டின் மத்தியப் பகுதிகளில் பேசப்படும் வேளாளர் பேச்சு மொழியில் மட்டுமே ழகரம் வழக்கில் உள்ளது.

வேளாளர் பேச்சு வழக்கில் காணப்படும் அருஞ்சொற் களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மாம்	கவ்ரு
உரிமட்டை	காவே
பயணி	கொடகல்லு
பொடுசு	இப்புட்டு
பூடே	அம்புட்டு
தென்னலு	எம்புட்டு
த்ருவிஷா	சோலி
த்ரேகம்	ரேழி
இன்னுமே	ராமம்

நாட்டுக்கோட்டை நகரத்தார் பேச்சுமொழி

இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் வாழும் செட்டியார் வகுப்பினரின் பேச்சுமொழி குறிப்பிடும்படியான மொழியியல தனித்தன்மைகளைக் கொண்டுள்ளது.

திண்ணப்பன் (1976) செட்டியார் பேச்சு வழக்கில் காணப் படும் உறவுமுறைச் சொற்களைப் பற்றிய தனது ஆய்வுக் கட்டுரையில், இச்சமூகத்தினரிடையே வழக்கில் இருக்கும் உறவு முறைச் சொற்களைத் தொகுத்துக் கொடுத்துள்ளார் அவற்றுள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அப்பச்சி	'அப்பா'
ஆத்தா	'அம்மா'
அய்யா	'தாத்தா'
ஆயா	'பாட்டி'
ஆச்சி	'அக்கா'
ஆம்பளயான்	'கணவன்'
அம்மான்	'மாமா'
அப்பச்சி பண்டி	'சிற்றன்னை'
தம்பி பண்டி	'தம்பி மனைவி'

பிற மொழிச் சொற்கள் திரிபு பெற்று இப்பேச்சு மொழியில் பயன்படுத்தப்படுகின்றன.

(உ.ம்)	செக்கு	'காசோலை'
	செலான்	'செல்லான்'
	அமுக்குப் பொத்தான்	'பித்தான்'
	துவாலை	'துண்டு'
	புட்டாமா	'முகப்பூச்சு'

படையாச்சிப் பேச்சுத்தமிழ்

தமிழ் நாட்டில் உள்ள எல்லா வகுப்பினரையும் விட மக்கட் தொகையில் அதிக எண்ணிக்கையில் படையாச்சி வகுப்பினர் உள்ளனர். இவர்களிடையே முப்பதுக்கும் மேற்பட்ட உட்பிரிவுகள் உள்ளன. இச்சமூகத்தினர் பெரும் பாலும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். இவர் களுடைய பேச்சுமொழி பற்றிய ஆய்வுகள் பல நடந்துள்ளன. திருச்சி (ராமசாமி : 1972) தஞ்சாவூர் (அருணபாரதி : 1973) மற்றும் தென் ஆற்காடு (சீனிவாச வர்மா, 1971)

மாவட்டங்களில் வழங்கி வரும் படையாச்சி பேச்சு மொழி பற்றிய ஆய்வுகள் விளக்க மொழியியல் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளன.

ஒலியன் நிலையில் குறிப்பிடத்தக்க சில மொழியியல் கூறுகளாவன: றகரமும், ரகரமும் இணைந்து ரகரமே இந்த பேச்சு மொழியில் காணப்படுகிறது. சொல்லின் இறுதியில், உயிரொலிக்கு அடுத்து வரும் மூக்கொலிகள் உயிரொலியுடன் இணைந்து உச்சரிக்கப்படுகின்றன.

(உ.ம்) – என் > ẽ

– ஒம் > õ

சொல்லின் இடையில் ஷகரமும், ஸகரமும் மாறி மாறி உச்சரிக்கப்படுகின்றன. மேலும் திருச்சிராப்பள்ளி மாவட்ட படையாச்சி பேச்சு வழக்கில் 'ஜ'வும், ஸகரமும் மாறி மாறி உச்சரிக்கப்படுகின்றன.

(உ.ம்) விஷம்	>	வெசொம் (ம்)
கஷாயம்		கசாயொ (ம்)
வேஷம்		வேசொ(ம்)
ஜோடி		சோடி
ரோஜா		ரோசா
ராஜா		ராசா
ஜன்னல்		சன்னல்

இலக்கண நிலையில் குறிப்பிடத்தக்க கூறுகளாவன: /-எ, யியெ/ ஆகிய இரண்டும் இரண்டாம் வேற்றுமை உருபுகளாக வருகின்றன.

(உ.ம்) கொல்லெ + யியே > கொலிலியெ

அவென் + எ > அவனெ

/-கு, -எ/ ஆகியன நான்காம் வேற்றுமை உருபுகளாக 'வா', 'போ' என்ற வினை வாக்கியங்களில் வருகின்றன.

(உ.ம்) அவன் ஊட்டுக்கு/ஊட்டெ போரான்

அவன் காட்டுக்கு/காட்டெ போரான்

அஃறிணைப்பெயர்களுடன்/-உருபும்/ /-ஒடெ/ உருபும் வருகின்றன.

(உ.ம்) மாடு + ன் > மாட்டுன்

மாடு + ஒடெ + கண்ணு > மாட்டோட் கண்ணு

படையாச்சி பேச்சு மொழியில் வழக்கில் உள்ள அருஞ் சொற்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஐயா/அப்பாரு	'அப்பா'
ஆயி	'அம்மா'
அம்மாயி	'அம்மாவின் அம்மா'
அப்பாயி	'அப்பாவின் அம்மா'
ஒப்பிடியா	'கணவரின் சகோதரரின் மனைவி'
எம்பளது	'எண்பது'
மசினிச்சி	'மனைவியின் தங்கை'
குந்து	'உட்கார்'
கெடாசு	'எறி'
ஒசெக்கெ	'உயரே'
கடயாணி	'அச்சாணி'
பரியம்	'பரிசம்'
கொழுந்தியா	'மனைவியின் தமக்கை'

கள்ளர் பேச்சு மொழி

தமிழகத்தில் தொன்றுதொட்டு வாழ்ந்துவரும் மக்களில் கள்ளர் இனத்தவரும் ஒருவராவார். அவர்கள் தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களில் வாழ்ந்து வரும் அடிப்படையில் இவ்வகுப்பினர் ஐந்து பெரும் பிரிவுகளாக உள்ளனர்.

கள்ளர் பேச்சுமொழியில் காணப்படும் அருஞ்சொற் களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அய்யா	'அப்பாவின் அப்பா'
பொண்டி/பொஞ்சாதி	'மனைவி'

தாயி	'அம்மா'
தாபாசெ	'தாய்மொழி'
எனப்பத்து /ஒரமொரசு /மொரதலெ	'உறவினர்'
உளுப்பெ	'தாய்மாமனின் சீர் வரிசை'
பேயம்/பெட்டி	'தானியக் கிடங்கு'
ஒண்ணாக்கு	'ஒன்றாக சேர்'
பஞ்சாயம்	'பஞ்சாயத்து'
பாவாசம்	'பாயாசம்'
திருபூட்ரது	'தாலி கட்டுதல்'
தொளி	'சேறு'
செல்பம்	'பொருள்
கடாத்து	'கூடை'

அரிசனர் பேச்சு மொழி

தமிழின் மற்றை பேச்சு மொழிகளில் காணப்படாத பல மொழியியல் மாற்றங்கள் அரிசன வகுப்பினரின் பேச்சு மொழியில் காணப்படுகின்றன.

ஒலியனியல் நிலையில், ஐகார ஔகாரங்கள் 'அய்' 'அவ்' என உச்சரிக்கப்படுகின்றன. சொல்லின் இறுதியில் வரும் மகரமும், னகரமும் உயிரொலிகளுடன் கூடிய மூக்கொலிகளாக ஒலிநிலையில் உள்ளன. றகரத்துக்கும் ரகரத்துக்கும் உள்ள ஒலி வேற்றுமை அற்று விட்டது.

இலக்கண நிலையில் கீழ்க்காணும் மொழியியல் கூறுகள் காணப்படுகின்றன. ஆண்பால், பெண்பால் பெயர்கள் வாக்கியத்தில் எழுவாயாக வரும்போது முற்று வினையில்பால் காட்டும் விகுதி அஃறிணையாக வருகிறது.

(உ.ம்) அண்ணன்
அக்கா வந்திச்சி
ஆத்தா

முன்னிலையில் - ஏ ஒருமை விகுதியாகவும், -ஈங்கெ பன்மை விகுதியாகவும் வருகின்றது.

(உ.ம்) வ-ந்த். ஏ > வந்தெ

வ-ந்த்-ஈங்கெ > வந்தீங்கெ

-உவொ என்னும் பன்மை விகுதி படர்க்கையில் எல்லா பால்காட்டும் விகுதிகளுக்குப்பின்னும் வந்து பன்மையை உணர்த்துகிறது.

(உ.ம்) வ-ந்த-ஆன்-உவொ > வந்தானுவோ

வ-ந்த்-ஆள்-உவொ > வந்தாளுவோ

வ-ந்த்-உது-உவோ > வந்ததுவோ

அரிசனர் பேச்சு மொழியில் வழக்கில் உள்ள அருஞ் சொற்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

எந்த்ரொம்	'திரிகை'	பிசினி	'கோந்து'
ஏணெ	'தூணி'	பூட்டாங்கவுரு	'பூட்டும் கயிறு'
ஒப்பென்	'உன் அப்பன்	மச்சி	'மனைவியின் தங்கை'
யெப்பாரு	'என் அப்பா'	மிம்மா பால்லு	'முன் வாய்ப்பல்
ஒக்கா(ள்)	'உன் அக்காள்'	முக்குணி	'வண்டியின் முக்கட்டை'
குந்து	'உட்கார்'	முதுக்கான்	'பெரிய வீடு'
கெடாசு	'எறி'	முழிங்கிலி	'மூங்கில்'
கடவாணி	'அச்சாணி'	கொராக்குட்டி	'பெண் ஆட்டுக்குட்டி
சாலுங் கரவோம்	அரசாணிப் பானை'	வடகருவு	'தோல் கயிறு'
செங்காயம்	'காய்ந்த எள் செடி	வடம்பு	'கூரை'
தட்டியங்கா	'கும்மியடித்தல்'	வர்ட்டப்பலி	'பதறு நீங்க நெல்லைத் தூற்றும் முறை'
தெரட்டி	'பூப்பெய்தல்'	வாசாங்கு	'திட்டுதல்'

பாஞ்சிராத்திரி 'நடு இரவு' வாரெடி 'அகலம் குறைந்த துணி'

வெடிவாலு 'வெள்ளை வால் மாடு' வெட்டுமாலு 'பள்ளம்'

வெசநாளு 'வெயில் காலம்'

4.3. தொழில் பேச்சு வழக்குகள் (தமிழ்)

சமூக அமைப்பு முறையில் சாதிப்பிரிவுகளால் அச்சமுதாயம் பல உட்பிரிவுகளாக உருவாகி இருப்பதும் இத்தகைய சாதிப்பிரிவுகள் அச்சமூகம் பயன்படுத்தும் மொழியின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதும், அச்சமூகத்தினர் பேசும் மொழியில் பலவகை சமூக கிளை மொழிகள் தோன்ற காரணமாகின்றன. இத்தகைய சமூக கிளை மொழிகள் தமிழிலும் வேரூன்றி உள்ளதை முந்தைய பகுதிகளில் கண்டோம். தமிழ்ச் சமுதாயத்தில் வலுவாக நிலைபெற்றுள்ள முக்கிய சாதிப்பிரிவுகளான பிராமணர், வேளாளர், நாட்டுக்கோட்டை நகரத்தார், படையாச்சி, கள்ளர் மற்றும் அரிசனர் ஆகியோரின் பேச்சு வழக்குகளில் சாதி அடிப்படையில் கண்டறியக்கூடிய மொழியியல் கூறுகளின் வேறுபாடுகளையும், அவர்தம் பேச்சுமொழியில் வழக்கில் உள்ள அருஞ்சொற்களையும் பற்றிய பரவலான தகவல் களையும் முந்தைய பகுதியில் பார்த்தோம். ஒரு சமுதாயத்தில் வழக்கில் உள்ள மொழியியல் கூறுகளின் வேறுபாடுகள் சாதி அடிப்படையில் மட்டும் தோன்றியவை எனக் கூற இயலாது. பொதுவாக தென் ஆசியாவிலும், குறிப்பாக இந்தியத் துணை கண்டத்திலும் பேசப்பட்டு வரும் எல்லா மொழிகளிலும் பல கிளைமொழிகள் தோன்றியுள்ளமைக்குச் சாதி மட்டுமே ஒரு காரணி இல்லை. கல்வி, பால், வயது, கிராமப்புறங்களில் வசிப்பது, நகர்ப்புறங்களில் வசிப்பது மற்றும் தொழில் ஆகியவையும் கூட பல மொழிகளில் தனித்தனி பேச்சு வழக்கு உருவாக காரணங்களாய் அமைந்துள்ளன.

தமிழ் நாட்டில் தொன்று தொட்டு நடந்து வரும் தொழில்களுள் மீன் பிடித்தல், உப்பு உற்பத்தி மற்றும் மண்பாண்டங்கள் தயாரிப்பு ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் பேசும் தமிழ் பேச்சு வழக்கைப் பற்றிச் சில சிறப்பான மொழியியல் ஆய்வுகள் வெளிவந்துள்ளன. மண்

பாண்டம் தயாரிக்கும் தொழிலில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரே ஈடுபட்டிருந்தாலும், ஏனைய இரண்டு தொழில்களிலும் குறிப்பிட்ட வகுப்பினரே ஈடுபட்டுள்ளார்கள் என்று கூற இயலாது. தமிழ் நாட்டின் கடற்கரை ஓரங்களில் ஆங்காங்கே வாழ்ந்து வரும் பல வகுப்பினரும், இந்து, கிருத்துவர் ஆகிய இரு மதத்தினருமாக பலவகை சமூகத்தினர் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அதே போன்று உப்பளங்களைப் பெருக்கி, உப்பு தயாரிப்பதிலும் பல வகுப்பினர் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு இரண்டு மதத்தைச் சேர்ந்தவராயினும், பல சாதிப்பிரிவுகளைச் சேர்ந்தவராயினும், தொழில் முறையை அடிப்படையாக வைத்து பார்க்கும்போது, இவர்கள் பயன்படுத்தும் பேச்சு வழக்கில் மொழியியல் பொதுமைக் கூறுகளை நாம் காண்கிறோம்.

தமிழின் தொழில் பேச்சு வழக்குகள் பற்றிய ஆய்வுகளில் சண்முகம்பிள்ளை (1968), சிதம்பரநாத பிள்ளை (1972), சீனுவாச வர்மா (1971, 1973, 1974) ஆகியோர் ஆய்வுகள் இங்கு குறிப்பிடத்தக்கன.

மீனவர் பேச்சுத்தமிழ்

தமிழ் நாடடில் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் பேசும் பேச்சுத்தமிழை இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம். இவ்வகையான பிரிவுகள் அவர்கள் வாழும் நிலப்பரப்பினை ஒட்டியே அமையும். அவையாவன: புதுக்கோட்டை, தஞ்சாவூர், தென்னார்க்காடு மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் வாழும் மீனவர்களின் பேச்சுத் தமிழ்; கன்னியாகுமரி, ராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வாழும் மீனவர்களின் பேச்சுத்தமிழ். கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் மீனவர்களின் பேச்சுத்தமிழ் பற்றிய ஆய்வைச் சண்முகம்பிள்ளையும் (1968), தமிழ்நாட்டின் வடபகுதிகளில் வாழும் மீனவர்களின் பேச்சுத்தமிழைப் பற்றிய ஆய்வுகளைச் சிதம்பரம் பிள்ளையும் (1972), சீனுவாச வர்மாவும் (1974) நடத்தி உள்ளார்கள்.

மீனவர் பேச்சு வழக்கில் தம் தொழில பயிற்சிக்காகப் பயன்படும் ஆயிரக்கணக்கான சொற்கள் காணப்படுகின்றன. மேலும் மற்றைய பேச்சு வழக்குகளிலோ, எழுத்துத் தமிழிலோ காணக்கிடைக்காத மிகப்பழைய சொற்களும் இவர்களது பேச்சு வழக்கில் இன்றும் உள்ளன. மீனவர் பேச்சுத்தமிழில்

ஆண்களின் பேச்சு வழக்கிற்கும், பெண்களின் பேச்சு வழக் கிற்கும் இடையே மொழியியல் கூறுகள் வேறுபட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒலியன் நிலையில், சென்னையை ஒட்டிய சில கிராமங்களில் வாழும் மீனவர்களின் பேச்சு வழக்கிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் மரக்காணம், கடலூர் ஆகிய ஊர்களுக்கு அருகில் உள்ள பகுதிகளில் வாழும் மீனவரின் பேச்சு வழக்கிலும் ழகரம் மிகத் தெளிவாக உச்சரிக்கப் படுவதைச் சீனுவாச வர்மா **(1971)** சுட்டிக்காட்டுகிறார். மேலும் இந்த பேச்சு மொழியில் / Σ /,/ t /s ஆகிய உயிரொலிகள் உயிரொலியன்களாக உள்ளன என்பதை இவர் காட்டி யுள்ளார். பொது பேச்சுத் தமிழில் ழகரம் ளகரமாக மாறுகிறது. ஆனால் மீனவர் பேச்சுத் தமிழில் ளகரம் ழகரமாக நேரிடை மாற்றம் நிகழ்ந்துள்ளது.

இந்த பேச்சுத் தமிழில் காணப்படும் சில இலக்கணக் கூறுகளாவன: பெண்பால் குறிக்கும் விகுதியாக-இ பயன் படுத்தப்படுகிறது.

(உ.ம்)

மச்சா -ன் மச்ச் + இ > மச்சி

மாம -ன் மாமி + இ > மாமி

பெயர் சொல்லாக்க விகுதிகளாக - ச்சல் பயன்படுத்தப் படுகிறது.

(உ.ம்)

பணி-ச்சல் 'அடங்குதல்'

பெதெ-ச்சல 'இணைத்தல்'

நான்காம் வேற்றுமையைக் குறிப்பதற்கு /-ɛ/ எனும் உருபு சில சொற்களுடன் பயன்படுத்தப்படுகிறது.

(உ.ம்)

u:tu + ɛ > u : ṭ ṭ > e 'வீட்டிற்கு'

ka:tu + ɛ > ka: ṭ ṭ e 'காட்டிற்கு'

எண்ணுப்பெயர்களும், பெயர்ச் சொற்களும் இணைந்து வரும்போது ஒலி கெட்டு, வடிவம் மாறியுள்ளது.

(உ.ம்)

ஏறு + நீர் > ஏறிணி 'கடல்நீர் உப்பனாற்றில் ஏறுதல்'

அரைக்கால் > அதைக்கா

தொள்ளாயிரம் > தொழாயிரம்

வினை முற்றுகளில் பால்காட்டும் விகுதிகள் உருமாறி யுள்ளன. அதாவது, பெண்பால் விகுதி, 'ஆள்' 'ஆழு' எனவும், பலர்பால் விகுதி 'ஆர்' 'ஆத்' எனவும், அஃறிணை விகுதி 'ற்று' 'ச்சி' எனவும் உருமாறியுள்ளன.

(உ.ம்)

வந்தாள் > வந்தாழவோ

வந்தார் > வநதாது

வந்தது > வந்திச்சி

மீனவர் பேச்சுமொழியில் அவர்தம் தொழில் நிமித்தம் பயன்படுத்தும் சொற்கள் ஏராளமாக உள்ளன. சிறப்பாக, மீன் பிடிக்க பயன்படும் வலை, கடலில் வீசும் காற்று ஆகியவற்றைப் பலப்பல வகைகளாக பாகுபடுத்தி, ஒவ்வொன்றையும் குறிக்க தனித்தனி சொற்களை இவர்கள் பயன்படுத்துகிறார்கள். அன்றாட வாழ்க்கையில் மீனவர்களின் புழக்கத்தில் இருக்கும் வலைகள், வலையின் பாகம், தோணி, துடுப்பின் பாகம், காற்று திசைகள், நீர், பெயர்கள், மீன்கள் ஆகியவற்றை வகைப் படுத்தும் பல அருஞ்சொற்களை சீனுவாச வர்மா (1977) தன் ஆய்வில் சேகரித்துத் தந்துள்ளார். அவற்றின் வகைப்பாடுகளும், சொற்களின் மாதிரிப்பட்டியலும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வலையின் பெயர்கள்	வலையின் பாகங்கள்
இழுப்பு கோவலெ	கடுப்பு
கவ்லெ வலெ	கவ்ரு
குழிவலெ	கெட்டு

கோனா வலெ

தூறி

சன்னா வலெ

மடங்கு

மாலு

சீனி

துடுப்பின் பாகங்கள்

தாவு 'துடுப்பு

கடையா தாவு

தலெயா தாவு

பின் தாவு

மின் தாவு

தோணியின் பெயர்கள்

ஆசின் தோணி

பூவாசிணி

மாந்தோணி

சீனித்தோணி

கல் ஆசிணி

கொட்டாஞ்சி ஆசிணி

காற்றின் பெயர்கள்

கொண்டல் 'கீழ்த்திசைக்காற்று'

நேர்கொண்டல்

சோழ கொண்டல்

வாடெ கொண்டல்

கோடை 'மேல்திசைக்காற்று'

வாடை 'வடதிசைக்காற்று'

திசைகள்

வடக்கு

வடகோடை

தெக்கு

தெம்மேலு

கெழக்கு

மேக்கு

நீரின் பெயர்கள்

ஏறிணி

வத்தோம்

தெழிவு

தருப்பு

சேறு

பாறு

மேமுறி

மீன்களின் பெயர்கள்

ஆர்லு

எர்தி

கனவா

கழுத்தி

காக்காம்

காதெ

காலா

வன்னி மேமுறி	கிளிசெ
தென்னி மேமுறி	கெழுங்கான்
வாங்சிப்பா	சீலா

<u>நண்டு</u> <u>வகைகள்</u>

ஒத்மெதக்கால் நண்டு

கழி நணடு

வெள்ளை நண்டு

சீவாழ் நண்டு

சாக்கெ நண்டு

பேச்சக்கா நண்டு

மரய்க்கா நண்டு

உப்பளத்தொழில் பேச்சு மொழி

உப்பளத்தொழிலில் பல வகுப்பினர் இன்று ஈடுபட்டுள்ளார்கள். இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பல வகுப்பினருக்கும் தனித்தனி பேச்சு மொழி இருந்தபோதிலும், இவர்களிடையே இருந்து வரும் தொழில் பற்றிய சொற்கள் பொதுவானவை ஆகும்.

உபபளத தொழிலில் பயன்படுத்தப்படும் அருஞ்சொற்களின் பட்டியலைச் சீனுவாசவர்மா (1977) தொகுத்துள்ளார். அவற்றுள் சில சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பொன்னுப்பு	'முதலில் எடுக்கப்படும் உப்பு'
கல்லுப்பு	'பெரிய கட்டிகளான உப்பு'
தவிடு/நொய் உப்பு	'சிறிய மணிகள் போன்ற உப்பு'
களர்	'உவர்நிலம்'
காரம்	'உப்பின் தன்மை'
பரவல்	'கடல்நீரை முதன் முதலில் தேக்கிவைக்கும் இடம்'
தொட்டம்	'இரண்டாவதாக நீரை தேக்கிவைக்கும் இடம்'

வார்பலகை	'உப்பைத் திரட்ட பயன்படும் கோல்'
வட்டி	'உப்பு திரட்ட பயன்படும் தடுக்கு'
தூக்கு	'உப்புக் கூடையில் உள்ள கயிறு'
வார்சரம்	'உப்புக்குவியலின் மீதுள்ள களிமண் பூச்சி'
அம்பாரம்/பட்டரை	'பெரிய உப்புக்குவியல்'
அச்சுமாத்தல்	'களர் நிலத்தை உப்பளமாக மாற்றுதல்'

குயவர் பேச்சு மொழி

தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக வாழ்ந்து வரும் இந்த இனத்தவருக்கு 'வேளார்' 'உடையார்' ஆகிய பட்டப்பெயர்கள் உள்ளன. இவர்கள் வாழும் இடத்தில் பெரும்பான்மையோரால் பேசப்படும் பேச்சுமொழியையே இவர்களும் பேசினாலும், தொழிலின் நிமித்தம் பயன்படுத்தப் படும் சொற்கள் எல்லா இடங்களிலும் வாழுவோரிடையே பொதுவாக உள்ளன.

சிதம்பரத்தை அடுத்துள்ள குயவர் பாளையத்தில் வாழும் இம்மக்கள் பயன்படுத்தும் அருஞ்சொற்களைச் சீனுவாச வர்மா **(1977)** தம் ஆய்வில் சேகரித்துள்ளார். கருவிகள், மண் பாண்டங்களின் பெயர்கள், பானையின் பாகங்கள் மற்றும் தொழில் செய்முறைகள் என்ற தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பட்ட அருஞ்சொற்கள் சிலவற்றைக் கீழே காணலாம்.

கருவிகள்	மண் பாண்டங்களின் பெயர்கள்
திருவை	கலயம்
திருவைமுன்னை	மொந்தை
இடுமம்	சாலுங்கரவம்
இடுமக்கட்டி	சாலு
குதும்பை	கண்ணார மூடி
பலக்கட்டை	மடக்கு
நீர்சீலைத்துணி	செலெ

குடத்துக்கல்	குர்து
பானைக்கல்	ஒரே

பானையின் பாகங்கள்	வேலைப்பாடு
தலெ	பூ குத்ரது
கழுத்து	மாலெ குத்ரது
புருவம்	டச்ச சாமான்
பாதொம்	சுட்ட சாமான்
அடிக்கலொம்	கருஞ்சூளெ சாமான்

செய்முறைகள்		
நெரவல்	(சில்வார்)	'இளங்காற்று'
தட்டுக்கலம்	(தாரு)	'உடைதல்'
குமி		ரெங்கு 'நிறம்'
தணி		

4.4. முதுவர் கிளைமொழி (தமிழ்)

தமிழ்நாட்டில் பழங்குடி இனத்தவராகக் கருதபபடும் முதுவர் இன மக்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைமலைப்பகுதிகளிலும், மதுரை மாவட்டத்தில் ஏலமலை யிலும், கேரள மாநிலத்திலும் வாழ்கிறார்கள். 1971 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் இவ்வின மக்களின் மொத்த மக்கட்தொகை 4575 ஆகும். இந்த மக்கட்தொகையில் 890 பேர் தமிழ் நாட்டிலும் 3685 பேர் கேரள மாநிலத்திலும் வாழ்கிறார்கள். இவ்வின மக்கள் 'முதுவர்', 'முதுவான்', 'தகப்பன்மார்கள்' என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்.

முதுவர்கள் பேசும் பேச்சு தமிழின் ஒரு கிளை மொழியே என அறிஞர்கள் (தர்ஸ்டன்: 1909., சக்திவேல்:1978) தம் ஆய்வில் கூறுகிறார்கள். "முதுவர்களின் பேச்சுமொழி சில மலையாள சொற்கள் கலந்த தமிழின் கிளைமொழியாகும்"

என்பது தர்ஸ்டனின் கருத்தாகும். விளக்க மொழியியல் அடிப்படையில் முதுவர் பேச்சுமொழியின் விளக்க இலக்கணம் ஒன்றை வெளியிட்டுள்ள சக்திவேல் *(1978)* முதுவர் பேச்சுமொழி தமிழின் கிளைமொழியே என்கிறார். பல நூற்றாண்டுகளாக தமிழ் பேசப்படும் பெரும் பகுதிகளினின்றும் பிரிந்து மலைப்பகுதிகளில் முதுவர்கள் வசித்து வருவதால் இந்தக் கிளை மொழியில் சில மொழியியல் கூறுகள் மாறுபட்டுள்ளன. மேலும் இவர்களுக்கு அண்டைப் பகுதிகளில் மலையாளம் பேசுவோர் வாழ்ந்து வருவதாலும் முதுவர்களின் கிளை மொழியில் பல மலையாளச் சொற்கள் காணப்படுகின்றன என சக்திவேல் கூறுகிறார்.

இந்தக் கிளைமொழியில் /ய்/ ஒலியன் நிலை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மூலத்திராவிட மொழியின் (Proto-Dravidian language) /*a / ஒலியன் முதுவர் கிளைமொழியில் பெரும்பாலான இடங்களில் /e/ ஒலியனாக மாறியுள்ளது. மேலும், மூலத்-திராவிட மொழியின் /*1/ ஒலியன் இந்தக் கிளைமொழியில் /y/ ஒலியனாக மாறியுள்ளது. ஒலியனியல், இலக்கணம் மற்றும் சொற்கள் ஆகிய எல்லாக் கூறுகளிலும் முதுவர் பேச்சு தமிழின் தென் கிளை மொழியோடு இணைந்து உள்ளது என்பார் சக்திவேல்.

சக்திவேல் தன் ஆய்வில் தநதுள்ள முதுவர் கிளை மொழியின் மொழியியல் கூறுகளைக் கீழ்வரும் பகுதிகளில் தொகுத்துக் காண்போம்.

ஒலியனியல்

முதுவர் கிளைமொழியில் *10* உயிரொலியன்களும் (i, i:, e, e:, a, a:, u, u:, o, o:), *14* மெய்யொலியன்களும் /p, t, ṭ, c, k, m, w, w, w, r, l, l, v, y) உள்ளன. எல்லா உயிரொலியன்களும், சொற்களின் (முதல், இடை, கடைநிலைகளிலும் வருகின்றன. /ṅ, ṇ, *l*/ ஆகிய மூன்று மெய்யொலியன்களைத் தவிர ஏனைய எல்லா மெய்யொலியன்களும் சொல்லின் முதனிலையில் வருகின்றன. இவற்றுள் /ṭ/ ஒலியன் மற்றமொழிச் சொற்களில் மட்டுமே முதனிலையில் வருகிறது. எல்லா மெய்யொலியன் களும் சொல்லின் இடைநிலையில் வருகின்றன. /p, t, ṭ, c, k, w, v/ ஆகிய ஒலியன்களைத் தவிர ஏனைய மெய்யொலியன்கள் சொல்லின் கடைநிலையில் வருகின்றன. உயிரொலி இணைவு

(Vowel cluster) இந்தக் கிளைமொழியில் காணப்படவில்லை. மெய்யொலி இணைவுகள் சொல்லின் முதலிலும், கடையிலும் வருவதில்லை. இரு மெய்யொலி இணைவுகள் அதிக அளவிலும், மூன்று மெய்யொலி இணைவுகள் குறைவாகவும் காணப்படுகின்றன. இவ்விருவகை மெய்யொலி இணைவுகளும் சொல்லின் இடைநிலையில் மட்டுமே வருகின்றன.

தொல் திராவிட மொழியில் உள்ள சில ஒலியன்கள் இந்தக் கிளைமொழியில் மாறி ஒலிப்பதாக முன்பு கண்டோம். அவை பற்றிய விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

1. தொல்திராவிட மொழியின் / l̲ / இக்கிளை மொழியில் / y / என ஒலிப்பது.

kalutai > keyta 'கழுதை'

ko:l̲i > ko:yi 'கோழி'

va:l̲ai > va:ya 'வாழை'

2. தொல் திராவிட மொழியின் */ l / இக்கிளைமொழியில் ஈரசைச் சொற்களில் குறிலுக்குப் பிறகு / yy / என ஒலிப்பது

Malai > mayya 'மழை'

kuli > kuyyi 'குழி'

3. தொல் திராவிட மொழியின் */ a / இக்கிளை மொழியில் */ e / என ஒலிப்பது

ari > eri 'அரிசி'

aliyan > eliyan 'மைத்துனன்'

pani > peni 'பனி'

pala > pela 'பலா'

tayir > teyir 'தயிர்'

kanci > kenci 'கஞ்சி'

mancu > mencu 'மேகம்'

mayil > meyil 'மயில்'

இலக்கண நிலை

கீழ்க்காணும் மூவிடப் பெயர்கள் இந்தக் கிளை மொழியில் உள்ளன.

தன்மை ஒருமைப்பெயர் /na:nu/

தன்மை பன்மை உளப்பாட்டுப் பெயர் (inclusive) : /nammal/

தன்மை பன்மை உளப்பாடில்லா பெயர் (exclusive) : /ennal/

முன்னிலை ஒருமைப்பெயர் : ni: ~ niyyi/

முன்னிலை பன்மைப்பெயர் : ni:nnal/

படர்க்கைப் பெயர்கள் : அவன், அவள், அது, இவன், இவள், இது.

இந்தக் கிளை மொழியில் எட்டு வேற்றுமைகள் உள்ளன அவையாவன:

1. சுட்டு வேற்றுமை (accusative) : / – a /
2. கருவிப்பொருள் வேறறுமை (instrumental) : / –a : le /
3. உடனிகழ்ச்சி வேற்றுமை (sociative) : / –o:ta /
4. கொடைப்பொருள் வேற்றுமை (dative) : /-kku/
5. நோக்கப்பொருள் (purposive) : / –akka:ka~ – kka:ka /
6. நோக்க வேற்றுமை (ablative) : / – irunnu /
7. உடைமைப்பொருள் வேற்றுமை (genitive) : /–ṛa ~ –a /
8. இடவேற்றுமை (locative) : /-il ~ - a:ttu/

இந்தக் கிளை மொழியில் காணப்படும் காலங்காட்டும் விகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இறந்தகால விகுதிகள் : /–tt-, –nt-, –n-, –i-/

நிகழ்கால விகுதிகள் : /–kkutt–, –tt–, –nr–/

எதிர்கால விகுதிகள் : /–pp–, –v–, –um/

பன்மை ஏவல் வினையைக் குறிக்க /–an/ விகுதி பயன்படுத்தப்படுகிறது.

(உ.ம்)

குடி-அன் > குடியன் 'குடியுங்கள்'

பேச்-அன் > பேசன் 'பேசுங்கள்'

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் பயன்படும் இடப்பெயர் விகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. தன்மை ஒருமை: / –e:n /

(உ.ம்) koṭu–tt–e: n > koṭutte:n 'கொடுத்தேன்

2. தன்மை பன்மை: /-o:m/

(உ.ம்) koṭu-tt-o:m > koṭutto:m 'கொடுத்தோம்'

3. முன்னிலை ஒருமை: / –a /

(உ.ம்) koṭu-tt-a > koṭutta 'கொடுத்தாய்'

4. முன்னிலை பன்மை : /-aru/

(உ.ம்) va-nt-aru > vantaru 'வந்தாய்'

5. படர்க்கை ஆண்பால் ஒருமை: /-a:n/

(உ.ம்) paṭi-pp-a:n > patippa:n 'படிப்பான்'

6. படர்க்கை பெண்பால் ஒருமை: /-atu/
அஃறிணை ஒருமை மற்றும்
அஃறிணை பூன்மை 'வந்தாள்/வந்தது/வந்தன'

(உ.ம்) va-nt-atu > vantatu

7. படர்க்கை உயர்திணை பன்மை: /-a:ru/

(உ.ம்) va-nt-a:ru > vanta:ru 'வந்தார்கள்'

முதுவர் கிளைமொழியில் வழக்கில் உள்ள அருஞ்சொற்களின் சிறு பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

<u>பெயர்ச்சொல்</u>

inive : 'குரங்கு'

nuṅṅu 'மிருகம்'

'te:ni:ci 'தேனீ'

eccu 'நத்தை'

alla:ko:yilu 'கொசு'

peni 'பனி'

pari 'கூடை'

t:mpa 'மண்வெட்டி'

kerku 'மீன்'

<u>வினைச்சொற்கள்</u>

o:kka:ni 'வாந்தி எடுக்க'

tiri 'திருப்ப'

ter 'கொடுக்க'

ki:r 'கிழிக்க'

kata: 'திட்ட'

vi:ttu 'ஊற்ற'

vi:y 'ஊத'

va:ṅṅu 'வாங்க'

veyyi 'விட்டெறிய'

vve: 'கொதிக்க'

4.5. காண'க்காரர் கிளைமொழி (தமிழ்)

தமிழ்நாட்டில் இன்று கணக்கில் உள்ள பழங்குடி மக்கட் பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை 36 என முன்பு கண்டோம். இவற்றுள், கன்னியாகுமரி மாவட்டத்திலும்

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில் வாழும் காணிக்காரர் எனப்படும் பழங்குடி மக்களும் அடங்குவர். 1971 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கீட்டின்படி தமிழ்நாட்டில் இப்பழங்குடி மக்களின் மொத்த எண்ணிக்கை 2413 ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் காணிக்கார பழங்குடியினரின் எண்ணிக்கை 2123 ஆகும். திருநெல்வேலி மாவட்டத்தில் ஐந்து கிராமங்களில் மட்டுமே காணப்படும் இவர்களின் எண்ணிக்கை 290 ஆகும். அண்டை மாநிலமான கேரளாவில் திருவனந்தபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நெய்யாற்றங்கரையிலும், குய்லான் மாவட்டத்திலும் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்கள் தாம் பேசும் பேச்சை 'மலம்பாஷை' என்று கூறிக்கொள்கின்றனர். 1961 - ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கீட்டின் அறிக்கை காணிக்காரரது பேச்சு தமிழ்ச் சொற்கள் நிறைந்த மலையாளக்கிளைமொழி எனக் கூறுகிறது. இப்பழங்குடி மக்களைப்பற்றி தன் மானுடவியல் ஆய்வில் சு. சக்திவேல் (1980) காணிக்காரர் பேசும் மொழி தமிழின் கிளைமொழியே என அறுதியிட்டுக் கூறுகிறார். இவர் தம் முடிவுக்குச் சில சரித்திரச் செய்திகளையும், இம்மொழியில் தற்போது காணப்படும் மொழியியல் கூறுகளையும் சான்று களாக எடுத்துக்காட்டி விளக்குவது இங்கு குறிப்பிடத்தக்கது. காணிக்காரர்களின் பழமையான வரலாறு இவர்கள் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் வாழ்ந்தவர்களே என சுட்டிக் காட்டுகிறது. மலையாள மொழிக் கூறுகள் இவர்களது பேச்சில் இருப்பதனாலேயே, இதை மலையாளக் கிளைமொழி எனக் கூற இயலாது என சக்திவேல் கருதுகிறார். மேலும் மலையாள மொழியில் சிறப்புக் கூறான மூக்கினமாதல் (Nasalisation) இவர்களது பேச்சில் இல்லை. இவர்களது பேச்சில் உள்ள ஏராளமான சொற்களும் இதைத் தமிழின் கிளை மொழியே என்பதை வலியுறுத்திக் காட்டுகிறது என்பார் சக்திவேல்.

காணிக்காரர் பேச்சு வழக்கைப்பற்றிய தன் மொழியியல் ஆய்வில் எஸ். அகஸ்தியலிங்கம் (1976) தமிழ் மொழியின் ஒரு கிளைமொழியே இந்தப் பேச்சு வழக்கு என திட்டவட்டமாகக் கூறுகிறார். காணிக்காரர் தாம் பேசும் மொழியை 'மலம்பாஷை' எனக் குறிப்பிடுவதாக முன்பு கண்டோம். 'மலையின் மொழி' அல்லது 'மலையில் வாழ்வோரின் மொழி' என இதற்குப் பொருள் கொள்ளலாம்.

1961 - ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கீடு காணிக்காரரின் பேச்சை மலையாளக் கிளைமொழி என வகைப்படுத்தி இருப்பினும், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வாழும் காணிக்காரர்கள் தாங்கள் பேசும் மொழியைத் தமிழ் என்றே கூறுவதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தகவல் தெரிவிக்கிறது. இவ்வின மக்கள் திருநெல்வேலியிலிருந்து கொடையார் பகுதியில் வந்து குடியேறியுள்ளதாக இவர்களிடையே வழங்கும் நாடோடிக் கதைகளில் இருந்து அறிய முடிகிறது.

எஸ். அகத்தியலிங்கம் தன் ஆய்வில் பல்வேறு மொழியியல் கூறுகளைச் சான்று காட்டி, காணிக்காரர் பேசுவது தமிழின் ஒரு கிளை மொழியே எனக் கூறுகிறார். அவையாவன: இந்தக் கிளைமொழியில் மலையாள மொழிக் கலப்பு மிக அதிகமாக உள்ளது உண்மையே. / ṅ / மற்றும் / ñ / ஒலியன்கள் இக்கிளைமொழியில் காணப்படுவதனாலேயே இதை மலையாள மொழியின் கிளைமொழி எனக் கூற இயலாது. காணிக்காரர் வாழும் பகுதிகள் மலையாளம் பேசப்படும் பகுதி களுக்கு மிக அண்மையில் இருப்பதனால் இந்த ஒலியன்கள் நிலவழிக் கூறுகளாக (areal features) உள்ளன. மேலும் இவ்விரண்டு ஒலியன்களும் ஒரு சில இயற்பெயர் களிலும் (proper nouns) பொதுப் பெயர்ச்சொற்களிலும் (common nouns) மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

மலையாள மொழியின் சிறப்பியல்பான மூக்கினமாதல் (Nasalisation) இக்கிளைமொழியில் வழங்கும் பெரும்பாலான சொற்களில் காணப்படவில்லை. இதற்கான பட்டியலையும் எஸ். அகத்தியலிங்கம் தன் ஆய்வில் தந்துள்ளார். அவற்றுள் சில சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ituṅku	'தானியம்'
i:ra:ṅkam	'வெங்காயம்'
ewṛ ṇanku	'ஒத்துக்கொள்'
alạnku	'அடங்கு'
amunku	'அமுங்கு'

ayntu	'ஐந்து'
otuṇku	'ஒதுங்கு'
u ḷuntu	'உளுந்து'
uruñju	'உரிஞ்சு'

மலையாள மொழியில் ஒலியன் நிலையில் உள்ள /l̲/ இந்தக் கிளை மொழியில் காணப்படவில்லை. தமிழின் கிளை மொழிகள் பலவற்றில் இந்த ஒலியன் இன்றைய வழக்கில் பயன்பாட்டில் இல்லை. மேலும் கன்னியாகுமரி பகுதியில் உள்ள தமிழின் பல கிளைமொழிகளும் கூட ஒலியனை இழந்து விட்டன. காணிக்காரர் கிளைமொழியும் மற்ற கிளை மொழிகளைப் போலவே /l̲/ ஒலியனை இழந்து விட்டது. /l̲/ ஒலியன் உள்ள சொற்களில் எல்லாம் / ḷ / ஒலியனே தற்போது பயனில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

மாற்றுப்பெயர் முற்றுகள் (pronominal terminations) மலையாள மொழியில் இல்லாதது போலவே காணிக்காரர் கிளை மொழியிலும் கிடையாது. இதனாலேயே இக்கிளை மொழியை மலையாளத்தின் கிளைமொழி எனக் கூறிவிட இயலாது. ஏனெனில் மாப்பிளா கிளைமொழியைப் போன்ற சில மலையாளத்தின் கிளை மொழிகளில் மாற்றுப்பெயர் முற்றுகள் காணப்படுகின்றன. மாற்று பெயர் முற்றுகள் இல்லாததாலேயே காணிக்காரர் கிளை மொழியை மலையாளத்தின் கிளைமொழி என முடிவு செய்தால, மாற்றுப் பெயர் முற்றுகள் உள்ள மாப்பிளா கிளை மொழியை மலையாளத்தின் கிளைமொழி என ஏற்றுக்கொள்வது எங்ஙனம்? மலையாள மொழியில் ஒலியன்களாக உள்ள /n/, /ñ/ காணிக்காரர் கிளைமொழியில் காணப்படுவதற்கான காரணம் நிலவழிக்கூறு மட்டுமே என முன்பு கண்டது போல், காணிக்காரர் கிளைமொழியில் மாற்றுப் பெயர் முற்றுகள் காணப்படாதற்குக் காரணமும் மலையாள மொழி வழங்கும் இடத்திற்கு மிக அண்மையில் காணிக்காரர் வாழ்ந்து வருவதும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று எஸ். அகஸ்தியலிங்கம் கூறுகிறார்.

கீழ்வரும் பகுதிகளில், எஸ். அகத்தியலிங்கம் ஆய்வில் தந்துள்ள காணிக்காரர் கிளை மொழியின் மொழியியல் சிறப்பியல்புகளைத் தொகுத்துக் காண்போம்.

ஒலியனியல் நிலை

உயிர் குறில் ஒலியன்கள் /i, e, a, u, o/ ஆகிய ஐந்தும் இவற்றின் நெடில்களும் இந்த கிளை மொழியில் உள்ளன. ஒலிப்புடையொலிகளான /b/ மற்றும் /j/ ஆகிய இரண்டும் தடையின ஒலிகளில் ஒலியன்களாக உள்ளன. மேலும் இந்தக் கிளை மொழியில் /m, n, ṇ, ñ ,ṇ/ ஆகிய ஐந்து மூக்கொலிகள் ஒலியன் நிலைபெற்றுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. /ñ/ மற்றும் /ṇ/ ஆகிய இரண்டும் தமிழின் பெரும்பாலான கிளை மொழிகளில் ஒலியன் நிலையில் இல்லை. ஒரு சில கிளை மொழிகளில் /ñ/ ஒலியனாக இருந்தாலும் தமிழின் இந்தக் கிளைமொழிகளில் /ṅ/ ஒலியன் நிலை பெறவில்லை. பிரிவிளியின ஒலியன்களை (laterals) பொறுத்தவரை, தமிழின் மற்றைய பெரும்பாலான கிளை மொழிகளைப் போன்றே காணிக்காரர் கிளை மொழியிலும் /l/ மற்றும் /ḷ/ ஆகிய இரண்டு ஒலியன்களே உள்ளன. மேலும் நாஞ்சில் நாட்டின் வட்டாரக் கிளை மொழியின் சிறப்பான /r/, /r̲/ பாகுபாடு இந்தக் கிளைமொழியிலும் உள்ளது. அதாவது, /r/ மற்றும் /r̲/ ஆகிய இரண்டும் ஒலியன்களாக காணிக்காரர் கிளை மொழியிலும் உள்ளன.

இலக்கண நிலை

/na:nu/, /na:nkam/ மற்றும் /nammam/ ஆகியன காணிக்காரர் கிளை மொழியில் உள்ள தன்மைப் பெயர்ச் சொற்களாகும். இவற்றுள் /nammam/ தன்மைப்பன்மை உளப்பாட்டு பெயர்ச்சொல்லாகும். /na:ṇ kam/ உளப்பாடில்லா தன்மை பன்மை பெயர்ச்சொல்லாகும். முன்னிலை ஒருமை பெயர் சொல் / niyyu / வும், பன்மை பெயர்ச் சொற்கள் / ni:ṅkal / மற்றும் / ni:ṅka / ஆகியனவும் இக்கிளைமொழியில் உள்ளன.

இந்தக் கிளை மொழியில் ஐந்து ஆண்பால் விகுதிகள் உள்ளன. அவையாவன:/ayn, -a:n, -av, -van, – ϕ / ஆகியனவாகும். பெண்பால் விகுதிகள் ஒன்பது உள்ளன. அவையாவன / -al(u), -i, -tti (-cci), a:tti, -a:tti, -aṭṭi, -acci, -va:l (u) ஆகியனவாகும்.

இந்தக் கிளை மொழியில் உள்ள வேற்றுமைகளும் அவற்றின் உருபுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. சுட்டு வேற்றுமை / –e /, / –a /
(Accusative)

2. கருவிப்பொருள் / –a:le /, /-koṇṭu /
(Instrumental)

3. உடனிகழ்ச்சி வேற்றுமை / o:ṭe / , / -ṭeku:te /
(Sociative)

4. கொடைப்பொருள் வேற்றுமை /-kku/ , /-ukku/
(Dative)

5. நோக்க வேற்றுமைகள் /-le:nnu, /-ṭe aṭuttu/
(Ablative)

6. உடைமைப்பொருள் வேற்றுமை /-ṭe/, / - iṭe/
(Genitive)

7. இடவேற்றுமை /-le/, /-i/
(Locative)

8. ஒப்புமை வேற்றுமை /-o:ṭe /, / - ilirutu /
(Comparative)

இந்தக் கிளைமொழியில் காணப்படும காலங்காட்டும் விகுதிகள் கீழே தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இறந்தகால விகுதிகள் : /-t-/, /-i-/, /-nt-/s

நிகழ்கால விகுதிகள் : /-in-/, /-inatu-/

எதிர்கால விகுதிகள் : /-um/

காணிக்காரர் கிளைமொழியின் வழக்கில் உள்ள அருஞ்சொற்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பெயர்ச்சொற்கள்

ili	'இடுப்பு'
iravalli	'வெங்காயம்'
apattam	'அபாயம்'

appu	'குகை'
acci	'அக்காள்'
picci	'மல்லிகை'
pilla	'குழந்தை'
pu:cca	'பூனை'
tettu	'தவறு'
tuṭṭi	'சாவு'

வினைச் சொற்கள்

eḷi	'எழுந்திரு'
aye	'அழை'
ottu	'மோது'
/poṇe/	'இணை'
/vi:ttu/	'ஊற்று'
/viḷi/	'கூப்பிடு'
/vil/	'விற்பனை செய்'
/moḷe/	'முழி'
/akri/	'எரி'
/eturu/	'எதிர்'

எண்ணுப் பெயர்கள்

1. are 'பாதி'
2. onnu 'ஒன்று'
3. ayntu 'ஐந்து'
4. a:ru 'ஆறு'
5. eṭṭu 'எட்டு'
6. ombatu 'ஒன்பது'
7. patinonnu 'பதினொன்று'

8.	patimu:ṇu	'பதிமூன்று'
9.	patinañji	'பதினைந்து'
10	patina:ṛu	'பதினாறு'
11.	pattombatu	'பத்தொன்பது'
12.	iruvatu	'இருபது'
13.	ambatu	'ஐம்பது'
14.	aruvatu	'அறுபது'
15.	embatu	'எண்பது'
16.	a:yaram	'ஆயிரம்'

பெயரடைகள்

eḷaye	'இளமையான'
beḷiye	'பெரிய'
nalle	'நல்ல'

வினையடைகள்

payye	'மெதுவாக'
ceṇam	'திடீரென்று'

4.6. எருக்கலா கிளைமொழி (தமிழ்)

'எருக்கலா' என்று அழைக்கப்படும் இந்தப் பழங்குடி இனத்தவர் ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகா மாநிலங்களில் பரவலாகக் காணப்படுகின்றனர். 1971 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டின்படி இந்தியாவில் எருக்கலா மக்களின் மொத்த எண்ணிக்கை 67,552 ஆகும். அறுவடை நாட்களில் ஆந்திர மாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்து மூங்கிலினால் ஆன கைவினைப் பொருட்களை விற்பனை செய்யும் இவ்வின மக்கள் தமிழ் நாட்டினரால் 'குறவர்கள்' என அழைக்கப்படுகிறார்கள்.

'எருக்கலா' எனப் பெயரேற்பட்டதற்குக் காரணத்தை ஆராயும் சீனுவாச வர்மா (1972) கீழ்க்கண்ட கருத்தைத்

தெரிவிக்கிறார். தெலுங்கு மொழியில் 'எருக்கு' எனறால் 'அறிதல்' என்று பொருள்படும். எருக்கலா பெண்கள் தெருவில் குறிசொல்லப் போகும் போதெல்லாம் 'எருக்கோ அம்மா, எருக்கு' என்று கூவிக்கொண்டே செல்வதைப் பழக்கமாகக் கொண்டவர். தெலுங்கு மக்கள் 'எருக்கு' என்ற சொல்லைப் பயன்படுத்திய இவ்வின மக்களை 'எருக்கலவாரு' என்று அழைக்கின்றனர். இவ்வின மக்கள் தங்கள் இனத்தை 'குர்று' இனத்தவர் என்று கூறிக் கொள்கின்றனர். 'குறவர்' என்ற சொல்லின் குறை வடிவம் தான் 'குர்று' என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எருக்கலா இனத்தவரில் ஆறு பெரும் பிரிவினர் உள்ளனர். இப்பிரிவுகள் அவர் செய்யும் தொழில்களின் அடிப்படையில் உருவானவையாகும்.

தர்ஸ்டன் இவ்வின மக்களைப்பற்றித் தன் ஆய்வில் குறிப்பிடும்போது, "எருக்கலா இனத்தவர் தமிழ் நாட்டில் 'குறவர்' என்றே அழைக்கப்படுகின்றனர். ஓர் இடத்தில் நிலைத்து இல்லாது, பல இடங்களுக்குச் சுற்றித் திரியும் நாடோடி இனத்தவரான இவ்வின மக்கள் கூடை முடைவதையும், குறி சொல்வதையும் தம் தொழில்களாகக் கொண்டுள்ளனர்", என்று குறிப்பிடுகிறார். இவர்கள் பேசும் பேச்சு சிதிலமடைந்த தமிழ் எனவும் தர்ஸ்டன் (1909) கூறுகிறார்.

1891 - ஆம் ஆண்டின் சென்ஸஸ் கணக்கீட்டு அறிக்கையில் இருந்து 1961 - ஆம் சென்ஸஸ் அறிக்கை வரை வெளிவந்துள்ள எல்லா சென்ஸஸ் ஆய்வுகளிலும் தமிழின் ஒரு கிளைமொழியே எருக்கலா என்னும் கருத்து தொடர்ந்து நிலவி உள்ளது. 1891 - ஆம் ஆண்டு சென்ஸஸ் அறிக்கையைத் தயாரித்த சுய்ட், இருளா, கசவா ஆகிய இரண்டினோடு எருக்கலாவையும் இணைத்து, இவை மூன்றுமே தமிழின் கிளைமொழிகள் தாம் எனக் கூறுகிறார். 'இந்திய மொழிகளின் ஆய்வு' என்னும் தனது ஆய்வில் கிரியெர்ஸனும் (1914) எருக்கலா தமிழின் கிளைமொழி என்று குறிப்பிடுகிறார். குர்ரெட்டி (Gurrenddy : 1968) மற்றும் பட் (Bhat : 1968) ஆகிய இரு அறிஞர்கள் எருக்கலா தமிழின் கிளை மொழி இல்லை எனத் தம் ஆய்வுகளில் முடிவு செய்து உள்ளார்கள். எருக்கலா பேச்சைப் பற்றிய விளக்கவியல் இலக்கண ஆய்வில் சீனுவாச வர்மா (1978) எருக்கலா தமிழின் கிளை மொழியே என்றும், ஆனால் ஏனைய தமிழின் கிளைமொழிகளினின்றும் இது

சற்று வேறுபட்டுள்ளதாகவும் கூறுகிறார். எருக்கலா கிளை மொழிக்கும் தமிழுக்கும் ஒலியனியல் கூறுகளில் வேறுபாடுகள் அதிகமுள்ளன என்றும், இலக்கண நிலையில் வேறுபாடுகள் குறைவாக உள்ளன என்றும் எடுத்துக்காட்டுகளுடன் சீனுவாச வர்மா விளக்கியுள்ளார். அவையாவன:

ஒலியனியல்

1. தமிழ் உயிரொலியன் /a/ எருக்கலாவில் இரண்டு வகையில் மாறி ஒலிக்கிறது. அதாவது, சில சொற்களில் /o/ ஒலியனாகவும், சில சொற்களில் /e/ ஒலியனாகவும் மாறியுள்ளது.

இவ்விரு வகை ஒலியனியல் மாற்றங்களுக்கான காரணங்களைத் தற்போதைய நிலையில் விளக்கச் சான்றுகள் இல்லை என்று சீனுவாச வர்மா கூறுகிறார்.

(உ.ம்) a > a pattu > pottu ‘பத்து’

a > e pallu pellu ‘பல்’

2. தமிழ் /e/ ஒலியன் எருக்கலாவில் /o/ ஒலியனாக மாறியுள்ளது.

(உ.ம்) e > o

eṭṭu > oṭṭu ‘எட்டு’

3. தமிழ் /i/ ஒலியன் எருக்கலாவில் /o/ ஒலியனாக மாறியுள்ளது.

(உ.ம்) i > o

nilal > noga ‘நிழல்’

4. தமிழ் /o/ ஒலியன் எருக்கலாவில் /u/ ஒலியனாக மாறியோ-அல்லது /o/ ஒலியனாகவோ உள்ளது.

(உ.ம்) o > u/o

oṇṛu > unḍu ‘ஒன்று’

5. தொல் திராவிட மொழியின் */l̲/ ஒலியன் எருக்கலாவில் /g/ ஒலியனாகவோ, /r/ ஒலியனாகவோ /y/ ஒலியனாகவோ மாறியுள்ளது. சிற்சில சொற்களில்

*/ l̲ / ஒலியன் மறைந்தும் உள்ளது. ஆனால் பெரும்பாலான சொற்களில் /y/ ஒலியனாக மாறியுள்ளதைச் காண்கிறோம்.

(உ.ம்) */l/ > /g/

alu > agu 'அழு'

*/l̲/ > /r/

Kulantai > kev uru 'குழந்தை'

*/ l̲ / /y /

ko:l̲i > ko:yi 'கோழி'

*/l̲/ > / ϕ /

kal̲uvu > kev 'கழுவு'

6. தொல் திராவிட மொழியின் */ l̲ / ஒலியன் எருக்கலா எண்ணுப் பெயர்களில் (numerals) / ḍ / ஒலியனாக மாறியுள்ளது. இது தெலுங்கு மொழியில் இருந்து வந்த கடனாகக் கூட இருக்கலாம்.

(உ.ம்)

தெலுங்கு	எருக்கலா
ḍebhai / ḍabbhai > dabbav	'எழுபது'

சொல்லியல்

1. எண், பால், இடம் ஆகிய மூன்றுக்கும் நிகழ் காலத்தில் ஒரு முற்றுவினை மட்டுமே உள்ளது. அதாவது நிகழ் காலத்தைச் சுட்டும் வினை முற்று எண், பால், இடம் எதையும் விளக்காது.
2. எதிர்காலம் சுட்டும் உருபுகளில் / -mb- / உருபும் ஒன்றாகும். வேறெந்த தமிழின் கிளைமொழிகளிலும் இந்த உருபு காணப்படவில்லை.
3. உடைமைப் பொருள் வேறறுமை (genitive) உருபுகளான / –ṭ ṭu / மற்றும் -ne/-nas ஆகியவையும் வேறெந்த தமிழின் கிளைமொழியிலும் காணப்படவில்லை.

4. படர்க்கை இடப்பெயர்கள் (pronouns) பால், எண் ஆகியவற்றைச் சுட்டுவதில்லை.

கீழ்வரும் பகுதிகளில் எருக்கலா கிளை மொழியின் இலக்கணக் கூறுகளைத் (சீனுவாச வர்மா : *1978*) தொகுத்துக் காண்போம்.

ஒலியனியல்

எருக்கலா கிளைமொழியில் *11* உயிரொலியன்களும் (i, i:, e, e:, ü., a, a:, u, u:, o, o:), 22 மெய்யொலியன்களும் (p, b, t, d, ṭ, ḍ, c, j, k, g, m, n, ṇ, s, ṣ, r, l, ḷ, v, y) உள்ளன. எல்லா உயிரொலியன்களும் மூக்கின ஒலியன்களாகவும் உச்சரிக்கப்படும். இந்த மூக்கின உயிரொலிகளும் ஒலியன் நிலை பெற்று உள்ளன. /ü / ஒலியனின் நெடில் இக்கிளை மொழியில் இல்லை. மேலும் /ü/ ஒலியன் சொல்லின் முதனிலையில் வருவதில்லை. / e: /, / o / ஆகிய இரு உயிரொலியன்களும் சொல்லின் கடை நிலையில் வருவதில்லை. ஏனைய உயிரொலியன்கள் சொல்லின் எல்லா நிலைகளிலும் வரும். / ṇ, ḷ, ṣ / ஆகிய மூன்று மெய்யொலியன்களும் சொல்லின் முதனிலையிலும், / p, d, t, d, ṭ, ḍ, c, k, g, ṇ, ṣ, r, l, ḷ, v / ஆகிய மெய் ஒலியன்கள் சொல்லின் இறுதியிலும் வருவதில்லை.

உயிரொலி இணைவுகள் (Clusters) எருக்கலாவில் வருவது கிடையாது. இரு மெய்யொலி இணைவுகளும், மூன்று மெய்யொலி இணைவுகளும் உள்ளன. இவ்விரு வகை மெய்யொலி இணைவுகளும் சொற்களின் இடைநிலையில் வருகின்றன.

பெயர்ச் சொல்லியல்

எருக்கலாவில் /-a:da/, /-um/ -ka:nũ / /-na:yi/ ஆகிய ஆண்பால் விகுதிகளும், /-inci/. / -aḷ /, /-ḍsi/, /-pangiḍi/ ஆகிய பெண்பால் விகுதிகளும் உள்ளன. மேலும் po:ṭ ṭu/, /poṭ ṭe/ ஆகிய தனிச் சொற்களும் சொற்களின் முதலில் அமைந்து ஆண்பால், பெண்பாலை முறையே சுட்டுகின்றன. பெயர்ச் சொற்களில் ஒருமையைக் குறிக்க எந்தவித விகுதியும் இல்லை. ஆனால் பன்மை விகுதிகளாக /-a:, -ga, -galu, -lu, -ma:ru/ ஆகியன பயன்படுத்தப்படுகின்றன.

மூவிடப்பெயர்கள் பால் சுட்டுவதில்லை. ஆனால் ஒருமை பன்மைப் பாகுபாடு மூவிடப் பெயர்களில் உள்ளது. வினா விடப் பெயர்கள் பால், எண் ஆகிய இரு பாகுபாடுகளையும் காட்டுவதில்லை.

எருக்கலா கிளைமொழியில் உள்ள மூவிடப் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தன்மை ஒருமை	:	na:/na:nu
உளப்பாட்டுப் பன்மை	:	na:mbe/nambru
உளப்பாடில்லாப் பன்மை	:	na:nge/nange
முன்னிலை ஒருமை	:	ni:/ni:nu
பன்மை	:	ni:nga
படர்க்கை ஒருமை	:	atu
பன்மை	:	aya:s

எழுவாய் வேற்றுமை அல்லாது ஏழு வேற்றுமைகள் இந்தக் கிளைமொழியில் உள்ளன. அவையாவன:

1. சுட்டு (accusative)	:	/-ne/, /e/
2. கருவிப்பொருள் (instrumental)	:	/-la:re/~/-li/
3. உடனிகழ்ச்சி (associative)	:	/-o:ḍu/
4. கொடைப்பொருள் (dative)	:	/-ku~ -ki/
5. உடைமைப்பொருள் (genitive)	:	/-ttu ~ -ne/
6. இடம் (locative)	:	/-le/
7. நோக்கம் (ablative)	:	/-uṇḍi/

வினைச்சொல்லியல்

இறந்த கால விகுதிகள் /-tt-,-t-,-nd-,-n-,-s-/ ஆகியனவாகும். நிகழ் காலங்காட்டும் விகுதிகள் /-kya:r, -a:kr-, -ka:k, -a:k/-ak-, -kk-. kr-/ ஆகியனவாகும். எதிர் காலங்காட்டும் விகுதிகள் /pp-, -mb-, -um/ ஆகியவையாகும்.

ஏவல் ஒருமை எந்த விகுதியாலும் குறிப்பிடப் படுவதில்லை. ஏவல் பன்மை விகுதி /-ngo:/ ஆகும்.

முற்றா வினையைக் குறிக்க /-ga/ விகுதி வேர்ச் சொல்லுடன் இணைக்கப்படுகிறது.

பெயரெச்ச ஒற்று /-a/ ஆகும். இது காலங்காட்டும் விகுதிக்கும், எதிர்மறை விகுதிக்கும் பிறகு சொற்களோடு இணையும்.

எருக்கலா கிளைமொழியில் வழக்கில் உள்ள அருஞ்சொற்களின் சிறுபட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

agu	'அழு'	ceppu	'சொல்'
aggi	'நெருப்பு'	jalpu	'குளிர்'
a:va	'தந்தை'	soy	'காது'
a:y	'அவர்கள்'	ta:pom	'தந்தை'
ppu	'இப்பொழுது'	dara	'பணம்'
pu	'இடுப்பு'	na:lu	'நாள்'
kku	'உட்கார்'	po:le	'பூ'
erra	'சிகப்பு'	boddu	'மரப்பட்டை'
e:da	'குளிர்'	me:ta	'பெரிய'
olla	'வெள்ளை'	ya:baṿ	'ஐம்பது'
o:gu	'ஏழு'	vanti	'ஒட்டகம்'
ki:	'கை'	ga:j	'வளையல்'

4.7. புலையர் கிளைமொழி (தமிழ்)

புலையப்பழங்குடி இனத்தவர் தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் வாழ்ந்து வருகின்றனர். தமிழ்

நாட்டில் பழனிமலைப் பகுதிகளிலும், ஆனைமலைக் காடுகளிலும் புலையர் இனத்தவர் உள்ளனர். **1971** - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டின்படி, தமிழ்நாட்டில் **4308** புலையர்கள் உள்ளனர். புலையர்கள் கரூர், காங்கேயம் பகுதி களில் இருந்து பழனி மலைப்பகுதிகளுக்கு வந்து குடியேறி யதாகக் கூறப்படுகிறது. இவர்கள் அனைவருமே விவசாயக் கூலிவேலையில் ஈடுபட்டுள்ளார்கள். புலைய பழங்குடி இனத்தவரின் பேச்சு, தமிழின் ஒரு கிளை மொழி ஆகும். இவர்கள் வாழ்கின்ற இடங்களில் வாழும் மற்ற இனத்தவரின் பேச்சுக்கும் புலையர் கிளைமொழிக்கும் மிக அதிகமான மொழியியல் வேற்றுமைகள் காணப்படாவிடினும், புலையர் கிளைமொழியில் சில குறிப்பிடத்தக்க மொழியியல் கூறுகள் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. புலையர் கிளை மொழி பற்றிய ஒரு விளக்க மொழியியல் ஆய்வைச் சக்திவேல் **(1985)** மேற்கொண்டுள்ளார். கீழ்க்காணும் பகுதிகளில் புலையர் கிளைமொழி பற்றிய மொழியியல் கூறுகளைக் (சக்திவேல், **1985**) காண்போம்.

ஒலியனியல்

புலையர் கிளைமொழியில் *10* உயிரொலியன்களும் (i,i:, e,e:, a,a:,u,u:,o,o:), *14* மெய்யொலியன்களும் (p, t, ṭ, c, k, m, n, ṇ, ṣ, r, l, ḷ, v, y) உள்ளன. மெய்யொலியன்கள் /ṣ/ ஒலியன் வேற்று மொழிச் சொற்களில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. தொல் திராவிட /*l̲/ ஒலியன் இந்தக் கிளைமொழியில் /l/ஒலியனாக மாறி வந்துள்ளது. தொல்திராவிட /*v/ ஒலியன் இந்தக் கிளைமொழியில் /m/ ஒலியனாக மாறியுள்ளது.

சொல்லியல்

1. பால்-எண் விகுதிகள்

a) ஆண்பால் ஒருமை /-an/, /-van/, /-a:n/, / /

(உ.ம்) pe:r-an	> pe:ran	‘பேரன்’
kela-van	> kelavan	‘வயது முதிர்ந்தவர்’
pa:pp-a:n	> pa:ppa:n	‘பார்ப்பனர்’
a:ca:ri		‘ஆசாரி’

b) பெண்பால் விகுதி / -i /, /-tti/, /-a:tti/, /-cci/

(உ.ம்)	ma:m-i >	ma:mi	'மாமி'
	kosa:tti >	kosatti	'குயவர் பெண்'
	pa:pp-a:tti >	pa:ppa:tti	'பார்ப்பனப் பெண்'
	ceṭ ṭi-cci >	ceṭ ṭicci	'செட்டிப் பெண்'

2. மூவிடப் பெயர்கள்: தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று மூவிடப் பெயர்கள் உள்ளன. படர்க்கை மூவிடப் பெயர்கள் சுட்டுப் பெயர்களால் குறிக்கப்படு கின்றன.

தன்மை ஒருமை	:	na	
தன்மை உடன்பாட்டுப் பன்மை	:	namma	
தன்மை உளப்பாடில்லாப் பன்மை	:	na:wke	
முன்னிலை ஒருமை	:	ni	
முன்னிலைப் பன்மை	:	ni:nke	
படர்க்கை (சேய்மை)	:	a-va	'அவள்'
		a-ve	'அவன்'
		a-tu	'அது/அந்த'
படர்க்கை (அண்மை)	:	i-va	'இவள்'
		i-tu	'இது/இந்த'

3. புலையர் கிளைமொழியில் எட்டு வேற்றுமைகள் (எழுவாய், விளி வேற்றுமை அல்லாத) உள்ளன.

1.	சுட்டு வேற்றுமை (accusative)	:	–e
2.	கருவிப்பொருள் வேற்றுமை (instrumental)	:	–a:le
3.	உடனிகழ்ச்சி வேற்றுமை (Sociative)	:	–ku:te ~o:te

4. கொடைப்பொருள் வேற்றுமை (dative) : –akku, -ukku

5. நோக்கப்பொருள் வேற்றுமை (ablative) : kiṭ teruntu, -leruntu

6. உடைமைப்பொருள் வேற்றுமை (genitive) : --o:ṭe, - ϕ

7. இடவேற்றுமை (locative) : – kiṭṭe, -ile

8. காரணப்பொருள் வேற்றுமை (purposive) : –akka:ka

4. கால விகுதிகள்

1. இறந்த கால விகுதி : -t, -ut-, -in-, -tt-
2. நிகழ்கால விகுதி : -kir-, -r-, -ϕ
3. எதிர்கால விகுதி : -um-, -pp-, -v-

5. வினையெச்ச விகுதி : /-ma-/, /-u/

/-ma/ எதிர்மறை விகுதி /-a:/ இன் பிறகு வருகிறது.

/-u/ மற்ற இடங்களில் வருகிறது.

6. பெயரெச்ச விகுதி: /-a/

7. வினையாலணையும் பெயர்: வினையெச்ச விகுதியுடன், /aven /avaḷ/, /atu/ ஆகிய இடப்பெயர்கள் இணைவதன் மூலம் பிறக்கிறது.

4.8. பழியர் கிளைமொழி (தமிழ்)

பழியப்பழங்குடி இனத்தவர் தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் பழனிமலைக் குன்றுகளிலும், சிறுமலையிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியிலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் வாழ்கின்றனர். 1971 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டில், தமிழ்நாட்டில் பழியர்களின் மக்கட்தொகை 3108 பேர் எனக் காட்டப்பட்டுள்ளது. பழனி

மலைப்பகுதியில் வாழும் பழியர்களிடையே கல்லு பழியர், மேல் மலைப்பழியர் என இரு பிரிவுகள் உள்ளன. பழனி மலைப்பகுதியில் பழியர் இனத்தவர் தவிர, புலையர், குன்னுவர் ஆகிய பழங்குடி மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

பழியரின் பேச்சுமொழி தமிழின் ஒரு கிளை மொழியாகும். இவர்களது பேச்சுமொழிக்கும், அப்பகுதிகளில் வாழும் ஏனைய மக்களின் பேச்சு மொழிக்கும் மொழியியல் அடிப்படையில் பெருமளவு வேற்றுமைகள் காணப்படவில்லை. பழியர் பற்றிச் சிறு விளக்க மொழியியல் ஆய்வை முரளிதரன் (**1985**) மேற்கொண்டுள்ளார். அவ்வாய்விலிருந்து பழியர் பேச்சுமொழியின் கூறுகளைக் கீழே காண்போம்.

ஒலியனியல்

பழியர் கிளைமொழியில் ***10*** உயிரொலியன்களும் (i, i:, e, e:, a, a:, u, u:, o, o:), ***16*** மெய்யொலியன்களும் (p, t, ṭ, c, k, (j), m, n, ṇ, ṣ, l, ḷ, l̲, r, v, y) உள்ளன. /j/ மெய்யொலியன் வேற்று மொழிச் சொற்களில் மட்டுமே காணப்படுகின்றது. (உ.ம். /ji:ppu/ 'ஜீப் வண்டி').

சொல்லியல்

1. மூவிடப்பெயர்கள்

தன்மை ஒருமை	:	na:n / na:nu
தன்மை உளப்பாட்டுப் பன்மை	:	namme
தன்மை உளப்பாடில்லாப் பன்மை	:	na:nka/na:nkal
முன்னிலை ஒருமை	:	ni:
முன்னிலைப் பன்மை	:	ni:nka
படர்க்கை ஆண்பால் ஒருமை	:	avan, ivan
படர்க்கை பெண்பால் ஒருமை	:	avaḷ ivaḷ
படர்க்கை அஃறிணை ஒருமை	:	atu, itu

2. வேற்றுமை

பழியர் கிளைமொழியில் எட்டு வேற்றுமைகள் (எழுவாய் விளி வேற்றுமைகளைத் தவிர்த்து) உள்ளன. வேற்றுமை உருபுகள் கீழ் வருமாறு:

1.	சுட்டு வேற்றுமை (accusative)	:	–e
2.	கருவிப்பொருள் வேற்றுமை (instrumental)	:	–a:le
3.	உடனிகழ்ச்சி வேற்றுமை (Sociative)	:	–ku:ṭṭe
4.	கொடைப்பொருள் வேற்றுமை (dative)	:	–akku
5.	காரணப்பொருள் வேற்றுமை (purposive)	:	–akka:ka
6.	நோக்கப்பொருள் வேற்றுமை (ablative)	:	kitteruntu
7.	இடவேற்றுமை (locative)	:	– kitte

4.9. பச்சைமலை மலையாளி பேச்சு வழக்கு (தமிழ்)

தமிழ்நாட்டில் பழங்குடி இனத்தவராகக் கருதப்படும் மலையாளி இனத்தவர் சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு மற்றும் திருச்சி மாவட்டங்களில் வாழ்கின்றனர் என்றும், அவர்கள் அனைவரும் ஒரே இனத்தவராயினும், வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வருவதால் பழக்க வழக்கத்திலும் பேச்சு மொழியிலும் வேறுபட்டுள்ளனர் என்றும் 'கல்ராயன் மலையாளி பேச்சு வழக்கு' என்ற தலைப்பின் கீழ் கண்டோம். அவர்களுள் பச்சை மலைப்பகுதிகளில் வாழும் மலையாளிகள் 'பச்சைமலை மலையாளிகள்' என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அனைவருமே தமிழைத் தாய்மொழியாகக்

கொண்டிருந்தபோதிலும், பல பகுதிகளில் இவர்கள் பிரிந்து வாழ்வதால் இவர்களது பேச்சுமொழியில் குறிப்பிடத்தக்க மொழியியல் மாற்றங்கள் உருவாகியுள்ளன.

'பச்சைமலைப் பகுதி' என்றழைக்கப்படும் மலைப் பாங்கான பகுதி திருச்சிராப்பள்ளி, சேலம் மாவட்டங்களில் பரவியுள்ளது. இப்பகுதியில் *81* சிறு கிராமங்களில் பச்சைமலை மலையாளிகள் வாழ்ந்து வருகிறார்கள். *1981*-ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீட்டின்படி, இவர்களது மொத்த மக்கட்தொகை *9100* ஆகும் பச்சைமலை மலையாளி இனத்தவரைப் பிற மக்கள் 'மலையாளத்தான்' 'இந்து மலையாளி' என்ற பெயர்களாலும் அழைக்கின்றனர். இவர்கள் தங்களைக் 'கவனன்' என்றும், தங்கள் பேச்சு வழக்கை 'மலையாளத்தான் பாஷை' என்றும் கூறிக் கொள்கிறார்கள்.

பச்சைமலை மலையாளி பேச்சு வழக்கின் விளக்கவியல் இலக்கணத்தைத் தன் ஆய்வுப்பட்ட ஆய்வாக முத்துகிருஷ்ணன் *(1988)* ஆய்ந்துள்ளார். பச்சைமலை மலையாளிகள் பேசும் தமிழின் சிறப்பியல்புகளைக் கீழ்க்கண்ட பகுதிகளில் தொகுத்துக் காண்போம்.

இவர்களின் பேச்சு வழக்கைத் தமிழின் ஒரு வட்டார கிளைமொழி எனலாம் என்கிறார் முத்துகிருஷ்ணன். இவ்வினத்தவர் யாவரும் விவசாயம், வேட்டையாடுதல் போன்ற வேலைகளில் ஒன்றிணைந்து வாழும் ஒரு பழங்குடியினராயிருப்பதால் சமுதாய அடிப்படையிலான மொழி வேறுபாடுகள் இவர்களிடையே கிடையாது.

'கல்ராயன் மலைக் கிளைமொழி' 'கொல்லிமலைக் கிளைமொழி' என்பன போன்றே, 'பச்சைமலைக் கிளை மொழி' எனப் பச்சைமலை மலையாளிகளின் பேச்சு வழக்கைக் கூறலாம்.

ஒலியனியல்

1. இக்கிளைமொழியில் கீழ்காணும் ஒலியன் மாற்றங்கள் உருவாகி உள்ளன.

a) $i \rightarrow \left\{ \begin{matrix} o \\ e \end{matrix} \right\}$

(உ.ம்)	mu:ṅkil	>	mu:mkalu	'மூங்கில்'
	kiṇaru	>	keṇaru	'கிணறு'

b) e → o

teḷi > toḷi 'தெளி'

c) u → {i, o, a}

(உ.ம்) ci:ppu > ci:ppi 'சீப்பு'

pukayilai > povale 'புகையிலை'

ulakam > olakam 'உலகம்'

d) → {i, e, o, u}

(உ.ம்)

avaḷ > ave 'அவள்'

ulakkai > olekke 'உலக்கை'

maram > marom 'மரம்'

muḷukku > muḷukku 'மளுக்கு'

e) ai → {e, a}

talai > tale 'தலை'

kuṭicai > kuṭica 'குடிசை'

f) k → {v, l, j}

(உ.ம்) pukayilai > povale 'புகையிலை'

akappai > alappa 'புகை'

aṅku > anje 'அங்கே'

g) r → l

tiruppu > tiluppu 'திருப்பு'

h) n → m

ni:ccal > ni:cce 'நீந்துதல்'

i) n → l

aramanai > aramala 'அரண்மனை'

j) ṇ → ṭ

cuṇṇa:mpu > cuṇṭa:mpu 'சுண்ணாம்பு'

k) ḷ → ϕ

avaḷ > ave 'அவள்'

l) ṉ ṟ → { ṇ ṇ / ṇ ṭ }

kaṉṟu > kaṇṇu 'கன்று'

paṉṟi > paṇṭi 'பன்றி'

m) ḻ → { ϕ / ḷ / k }

ke:ḻvaraku > ke:vuru 'கேழ்வரகு'

kuḻi > kuḷi 'குழி'

viḻutu > vikutu 'விழுது'

n) y → ϕ

viyarve > ve:rv 'வியர்வை'

சொல்லியல்

1. ஆண்பால் ஒருமை: /-a: ṇṭi ~ v:ti/

(உ.ம்) pa:mp-a: ṇṭi 'பாம்பாட்டி'
kel̤a-va:ṭi 'வயதானவர்'

2. உயர்வு ஒருமை: (honorific singular) : /-vikal̤, ~ -viyal/

(உ.ம்) a-viyal̤ 'அவர் (ஆண்பால் & பெண்பால் உயர்வு ஒருமை)
a-vikal̤ 'அவர்' (ஆண்பால் &பெண். பால் உயர்வு ஒருமை)

3. வேற்றுமை:

a) சுட்டு வேற்றுமை (accusative case) {-e}

b) கருவிப்பொருள் வேற்றுமை : {-a:le} (instrimental)

c) உடனிகழ்ச்சி வேற்றுமை : -o:te, ku:ṭe (sociative)

d) கொடைப்பொருள் வேற்றுமை: -kk (dative)

e) உடைமைப்பொருள் வேற்றுமை: -o:ṭe, -u, ϕ (genitive)

f) இடவேற்றுமை : -le (locative)

g) நோக்க வேற்றுமை : -lirunt, -kiṭṭeyint, -runt (ablative)

h) காரண வேற்றுமை: -kkiya:ke
(purposive)

i) ஒப்புமை வேற்றுமை: -polle
(comparative)

4. காலங்காட்டும் விகுதிகள்:

எதிர்கால விகுதி : -kuv

(உ.ம்) pa:kkuve:n 'நான் பார்ப்பேன்'

இறந்தகால விகுதி : -in-, ~ -nt-, ~ -t-

நிகழ்கால விகுதி : -kr-, v-r-, ~ f

4. அனுமதிப்பொருள் (permissive) :

இந்தக் கிளைமொழியில் அனுமதிப்பொருள் விகுதி /-mu/ ஆகும்.

(உ.ம்) o:ṭumu 'ஓடட்டும்'

5. நிபந்தனைப் பொருள் (conditional): /-a:kki/

(உ.ம்) paṭicca:kki 'படித்தால்'

6. தடைப்பொருள் (prohibitive) :/-ma:ma;/

(உ.ம்) vara-ma:ma: 'வராதே'

7. வினை மாற்றிகள் (verb modifiers)

a) மறுபடியும்: /-maṭakki/

(உ.ம்) maṭakki vanta:n 'அவள் மறுபடியும் வந்தாள்'

b) மெதுவாக: /-panikka/

(உ.ம்) panikka po: 'மெதுவாகப் போ'

8. பெயரடை (Noun qualifier):

பல: /aniyama/

(உ.ம்) aniyama:panṭi 'அதிகமான பன்றி'

9. சுட்டு அண்மைச் சுட்டு: /a:/
சேய்மைச் சுட்டு : /a:/
வினா : /e:~ e/

10. இட இடைச்சொல் (place clitic) : /-nje, -mkeṭṭi, -mke, -ṭṭe, -yye, -vvitte, -kke, -mka:le/

(உ.ம்)	a-nje	'.அங்கே'
	a-mketti	'அங்கே'
	a-tte	'அங்கே'
	a-yye	'அங்கே'
	a-vvitte	'அங்கே'
	a-ttare	'அங்கே'
	a-kke	'அங்கே'
	a-mka:le	'அங்கே'

11. கால இடைச்சொல் (Time clitic): /-nnattakki, -ppatti/

(உ.ம்)	a-ṇ ṇattakki '	அந்த நாள்'
	a-ppatti	'அப்போ'

12. பண்பு இடைச்சொல் (quantative clitic) : /-ttini/

(உ.ம்)	a-ttini	'எத்தனை'
	a-tticcu:ṭu	'இவ்வளவு'

13. அளவு இடைச்சொல் (quantity clitic): /-pakuti/

(உ.ம்)	ka:l pakuti	'கால்'
	pakuti	'அரை'

14. இக்கிளைமொழிக்கே உரிய தமிழ்ச் சொற்களின் சிறு பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

itte	'இங்கு'
ettare	'எங்கு'
e:kki	'எனக்கு'
o:yi	'என்ன'
aṭṭa:li	'நாற்காலி'
a:riyon	'கேழ்வரகு'

pitti	'எருது'
ala:ppu	'தலைப்பாகை'
:kku	'தொட்டில்'
ci:cc'	'கறி'
kela	'மான்'
ka:sa	'ஜுரம்'
ko:ya	'கோயில்'
kunṭi	'இதயம்'
mnṇe	'பெரிய'
muruvu	'உருட்டு'
mu:yi	'துப்பு'
na:ntu	'பின்னால்'
verti	'விரல்'
e:kka	'தழும்பு'
avuttan	'பையன்'
ayi	'பிடி'
ccu	'வெட்டு'
o:kki	'உனக்கு'
akka:	'அத்தை'
innvitte	'இங்கு'
iyye	'இங்கு'
emketti	'எங்கு'
emka:le	'எங்கு'

4.10. கல்ராயன் மலையாளி பேச்சு வழக்கு (தமிழ்)

தமிழ்நாட்டில் பழங்குடி இனத்தவராகக் கருதப்படும் மலையாளி இனத்தவர் சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு மற்றும் திருச்சி மாவட்டங்களில் வாழ்கின்றனர். சேர்வராயன்

மலை, கொல்லி மலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை மற்றும் பச்சை மலைப் பகுதிகளில் மலையாளிகள் உள்ளனர். எல்லாப் பகுதிகளிலும் வாழும் இவ்வினத்தவர் அனைவரின் தாய்மொழி தமிழே ஆகும். இவர்கள் அனைவரும் ஒரே இனத்தவர் ஆயினும் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வருவதால் பழக்க வழக்கத்திலும், பேச்சு மொழியிலும் வேறுபட்டுள்ளனர். சேர்வராயன் மற்றும் கல்வராயன் மலைகளில் வாழுவோர் 'பெரிய மலையாளிகள்' என்றும், கொல்லிமலைகளில் வாழுவோர் 'கொல்லிமலையாளிகள்' என்றும் அழைக்கப்படுகின்றனர். **1971** - ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி **1,59.426** மலையாளிகள் உள்ளனர் என்று தெரிய வருகிறது.

மலையாளிகள் அனைவரும் தமிழையே தாய்மொழி யாகக் கொண்டுள்ளனர் என்று முன்பு கண்டோம். பன்னெடுங்காலமாகத் தமிழ் வழங்கும் பிற பகுதிகளில் இருந்து பிரிந்து மலைப்பகுதிகளில் வாழ்ந்து வருவதால் இவர்களது பேச்சு மொழியில் குறிப்பிடத்தக்க மொழியியல் மாற்றங்கள் உருவாகி இருப்பது இயற்கையே. கொல்லிமலையில் வாழும் மலையாளி பேச்சு மொழியைப் பற்றியும் (கருணாகரன், **1969**), கல்ராயன் மலையில் வாழும் மலையாளி பேச்சு மொழியைப்பற்றியும் (அண்ணாதுரை, **1982**), பச்சைமலை மலையாளி பேச்சுமொழியைப் பற்றியும் (மகேஸ்வரன், **1979**, சீனுவாச வர்மா, **1979**, முத்துகிருஷ்ணன், **1988**) மொழியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கீழ்வரும் பகுதிகளில் கல்ராயன் மலையாளி பேச்சுமொழி பற்றிக் காண்போம்.

தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் உள்ளது கல்ராயன் மலை. இந்தப் பகுதியில் வாழும் மலையாளி இனத்தவரைக் கல்ராயன் மலையாளி என்கிறோம். ஏறத்தாழ **14** - ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்திலிருந்து வந்து கல்ராயன் மலைப்பகுதிகளில் இம்மக்கள் குடியேறினர் எனச் சோமலை **(1963)** குறிப்பிடுகிறார்.

தமிழ்நாட்டில் வழக்கில் உள்ள வடக்குக் கிளைமொழி, மேற்குக் கிளைமொழி மற்றும் மத்தியக் கிளைமொழி ஆகியன வழங்கும் பகுதிகளின் எல்லையில் கல்ராயன் மலையாளி பேச்சு மொழியும் பேசப்பட்டு வருகிறது. கொல்லிமலை,

பச்சைமலை கிளைமொழிகளைப் போன்றே கல்ராயன்மலை கிளைமொழியும் ஒரு தனிக் கிளைமொழியாகும். இந்தக் கிளைமொழி ஏறத்தாழ 210 சதுர மைல் எல்லையில் (கல்ராயன் மலைப்பகுதியில்) பேசப்படுகிறது எனலாம். இந்தக் கிளைமொழியின் எல்லைகளாக, மேற்கில் தர்மபுரி மாவட்டம், கிழககில் சேலம் மாவட்டம் ஆகிய பகுதிகளைச் சொல்லலாம் இந்தப் பேச்சு வழக்கின் எல்லைக் கோடுகளாகக் குறிப்பிடத் தக்க ஒலியனியல் மற்றும் சொல் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் (isoglosses) உள்ளன. கல்ராயன் மலையாளி கிளை மொழியைப் பற்றிய விளக்க இலக்கணத்தைத் தன் ஆய்வுப் பட்ட ஆய்வாக அண்ணாதுரை (1982) மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில், இக்கிளைமொழிக்கும், எழுத்து மொழிக்கும் உள்ள மொழியியல் கூறுகளின் வேறுபாட்டை இவர் வரையறுத்துக்காட்டியுள்ளார். அவற்றுள் சில கூறுகளை இங்குக் காண்போம்.

ஒலியனியல

1. எழுத்து மொழியில் சொல்லின் கடைநிலையில் வரும் /-ai/ இந்தக் கிளைமொழியில் ஈரசைச் சொற்களில் /-e/ ஆக மாறுகிறது.

   (உ.ம்.) virai > vire 'விரல்'

2. எழுத்து மொழியில் சொல்லின் கடைநிலையில் வரும் /-ai/ இந்தக் கிளைமொழியில் ஓரசைச் சொற்களில் /ey/ என மாறுகிறது.

   (உ.ம்.) tai > tey 'தைமாதம்'

3. எழுத்து மொழியில் சொல்லின் இடையில் /-m/க்கு முன்பாக வரும் /a, a:/ ஒலியன்கள் இந்தக் கிளைமொழியில் / o / ஒலியனாக மாறுகின்றன.

   (உ.ம்.) nakam > nokom 'நகம்'

   po:kala:m > po:vo:lom 'போகலாம்'

4. எழுத்து மொழியில் சொல்லின் முதனிலையில் வரும் / i/, /u/ ஒலியன்கள், அடுத்த அசையில் /a/ ஒலியன் உள்ளபோது, /e/, /o/ ஒலியன்களாக மாறுகின்றன.

(உ.ம்.) kinaru > keneru 'கிணறு'

muyal > mose 'முயல்'

5. எழுத்து மொழியில் /p, b, m/ ஆகிய மெய்களுக்கு அடுத்து வரும் /a/ ஒலியன், அடுத்த அசையில் நடு உயிர்கள் உள்ளபோது, /o/ ஒலியனாக மாறுகிறது.

(உ.ம்.) pa̱lam > poyom 'பழம்'

6. எழுத்து மொழியில் / l, ṟ, n / ஆகிய மெய்களுக்கு முன்பு வரும் / a / உயிர், / e / உயிராக மாறுகிறது.

(உ.ம்.) pal > pellu 'பல்'

7. எழுத்து மொழியில் இறுதியில் உள்ள /ḷ/ மெய் ஒலியனுக்கு முன்பு வரும் / -a- / உயிர், / e / உயிராக மாறுகிறது.

(உ.ம்.) avaḷ > ave 'அவள்'

8. இந்தக் கிளைமொழியில் ஒலிப்புடை தடையொலிகள் (voiced plosives) ஒலியன்களாக உருவாகி வளர்ந்து உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். /p, t, ṭ, c, k/ ஆகிய ஒலியன் களின் ஒலிப்புடை ஒலியன்களாக /b, d, ḍ , j, g/ ஆகியன உருவாகியுள்ளன. இந்த ஒலிப்புடை தடையொலியன்கள் சொல்லின் முதல், இடைநிலைகளில் வருகின்றன.

(உ.ம்.) ba:ḍe

tobbe 'வயிறு'

9. எழுத்து மொழியில் உள்ள அண்பல் அதிர்வொலி (alveolar trill) இக்கிளைமொழியில் முன்னண்ண வருடொலியாக (alveolar flap) ஒலிக்கிறது.

(உ.ம்.) a:ṟu > a:ru 'ஆறு'

10. தமிழ் மொழியின் சிறப்பொலியனாக 'ழ' இக்கிளை மொழியில் / ḷ / ஆகவும், /y/ ஆகவும் ஒலிக்கிறது.

சொல்லின் முதனிலையில் கீழ் நடு உயிரொலியன் களுக்கு (low central vowels) முன்பு வரும் / ḻ / ஒலியன், / ḷ / ஒலியனாக ஒலிக்கிறது.

(உ.ம்.) va:ḻu > va:ḷu 'வாழு'

மற்ற இடங்களில் /ḻ/ ஒலியன் /y/ ஒலியனாக ஒலிக்கிறது.

(உ.ம்.) e:ḻu > e:yu 'ஏழு'

11. எழுத்து மொழியில் இரு உயிரொலியன்களுக்கு இடையே வரும் /k/ ஒலியன், /v/ ஒலியனாக இந்தக் கிளைமொழியில் ஒலிக்கிறது.

(உ.ம்.) pukai > pove 'புகை'

12. சொல்லின் முதலில் ஈரிதழ் மெய்களுக்குப் பிறகு வரும் /y/ ஒலியன், /s/ ஒலியனாக இந்தக் கிளை மொழியில் ஒலிக்கிறது

(உ.ம்.) peyar > peseru 'பெயர்'

13. இந்தக் கிளை மொழியில் உயிரொலியிணை (vowel clusters) வருவதில்லை. இரு மெய்யொலியிணைகள் முதலிலும், இரு மெய்யொலியிணைகள் மற்றும், மூன்று மெய்யொலியிணைகள் இடையிலும் வருகின்றன.

சொல்லியல்

1. *பொதுப் பன்மை:* இக்கிளைமொழியில் மூன்று பன்மை விகுதிகள் உள்ளன. அவை /-yeḷ, -keḷ, -o:ḷ/ ஆகியன ஆகும்.

2. *வினாவிடப்பெயர்:* உயர்திணை வினா விடப்பெயர் களாக /eru/ மற்றும் /ya:ru/ ஆகிய இரண்டு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. /ey/ எனும் சொல் 'யாருடைய' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றது.

3. *வேற்றுமை:* இந்தக் கிளைமொழியில் சுட்டுவேற்றுமை உருபு /-e/ ஆகும். உயர்திணைப் பெயர்ச்சொற்களோடு சுட்டு வேற்றுமை பயன்படும்போது இவ்வுருபு கட்டாய மாகவும், அஃறிணை பெயர்ச் சொற்களோடு விருப்புச் செயலாகவும் (optional) பயன்படுகின்றது.

உடைமைப்பொருள் வேற்றுமையைக் குறிக்க எந்த உருபும் இல்லை. இரண்டு பெயர்ச்சொற்கள் இணைந்து செயல்படுவதாலேயே உடைமைப்பொருள் வேற்றுமையின் பொருள் உருவாகிறது.

(உ.ம்.) akka: move ‘அக்காவின் மகள்’

4. அனுமதிப் பொருள் விகுதி / -o:lom / ஆகும். இவ்விகுதி முற்றாவினையோடு பயன்படுத்தப்படுகிறது.

(உ.ம்) eḍukkʊ:lom ‘எடுக்கலாம்’

a:ḍo:lom ‘விளையாடலாம்’

5. எதிர்மறைக் கடப்பாடு இரண்டு வகைகளில் புலப்படுத் தப்படுகிறது.

a) எதிர்மறைக் கடப்பாடு (negative conditional) விகுதி / -a:ṭ ṭiṇ ṇa:l / ஆகும். இந்த விகுதியில் உள்ள மேற்கோள் இடைச்சொல் (quotative clitic) /-ṇṇa:l/ ஆகும். இந்தக் கிளைமொழியில் / -a:ṭ ṭi / விகுதி எதிர்மறை கடப்பாட்டைப் புலப்படுத்தினாலும், மேற்கூறிய இடைச்சொல்லோடு இணைந்து / -a:ṭ ṭiṇ ṇa:l / என ஓர் உருபாகத்தான் பயன்படும்.

b) மற்றொரு எதிர்மறைக் கடப்பாடு விகுதி / -leṇ ṇa:l / ஆகும். இந்த விகுதியில் / -le- / எதிர்மறையையும், /-ṇ ṇa:l/ கடப்பாட்டையும் குறிக்கும். இந்த விகுதி முற்றாவினையோடு சேரும்.

(உ.ம்.) e:releṇ ṇa:(l) ‘நீ ஏறாவிட்டால்’

aḍikkelenṇ:(l) ‘நீ அடிக்காவிட்டால்’

6. / -ttu / எனும் விகுதி வினையின் நிகழ்காலப் பெயரெச்சத் தோடு இணைவதன் மூலம் தொழிற்பெயர் உருவாகும்.

(உ.ம்) po:re-ttu ‘போவது’

eydure-ttu ‘எழுதுவது’

7. <u>*சொல் பட்டியல்:*</u> இந்தக் கிளைமொழியில் மட்டும் பயன்படும் சுருள்சொற்களின் சிறுபட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

itta:n ‘இவ்வளவு’

inga:ṇḍe ‘இந்தப்பக்கம்’

eppen	'என் தந்தை'
aṇḍle	'அப்போது'
oṇḍu	'ஒன்று'
ta:ḍen	'வேலைக்காரன்'
cippu	'தட்டு'
verdi	'விரல்'
macci	'மேகம்'
mu:ṇḍu	'மூன்று'
nanga:	'அண்ணன் மனைவி'
mo:no	'மயிர்'
no:ru	'வாய்'

5. தமிழ்நாட்டில் பேசப்படும் தெலுங்கின் கிளைமொழிகள்

தமிழ்நாட்டின் மக்கட்தொகையில் ஏறத்தாழ 8.73 விழுக்காடு தெலுங்கைத் தாய்மொழியாகப் பேசுவோர் உள்ளனர். இவர்களுள், தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகளில் பல நூற்றாண்டுகளாய் வாழ்ந்து வரும் பெரும்பாலரும், இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின்போது ஆந்திராவில் இருந்து வந்து குடியேறிய சிறுபான்மையினரும் அடங்குவர். குறிப்பாக மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் வாழ்ந்து வரும் இம்மக்கள் விஜயநகரப் போரின்போது தமிழகம் வந்து குடியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் தாய்மொழிகளாகப் பேசப்படும் மொழிகளுள் தமிழுக்கு அடுத்த நிலையில் அதிகமானோரால் பேசப்படும் மொழி தெலுங்கேயாகும். தமிழ்நாட்டின் மொத்த மக்கட்தொகையில் தெலுங்கு பேசுவோரின் விழுக்காடு மிகக் குறைவானதாகத் தோன்றினாலும் ஒருசில மாவட்டங்களில் இவர்களின் எண்ணிக்கை குறிப்பிடும் அளவில் உள்ளது. உதாரணமாக, கோயம்புத்தூர் (18.84%) தர்மபுரி (18.25%) செங்கல்பட்டு (12.0%) சென்னை (12.03%) மதுரை (10.40%), சேலம் (10.15%) மற்றும் வட ஆற்காடு (9.81%) ஆகிய மாவட்டங்களில் தெலுங்கு பேசுவோர் பெருமளவில் உள்ளனர். தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களிலும் கூடத் தெலுங்கு பேசுவோரின் எண்ணிக்கை ஏறத்தாழ இரண்டாவது இடத்தைப் பெறுகிறது என்று சொல்லலாம். சென்னையில் 11.99 விழுக்காடும், மதுரையில் 7.91 விழுக்காடும், கோயம்புத்தூரில் 22.94 விழுக்காடும், சேலத்தில் 16.69 விழுக்காடும் திருச்சிராப்பள்ளியில் 6.90 விழுக்காடும் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர் வாழ்ந்து வருகின்றார்கள்.

தமிழ்நாட்டில் வழக்கில் உள்ள தெலுங்கு மொழியின் கிளைமொழிகளைப் பற்றிய ஒட்டுமொத்தமான எந்த ஒரு ஆய்வும் இதுவரை நடைபெறவில்லை என்றே சொல்லலாம். தமிழ்நாட்டில் பேசப்படும் தெலுங்கைப் பலவகையாக அம்மொழி பேசுவோர் அழைப்பதை மக்கட்தொகைக் கணக்கீட்டு அறிக்கையின் மூலம் அறிகிறோம். ஒருசில இனத்தவர் தங்கள் சாதித் தொழில் பெயரையும், வேறுசிலர் தாங்கள் செய்யும் தொழில் பெயரையும் தங்கள் தாய்மொழிப் பெயராகச் சொல்கிறார்கள். இவ்வாறு தமிழ்நாட்டில் பல வகுப்பினராலும், பல்வேறு தொழில் செய்வோராலும் பேசப்படும் தெலுங்கு மொழியில் கிளைமொழிகள் கிளைத் திருக்குமென்பது உறுதி. இவை பற்றிய ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படாததால் மொழியியல் அடிப்படையில் தமிழ்நாட்டில் பேசப்படும் தெலுங்கைப் பற்றிய ஒட்டுமொத்த மான தகவல்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை.

தமிழ்நாட்டில் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டோர் எவ்வெவ்வாறு எல்லாம் தங்கள் மொழியைப் பெயரிட்டு அழைக்கின்றனர் என்பதை சென்ஸஸ் அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது. **1961** - ஆம் ஆண்டு சென்ஸஸ் அறிக்கை தமிழ் நாட்டில் தெலுங்கு பேசுவோர், 'தங்கள் தாய்மொழியென' கூறிய பெயர்கள் பலவாகும். 'எகிடி', 'கொடுவா', 'மாதரி', 'மிஜை', 'ஒட்டன்மொழி', 'தேவரி', 'வடகா' ஆகிய பெயர்கள் தங்கள் தாய்மொழியின் பெயர்கள் எனத் தெலுங்கு பேசுவோர் மக்கட்தொகை கணக்கீட்டுத் தகவலுக்குக் கொடுத்ததாக **1961** - ஆம் ஆண்டு சென்ஸஸ் கூறுகிறது.

தமிழ் நாட்டில் பேசப்படும் தெலுங்கு மொழியினைப் பற்றிய விரிவான எந்தவொரு ஆய்வும் இதுவரை நடைபெற வில்லை என்று முன்பு கூறினோம். ஆனாலும், தமிழ்நாட்டில் ஆங்காங்கே வாழ்ந்து வரும் தெலுங்கு மொழியினரின் தெலுங்கைப்பற்றிய ஒருசில ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவ்வாய்வுகள் முதுநிலைப் பட்டப்படிப்புக்கான ஆய்வுகளாகவும், ஆய்வுபபட்டத்துக்கான ஆய்வுகளாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள், முதுநிலைப் பட்டப் படிப்புக்காகக் கருணாகரனால் **(1963-64)** மேற்கொள்ளப் பட்ட 'செம்மொழி தெலுங்குக்கும் கோயம்புத்தூரில் பேசப்படும் தெலுங்கின் கிளைமொழிக்கும் இடையே உள்ள

மொழி புரிபாட்டுத் தன்மைகள்' என்ற ஆய்வை இங்குக் குறிப்பிட்டுச் சொல்லலாம். மதுரையில் பேசப்படும் தெலுங்கு கிளைமொழியைப் பற்றியும் (நம்பெருமாள் சாமி, 1972), முஸ்லீம் மதத்தினர் பேசும் தெலுங்கு கிளைமொழியைப் பற்றியும் (காதர்மொகிதீன், 1969-70), தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பேசப்படும் தெலுங்கின் கிளைமொழியைப் பற்றியும் (கோவிந்த ரெட்டி) முதுநிலை ஆய்வுப் பட்டத்துக் கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 'மதுரையில் நெசவாளர்கள் பேசும் தெலுங்கின் விளக்க இலக்கணம்' (ஜெகதீசன்) 'ராஜபாளையம் வட்டாரத்தில் பேசப்படும் தெலுங்கு மொழியின் மாற்றிலக்கணம்' (குமாரசாமி ராஜா) ஆகிய இரு தலைப்புக்களிலும் ஆய்வுப்பட்டத்துக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் கம்மாள இனத்தவர் பேசும் தெலுங்கு மொழி பற்றிய ஒரு விளக்க இலக்கணக் குறிப்பேட்டைக் கோபால் (1978) வெளியிட்டுள்ளார். கம்மாள இனத்தவரைப் பற்றியும், இவர்கள் பேசும் கிளைமொழியின் மொழியியல் கூறுகள் பற்றியும் கீழ்வரும் பகுதிகளில் காண்போம்.

கம்மா கிளைமொழி (தெலுங்கு)

தமிழ்நாட்டில் வாழும் 'கம்மா' இனத்தவரெனப்படும் தெலுங்கு பேசும் பிரிவினரில் பெரும்பாலோர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் வாழும் கம்மாளர்கள் விஜயநகரப் படை தமிழ்நாட்டில் போர்தொடுத்தக் காலத்தில் இங்கு வந்து குடியேறியவர்கள் என்று கருதப்படுகிறது. தெலுங்கு மொழியில் 'கம்மா' என்ற சொல் ஒருவகைக் காதணியைக் குறிக்கிறது. கம்மாளர் இனத்தில் பங்காரு, இல்லுவெள்ளாணி, கம்பா, கோடா, கர்வாளி, பெத்தா, வடுகா எனும் எழுவகைப் பெரும் பிரிவுகள் உள்ளன. இந்த எழுவகைப் பிரிவுகள் ஒவ்வொன்றுள்ளும் பல உட்பிரிவுகள் உள்ளன.

கீழ் உள்ள பகுதிகளில் தெலுங்கின் கம்மா கிளை மொழியின் இலக்கணக் கூறுகள் தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. தென் ஆற்காடு மாவட்டத்தில் ஏறத்தாழ இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் குடியேறி, வாழ்ந்து வரும் கம்மாள இனத்தவர் பேசும் கிளைமொழியைப்பற்றிய ஆய்வைக் கோபால் (1978) மேற்கொண்டுள்ளார். அவ்வாய்

வினானறும கிடைக்கப்பெறும மொழியியல் கூறுகள் கீழே தரப்பட்டுள்ளன.

ஒலியனியல்

இநதக் கிளைமொழியில் **10** உயிரொலியன்களும் (i,i:, e,e:, a,a:, u,u:,o,o: i, i:), **19** மெய்யொலியன்களும் (p, b, t, d, ṭ, ḍ, c, ɟ, k, g, m, n, ṇ, l, ḷ, r, v, y) உள்ளன. /o/ ஒலியனைத் தவிர மற்ற எல்லா உயிரொலிகளும் சொல்லின் முதல், இடை, கடை நிலையில் வருகின்றன. /o/ ஒலியன் சொல்லின் முதல் மற்றும் இடைநிலையில் மட்டுமே வருகின்றது. /n, l/ ஆகிய இரு மெய்யொலியன்களைத் தவிர, ஏனைய மெய்யொலியன்கள் சொல்லின் முதனிலையில் வருகின்றன. எல்லா மெய்யொலி யன்களும் சொல்லின் இடையில் வருகின்றன. சொல்லின் கடைநிலையில் /m,y/ ஆகிய இரு மெய்யொலியன்கள் மட்டுமே வருகின்றன. ஏனைய மெய்யொலியன்கள் கடைநிலையில் வருவதில்லை. இந்தக் கிளைமொழியில் உயிரொலியிணைகள் வருவதில்லை. இரு மெய்யொலி இணைகளும், மூன்று மெய்யொலி இணைகளும் இக்கிளைமொழியில் உள்ளன. இரு மெய்யொலி இணைகள் சொல்லின் முதலிலும் இடையிலும் வருகின்றன. மூன்று மெய்யொலி இணைகள் சொல்லின் இடைநிலையில் மட்டுமே வருகின்றன. சொல்லின் முதனிலையில் குறைவான எண்ணிக்கையிலும், சொல்லின் இடைநிலையில் அதிக எண்ணிக்கையிலும் மெய்யொலி யிணைகள் காணப்படுகின்றன.

பெயர்ச் சொல்லியல்

1. பால்-எண் பாகுபாட்டை உணர்த்தும் தெளிவான (explicit) உருபுகள் இக்கிளைமொழியில் உள்ளன.

a) உயர்திணை ஆண்பால் ஒருமைப் பெயர்களைக் குறிக்க /-va:ḍu/ மற்றும் /-ḍu/ ஆகிய இரு உருபுகள் பயன்படுத்தப்படுகின்றன.

b) /-katta/, /-ra:lu/, /-di/, /-ta/ ஆகிய உருபுகள் உயர்திணை பெண்பால் ஒருமைப் பெயர்களைக் குறிக்கின்றன.

c) உயர்திணைப் பன்மையை உணர்த்தும் உருபுகள் /-ḷu/, /-va:ḷu/, /-guru/, /-duru/ ஆகியனவாகும்.

d). ஆண்பால் அல்லாத ஒருமையைச் சுட்டும் உருபுகள் /-di/ ஆகும்.

e) /-ru/ எனும் உருபு அஃறிணை அல்லாத சொற்களுடன் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது வினாவடிகளுடனும், எண்ணுப்பெயரடிகளுடனும் இந்த உருபு பயன்படுத்தப்படுகிறது.

2 பொதுப்பன்மையை (common plural) உணாத்தும் உருபு /-lu/ ஆகும்.

3. இக்கிளைமொழியில் உள்ள மூவிடப் பெயர்களாவன:

a) தன்மை ஒருமை: ne:n (u)

தன்மைப் பன்மை : manam (u)

(உளப்பாடுள்ளது)

தன்மைப் பன்மை: me:m (u)

(உளப்பாடில்லாதது)

முன்னிலை ஒருமை: nu:vu

முன்னிலைப் பன்மை : mi:ru

மற்றும் முன்னிலை ஒருமை உயர்வுச்சிறப்பு

படர்க்கை மூவிடப் பெயர்கள் சுடடுப்பெயர் களினின்றும், வினாப் பெயர்களினின்றும் உருவாகின்றன.

சேய்மைச் சுட்டுப் பெயரடி	: va:-, da:ni-, da:n-, a-,
அண்மைச் சுட்டுப் பெயரடி	: vi:-, di:ni-, di:n, i-,
வினாப் பெயரடி	: o:-, de:ni-, de:n-, e-,

4. எழுவாய், விளி ஆகிய இரு வேற்றுமைகள் அல்லாது, ஒன்பது வேற்றுமைகள் இக்கிளை மொழியில் உள்ளன.

1. சுட்டு வேற்றுமை : /-ni/
(accusative)

(உயிரற்ற பெயர்ச்சொல்லடிகளோடு சுட்டு வேற்றுமை உருபு சேர்வதில்லை)

2. கருவிப்பொருள் வேற்றுமை : /-to:, -ninci/ (instrumental)

3. காரண வேற்றுமை : /-ninci/ (causal)

4. கொடைப்பொருள் வேற்றுமை : /-ki, -ku/ (dative)

5. காரணப்பொருட்டு : /-kka:nu/

6. நோக்க வேற்றுமை : /-deggiravuṇḍi, -lavuṇḍi/ (ablative)

7. உடைமைப்பொருள் வேற்றுமை : /-to:/ (genitive)

8. இட வேற்றுமை: /-deggira, -la/ (locative)

9. உடனிகழ்ச்சி வேற்றுமை : /-to:, -ku:da/ (sociative)

5. இக்கிளைமொழியில் உள்ள அடிப்படை எண்ணுப் பெயர்கள்

ogiṭi	'ஒன்று'	ε:ḍu	'ஏழு'
renḍu	'இரண்டு'	enimidi	'எட்டு'
mu:ḍu	'மூன்று'	tommidi	'ஒன்பது'
na:lagu	'நான்கு'	padi	'பத்து'
aydy	'ஐந்து'	nu:ru	'நூறு'
a:ru	'ஆறு'	veyyi	'ஆயிரம்'
lacca	'லட்சம்'	ko:ṭi	'கோடி'

வினைச்சொல்லியல்

1. ‌பிறவினைச் சொற்கள், தன்வினை வேரோடு /-su/ எனும் உருபு இணைவதன் மூலமும், தன்வின்னைச்

சொல்லின் இறுதி மெய்யொலி அல்லது அசை சில ஒலியனியல் மாற்றம் பெறுவதன் மூலமும் உருவா கின்றன.

2. தன்வினை பிறவினை வேரோடு /-peṭṭu/ எனும் இயக்கு வினை (causative) உருபு இணைவதன் மூலம் இயக்குவினை சொற்கள் உருவாகின்றன.

3. இக்கிளைமொழியில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலநிலை காட்டும் உருபுகள் உள்ளன.

இறந்தகால விகுதிகள் : /-i-, -n-, -in-, -iti-, -ti-, -ṭi/

நிகழ்கால விகுதி : /-ta:-/

எதிர்கால விகுதிகள் : /-ṭu-, -tu-/

4. ஒருமை ஏவலைக் குறிக்க, /-i-, -a: -u/ ஆகிய விகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

5. பன்மை ஏவலைக் குறிக்க, /-ṇḍi, -a:ṇḍi, /-aṇḍi/ ஆகிய மூன்று விகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

6. எதிர்மறைப்பொருள் உணர்த்தும் விகுதிகளாவன: /-n-, -an-, -k-, -ak- -a: ஆகியனவாகும்.

7. வினை வேரோடு /-a/ உருபு இணைவதால் முற்றா வினை உருவாகிறது. வினை வேர் /-a:/ உயிரொலி யனைக் கடைநிலையில் கொண்டிருந்தால் முற்றா வினை உருபு இணைவதில்லை.

8. இடப்பெயர் முடிவு:

a) தன்மை ஒருமை முடிவைக் காட்ட, /-nu, -ni/ ஆகிய விகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

b) தன்மைப் பன்மை முடிவைக் காட்ட, /-mu, -mi/ ஆகிய விகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

c) முன்னிலை ஒருமை முடிவைக் காட்ட, /-vu, -vi/ ஆகிய விகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

d) முன்னிலைப் பன்மை முடிவைக் காட்ட /-ru, -ri/ ஆகிய விகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

படர்க்கைப் பெயர்

படர்க்கைப் பெயர் ஒருமை, பன்மை எண் வேறுபாட்டை உணர்த்தும். மேலும் ஒருமை எண் சொல் ஆண்பால், ஆண்பால் அல்லாதன என இரு பிரிவையும் உணர்த்தும். உதாரணமாக, உயர்வற்றவர்களாகக் கருதப்படும் 'வேலைக்காரன்' 'தம்பி' போன்ற சொற்கள் ஆண்பால் சொற்களாகவும், உயர்திணைப் பெண்பால் ஒருமை, அஃறிணை ஒருமை, அஃறிணைப் பன்மை ஆகியன ஆண்பால் அல்லாதனவாகவும் கருதப்படுகின்றன. உயர்திணைப் பன்மை, உயர்திணை உயர்வுச் சிறப்பு ஒருமையும் சுட்டும்.

படர்க்கை ஆண்பால விகுதி: /-ḍu/

படர்க்கை ஆண்பால் அல்லாதனவற்றின் விகுதி : /-du/

படர்க்கை உயர்திணை பன்மை விகுதி: /-ru, -ri/

6. தமிழ்நாட்டில் பேசப்படும் கன்னடத்தின் கிளைமொழிகள்

தமிழ் நாட்டின் மொத்த மக்கட்தொகையில் ஏறத்தாழ 2.56 விழுக்காடு கன்னடமொழி பேசுவோர் உள்ளனர் என்று முந்தைய பகுதியில் கண்டோம். நீலகிரி (31.91%) தர்மபுரி (10.48%) கோயம்புத்தூர் (7.91%), மதுரை (4.10%) சேலம் (3.08%) மற்றும் ராமநாதபுரம் (1.19%) மாவட்டங்களில் இவர்களின் மக்கட்தொகை கணிசமான அளவில் உள்ளது. பல நூற்றாண்டு காலமாய்த் தமிழ் நாட்டில் வாழ்ந்து வரும் இவர்கள் தமிழைத் தாய்மொழியாய்ப் பேசுபவரைப் போன்ற மொழித் திறனுடன் கையாண்டு வருபவராயினும், தங்கள் தாய் மொழியான கன்னடத்தையும் தாய்மொழி நிலையில் தக்க வைத்துள்ளனர். கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டு வாழ்பவரின் தாயகமான கர்நாடக மாநிலத்தினின்றும் பிரிந்து, தமிழ்மொழியைப் பேசுவோரிடையே நீண்ட காலமாய் வாழ்ந்து வருவதனாலும் இவர்கள் பேசும் கன்னட மொழியில் தமிழ் மொழியின் மொழியியல் கூறுகளின் தாக்கம் ஏற்பட்டுள்ளது இயற்கையே. தமிழ் நாட்டில் பேசப்படும் கன்னட மொழியினைப் பற்றிய மொழியியல் ஆய்வுகள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில் பேசப்படும் கன்னட கிளைமொழிகளைப்பற்றிய ஒரு ஆய்வுப்பட்டத்துக் கான ஆய்வும் (வேல் முருகன், 1986) மதுரை மாவட்ட கன்னடத்தைப் பற்றிய ஒரு முதுகலை பட்டப்படிப்புக்கான ஆய்வும் (சந்திரன், 1972) செய்யப்பட்டுள்ளன. இவை யல்லாமல், பட்டின் (Bhat: 1968) 'கோயம்புத்தூர் கன்னடம்' என்ற கட்டுரையும், மகாதேவனின் 'கோயம்புத்தூர் கன்னடம் (1968)' மற்றும் 'மதுரை கன்னட கிளைமொழி' (1968) என்ற கட்டுரைகளும் ஆய்வேடுகளில் வெளிவந்துள்ளன.

கன்னட மொழியின் கிளைமொழிகளுள் தமிழ் நாட்டில் பேசப்படும் கிளைமொழிகள் மூன்று ஆகும். அவையாவன தமிழ்நாட்டில் பழங்குடியினராகக் கருதப்படும் பொது சோழிகர், ஆலு சோழிகர் ஆகியோரும், காட்டு நாயக்கரும்

பேசும் பேச்சு மொழிகளும் ஆகும். கன்னடத்தின் இந்த மூன்று கிளைமொழிகளைப் பற்றிய மொழியியல் ஆய்வுகள் தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வகை மொழியியல் ஆய்வுகளினின்றும் கிடைக்கப்பெறும் மொழியியல் செய்திகளைப் பின்வரும் பகுதிகளில் காண்போம்.

காட்டு நாயக்கர் கிளைமொழி (கன்னடம்)

காட்டு நாயக்கர் என அழைக்கப்படும் பழங்குடி மக்கள் தமிழ்நாடு, கர்நாடகம் மற்றும் கேரளா மாநிலங்களில் வாழ்கின்றனர். தமிழ்நாட்டில் காட்டு நாயக்கர் இனத்தவர் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டாரத்தில் வாழ்கின்றனர். **1961** - ஆம் ஆண்டு சென்ஸஸ் அறிக்கையின்படி தமிழ்நாட்டில் இவ்வினத்தவரின் மொத்த எண்ணிக்கை 552. **1971** - ஆம் ஆண்டு சென்ஸஸ் அறிக்கையின்படி தமிழ்நாட்டில் இவர்களில் எண்ணிக்கை **1260** ஆகும். காட்டு நாயக்கர்கள் 'ஜேனுநாயக்கர்' 'தேன் நாயக்கர்' 'தேன்குறுமார்' 'ஜேனு குறுவார்' 'ஜேனு குறுபரு' மற்றும் 'காடு குறுபரு' எனப் பல பெயர்களால் அழைக்கப்படு கிறார்கள். இப்படிப் பல பெயர்களால் இவ்வினத்தவர் அழைக்கப்படுவதாலேயே 'குறும்பர்' என்ற பொதுப்பெயரால் அழைக்கப்படும் பழங்குடி மக்களும், 'காட்டு நாயக்கர்' என்று தனிப்பெயரால் அழைக்கப் படும் இனத்தவரும் ஓர் இனத்தைச் சேர்ந்தவரே எனப் புலப்படுவதாய் மானுடவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

'ஜேனு குறும்பர்' இனத்தவரையும், காட்டு நாயக்கரையும் தனித்தனி இனத்தவர் எனக் கருதும் அறிஞர்கள் அதற்கான சில மானுடவியல் சான்றுகளைக் கூறுகிறார்கள். உதாரணமாக, கோபாலன் நாயரின் (1911) கருத்து இங்குக் கூர்ந்து நோக்கத் தக்கது. காட்டு நாயக்கர்கள் குரங்கின் இறைச்சியை உண்பவர்கள் என்றும், தேன் திரட்டும் தொழிலில் ஈடுபட்டிராதவர்கள் என்றும் ஜேனு குறும்பர் வீடுகளில் உணவருந்தும் பழக்கம் உள்ளவர்கள் என்றும் குறிப்பிடுகிறார். குரங்கின் இறைச்சியை உண்பது, தேன் திரட்டுவது, காட்டு நாயக்கர் வீடுகளில் உணவருந்துவது ஆகிய எந்த வகையான பழக்கங்களும் ஜேனு குறும்பர்களிடையே கிடையாது என்றும் கோபாலன் நாயர் கூறுகிறார். முள்ளு குறும்பர், ஜேனு குறும்பர், மற்றும் தேன் குறும்பர் (காட்டு நாயக்கர் அல்லது சோழ நாயக்கர்) மற்றும் ஊராளி அல்லது பெட்ட குறும்பர்

என மூன்று பெரும் பிரிவுகளாகக் காட்டு நாயக்கர்களை தர்ஸ்டன் (1909) பாகுபாடு செய்கிறார். 1961 - ஆம் ஆண்டு சென்ஸஸ் அறிக்கை இந்தப் பழங்குடி மக்களை ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது. அவையாவன:

1) பெட்ட குறும்பர்,

2) ஜேனு அல்லது தேன் குறும்பர்,

3) ஊராளி குறும்பர்,

4) பாலு அல்லது ஹாலு குறும்பர் மற்றும்

5) முள்ளு குறும்பர் ஆகியனவாகும்.

காட்டு நாயக்கரும், ஜேனு குறும்பரும் ஒரே இனத்தவர் என்பதும் சோழ நாயக்கர் (அல்லது குள்ள நாயக்கர்) இனத்தவர் வேறுபட்டவர் என்பதும் தற்போது அறிஞர் களிடையே பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

காட்டு நாயக்கர் (அல்லது ஜேனு குறும்பர்) இனமும் சோழ நாயக்கர் இனமும் கீழ்க்கண்ட காரணங்களால் தனித்தனி பிரிவுகள் எனக் கருதப்படுகின்றன.

1. காட்டு நாயக்கர்கள் தங்களைவிடவும் தாழ்ந்தவர்கள் எனச் சோழ நாயக்கரைக் கருதுகிறார்கள். சோழ நாயக்கர்கள் தங்களை விட உயர்ந்தவர்கள் எனக் காட்டு நாயக்கர் களைக் கருதுகிறார்கள்.

2. காட்டு நாயக்கர் தேன் திரட்டுபவர்கள். சோழ நாயக்கர்கள் தேன் திரட்டும் தொழிலில் ஈடுபடுவதில்லை.

3. காட்டு நாயக்கர்கள் குரங்கின் இறைச்சியை உண்பதில்லை. சோழ நாயக்கர்கள் குரங்கின் இறைச்சியை உண்ணும் பழக்கம் உள்ளவர்கள்.

4. சோழ நாயக்கர்களின் வீடுகளில் காட்டு நாயக்கர்கள் உணவருந்துவதில்லை. ஆனால் காட்டு நாயக்கர்களின் வீடுகளில் சோழ நாயக்கர்கள் உணவருந்துகிறார்கள்.

5. காட்டு நாயக்கர்கள் குடிசைகளில் வாழ்கிறார்கள். சோழ நாயக்கர்கள் மரங்களின் கீழும், குகைகளிலும் வாழ்கிறார்கள்.

காட்டு நாயக்கர்கள் பேசும் மொழி கன்னடத்தின் ஒரு கிளைமொழியா அல்லது தனிமொழியா என்பது மானுடவியல் அறிஞர்களிடையேயும் மொழியியல் அறிஞர்களிடையேயும் ஒரு சர்ச்சையாகவே இருந்து வந்துள்ளது. மானுடவியல் அறிஞர்களிடையேயும் ஒரு ஒட்டுமொத்தமான கருத்து நிலவவில்லை என்பது காட்டு நாயக்கர் மொழியைப் பற்றி தெர்ஸ்டன் (1909) தெரிவிக்கும் கருத்தையும், மற்றைய அறிஞர்களின் கருத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் விளங்கும். தெர்ஸ்டன் குறும்பர் இனத்தவரை (இவர்கள் பேசும் மொழி வேறுபாடுகளின் அடிப்படையில்) இரு பிரிவுகளாகப் பிரித்துக் காட்டுகிறார். அதாவது, நீலகிரி மலைப்பகுதிகளில் வாழும் கு றும்பர்கள் குறும்பர் கிளைமொழியைப் பேசுகிறார்கள் என்றும், ஏனைய பகுதிகளில் வாழும் குறும்பர்கள் கன்னட கிளைமொழியைப் பேசுகிறார்கள் என்றும் தெர்ஸ்டன் கருதுகிறார். ஆனால், கோபாலன் நாயரும், அய்யப்பனும், காட்டு நாயக்கர் பேசும் பேச்சு கன்னட கிளைமொழியாகும் என்று கருத்து தெரிவிக்கிறார்கள். நாயக் (1967) மற்றும் உபாத்தியாயா (1971) ஆகிய மொழியியல் அறிஞர்கள் காட்டு நாயக்கரின் பேச்சு கன்னட கிளை மொழியே எனத் தம் ஆய்வுகளில் நிலைநாட்டியுள்ளார்கள். முள்ளு குறும்பர்கள் தனிப்பிரிவினர் என்று முன்பு கண்டோம். இவர்கள் பேசும் பேச்சில் கன்னடம் மற்றும் மலையாள மொழிகளின் கலப்பு பெருமளவில் இருப்பினும், இது தனி மொழியே என மொழியியல் அறிஞர்கள் (சக்திவேல், 1980) தன் ஆய்வுகளில் முடிவு செய்துள்ளார்கள். 'குறும்பர்' எனும் பெயரில் உள்ள பெட்ட குறும்பர்களைத் தவிர்த்து மற்றைய எல்லாப் பிரிவினரும் கன்னட கிளை மொழியையே பேசுகிறார்கள். பெட்ட குறும்பர்களின் பேச்சு ஒரு தனி மொழி என்று ஜெயபால் (1978) தன் ஆய்வில் தெரிவிக்கிறார்.

1961 - ஆம் ஆண்டு சென்ஸஸ் வெளியிட்டுள்ள குறும்பர்களின் பேச்சு பற்றிய தகவல் தெளிவில்லாமல் இருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. 'குறும்பர்' எனும் பெரும் பிரிவில் ஐந்து இனத்தவர் அடங்குவர் என்று கூறும் சென்ஸஸ் அறிக்கை, முள்ளு குறும்பர்களின் பேச்சு தனிமொழி என அறிவிக்கிறது. ஆனால் ஏனைய் நர்ன்கு பிரிவினரும் கன்னட கிளைமொழியே பேசுவதாக

சென்ஸஸ் அறிக்கை தகவல் வெளியிட்டுள்ளது. பெட்ட குறும்பர் தனிமொழி என மொழியியல் ஆய்வுகள் தெளிவாக வரையறுத்துக்காட்டும் போது, பெட்ட குறும்பரையும் சேர்த்து நான்கு குறும்பர் பிரிவினரும் கன்னட கிளைமொழியைப் பேசுகிறார்கள் என **1961**-ஆம் ஆண்டு சென்ஸஸ் முடிவு செய்தது எவ்வாறு என்பதற்கான தெளிவான காரணங்களை சென்ஸஸ் அறிக்கை வெளியிட வில்லை.

காட்டு நாயக்கர் பேச்சைப் பற்றிய தன்னுடைய விளக்க முறை இலக்கணத்தில் நடனசபாபதி (**1986**) காட்டு நாயக்கர் பேச்சு கன்னடத்தில் ஒரு கிளைமொழியே எனக் கருத்து தெரிவிக்கின்றார். கன்னடத்துக்கும் காட்டு நாயக்கர் கிளை மொழிக்கும் இடையே வேறுபட்டுக் காணப்படும் சிறப்பான மொழியியல் கூறுகளை இவர் தம் ஆய்வில் தொகுத்துத் தந்துள்ளமையைக் கீழே காண்போம்.

ஒலியனியல்

1. காட்டு நாயக்கர் கிளைமொழியில், கன்னடத்தில் உள்ள உயிர் ஒலியன்களின் எண்ணிக்கையைவிட அதிகமான உயிரொலியன்கள் உள்ளன. காட்டு நாயக்கர் கிளை மொழியில் உள்ள உயிரொலியன்களாவன:

   ĩ ĩ:,ẽ:, ã, ã,:, õ, ũ, ũ :, ĩ, ĩ : ṫ:, e, ẽ.

2. மூச்சடை அடைப்பொலி (aspirated stop) மூச்சிலா அடைப்பொலி (unaspirated stop), ஒலிப்புடை அடைப்பொலி (voiced stop), ஒலிப்பிலா அடைப்பொலி (unvoiced stop) என நான்கு வகைப் பாகுபாடுகள் கன்னட மொழியில் உள்ளன. ஆனால் ஒலிப்புடை அடைப் பொலி, ஒலிப்பிலா அடைப்பொலி எனும் இரண்டு பாகுபாடுகள் மட்டுமே காட்டு நாயக்கர் கிளைமொழியில் உள்ளன.

3. கன்னட மொழியில் உள்ள /h/ ஒலியனை இந்தக் கிளைமொழி இழந்து விட்டது.

4. காட்டு நாயக்கர் கிளைமொழியில் ஒலியன் நிலையில் உள்ள /ḷ/ கன்னடத்தில் கிடையாது.

5. காட்டு நாயக்கர் கிளைமொழியில் உள்ள உரசொலிகள் (fricatives) / S, Z, Ṣ / ஆகியனவாகும். கன்னடத்தில் உள்ள உரசொலிகள் / S, S, Ṣ / ஆகியனவாகும்.

6. காட்டு நாயக்கர் கிளைமொழியில் உள்ள மூக்கொலியன்கள் / m, n, n, ñ, ṅ / ஆகியனவாகும். இவற்றுல் /ñ, n/ ஆகிய இரண்டு மூக்கொலியன்கள் மிகக் குறைவான சொற்களில் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன. கன்னடத்தில் உள்ள மூக்கொலியன்கள் /m,n,n,n/ ஆகியனவாகும்.

7. காட்டு நாயக்கர் கிளைமொழியில் தட்டொலியும் (tap), வருடொலியும் (trill) ஒலியனிலையில் தனித்தனி ஒலியன்களாக உள்ளன. ஆனால், கன்னடத்தில் தட்டொலி மட்டுமே ஒலியனாக உள்ளது.

பெயர்ச் சொல்லியல்

1. காட்டு நாயக்கர் கிளைமொழியில் அஃறிணைப் படக்கைப் பெயர்ச்சொற்களோடு /-ge/ எனும் பன்மை விகுதி இணைந்து, அஃறிணைப் பன்மை படர்க்கைப் பெயர்ச்சொற்கள் உருவாகின்றன. /-ge/ எனும் பன்மை விகுதி இணையாமலும் பன்மைப்பொருள் தருதல் காட்டு நாயக்கர் கிளைமொழியில் இயலும். ஆனால், கன்னடத்தில் /-vu/ எனும் பன்மை விகுதி கட்டாயமாக இணைந்தே அஃறிணைப் பன்மை பெயர்ச்சொற்கள் உருவாகும்.

2. காட்டு நாயக்கர் கிளைமொழியில் காணப்படும் சாரியைகள் (link morphs) /-a-, -an-, -d-, -n-/ ஆகியனவாகும். கன்னடத்தில் உள்ள சாரியைகள் /-d-, -n, -in-/ ஆகியன வாகும்.

3. கன்னடத்தில் உள்ள பன்மை விகுதி /-gatu/ தன் இரண்டாம் அசையை (syllable) இழந்து, காட்டு நாயக்கர் கிளைமொழியில் /-ga/ என வழங்கி வருகிறது.

4. கன்னட மொழியில் /-annu/ எனும் ஒரே ஒரு சுட்டு வேற்றுமை உருபு (accusative case suffix) மட்டுமே வழக்கில் உள்ளது. காட்டு நாயக்கர் கிளைமொழியில் /-e, -ne/ ஆகிய இரண்டு உருபுகள் வழக்கில் உள்ளன.

5. காட்டு நாயக்கர் கிளைமொழியில் /-gt/ எனும் ஒரே ஒரு கொடைப்பொருள் வேற்றுமே உருபு (dative case suffix) மட்டுமே வழக்கில் உள்ளது. கன்னடத்தில் கொடைப் பொருள் வேற்றுமையின் மாற்று உருபுகளாக (allomorphs) /-ge, -ige, -kke/ ஆகிய மூன்றும் வழக்கில் உள்ளது.

6. காட்டு நாயக்கர் கிளைமொழியில் உடைமைப்பொருள் வேற்றுமை (genitive) உருபுகளாக /-a, - ṫ, -o: ḍa-) ஆகியன வழக்கில் உள்ளன. கன்னடத்தில் இவ்வேற்றுமை உருபு /-a/ மட்டுமே ஆகும்.

7. இடவேற்றுமை (locative) உருபுகளாக /-alli/ மற்றும் /-lṫ/ ஆகிய இரண்டும் முறையே கன்னடத்திலும், காட்டு நாயக்கர் கிளைமொழியிலும் வழக்கில் உள்ளன.

8. தன்மைப் பன்மைப் பெ சொற்கள் /na:va/ மற்றும் /naṅge/ ஆகிய இரண்டும் முறையே கன்னடத்திலும், காட்டு நாயக்கர் கிளைமொழியிலும் வழக்கில் உள்ளன.

வினைச்சொல்லியல்

1. காட்டுநாயக்கர் கிளைமொழியில் செயவெனெச்சம் (infinitive), எதிர்மறை, நிபந்தனை வினையெச்சம் (conditional) மற்றும் எதிர்மறை வினைத்தொடர் போன்ற தொடரமைப்புகளில் /-p-/ எனும் சாரியை தோன்றும். கன்னடத்தில் இந்தச் சாரியை இல்லை.

2. காட்டு நாயக்கர் கிளைமொழியிலும், கன்னடத்திலும் உயர்வு ஏவல் (honorific imperative) உருபுகள் முறையே /-nṫ/ மற்றும் /iri/ ஆகும்.

3. காட்டு நாயக்கர் கிளைமொழியில் காலங்காட்டும் விகுதிகள் பயன்படும் முறைமையினால் இந்தக் கிளைமொழி மற்றைய எல்லா திராவிட மொழிகளில் இருந்தும் தனிப்பட்டு உள்ளது. இந்தக் கிளைமொழியில் இரண்டு காலங்கள் மட்டுமே உள்ளன. அவையாவன: 1) இறந்தகாலம், 2) இறந்தகாலம் அல்லாத காலம் (non-past). வினை எச்சங்களிலும் (non-finite), தொழில் பெயர்களிலும் (verbal nouns) வினையாலணையும்

பெயர்களிலும் (participial nouns) மட்டுமே காலவேறுபாடு தெளிவாகக் காட்டப்படுகிறது. இறந்த காலம் மற்றும் இறந்தகாலம் அல்லதா காலங்காட்டும் உருபுகளை இணைக்கும் முறை காட்டு நாயக்கர் கிளைமொழியில் காணப்படவில்லை. வினை முற்றுகளில் காலங்காட்டும் உருபுகள் காணப்படினும், அவை இறந்த காலத்தையோ அல்லது இறந்தகாலம் அல்லாத மற்ற காலத்தையோ சுட்டுவதில்லை. ஆனால், கன்னடத்தில் இறந்தகாலம், நிகழ்/நடப்பு (habitual), எதிர்காலம் ஆகிய மூன்றுவகைக் காலவேறுபாடுகள் உள்ளன. இந்த மூன்று வகை வேறுபாடுகளும் வினைமுற்றுகளிலும், வினையெச்சங்களிலும் காணப் படுகின்றன.

4. காட்டு நாயக்கர் கிளைமொழியில் அறிவுறுத்தும் வினையமைப்பு உருபு (hortative marker) ஆகும். இதுவே தன்மைப் பன்மை உளப்படு (first person inclusive plural) பெயர்ச்சொல் அடங்கிய தொடர் அமைப்புகளில் /õ/ அல்லது /o/ உருபுகளாக உள்ளன. கன்னடத்தில் தன்மைப் பன்மை உளப்படு பெயர்ச்சொல் அடங்கிய தொடர் அமைப்புகளில் பயனில் உள்ள அறுவுறுத்தும் வினையமைப்பு உருபு /-o:na/ ஆகும்.

<u>(உ.ம்)</u>

<u>காட்டு நாயக்கர்</u>	<u>கன்னடம்</u>
bareyo:ṇa	barevõ 'நாம் போகட்டும்'
ma:do:ṇa	ma:ḍo 'நாம் செய்யட்டும்'

5. காட்டு நாயக்கர் கிளைமொழியில் வினை முற்றுகளில் உள்ள இடம்பெயர் விகுதி (pronominal termination) ஒரு வகைக்குள் அடங்கும். கன்னடத்தில் இறந்த காலம் மற்றும் எதிர்கால வினைமுற்றுகளில் ஒரு வகை இடம்பெயர் விகுதியும், நிகழ்கால வினைமுற்றுகளில் மற்றொரு வகை இடம்பெயர் விகுதியும் என இரண்டு வகை விகுதிகள் வழக்கில் உள்ளன.

6. காட்டு நாயக்கர் கிளைமொழியில் வெவ்வேறு வகையான எதிர்மறைகளை உணர்த்தும் சில குறை வினைகள் (defective verbs) உள்ளன. அவையாவன:

koḷḷ)

a:p)

a:padill)

ka:ṇẽ)

சொற்பட்டியல்

உச்சரிப்பு நிலையில் காட்டு நாயக்கர் கிளைமொழிக்கும் கன்னடத்துக்கும் உள்ள வேறுபார்டுகளைச் சுட்டிக்காட்ட, ஒரே சொல் இரு பேச்சுக்களிலும் எவ்வாறு வழங்கி வருகிறது என்பதைச் சில உதாரணங்கள் மூலம் நடனசபாபதி எடுத்துக் காட்டுகிறார். அவர் தந்துள்ள சொற்பட்டியல் கீழே சுருக்கித் தரப்பட்டுள்ளது.

காட்டு நாயக்கர் கிளைமொழி	கன்னடம்	
man∂	maga	'மகன்'
mag∂	magaḷu	'மகள்'
mar∂	mara	'மரம்'
ma:ḍ ṫ	maḍ u	'செய்'
na:nt	na:nu	'நான்'
kaṭṭṫ	kaṭṭu	'கட்டு'
ce:ḷṫ	ce:ḷu	'தேள்'
suri	suri	'ஊற்று'
soje	sose	'மருமகள்'
ba:vi	ba:vi	'நல்லது'
akki	akki	'அரிசி'

aḍakke	aḍake	
uṛi	huri	'வறு'
∂kki	hakki	'பறவை'
∂lli	hallu	'பல்'
eḷe:ni	aḷiya	'மருமகன்'

7. கசபா மொழி

கசவர் அல்லது கசபர் என்று அழைக்கப்படும் இந்தப் பழங்குடி மக்கள் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் மசினிகுடி பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். காடுகளிலேயே வாழ்ந்து பழகிப்போன இவ்வின மக்கள் காட்டுப்பகுதிகளில் ஏறத்தாழ சமதளமாக உள்ள (நீலகிரிக்கும் மோயார் நதிக்கும் இடைப்பட்ட) பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள். **1961** - ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கீட்டின்படி கசவ இனத்தவரின் மொத்த எண்ணிக்கை **391** பேர் ஆகும்.

இவ்வினத்தவரில் ஒரு பகுதியினர் தங்களை இருளர்கள் என்று கூறிக்கொள்ளுகிறார்கள். இருளர்கள், செஞ்சிக்கள், ஏனாதி போன்ற பழங்குடி மக்களிடையே உடல்வாகு அமைப்பில் ஒற்றுமை இருப்பதாக உருவத் தோற்ற மானுடவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள். கசவர்களில் பெரும்பாலோர் காட்டுப் பொருள்களை சேகரித்தும், தேன் எடுத்தும் வாழ்க்கை நடத்துகிறார்கள். சிலர் விவசாயம் செய்கிறார்கள். மற்றும் சிலர் மலைத் தோட்டங்களிலும், காட்டிலாக்காவிலும் பணியாற்றுகின்றனர். காய்கறிகளைப் பயிரிடுவது போன்ற விவசாய வேலையில் ஈடுபடுவோரும் உளர்.

கசவர்களின் பேச்சுமொழி பற்றி மானுடவியல் அறிஞர்களும், மொழியியல் அறிஞர்களும் கருத்துகள் தெரிவித்து உள்ளார்கள். அண்மைக்கால மொழியியல் ஆய்வுகள் கசவர்களின் பேச்சுமொழியைத் தனிமொழி என வரையறுத்துக் காட்டிய போதும், கசவர் பற்றிய ஆய்வுகள் முதன்முதல் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து நீண்டகாலம் இம்மொழியைப்பற்றிய ஒருமித்த கருத்து அறிஞர்கள் இடையே நிலவவில்லை.

1891 - ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கீட்டு அறிக்கையில் கசவர் பேச்சு மொழியைப் பற்றி மூன்று

விதமான கருத்துக்களை கெயட் (1891) தெரிவிக்கிறார். அவையாவன:

1. எருக்கலா அல்லது குறவா, இருளா மற்றும் கசவா எனப்படும் மூன்றும் தமிழின் கிளைமொழிகள் என காட்டப்பட்டுள்ளன. ஆனால் இம்மூன்றும் அல்லாமல் மேலும் சில வட்டார, மாவட்டக் கிளைமொழிகளும் தமிழுக்கு உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் பேசப்படும் வட்டார வழக்குகளே இவையாகும். இத்தகைய கிளைமொழிகளை ஒரு தனிப் பழங்குடி யினரின் மொழி எனவோ, மலை இனத்தவரின் மொழி எனவோ கருத இயலாது. அவை எல்லாம் தமிழின் கிளை மொழிகளாகக் கருதப்பட்டு, தமிழின் கீழ்க் காட்டப் பட்டுள்ளன.
2. இந்தப் பழங்குடியினரைப் (அதாவது கசவர் இனத்த வரை) பற்றியோ அல்லது அவர்கள் பேசும் பேச்சைப் பற்றியோ எத்தகைய ஆய்வுகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இந்தப் பழங்குடியினரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். கன்னடத்தின் கலப்படம் மிகவும் நிறைந்த ஒரு கிளைமொழியே இது எனக் கருதப்பட வேண்டும்.
3. இந்த மொழியில் வழக்கில் உள்ள சொற்களும் இருளா மொழிச் சொற்களும் ஏறத்தாழ ஒன்றாக இருக்கின்றன. ஆனால் இலக்கண நிலையிலும், சொல் பட்டியலிலும் அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன. கசவரின் பேச்சு தனி மொழியா அல்லது ஒரு கிளைமொழியா என்பது ஆழமான ஆய்வின் மூலம் முடிவு செய்யப்பட வேண்டும்.

பவானி பள்ளத்தாக்கில் வாழும் இருளர்களை முதுவர் என்றும், மசினிகுடி வட்டாரத்தில் வாழும் இருளர்களைக் கசவர்கள் என்றும் பிரான்ஸிஸ் (1908) அழைக்கிறார். ஆனால், மசினிகுடியில் வாழும் இருளர்களைக் கசவர்கள் என்று அழைப்பதற்கு ஆதாரங்கள் இல்லை என பிரான்ஸிஸின் கூற்றைப் பாசு மறுக்கிறார். சுவலபில் (1973) இருளாவின் வட கிளைமொழி கசவர் பேசும் பேச்சு மொழி என்கிறார். சண்முகம் (1974) கசவர் பேச்சு இருளர்களின்

கிளைமொழி என்பதை மறுப்பதுடன் ஒலியலில் கூறுகளாலும், சொல்லியல் கூறுகளாலும் கசவர் பேச்சு தனிமொழியாக இருக்க வேண்டுமென அறுதியிட்டுக் கூறுகிறார். சிதம்பரநாதன் (**1978**) கசவர் மொழி பற்றிய தனது ஆய்வில் கசவர்மொழி தனிமொழி என்றும், அது தென் திராவிட மொழிகளுள் ஒன்றெனவும் காட்டியுள்ளார்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள பொதுவான புத்தாக்கங்கள் தென் திராவிட மொழிகளுக்கேயுரியவை என்றும், அவை கசவர் மொழியில் காணப்படுவதால் கசவர் மொழியும் தென் திராவிட மொழிப்பிரிவைச் சேர்ந்த தனிமொழியே எனவும் சிதம்பரநாதன் கருதுகிறார்.

1. தொல் திராவிட/*c/ இழப்பு
2. தொல் திராவிட /*ɯ/ இம்மொழிகளில் /u/ எனவும் /i/ எனவும் மாற்றமடைதல்
3. /i/ ஒலியன் /e/ ஒலியனாகவும், /u/ ஒலியன் /o/ ஒலியனாகவும் மாறிமாறித் தோன்றுதல்
4. பெண்பால் பிரிவு தோன்றல்.

படர்க்கை இடப்பெயர்கள் பால் பிரிவை உணர்த்துவதும், இவ்விடப் பெயர்கள் வாக்கிய அமைப்பில் இடம்பெறும் போது வரும் வினைமுற்றுகளில் பால்பிரிவு தெளிவாகப் பிரித்தறியப்படுவதும் தென் திராவிட மொழிகளில் காணப்படும் ஒரு பொதுத் தன்மை ஆகும். இது கசவ மொழியிலும் உள்ளது. இந்தப் பொதுத் தன்மையினின்றும் உருவான மற்றைய பண்பு வளையங்கள் (isoglosses) தென் திராவிட மொழிகளிலும், கசவ மொழியிலும் காணப்படுகின்றன. உதாரணமாக

1. பன்மையைச் சுட்டும் விகுதிகள் சில இடங்களில் பயன்படுத்தப்படாமை
2. எதிர்மறை வாக்கிய உருவாக்கம்
3. கட்டாய உறுப்பு (obligatory) வாக்கிய உருவாக்கம்
4. வியங்கோள் (optative) வாக்கிய உருவாக்கம்
5. அறிவுறுத்தும் வினையமைப்பு (hortative) வாக்கிய அமைப்பு

கீழ்வரும் பகுதிகளில் கசவ மொழியின் இலக்கணக் கூறுகளைச் சுருக்கமாகக் காண்போம். (சிதம்பரநாதபிள்ள, *1978*).

பெயர்ச்சொல்லியல்

1. ஒருமை-பன்மைப் பாகுபாடு தன்மை, முன்னிலை மற்றும் தற்சுட்டு (reflexive) இடப்பெயர்களில் மட்டுமே காணப்படுகிறது. தன்மைப் பன்மை இடப்பெயர்களில் உளப்பாட்டுப் பன்மை, உளப்பாடில்லாப் பன்மை ஆகிய வேறுபாடுகள் கிடையாது.

ஒருமை விகுதி : -n

பன்மை விகுதி : -m

2. பால்-எண் காட்டும் விகுதிகள் ஆவன:

a) ஆண்பால் ஒருமை : ∞ -en, ∞ -a:, ∞-va:n, ∞-ma:r, ∞-kka:rar,

b) பெண்பால் ஒருமை : ∞-iṯṯi,∞ ṯṯi, ∞-a:l, ∞ -iṯ ṯi,∞-si,∞-i, ∞-icci, ∞-acci, ∞-va:ḷ, ∞-kka:ṯ ṯi

c) அஃறிணை ஒருமை : -ḏ ∞-d i̱

d) அஃறிணைப் பன்மை : ∞-xa:ḷ, ∞-ḏixa:ḷ

e) உயர்வு ஒருமை (honorific singular) : -va:r

f) உயர்திணைப் பொதுப் பெயர்ச் சொல் ஒருமை : ∞-i, ∞-a:ḷi, ∞-a:ḍasi, ∞-ar, ∞-mba:ri, ∞-sa:li

g) உயர்திணைப் பன்மை : ∞-r, ∞-va:r, ∞-kka:rar, ∞-xa:l

3. கவச மொழியில் ஒன்பது வேற்றுமைகள் உள்ளன. இவற்றுள் எழுவாய் வேற்றுமையும், விளி வேற்றுமையும் அடங்காது. கசவ மொழியில் காணப் படும் வேற்றுமை உருபுகளாவன:

1. சுட்டு வேற்றுமை: /-e/
(accusative case)

2. கருவிப்பொருள் வேற்றுமை: ∞-d̲i, ∞-d̲ird̲a:
(instrumental)

3. கொடைப்பொருள் வேற்றுமை: ∞-kk-, ∞-kke
(dative)

4. உடைமைப்பொருள் வேற்றுமை : -d̲ -
(genitive)

5. இடவேற்றுமை : ∞-da:v, ∞-ili
(locative)

6. நோக்க வேற்றுமை: ∞-d̲a:vird̲a:, ∞-illird̲a:
(ablative)

7. உடனிகழ்ச்சி வேற்றுமை: ∞-d̲okka:, ∞-d̲oṭṭikk,
(sociative)

8. காரண வேற்றுமை: ∞-kka:gi
(purposive)

9. ஒப்புமை வேற்றுமை : ∞-kkird̲a:
(comparative)

4. கசவ மொழியில் உள்ள மூவிடப் பெயர்களாவன:

தன்மை ஒருமை : na:nt

தன்மைப் பன்மை : na:m

முன்னிலை ஒருமை : ni:nt

முன்னிலைப் பன்மை : ni:mt

படர்க்கை மூவிடப்பெயர்: படர்க்கை மூவிடப் பெயர்கள் சுட்டுப் பெயர்களிலிருந்து உருவாகின்றன. சுட்டுப் பெயர்கள் சேய்மை சுட்டு, அண்மைச்சுட்டு என இருவகைப்படும்.

சேய்மைச் சுட்டு உருபு	:	a-
அண்மைச் சுட்டு உருபு	:	i-
படர்க்கை உயர்திணை ஆண்பால் ஒருமை	:	ava:n, iva:n
படர்க்கை உயர்திணை பெண்பால் ஒருமை	:	ava:iva:
படர்க்கை உயர்திணை உயர்வு ஆண்பால் ஒருமை	:	ava:ṙt, iva:ṙt
படர்க்கை அஃறிணை ஒருமை	:	adṯ, idṯ
வினாவிடப்பெயர் உயர்திணை உயர்வு பொதுப்பெயர்	:	eva:r
உயர்திணைப் பொதுப்பெயர்	:	a:ṙt
உயர்திணை ஆண்பால் ஒருமை	:	eva:n

5. தற்சுட்டு இடப்பெயர் உருபு : ta-

வினைச் சொல்லியல்

1. தன்வினை வேர்ச் சொல்லோடு /-ṯ-, -ṯ ṯ-, -kk-, -x-/ ஆகிய பிறவினை உருபுகள் இணைவதன்மூலம் பிறவினைச் சொற்கள் உருவாகின்றன.
2. கசவ மொழியில் அனுமதிப் பொருள் (permissive) விகுதி /-xoy/ஆகும். இவ்விகுதி வினைச்சொல்லோடு இணைந்து அனுமதிப்பொருள் தருகிறது.

   (உ.ம்) va:xoy 'வரலாம்'
3. அறிவுறுத்தும் வினையமைப்புச் (hortative) சொற்கள் /-xaḍi/ எனும் விகுதி வினைச்சொல்லோடு இணைவதன் மூலம் உருவாகின்றன.

   (உ.ம்) ṯiṉ ṉ-xa:ḍi > ṯiṉ ṉtxa:ḍi 'உண்ணட்டும்'

4. இயக்குவினை (causative) சொற்கள் /-s-/ எனும் விகுதி வினைச்சொல்லோடு இணைவதன் மூலம் உருவாகின்றது.

5. ஏவல் வினை:

a) ஒருமை ஏவல் வினைச் சொற்களாக வினை வேர்களே பயன்படுத்தப்படுகின்றன. விகுதி எதுவும் வினைவே ரோடு இணைவதில்லை.

(உ.ம்) nu:kk->nu:kkt 'தெளி'

b) பன்மை ஏவல் வினைச்சொற்களோடு /-vty/s எனும் விகுதி இணைந்து பன்மை ஏவல் வினைச் சொற்கள் பிறக்கின்றன. (உ.ம்) s-vtyas 'செடி நடு'

6. கசவ மொழியில் இரண்டு காலங்களே உள்ளன. அவை இறந்த காலம் மற்றும் இறந்த காலம் அல்லாத காலம் ஆகியனவாகும். இறந்தகால விகுதிகள்: /-ṯ-, -d̲-, -ṫn-, -n̲d̲-, -n-, -i-/.

இறந்தகாலம அல்லாத கால விகுதிகள்: /-k-, -x-/.

7. முற்றாவினையைக் குறிக்க இரு விகுதிகள் கசவ மொழியில் பயன்படுத்தப்படுகின்றன. அவை /-e/ மற்றும் /eye/ ஆகியனவாகும். இவை இரண்டும் எல்லா வினைச் சொற்களிலும் மாறி மாறிப் பயன்படுத்தப்படுகின்றன.

8. எதிர்மறை உருபு /ele/ ஆகும். வினைச்சொற்களில் இறந்தகால விகுதிகளுக்குப் பிறகு இந்த எதிர்மறை உருபு வருகிறது.

மற்றொரு எதிர்மறை உருபு முற்றாவினைகளுடன் வருகிறது. அவ்வுருபு /-ma:ṭṭ/ ஆகும்.

9. பெயரெச்ச உருபு /-e/ ஆகும். இது வினைச்சொற்களில் காலங்காட்டும் விகுதிக்குப் பிறகும், எதிர்மறை விகுதிக்குப் பிறகும் வருகிறது.

10. வினையெச்ச உருபு /-ma:li/ ஆகும். இது வினைச் சொற்களில் காலங்காட்டும் விகுதிக்குப்பிறகும், எதிர்மறை விகுதிக்குப்பிறகும் வருகிறது.

11. வினையாலணையும் பெயரைச் சுட்ட /-a-/ உருபு பயன் படுகிறது. இது வினைச் சொற்களில் காலங் காட்டும் விகுதிக்குப் பிறகும், எதிர்மறை விகுதிக்குப் பிறகும் வருகிறது.

12. தொழில் பெயர் விகுதி /-ed/ ஆகும். இது வினைச்சொற் களில் காலங்காட்டும் விகுதிக்குப் பிறகும், எதிர்மறை விகுதிக்குப்பிறகும் வருகிறது.

13. இடம்-பால்-எண் விகுதிகள்

a) தன்மை ஒருமை: /-en, -e/

b) தன்மைப் பன்மை : /-e:m/

c) முன்னிலை ஒருமை : /-e/

d) முன்னிலைப் பன்மை : /-iri/

e) படர்க்கை ஆண்பால் ஒருமை: /-a:n/

f) படர்க்கைப் பெண்பால் ஒருமை : /-a:ḷ/

g) அஃறிணை ஒருமை : /-d, ∞-ad/

h) உயர்திணைப் பன்மை: /-a:r/

i) அஃறிணைப் பன்மை: /-ine, ∞-e/

8. காடர் மொழி

இந்தியாவின் மிகபபழங்குடிகளுள் ஒன்றாகிய காடர் இனத்தினர் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்திலும், கேரளாவில் பாலக்காடு, திருச்சூர் மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதிகளிலும் வாழ்கின்றனர். கோயமபுத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி வட்டத்தில் ஆனைமலைப் பகுதிகளில் காடரைத் தவிர, முதுவர், மலமலசர் ஆகிய பழங்குடி இனத்தவர்களும் வாழ்ந்து வருகிறார்கள். ஆனைமலைப் பகுதிகளில் பரமன்கடவு, பன்னிகுழி, சவமலை, நெடுங்குன்றம், கருங்குன்று, அயன்குளம், வாகைமலை, டாப்சிலிப் ஆகிய இடங்களில் காடர்கள் வாழ்கிறார்கள். 1961-ஆம ஆண்டு சென்ஸஸ் கணக்கீடு இந்தியாவில் 1250 காடர்கள் உள்ளதாகக் குறிப்பிடுகிறது. 1978.79 ஆண்டுகளில் நடை பெற்ற தமிழ்நாடு வனத்துறைக் கணக்கெடுப்பின்படி 806 காடர்கள் தமிழ்நாட்டில் உள்ளதாகத் தெரிகிறது.

காடர்கள் தங்களைக் ‘காடாளு’ என்று கூறிக்கொள்ளு கின்றனர். தாங்கள் பேசும் மொழியைக் ‘காடாளு பாசே’ என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். காடர் இனத்தவர் அனைவரும் இருமொழியாளர்கள் எனலாம். தாய்மொழியாகிய காடர்மொழி அல்லாது, எல்லாரும் தமிழும் பேசுகின்றனர். வயது முதிர்ந்த காடர்கள் தமிழைப் பேசவும், புரிந்து கொள்ளவும் முடிந்தாலும், தாய்மொழியாளர் திறனோடு தமிழைப் பயன்படுத்துகிறார்கள் எனக் கூற இயலாது. ஆனால் இளைய தலைமுறையினர் தமிழைத் தாய்மொழியாளர் போன்றே பேசுகிறார்கள் எனலாம். காடர் அல்லாதவர்கள் தங்களோடு இருக்கும் போது இவர்கள் தங்கள் தாய்மொழியில் பேசிக்கொள்வதில்லை. தங்கள் தாய்மொழியைப்பற்றிய ஒரு தாழ்வு உணர்ச்சி இவர்கள் மத்தியில் இருப்பதே இதற்குக் காரணமெனலாம். வால்பாறைப் பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் காடர்களுக்கு மலையாளம் பேசுவோருடன் அதிகத் தொடர்பு ஏற்படுவதால், இவர்கள் மலையாள மொழியையும் புரிந்து கொள்ளுகிறார்கள்.

தென்னிந்தியாவில் வாழும் பழங்குடி இனங்களுக்குள் வேட்டை ஆடுதலை முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கும் ஒரே ஒரு பழங்குடியினர் காடர்கள்தாம் எனக்கூறலாம். அதனால் மானுடவியல் அறிஞர்கள் காடர்களைப் பற்றிய பல ஆய்வுகளை நடத்தியுள்ளார்கள். மானுடவியல் அறிஞர்கள் காடர்மொழி பற்றிய கருத்துகளைத் தங்கள் ஆய்வில் கூறி இருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. தர்ஸ்டன் (1909), காடர்கள் கலப்படமான, ஏற்ற இறக்கங்களோடு தமிழைப் பேசுகிறார்கள் என்றும், இவர்கள் மொழி தமிழ், மலையாள மொழிகளின் கலவைதான் என்றும் கூறுகிறார். கொச்சின் பகுதிகளின் காடுகளில் வாழும் காடர்கள் தமிழ்-மலையாளம் கலந்த ஒருவித கலப்படமான மொழியைப் பேசுகிறார்கள் என்றும், ஆனைமலைப் பகுதிகளில் வாழும் காடர்கள் தமிழின் ஒரு வகையான 'மலசர்' எனும் மொழியைப் பேசுகிறார்கள் என்றும் தன் ஆய்வில் அனந்தகிருஷ்ண ஐயர் (1909) குறிப்பிடுகிறார். தமிழும், மலையாளமும் கலந்த ஒருவித மொழியைக் காடர் பேசுகிறார்கள் என்று சுப்பராயலு (1946) மற்றும் ஐயப்பனும் (1948) தங்கள் ஆய்வுகளில் குறிப்பிடு கிறார்கள்.

ஏரென்ஃபில்ஸ் (Ehrenfels, 1952), காடர்மொழி பற்றிச் சற்று விரிவான விளக்கத்தைக் கொடுத்துள்ளார் எனலாம். மலையாள மொழியின் தாக்கத்தோடு கூடிய, கலப்படமான தமிழைக் காடர்கள் பேசுகிறார்கள் என்றும், காடர்மொழி தனி மொழியாக இருந்து பிறகு சிதைந்து மலையாளம், தமிழ் தாக்கத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும் என்றும் இவ்வறிஞர் கருதுகிறார். 'காடர் மொழியின் விளக்க இலக்கணம்' என்ற தலைப்பில் இந்திரா (1976) ஒரு ஆய்வுப்பட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளார். கேரள மாநிலத்தில் திருச்சூர், பாலக்காடு மாவட்டங்களில் வாழும் காடர்களின் மொழியை மையமாகக் கொண்டு ஆராயப்பட்ட இவ்வாய்வில், காடர்மொழி மலையாளத்தின் ஒரு கிளைமொழி என்ற தன் கருத்தை இந்திரா கூறுகிறார். ஆனால், வேற்றுமை உருபுகள், சாரியை, எதிர்மறை, கால விகுதிகள், இணைப்பு வினை (copula) ஆகிய மொழியியல் கூறுகள் மலையாளத்தினின்றும் தனிப்பட்டுள்ள தாகவும் இவர் கருத்து தெரிவிக்கின்றார். கேரளாவில் வாழும் காடர்களின் மொழிக்கும், தமிழ் நாட்டில் வாழும் காடர்களின் மொழிக்கும் சில மொழியியல் கூறுகளில் பொதுவான

தன்மைகள் புலப்பட்டாலும், தமிழ்நாட்டில் உள்ள காடர் மொழியைத் தனி மொழியாகவே கருதலாம் என்ற கருத்தையும் இந்திரா தன் ஆய்வில் புலப்படுத்தியுள்ளார்.

'ஆனைமலை காடர் மொழியின் விளக்க இலக்கணம்' என்ற தன் ஆய்வுப்பட்ட ஆய்வில் சுரேஷ் **(1981)** காடர் மொழி ஒரு தனி மொழியாகக் கருதப்பட வேண்டும் என்கிறார். காடர் மொழியின் சிறப்பான மொழியியல் கூறுகளையும், திராவிட மொழிக் குடும்பத்தில் காடர் மொழி வகிக்கும் நிலையையும் தன் ஆய்வில் இவர் கூறியுள்ளார். கீழ்க்கண்ட பகுதிகளில் காடர் மொழியின் மொழியியல் கூறுகளின் சிறப்பில்புகளைத் தொகுத்துக் காண்போம்.

ஒலியனியல்

1. காடர் மொழியில் **10** உயிரொலியன்களும் (i,i:, e,e:,a,a:,u,u:,o,o:), **18** மெய்யொலியன்களும் (p, b, ṯ, t,ṭ, c, k, m, ṇ ≈, ṅ, s, l, ḷ, r, v, y) உள்ளன.

2. தொல்திராவிட மொழியின் */c-/ காடர் மொழிச் சொல்லில் இழக்கப்படுகிறது. இவ்வகை இழப்பு தென் திராவிட மொழிகள் எல்லாவற்றிலும் காணப்படு கின்றது.

3. தொல்திராவிட மொழியின் /*ɰ/ காடர் மொழியில் /ɰ/ எனவும் (t) எனவும் ஒலிக்கப்படுகிறது. இவ்வகை ஒலி மாற்றம் தமிழிலும், மலையாளத்திலும் காணப்படு கின்றது. ஆனால் கன்னடத்தில் இந்த ஒலி மாற்றம் உண்டாகவில்லை. காடர் மொழியில் (t) ஒரு மாற்றொலியன் நிலையிலேயே உள்ளது. துளு, குடகு போன்ற மொழிகளில் இது ஒலியன் நிலையில் உள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

4. தொல்திராவிட மொழியின் /*-ṇ-/ ஒலியனும் /*ḷ/ ஒலியனும் காடர் மொழியில் தக்கவைக்கப்பட்டுள்ளன. இதுவும் தென் திராவிட மொழிகளின் பொதுத் தன்மைகளுள் ஒன்றாகும்.

5. சொல்லின் முதனிலையில் ஒலிக்கும் தொல்திராவிட /*v-/ ஒலியன் /b-/ஒலியனாக மாறியுள்ளது. இவ்வகை ஒலியன்

மாற்றம் குடகு, கன்னடம், துளு ஆகிய மொழிகளிலும் காணப்படுகின்றது.

6. /*ḻ/ ஒலியன் காடர் மொழியில் /ḷ/ ஒலியனாகவும் /y/ ஒலியனாகவும் மாறியுள்ளது. இவ்வகை ஒலியன் மாற்றத்தை வரையறுத்துச் சொல்ல இயலவில்லை.

7. சொல்லின் கடைநிலையில் இரு மெய் இணையொலிகள் காடர் மொழியில் வருகின்றன.

உ.ம்.

pa:ṭ ṇ 'நீ பாடு'

kuṭ ṇ 'நீ கொடு'

8. /*i/ ஒலியன் /e/ ஒலியனாகவும் /*u/ ஒலியன் /o/ ஒலியனாகவும் காடர் மொழியில் மாறி ஒலிக்கின்றது.

உ.ம்.

ele 'இலை'

keḷɛ 'கிளை'

koṭa: 'குடை'

kole 'குலை'

சொல்லியல

1. தன்மை ஒருமை இடப்பெயரின் வேற்றுமைத் திரிபுச் சொல் en-[enn-] ஆகும். தென்திராவிட மொழிகளிலும், வட திராவிட மொழிகளிலும் *ya->e- என மாறி உள்ள நிலைமையை இது விளக்குகிறது. தொல்திராவிட மொழியில் தன்மை ஒருமை இடப்பெயரின் வேற்றுமைத்திரிபுச் சொல் *yan-ஆகும்.

காடர் மொழியில் தன்மைப் பன்மை இடப்பெயரின் வேற்றுமைத் திரிபுச் சொல் /nam/ ஆகும். தொல்திராவிட மொழியிலும் /*nam/ என்றே வழங்கி உள்ளதும், தற்போதைய தென்திராவிட மொழிகளிலும் இதே வடிவம் உள்ளதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

தன்மை இடப்பெயரில், உளப்பாட்டுத் தன்மை, உளப்பாடில்லா தன்மை எனும் பாகுபாடு காடர் மொழியில் கிடையாது. இந்த மொழியியல் கூறின் அடிப்படையில் காடர் மொழி ஏனைய தென்திராவிட மொழிகளினின்றும் மாறுபடுகிறது.

காடர் மொழியில் முன்னிலை ஒருமை இடப்பெயர் /ni:n/ ஆகவும், பன்மை இடப்பெயர் /nu:m/ ஆகவும் உள்ளது. தொல் திராவிட மொழியின் முன்னிலை ஒருமை இடப்பெயர் /*ni:m/ ஆகும். எனவே தொல் திராவிட மொழியின் ஒலி வடிவத்தைக் காடர்மொழி தக்கவைத்துள்ளது எனலாம். இவ்விடப்பெயரின் கடைநிலையில் உள்ள /-n/ ஒலியனை, காடர், கசபா, கன்னடம் அல்லாத தென்திராவிட மொழிகளும், தெலுங்கு, பிராகூய் ஆகிய மத்திய, வட திராவிட மொழிகளும் இழந்துவிட்டன. இந்நிலையில் முன்னிலை ஒருமை இடப்பெயராக /ni:n/ வழக்கில் உள்ளதைக் காடர் மொழியின் சிறப்பியல்பாகக் கருதலாம்.

2. காடர் மொழியில் **10** வேற்றுமைகள் உள்ளன. இவற்றுள் எழுவாய் வேற்றுமையும், விளி வேற்றுமையும் அடங்காது. காடர் மொழியில் காணப்படும் வேற்றுமை உருபுகளாவன:

1. சுட்டு வேற்றுமை : -e
   (accusative case)
2. கருவிப்பொருள் வேற்றுமை : /-i ṭṭ ~ -a:le
   (instrumental)
3. கொடைப்பொருள் வேற்றுமை: /-kku~a:kku ~ -ukku/
   (dative case)
4. உடனிகழ்ச்சி வேற்றுமை : / -o:te ~ -bra:kku
   (sociative case)
5. உடமைப்பொருள் வேற்றுமை : /-in,-o:te, - ϕ, mellom/
   (genitive case)
6. இடவேற்றுமை : /-il, ~-ba:ṅku, ~-ba:ti/
   (locative case)
7. விழி வேற்றுமை : -iṭa:ni
   (path case)

8. நோக்க வேற்றுமை : -ṯu~ba:ccuru
(ablative case)

9. காரண வேற்றுமை : /-be:ṇṭi/
(purposive case)

10. ஒப்புமை வேற்றுமை : /-kka:l.
(comparative case)

3. எண்ணுப் பெயர்கள்:காடர் மொழியில் காணப்படும் எண்ணுப் பெயர்களாவன:

onṇu	'ஒன்று'	añcu	'ஐந்து'
renṭu	'இரண்டு'	a:tu	'ஆறு'
mu:ṇu	'மூன்று'	e:yu	'எழு'
na:lu	'நான்கு'	eṭṭu	'எட்டு'
ombaṯu	'ஒன்பது'	loccum	'லட்சம்'
paṯṯu	'பத்து'	ko:ṭi	'கோடி'
nu:ru	'நூறு'	ka:lu	'கால்'
a:yrom	'ஆயிரம்'	are	'அரை'

4. தொடர் அமைப்பில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே 'பால்-எண் இயைபு' (concord) காடர் மொழியில் கிடையாது.

5. அஃறிணைப் பன்மை விகுதி ஒரு கட்டாயச் சேர்க்கையாகக் காடர் மொழியில் இல்லை. அஃறிணைப் பன்மை விகுதி காடர் மொழியில் காணப்படவும் இல்லை. மேலும் எழுவாய்க்கும் பயனிலைக்கும் 'எண் இயைபும் காணப்படவில்லை'.

வினைச்சொல்லியல்

1. வினைச் சொற்களில் இயக்கு வினை விகுதி (causative) இணைவதால் இயக்கு வினைச் சொற்கள் பிறக்கின்றன.

2. காடர் மொழியில் மூன்று காலங்களைக் காட்டும் விகுதிகள் உள்ளன. அவையாவன:

   1. இறந்த கால விகுதிகள்: /-in-, -n̲ t̲-, -t̲-, -n-/

   இவ்விகுதிகள் எல்லாம் துணைநிலை வழக்கில் (complementary distribution) வருகின்றன.

   2. நிகழ்கால விகுதிகள்: /-pṭ-, -bṭ-, - ṭ -/

   விகுதிகள் எல்லாம் துணைநிலை வழக்கில் வருகின்றன.

   3. எதிர்கால விகுதிகள்: /-pa:ṭ-/ இவ்விகுதிகளோடு மற்றொரு எதிர்கால விகுதி /-pina:ṭ-/ காடர் மொழியில் உள்ளது. இவ்விரண்டும் சுயேச்சை மாற்றுருக்களாய் (free-variation) காடர் மொழியில் வருகின்றன.

3. எதிர்மறை: காடர் மொழியில் சொல்லியல் எதிர்மறை உருபும், தொடரியல் எதிர்மறைச் சொல்லுமாக இரு எதிர்மறை அமைப்புகள் காணப்படுகின்றன.

1. சொல்லியல் எதிர்மறை

a) /-a:t̲-/ உருபு பெயரெச்ச விகுதி /-e/க்கு முன்பாக வருகிறது.

(உ.ம்) ceyy-a:t̲-e 'செய்யாத'
ot̤t-a:t̲-e 'ஒட்டாத'

b) /-at̲ t̲a:-/ உருபு இறந்த காலத்தில் பயன்படுத்தப் படுகிறது. வினைச் சொற்களின் பின் இவ்வுருபு சேரும்.

(உ.ம்) no:kk-at̲ t̲a: 'பார்க்கவில்லை'

cey-at̲ t̲a: 'செய்யவில்லை'

c) /-a:vu/ உருபு நிகழ் காலத்திலும், எதிர் காலத்திலும் பயன்படுத்தப்படுகின்றது.

வினைச் சொற்களின்பின் இவ்வுருபு இணையும். /ba:r-a:vu/ 'வராது' (நிகழ் & எதிர்காலம்) /po:-k-a:vu/ 'போகாது' (நிகழ் & எதிர்காலம்)

4. முற்றாவினையைக் குறிக்க /-pa:n/ விகுதி வினைகளுடன் இணைக்கப்படுகிறது.

5. /-a:ṭṭom/ விகுதி அறிவுறுத்தும் வினையமைப்பு விகுதியாக (hortative suffix) காடர் மொழியில் உள்ளது. இவ்வகை வினையமைப்புகள் படர்க்கை வாக்கியங்களில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

(உ.ம்) cey-a:ṭṭom 'செய்யட்டும்'

baru-a:ṭṭom 'வரட்டும்'

6. வினைச் சொற்களில் அனுமதிப்பொருள் (permissive) /a:ya:w/ உருபு வினைச் சொற்களோடு இணைவதன் மூலம் உருவாகின்றது.

(உ.ம்.) aṭix-k-aya:n 'அடிக்கலாம்'

naṭa:x-k-aya:n 'நடக்கலாம்'

7. காடர் மொழியில் நிபந்தனை வினையெச்சம் (conditional) /-ila:ni/ மற்றும் /-il/ ஆகிய இரு உருபுகள் வினையோடு இணைவதன் மூலம் பிறக்கின்றன. இவ்விரண்டு உருபுகளும் சுயேச்சை மாற்றுருக்களாய் (free-variation) காடர் மொழியில் உள்ளன. இருப்பினும் /-ila:ni/ உருபு மிக அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

(உ.ம்) /aka:r-uk-ila:ni/ 'கத்தினால்'

/a:ṭ-uk-il/ 'விளையாடினால்'

8. காடர் மொழியில் பெயரெச்ச விகுதி /-e/ ஆகும். விகுதி மூன்று காலங்களிலும், எதிர்மறை விகுதி /-a:t-/உடனும் வருகின்றது.

(உ.ம்) aṭix-pṭ-e 'அடித்தல்'

pa: ṭ-ṭ-e 'பாடல்'

9. காடர் மொழியில் வினையெச்ச விகுதி /-i~-u/ஆகும். இவ்விரண்டு விகுதிகளும் இம்மொழியில் துணைநிலை வழக்கில் (complementary distribution) உள்ளன.

/-u/ இறந்த கால விகுதிகள் /-nṯ-/ மற்றும் /-ṯ-/ உடன் வருகின்றது.

(உ.ம்)

para:y-nt-u 'சொல்லி'

ala:x-nt-u 'அளந்து'

/ i / மற்ற இடங்களில் வருகின்றது.

(உ.ம்) o:ṭ-i 'ஓடி'

pa:ṭ-i 'பாடி

10. இடக்குறியீடு (person markers): முற்று வினைகளில் பால், எண் பாகுபாடு காட்டும் குறியீடுகள் காடர் மொழியில் இல்லை என முன்பு கண்டோம். ஆனால் இம்மொழியில் இடக்குறியீடு மட்டும் உள்ளது. முன்னிலை இடக்குறியீடு, முன்னிலை அல்லாதவற்றின் (non-second) இடக்குறியீடு ஆகிய பாகுபாடே காணப்படுகிறது. அதாவது தன்மை, படர்க்கைப் பாகுபாடு முற்றுவினைகளில் கிடையாது.

1. முனிலை இடப்பெயர் சுட்டும் குறியீடு /-e/ ஆகும். இவ்விகுதி எல்லாக் காலங்களிலும் வருகின்றது.
2. முன்னிலை அல்லாதவற்றில் இடக்குறியீடு /-a:/ ஆகும். இவ்விகுதி எல்லாக் காலங்களிலும் வருகிறது.

11. தொழிற்பெயர்: இம்மொழியில் தொழிற்பெயர் விகுதி /-atu/ ஆகும். இவ்விகுதி இறந்தகால விகுதிகளுடனும், நிகழ்கால விகுதிகளுடனும், எதிர் விகுதி /-a:t-/ உடனும் வருகிறது.

12. வினையாலணையும் பெயர்: பெயரெச்சச் சொல்லோடு படர்க்கை சேய்மை சுட்டு இடப்பெயர் இணைவதன் மூலம் வினையாலணையும் பெயர்கள் பிறக்கின்றன.

(உ.ம்) opine-ava:n 'மூடியவன்'

kaṭ icce-atu 'கடித்தது'

13. ஏவல் வினை: ஒருமை ஏவல் வினையைக் குறிக்க எந்த விகுதியும் வினையோடு இணைவதில்லை. பன்மை ஏவல் வினையைக் குறிக்க /-pin~-n/ ஆகிய இரு விகுதிகள் ப்யன்படுத்தப்படுகின்றன.

9. முள்ளுக் குறும்பா மொழி

முள்ளுக் குறும்பர் பழங்குடி மக்கள் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டாரத்தின் மேற்குப் பகுதியிலும், கேரள மாநிலத்தில் வாய்நாடு மாவட்டத்தின் கிழக்குப் பகுதியிலும் வாழ்கின்றனர். இந்திய மக்கட்தொகைக் கணக்கீடு முள்ளுக் குறும்பர்களை மற்றைய குறும்பர் பிரிவுகளோடு சேர்த்துக் கணக்கிட்டுக் காட்டுவதால், முள்ளுக் குறும்பர் மக்களின் சரியான எண்ணிக்கையைச் சென்ஸஸ் கணக்கீட்டினின்றும் அறிய முடியவில்லை. ஜோசப் (1982) தன் ஆய்வுப்பட்டத்திற்கான கள ஆய்வின்போது, கூடலூர் வட்டாரத்தில் பத்து இடங்களில் வாழும் முள்ளுக் குறும்பர் களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு அறிந்ததாகக் கூறுகிறார். ஜோசப்பின் கணக்கெடுப்பின்படி கூடலூர் வட்டாரத்தில் முள்ளுக் குறும்பர்களின் மொத்த எண்ணிக்கை, 1,004 ஆகும். குறும்பர் எனும் பெயரில் பல பழங்குடி மக்களை இணைத்து சென்ஸஸ் கணக்கீடு காட்டுகிறது என்று மேலே குறிப்பிட்டோம். 1961 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கீடு, 1) முள்ளுக் குறும்பர், 2) பெட்டக் குறும்பர், 3) உராலிக் குறும்பர், 4) தேனு/ஜேனுக் குறும்பர் மற்றும் 5) பாலு/ஹாலுக் குறும்பர் பழங்குடிகளைக் 'குறும்பர்' என்ற பொதுப் பெயரிட்டு சென்ஸஸ் தகவலை வெளியிட்டுள்ளது.

சென்ஸஸ் காட்டும் குறும்பர்களின் ஐவகைப் பிரிவு சரி இல்லை என்பது அறிஞர்களின் கருத்தாகும். கேரளாவில் வாய்நாடு பகுதியிலும், தமிழ்நாட்டில் நீலகிரியிலும் வாழ்ந்து வரும் குறும்பர்களிடையே நான்கு வகையினரே உள்ளனர் என்பது இவ்வறிஞர்தம் கருத்தாகும். அதாவது, 'பெட்டக் குறும்பர்' எனப்படும் பிரிவினரும், 'உராலிக் குறும்பர்' எனப்படும் பிரிவினரும் ஒரு வகுப்பினராவர். இவ்விரண்டு பெயர்களும் ஒரு பிரிவையே குறிக்கின்றன. மேலும் தேனு/ஜேனுக் குறும்பரும், காட்டு நாயக்கரும் ஒரேப் பிரிவினராவர். எனவே 'குறும்பர்' எனப்படுபவர் கீழ்க்காணும் நான்கு வகையினரேயாவர்.

1. முள்ளுக் குறும்பர்

2. பெட்டக் குறும்பர்

3. தேனு/ஜேனுக் குறும்பர் அல்லது காட்டு நாயக்கர்

4. பாலு/ஹாலுக் குறும்பர்

தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டமும கேரள எல்லையும் சேரும் இடத்தில் ஏறத்தாழ 30 கி.மீ. பரப்பளவில் முள்ளுக் குறும்பர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பகுதி பல இனமக்கள் ஒன்றாக வாழ்ந்து, தத்தம் மொழிகளைப் பேசி வரும் ஒரு பன்மொழிப் பகுதி (Multilingual area) ஆகும். பனியர்மொழி, பெட்டக் குறும்பா மொழி, காட்டு நாயக்கா மொழி, முள்ளுக் குறும்பா மொழி எனப் பல பழங்குடி மக்களின் வெவ்வேறான மொழிகள் பேசப்படும் பகுதியாகும். தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மூன்று மொழிகளின் ஆதிக்கமும் மேற்கூறிய பழங்குடி மொழிகளில் காணப்படும் பகுதி இதுவாகும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் வட்டாரத்தில் தமிழ்தான் நிர்வாகத்திலும், அலுவலகத்திலும் பயன்படுத்தப்படும் ஒரே மொழியாக இருந்தபோதும், பெரும்பான்மை மக்களால் பயன்படுத்தப்படும் மொழி மலையாளமே ஆகும். கேரள மாநிலத்திலிருந்து வந்து கூடலூர் பகுதியில் குடியேறியுள்ளோர் பெரும்பான்மையாக இருப்பதும், இவர்களின் தாய்மொழி மலையாளம் என்பதும் தாம் இதற்குக் காரணமாகும். இந்தப் பகுதியில் மலையாளம் வர்த்தகம், வியாபாரம் போன்றவற்றுக்கும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ், கன்னடம் மற்றும் பல பழங்குடி மொழிகளைத் தாய்மொழி யாகக் கொண்டோரும் கூடத் தங்கள் அன்றாட வாழ்க்கையில் மலையாள மொழியைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இந்தப் பகுதியில் உருவாகியுள்ளது.

கூடலூர் பகுதியில் வாழும் முள்ளுக் குறும்பர்கள், அரசு அலுவலர்களுடனோ, பள்ளி ஆசிரியர்களுடனோ தொடர்பு கொள்ளும்போது தமிழ் மொழியில் பேசுகிறார்கள். பெட்டக் குறும்பா, காட்டு நாயக்கா மற்றும் பனியா மொழிகள் மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளவர் களுக்குப் புரிவதில்லை. எனவே இப்பகுதியில் வாழும் எல்லாத் தரப்பட்ட மக்களுடனும் தொடர்புகொள்ளுவதற்குப் பழங்குடியினர் மலையாளத்தைப் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக முள்ளுக் குறும்பர்கள் பெருவாரியான சூழல்களில்

மலையாளத்தையும், சிற்சில சூழல்களில் தமிழையும் பயன் படுத்துகிறார்கள்.

ராபர்ட் சத்ய ஜோசப் (1982) தன் ஆய்வுப் பட்ட ஆய்வுக்காக முள்ளுக் குறும்பர் மொழியைப் பற்றிய ஓர் ஆய்வைச் செய்துள்ளார். அதற்கு முன்பாக, முள்ளுக் குறும்பா மொழியைப் பற்றிய சில தகவல்களை அறிஞர்கள் தங்கள் ஆய்வுகளில் தந்திருந்தபோதும், முழுமையான ஆய்வை எவரும் செய்வில்லை என்றே கூறலாம்.

முள்ளுக் குறும்பர்கள் மலையாள மொழியையே பேசுகிறார்கள் என்று தர்ஸ்டன் (1909) தன் ஆய்வில் கருத்து தெரிவித்துள்ளார். ஐயப்பனும் (1948) மேற்கூறிய கருத்தையே தன் ஆய்வில் தெரிவித்துள்ளார்.

1961 - ஆம் ஆண்டு சென்ஸஸ் அறிக்கை, முள்ளுக் குறும்பா மொழி தனிமொழி என்றும், ஏனைய குறும்ப இனத்தவர் களின் பேச்சு கன்னட மொழி என்றும் தெரிவிக் கிறது. பெட்டக் குறும்பா மொழி தனிமொழி எனத் தன் ஆய்வில் ஜெயபால் (1978) கூறுகிறார். மேலும், காட்டு நாயக்கா மொழி தனிமொழி என நடனசபாபதி (1980) தன் ஆய்வில் தெரிவிக்கிறார்.

'குறும்பா' என்றழைக்கப்படும் தனிமொழியை முள்ளுக் குறும்பர்கள் பேசுகிறார்கள் என்ற கருத்தை லூயிஸ் (1962) தெரிவிக்கிறார். இவர்களின் மொழி கன்னடத்தினின்றும் வேறுபட்டதென்றும், தமிழ் மற்றும் மலையாள மொழிகளின் கலப்பு இவர்களின் மொழியில் அதிகமாகக் காணப்படுகின்றதென்றும் லூயிஸ் கூறுகிறார்.

ஐயப்பனின் கருத்தைத் தானும் ஏற்று, முள்ளுக் குறும்பர்களின் மொழி மலையாளமே எனத் தன் ஆய்வில் ராஜலஷ்மி மிஸ்ரா (1971) கூறுகிறார். தமிழ் மற்றும் கன்னட மொழிகளின் சொற்கள் கலந்த, ஒரு வகை கலப்படமான, சிதைந்த மலையாளத்தை முள்ளுக் குறும்பர்கள் பேசுவதாக மாதூர் (1977) கருத்து தெரிவிக்கின்றார்.

ராபர்ட் சத்ய ஜோசப் (1982) திராவிட மொழிக் குடும்பத்தில் முள்ளுக் குறும்பா மொழி பெறும் இடத்தையும், மற்றைய தென் திராவிட மொழிகளின் பொதுவான மொழியியல் கூறுகளை முள்ளுக் குறும்பா மொழியும்

பெற்றிருக்கும் தன்மைகளையும், முள்ளுக் குறும்பா மொழியில் உருவாகி உள்ள தனி மொழியியல் கூறுகளையும் தன் ஆய்வில் தொகுத்துத் தருகிறார். மேலும் பல மொழியியல் கூறுகளின் அடிப்படையில் முள்ளுக் குறும்பா மொழி தனி மொழி எனத் தன் ஆய்வில் விளக்கி உள்ளார்.

ஒலியனியல்

முள்ளுக் குறும்பா மொழியில் **10** உயிரொலியன்களும், **19** மெய்யொலியன்களும் உள்ளன. உயிரொலியன்களாவன: /i, i:, e, e:, a, a:, u, u:, o, o:/ ஆகியன. மெய்யொலியன்களாவன: /p, t, ṭ, c, j, k, m, n, n, n, ñ ṅ, n, s, l, ḷ, r, v, y/ மெய்யொலியன்களுள் / j / ஒலியன் ஓர் ஒதுங்கொலியன் (marginal phoneme) ஆக உள்ளது. முள்ளுக் குறும்பாமொழியில் பயன்படுத்தப்படும் மிகக் குறைவான எண்ணிக்கையுடைய வேற்றுமொழிச் சொற்களில் மட்டுமே / j / ஒலியன் ஒலிக்கப்படுகிறது என்கிற காரணத்தினால் இது ஒதுங்கொலியனாகக் கருதப்படுகிறது. சொல்லின் முதல், இடை, கடை நிலையில் எல்லா (குறில் மற்றும் நெடில்) உயிரொலியன்களும் வருகின்றன. மெய்யொலியன்களுள் / t, ṇ, ṅ, ḷ / ஆகியன தவிர்த்து மற்றைய மெய்யொலியன்கள் சொல்லின் முதல் நிலையில் வருகின்றன. எல்லா மெய்யொலியன்களும் சொல்லின் இடையில் வருகின்றன. சொல்லின் கடைநிலையில் / n, y / ஆகிய இரண்டு மெய்யொலியன்கள் வருகின்றன. முள்ளுக் குறும்பா மொழியில் உயிரொலியன்கள் (vowel clusters) வருவதில்லை. இரு மெய்யொலி இணைகள் (two consonant clusters) சொல்லின் முதனிலையிலும், இடைநிலையிலும் வருகின்றன.

பெயர்ச் சொல்லியல்

1. சொல்லியல் கூறுகளின் அடிப்படையில் பால் வேறுபாட்டைக் காட்டும் பெயர்சொற்களை, அவை ஏற்கும் ஆண்பால் விகுதியின் அடிப்படையில், நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

    a) /-en/ / விகுதி ஏற்கும் பெயர்ச்சொற்கள்

    b) /-ven/ / விகுதி ஏற்கும் பெயர்ச்சொற்கள்

c) / -a:ru / / விகுதி ஏற்கும் பெயர்ச்சொற்கள்

d) / -o / / விகுதி ஏற்கும் பெயர்ச்சொற்கள்

/-en/ விகுதி ஏற்கும் ஆண்பால் பெயர்ச் சொற்கள், /-a t̲ t̲ i, -t, -t̲ ti, a : t̲ t̲ i, -aḷu/ ஆகிய பெண்பால் விகுதிகளை ஏற்கின்றன.

/-ven/ விகுதி ஏற்கும் ஆண்பால் பெயர்ச் சொற்கள் /-o:ḷu/ என்கிற பெண்பால் விகுதியை ஏற்கின்றன.

/-a:ru/ விகுதி ஏற்கும் ஆண்பால் பெயர்ச் சொற்கள் /-a t̲ t̲ i/ என்கிற பெண்பால் விகுதியை ஏற்கின்றன.

/-ven/ விகுதி ஏற்கும் ஆண்பால் பெயர்ச்சொற்கள் /-o:lu/ என்கிற பெண்பால் விகுதியை ஏற்கின்றன.

/-a:ru/ விகுதி ஏற்கும் ஆண்பால் பெயர்ச்சொற்கள் /-a t̲ t̲ i/ என்கிற பெண்பால் விகுதியை ஏற்கின்றன.

/ -ϕ / விகுதி ஏற்கும் ஆண்பால் பெயர்ச்சொற்கள், /-t̲ t̲ i, -ni/ ஆகிய பெண்பால் விகுதிகளை ஏற்கின்றன.

2. முள்ளுக்குறும்பா மொழியில் மூவிடப்பெயர்களில் ஒருமை-பன்மைப் பாகுபாடு உள்ளது. தன்மைப் பன்மை மூவிடப்பெயர்களில் உளப்பாட்டுப் பன்மைப்பெயர், உளப்பாடில்லா பன்மைப் பெயர் ஆகிய இரண்டு பெயர்கள் உள்ளன. சுட்டுப் பெயர்களே படர்க்கைப் பெயர்ச் சொற்களாக அமைகின்றன. சுட்டுப் பெயர் களோடு பால்-எண் விகுதிகள் இணைவதால் படர்க்கைப் பெயர்ச்சொற்கள் உருவாகின்றன. படர்க்கைப் பெய்ர்ச்சொற்களில் பாகுபாடு உள்ளது. ஒருமைப் பெயர்ச்சொற்களிலும் பன்மைப்பெயர்ச் சொற்களிலும் உயர்திணை, அஃறிணைப் பாகுபாடுகள் உள்ளன. இம்மொழியில் உள்ள மூவிடப் பெயர்களாவன:

தன்மை ஒருமை : /na:nu/

தன்மைப் பன்மை : /nammaḷ/
(உளப்பாட்டு)

தன்மைப் பன்மை (உளப்பாடில்லா)	:	/naṅṅal/
முன்னிலை ஒருமை	:	/niyyu/
முன்னிலைப் பன்மை	:	/nuṅṅal/
படர்க்கை உயர்திணை	:	/ivanu/ (அண்மை)
ஆண்பால் ஒருமை	:	/avaṅu/ (சேய்மை)
படர்க்கை உயர்திணை	:	/ivaḷu/ (அண்மை)
பெண்பால் ஒருமை	:	/avaḷu/ (சேய்மை)
படர்க்கை அஃறிணை	:	/iṯu/ (அண்மை)
ஒருமை	:	/aṯu/ (சேய்மை)
படர்க்கை உயர்திணை	:	/ivaru ~ ivicca/ (அண்மை)
பன்மை	:	/avaru ~ avicca/ (சேய்மை)
படர்க்கை அஃறிணை	:	/itukaḷ ~ ituka/ (அண்மை)
பன்மை	:	/atukaḷ ~ atuka/ (சேய்மை)
வினா இடப்பெயர்	:	e:ven/ 'யார் (ஆண்பால்)'
(உயர்திணை)	:	/e:vaḷu/ 'யார் (பெண்பால்)'
		/a:ru/ 'யார் (ஆண்பால் / பெண்பால்)'
		/e:vicca/ 'யார் (பன்மை)'
வினா இடப்பெயர்	:	/e:tu/ 'எது'
(அஃறிணை)	:	/entu/ 'என்ன'

3. முள்ளுக் குறும்பா மொழியில் உள்ள தற்சுட்டு இடப் பெயர்கள் (reflexive pronouns) எண் வேற்றுமையைக் காட்டும். எனவே அவை ஒருமை தற்சுட்டு இடப்பெயர் எனவும், பன்மை தற்சுட்டு இடப்பெயர் எனவும் இருவகைப்படும்.

ஒருமை தற்சுட்டு இடப்பெயர் : /t̲an/

பன்மை தற்சுட்டு இடப்பெயர் : /tam/

4. இம்மொழியில் காணப்படும் வரையறையில்லாப் பதிலீடு பெயர்கள் (indefinite pronouns) கீழ்வருமாறு:

/a:ro:/ 'யாரோ'

/e:to:/ 'ஏதோ'

/e:t̲iyun/ 'எதோ' (அஃறிணை)

/a:riyun/ 'யாரோ' (உயர்திணை)

5. முள்ளுக்குறும்பா மொழியில் உள்ள வேற்றுமைகளும் அவற்றின் உருபுகளும் கீழ் வருமாறு:

1. சுட்டு வேற்றுமை (accusative) : /-e/

2. கருவிப்பொருள் வேற்றுமை (instrumental) : /-a:lu/

3. கொடைப்பொருள் வேற்றுமை (dative) : /-ukku/

4. உடைமைப்பொருள் வேற்றுமை (genitive) : /-e/

5. இடவேற்றுமை (locative) : /-a t̲ t̲ i ~ -li ~ -lu/

6. நோக்க வேற்றுமை (ablative) : /-at̲ t̲inu/

7. திசை வேற்றுமை (directive) : /-le:kku/

வினைச்சொல்லியல்

1. முள்ளுக் குறும்பா மொழியில் பிறவினைச் சொற்கள் மூன்று வகையில் உருவாகின்றன. அவையாவன:

   1. வினை வேர்ச்சொல்லின் கடை ஒலியன் தடையொலியாக (stop) இருப்பின் அது இரட்டித்தல்,
   2. காலங்காட்டும் உருபுகளில் உள்ள நெகிழ்வொலிகள் (lax) வண்ணொலிகளாக (tense) ஒலிக்கப்படுதல்,
   3. தன்வினைச் சொற்களோடு /-t̲t̲u/ உருபை இணைத்தல்.

2. இம்மொழியில் ஏவல் வினைச்சொற்கள் எண் வேற்றுமையை உணர்த்துகின்றன. எனவே, ஒருமை ஏவல், பன்மை ஏவல் என இரு பிரிவுகள் காணப்படுகின்றன. ஒருமை ஏவல் விகுதி : /-e/ உருபு ஏற்கும் பலவினை வேர்கள் இவ்வுருபை ஏற்பதில்லை. ஏவலைச் சுட்டும்.

   பன்மை ஏவல் விகுதி : /- i ~ -pin/

3. முள்ளுக் குறும்பா மொழியில் மூன்று காலங்கள் உள்ளன. அவைகளின் உருபுகள் பின்வருமாறு:

   இறந்த காலம் : /-t̲u ~ -d̲ ~ -i ~ -n̲ t̲ u/

   நிகழ்காலம் : /-inu ~ -unu/

   எதிர்காலம் : /-un ~ -p/

4. முற்றா வினையைக் குறிக்க /-pa:n/ எனும் உருபு வினை வேருடன் இணையும்.

5. முள்ளுக் குறும்பா மொழியில் எதிர்மறைப்பொருள் இரு வகைகளில் உணர்த்தப்படுகிறது. 1) சொல்லியல் நிலையில் வினை வேருடன் எதிர்மறை உருபு இணைதல் மூலமும், 2) தொடரியல் நிலையில் /illa/, /alla/, /aṇṭa/ ஆகிய தனிச் சொற்களைப் பயன்படுத்தல் மூலமாகவும் எதிர்மறை வாக்கியங்கள் உருவாகின்றன.

   எதிர்மறை உருபு: /-al ~ illa ~ -ula ~ -a:/

6. இடம், பால், எண் உருபுகள்:

தன்மை ஒருமை	:	/-en/
தன்மைப் பன்மை	:	/-on/
முன்னிலை ஒருமை	:	/-e/
முன்னிலைப் பன்மை	:	/-utu/
படர்க்கை ஆண்பால் ஒருமை	:	/-a:n/
படர்க்கைப் பெண்பால் ஒருமை	:	/-a:lu/
படர்க்கை ஒருமை	:	உருபு இல்லை
படர்க்கைப் பன்மை உயர்திணை (ஆண்பால், பெண்பால் இரண்டும் பொதுவானது)	:	/-a:ru/
படர்க்கைப் பன்மை	:	உருபு இல்லை.

10. கோத்தர் மொழி

நீலகிரி மாவட்டத்தில் வரலாற்றுக்கும் எட்டாத காலந் தொட்டு வாழ்ந்து வரும் மற்றொரு பழங்குடி மக்கள் கோத்தர்கள் ஆவர். கீழ்க் கோத்தகிரி, கோத்தகிரி, கொல்லிமலை, திருச்சிகடி, குந்தா, சோலூர் மற்றும் கூடலூர் ஆகிய ஏழு இடங்களில் கோத்தர்கள் வசித்து வருகின்றனர். **1971 - ஆம்** ஆண்டு மக்கட் தொகை கணக்கீட்டின்படி கோத்தர்களின் மொத்த எண்ணிக்கை **1188** ஆகும். இப்பழங்குடி மக்களின் வரலாற்றைப் பற்றித் திட்டவட்டமாக ஆய்வாளர்களால் கூற இயலவில்லை. ஆனால் நீலகிரி மாவட்டத்தில் வாழும் மற்றைய பழங்குடி மக்களோடு கோத்தர்களுக்கு உள்ள தொடர்பு பன்னெடுங்காலமாக உள்ளது என்பதை அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். குறிப்பாக, தோடர்களும் கோத்தர் களும் மிக அருகருகே வாழ்ந்து வந்துள்ளமைக்கான சான்றுகள் உள்ளன, என்று ஒப்பர்ட் (Oppert, 1893) கருதுகிறார். கோத்தர்களிடையேயும் மற்றைய பழங்குடி மக்களிடையேயும் வழங்கி வரும் நாடோடிக் கதைகளின் மூலம் கோத்தர்கள், தோடர்கள் மற்றும் குறும்பர்களிடையே உள்ள சமூகத் தொடர்பு தெளிவாகிறது. தோடர்கள் மாட்டுப் பாலையும், குறும்பர் தேனையும், கோத்தர்கள் கைவினைப் பொருட் களையும் தங்களுக்குள் பண்டமாற்றம் செய்துகொண்டு வாழ்ந்து வந்தனர் என்று இவர்கள் நம்புகிறார்கள். இன்றும் கூடக் கோத்தர்கள் வாத்திய இசையில் தேர்ச்சி பெற்றுள்ள தைக் காணலாம். கோத்தர்களின் வாத்திய இசையை மற்ற பழங்குடியினர் விரும்பி மகிழ்கின்றனர்.

நீலகிரிப் பழங்குடி மக்களிடையே கோத்தர் இனத்தவர் தாம் மிகவும் பாடுபட்டு உழைக்கும் இனத்தவர் என்று கூறலாம். தானியங்கள், காய்கறிகள், காப்பி, தேயிலை ஆகியவற்றைக் கோத்தர்கள் பயிர் செய்கின்றனர். நீலகிரிப் பழங்குடி மக்களிலேயே கருமார் தொழில் செய்பவரும் இவரே. தாம் ஈடுபட்டிருக்கும் விவசாயம் மற்றும் தொழில்கள் மூலம் கோத்தர்களோடு மற்றைய பழங்குடி இனத்தவருக்கும், பழங்குடி அல்லாத பிற மக்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு

வளர்ந்துள்ளது. சமூக அமைப்பிலும் சில பண்பாட்டுப் பேறுகள் (acculturation) காணப்படுகின்றன. உதாரணமாகக் கோத்தர் இனம் இந்து மத தெய்வங்களைப் பூசிப்பதைக் கூறலாம். இந்து மதத் தெய்வங்களுக்குப் பூசை செய்வதற் கென்றே தனிப் பூசாரிகளையும் தம் கோவில்களில் கோத்தர்கள் நியமித்துள்ளனர்.

கோத்தர்களிடையே எழுத்தறிவு பெற்றோர் அதிகம் உள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் வாழும் ஏனைய பழங்குடி மக்களோடு ஒப்பிடும் போது கோத்தர்கள்தாம் கல்வி அறிவில் மேம்பட்டுள்ளனர் எனக் கூறலாம். இவர்களிடையே பலதார மணம் என்கிற கோட்பாடு ஏறத்தாழ மறைந்து விட்டமைக்குக் காரணம் கோத்தர்கள் கல்வி அறிவில் மேம்பட்டுள்ளதும், பழங்குடி அல்லாதோருடைய தொடர்பும் காரணங்கள் என்று கூறலாம்.

கோத்தர்கள் பேசும் மொழி கோத்த மொழியாகும். இவர்கள் தம் பேச்சைக் 'கோவ்மான்த்' என அழைக்கின்றனர். கோத்த மொழியும் தோடா மொழியும் பல மொழியியல் கூறுகளைப் பொதுமையாகக் கொண்டுள்ளன. கோத்த மொழி பழந்தமிழுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளமை பல மொழியியல் கூறுகளால் விளக்கம்பெறும்.

கோத்த மொழி பற்றிய மொழியியல் ஆய்வுகளை எமனோ (**1944**) மற்றும் சுப்பையா (**1985**) ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். கீழ்வரும் பகுதிகளில் கோத்த மொழியின் மொழியியல் கூறுகளைக் காண்போம் (சுப்பையா, **1985**).

பெயர்ச்சொல்லியல்

1. பெயர்ச் சொற்கள் எட்டு வகையான ஆண்பால் விகுதிகளை ஏற்கின்றன. ஒவ்வொரு வகை ஆண்பால் பெயர்ச் சொற்களும் அவற்றுக்கேயுரிய பெண்பால் விகுதிகளை ஏற்கின்றன.

   a) /-n/ விகுதி ஏற்கும் ஆண்பால் பெயர்ச் சொற்கள் /-i,-ti,č ḷ/ ஆகிய பெண்பால் விகுதிகளை ஏற்கின்றன.

   b) /-i/ விகுதி ஏற்கும் ஆண்பால் பெயர்ச் சொற்கள் /-č / எனும் பெண்பால் விகுதியை ஏற்கின்றன.

c) /-r/ விகுதி ஏற்கும் ஆண்பால் பெயர்ச் சொற்கள் /-ti,c̆a:ni/ ஆகிய இரு பெண்பால் விகுதிகளை ஏற்கின்றன.

d) /-a:ḷ/ விகுதி ஏற்கும் ஆண்பால் பெயாச் சொற்கள் /-a:c̆/ எனும் பெண்பால் விகுதியை ஏற்கின்றன.

e) /o:n/ விகுதி ஏற்கும் ஆண்பால் பெயர்ச் சொற்கள் /-o:ḷ/ எனும் பெண்பால் விகுதியை ஏற்கின்றன.

f) /-i:n/ விகுதி ஏற்கும் ஆணபால் பெயர்ச் சொற்கள் /-av/ எனும் பெண்பால் விகுதியை ஏற்கின்றன.

g) /-v/ விகுதி ஏற்கும ஆண்பால் பெயர்ச் சொற்கள் /-ti/ எனும் பெண்பால் விகுதியை ஏற்கின்றன.

h) இப்பிரிவில் அடங்கும் பெயர்ச் சொற்கள் அஃறிணை ஒருமை விகுதி /-d/ ஏற்கின்றன.

2. கோத்த மொழியில் உள்ள பெயர்ச் சொற்கள் ஆண்பால் விகுதி, பெண்பால், அஃறிணை ஆகிய பாகுபாடுகளைக் காட்டுகின்றன. பால் காட்டும் விகுதி எல்லாப் பெயர்ச் சொற்களிலும் காணப்படுவதில்லை. ஆனால் பால் காட்டும் விகுதிகளைக் கொண்ட பெயர்ச்சொற்கள் இம்மொழியில் உள்ளன என்பது மேலே கொடுத்துள்ள பால் விகுதிகளின் மூலம் புலப்படும். பால் பாகுபாடு உணர்த்தாத பெயர்ச்சொற்களும் தொடரியல் அமைப்பின் இலக்கண நிலையில் பால் உணர்த்தும்.

3. ஆண்பால் ஒருமை விகுதி {-n} - ∞ o:n, ∞ - i, ∞ - r, -∞ a:l, ∞ - in, ∞ - n, ∞ - v ஆகும்.

4. பெண்பால் ஒருமை விகுதி {-ḷ} ∞ -ḷ, ∞ - ti, ∞ - c̆, ∞ - a:c̆, ∞-av, ∞ - l, c̆a:ni, ∞ - o : ḷ ஆகும்.

5. தமிழ், மலையாளம், கன்னடம் போன்ற திராவிட மொழிகளைப போல கோத்த மொழியிலும் அஃறிணைச சொற்கள் எண் பாகுபாட்டை உணர்த்துவ தில்லை. ஒருமை பன்மை ஆகிய இரண்டுக்கும் ஒரே சொல்லே பயன்படுத்தப்படுகின்றது.

6. ஏனைய திராவிட மொழிகளைப் போன்றே கோத்த மொழியிலும் ஒருமை, பன்மை ஆகிய இரு எண் வேறுபாடுகள் உள்ளன. ஒருமையை உணர்த்தும் விகுதி {-n}∞ -n, - ϕ ஆகும்.

7. கோத்தர் மொழியில் பன்மை இரு பிரிவுகளுள் அடங்கும். அவை உயர்திணைப் பன்மை, பொதுப் பன்மை என்பனவாகும். உயர்திணைப் பன்மையைச் சுட்டும் விகுதி. {-m} -m, -r, ஆகும். பொதுப்பன்மையைச் சுட்டும் விகுதி {-gu:ḷ} ஆகும்.

8. கோத்த மொழியில் எட்டு வேற்றுமைகள் உள்ளன. (இவற்றுள் எழுவாயும், விளியும் அடங்காது). அவையாவன:

1. சுட்டு வேற்றுமை : {-n}
(accusative)

2. கொடைப்பொருள் வேற்றுமை : {-k}
(dative)

3. உடைமைப் பொருள் வேற்றுமை : {-d}
(genitive)

4. இடவேற்றுமை : {-l}
(locative)

5. நோக்க வேற்றுமை : {-ltr} ∞ -ltr, ∞ tr,
(ablative)

6. உடனிகழ்ச்சி வேற்றுமை : {-o:r}
(sociative)

7. கருவிப்பொருள் வேற்றுமை : {-a:l}∞ -a:l, ∞a:r, ∞o:r
(instrumental)

8. நோக்க வேற்றுமை : {-ka:ry}

9. விளி வேற்றுமையைக் கோத்த மொழியில் உள்ள வேற்றுமைகளில் ஒன்றாகச் சேர்க்காவிடினும்

அதைப் பற்றிய சிறப்பை இங்குக் குறிப்பிட வேண்டும். வட திராவிட மொழியான 'குரூக்' மொழியைப் போன்று கோத்த மொழியிலும் ஆண்கள் பேசும் பேச்சுக்கும் பெண்கள் பேசும் பேச்சுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படு கின்றன. இவ்வகை வேறுபாடு விளி வேற்றுமை யில் மட்டுமே உள்ளது.

இம்மொழியில் உள்ள விளி வேற்றுமை உருபுகள் -a:, -o:, -i:, ஆகியனவாகும். இந்த நான்கு உருபுகளுள், -a:, -o: ஆகிய இரண்டும் முன்னண்ண மூக்கொலி யுடன் முடியும் உயர்திணைப் பெயர்ச்சொற் களுடனும், ayṇ, 'தந்தை' av 'தாய்' a:ḷ 'கணவன்' ஆகிய மூன்று பெயர்ச்சொற்களுடனும் வருகின்றன.

பெண்கள் தம் பேச்சில் முன்னண்ண மூக்கொலி யுடன் முடியும் உயர்திணைப் பெயர்ச்சொற் களையோ அல்லது ayṇ, a:ḷ, av ஆகிய பெயர்ச்சொற் களையோ பயன்படுத்தும்போது /-o:/ எனும் விளி வேற்றுமை உருபையோ பயன்படுத்து கின்றனர்.

ஆண்கள் தம் பேச்சில் முன்னண்ண மூக்கொலி யுடன் முடியும் உயர்திணைப் பெயர்ச்சொற் களையோ அல்லது ayṇ, av ஆகிய பெயர்ச்சொற் களையோ பயன்படுத்தும்போது /-a:/ எனும் விளி வேற்றுமை உருபையோ பயன்படுத்துகின்றனர்.

மனித இனத்திலும் மேம்பட்ட (அதாவது தெய்வம் போன்ற) பெயர்களைக் குறிப்பிடும்போது ஆண் பெண் இருபாலரும் /-i:/ உருபைப் பயன்படுத்து கின்றனர்.

ஏனைய பெயர்ச் சொற்களுடன் /-e:/ உருபு பயன் படுத்தப்படுகின்றது.

10. கோத்த மொழியில் தன்மை, முன்னிலை மூவிடப் பெயர்கள் எண் பாகுபாட்டை மட்டுமே உணர்த்து கின்றன. படர்க்கை மூவிடப் பெயர்கள் பால், எண் ஆகிய இரு பாகுபாடுகளையும் உணர்த்தும். இம்மொழி யில் உள்ள மூவிடப் பெயர்களாவன:

தன்மை ஒருமை	:	a;n
தன்மைப் பன்மை	:	a:m
முன்னிலை ஒருமை	:	ni:
முன்னிலைப் பன்மை	:	ni:m

படர்க்கை		இடை	அண்மை	சேய்மை
உயர்திணை ஆண்பால் ஒருமை	:	u:n	ivn	avn
உயர்திணைப் பெண்பால் ஒருமை	:	u:l	ivḷ	avḷ
அஃறிணை ஒருமை	:	u:d	id	ad
உயர்திணை அஃறிணைப் பன்மை	:	u:r	ivr	avr

வினாவிடப்பெயர்

evn	'யார்' (ஆண்பால் ஒருமை)
evḷ	'யார்' (பெண்பால் ஒருமை)
evr~	'யார்' (உயர்திணைப் பன்மை)
a:r	
ed	'எது' (அஃறிணை ஒருமை)

10. கோத்த மொழியில் உள்ள அடிப்படை எண்ணுப் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

oa̤	'ஒன்று'	eṭ	'எட்டு'
eya̤	'இரண்டு'	onba:d	'ஒன்பது'
mu:na̤	'மூன்று'	orba:d	
na:ng	'நான்கு'	pat	'பத்து'
anǰ	'ஐந்து'	nu:r	'நூறு'
a:r	'ஆறு'	č a:vrm	'ஆயிரம்'
e:y	'ஏழு'		

வினைச்சொல்லியல்

1. கோத்த மொழியில் இருவகைக் காலப்பிரிவுகளே உள்ளன. அவையாவன: இறந்தகாலம் மற்றும் இறந்த காலம் அல்லாத காலம். இறந்தகால விகுதி /-p-/ ஆகும். இறந்தகாலம் அல்லாத காலங்காட்டும் விகுதி /-b-, -ku-/ ஆகியனவாகும்.

2. 'குறிப்பு எதிர்காலம்' (definite future) என்ற ஒரு காலம் பற்றியும் சுப்பையா (1985) குறிப்பிடுகிறார். தன்மை மூவிடப் பெயர் வரும் தொடர்களில் மட்டுமே இந்த எதிர்கால வினைகள் பயன்படுத்தப்படும். பிறவினைச் சொற்களும், இயக்குவினைச் சொற்களும் குறிப்பு எதிர்மறை காலங்காட்டும் விகுதியை ஏற்பதில்லை.

   குறிப்பு எதிர்கால விகுதி : /k-/

3. எதிர்மறை உருபு : {-a:t-} ∞ -a:t, ∞-a:d-, ∞-ϕ -, ஆகும்.

4. முற்றாவினை உருபுகளாக /-k,-lk/ ஆகியன பயன் படுத்தப்படுகின்றன.

5. ஒருமை ஏவல் வினையைச் சுட்டுவதற்கு விகுதி எதுவும் இம்மொழியில் இல்லை. பன்மை ஏவல் விகுதி {-m} ஆகும்.

6. எதிர்மறை ஏவல் விகுதி {-i:n} ஆகும்.

7. கோத்த மொழியில் உள்ள இடமுடிவு (personal ending) விகுதிகளாவன:

தன்மை ஒருமை மற்றும் உளப்பாடில்லா தன்மைப் பன்மை	:	/-e:-/
உளப்பாடுள்ள தன்மைப் பன்மை	:	/-o:-/
முன்னிலை	:	/-i:/
படர்க்கை	:	{-o:-}∞–o:, ∞-a:-
இடமுடிவைக் காட்டாத விகுதி	:	{-o:}

8. பால், எண் சுட்டாத விகுதிகள் /-ko:, -o:/ ஆகியனவாகும்.

பால் சுட்டாத ஆனால் எண் சுட்டும் விகுதி: /-a:/

பால், எண் சுட்டும் விகுதிகள்:

ஆண்பால் ஒருமை	:	{-n}
பெண்பால் ஒருமை	:	{-ḷ}
உயர்திணைப்பன்மை	:	{-r}
அஃறிணை ஒருமை	:	{-d}

9. எண் சுட்டும் விகுதிகள்:

ஒருமை	:	{-n}
பன்மை	:	{-m}

11. பணியர் மொழி

பணியர் பழங்குடியினர் தமிழ் நாட்டில நீலகிரி மாவட்டத்திலும், கேரள மாநிலத்தில் பாலக்காடு, கண்ணனூர் வயநாடு ஆகிய பகுதிகளிலும் வாழ்கின்றனர். நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டாரத்தில் தேவலா, புலியம்பாறை, அத்தி, பந்தலூர், ஏர்மாடு, அத்தி குன்று, உப்பத்தி, தேவர்சோலை ஆகிய இடங்கள் இவர்கள் வாழும் பகுதி களாகும். 1971 - ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் பணியர்களின் மொத்த எண்ணிக்கை 6093 ஆகும். இவர்களுள் நீலகிரி மாவட்டத்தில் வாழ்வோர் 4777 பேர் ஆவர். இவர்கள் வாழும் இடங்களிலெல்லாம் கோத்தர், முள்ளுக் குறும்பர், பெட்டக் குறும்பர், காட்டு நாயக்கர் முதலிய பழங்குடியினர்களும் வாழ்ந்து வருகிறார்கள். தோடர்கள் இப்பழங்குடியினரைப் 'பணின்' என அழைக்கின்றனர்.

பணியர்கள் தாங்கள் பேசும்மொழியைப் 'பணிய பாஷை' என்று அழைக்கின்றனர். 1961 - ஆம் சென்ஸஸ் கணக்கீட்டு அறிக்கை "தமிழ்ச் சொற்களின் கலப்பு மிகவும் அதிகமான மலையாளத்தின் கிளைமொழியே பணியர் பேச்சு" என்று செய்தி வெளியிட்டுள்ளது. தார்ஸ்டன் (1909) மற்றும் ஐயப்பன் (1948) ஆகிய இரு அறிஞர்களும் இதே கருத்தையே கூறியுள்ளனர். கேரள மாநிலத்தில் வயநாடு பகுதிகளில் வாழும் பணியர்களிடையே களஆய்வு நடத்தி, ஒரு விளக்க மொழியியல் ஆய்வைச் சோமசேகரன் நாயர் (1977) வெளி யிட்டுள்ளார். இவ்வாய்வும் பணியர் பேச்சு மலையாளத்தின் கிளைமொழியே என்ற முடிவைத் தான் கூறுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் வாழும் பணியர்களிடையே கள ஆய்வை மேற்கொண்டு, பணியர் மொழி பற்றிய ஒரு விளக்கவியல் இலக்கணத்தைத் தன் ஆய்வுப்பட்ட ஆய்வாக லாரென்ஸ் (1979) செய்துள்ளார். இவர்தம் ஆய்வில், கேரள மாநிலத்தில் வாழும் பணியர்களின் பேச்சு மலையாள மொழியின் கிளைமொழியே என்னும் சோமசேகரன் நாயரின் கருத்தை ஏற்றுக் கொள்கிறார். ஆனால் நீலகிரி

மாவட்டத்தில் வாழும் பணியர்களின் பேச்சு ஒரு தனிமொழியே என்பது இவரது கருத்து. நீலகிரி வட்டாரத்தில் தமிழ் மற்றும் மலையாளம் பேசுவோரிடையே இவர்கள் வாழ்ந்து வருவதாலும், அம்மக்களிடையே தேயிலைத் தோட்டங்களிலும், ஏனைய விவசாய வேலைகளிலும் ஈடுபட்டுள்ளதாலும், பணியர் பேச்சில் தமிழ், மலையாள மொழிகளின் சொற்கள் அதிகமாகக் காணப்படுவது இயற்கையே என்கிறார் லாரென்ஸ். மேலும் பணியர் மொழியில் உள்ள சிறப்பு மொழியியல் கூறுகளையும் தன் ஆய்வில் லாரென்ஸ் விளக்கியுள்ளார். அவையாவன:

1. பணியர் மொழியில் சொல்லின் முதனிலையில் /v/ ஒலியன் /b/ ஒலியனாக மாறியுள்ளது. இவ்வகை மாற்றம் கன்னடம், தோடா ஆகிய இரு மொழிகளிலும் காணப்படினும், பணியர் மொழியில் மட்டுமே /v/ ஒலியன் /b/ ஒலியனாக மாறுவது சொல்லின் இடையிலும், கடைநிலையிலும் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. பணியர் மொழியில் காணப்படும் இவ்வகை ஒலியன் மாற்றம் வட திராவிட மொழியான குருக் மொழியிலும் காணப்படுகிறது.

2. தொல் திராவிட /*ḻ/ ஒலியன், பணியர் மொழியில் /ḷ/, /y/, /g/, /v/ எனப் பல ஒலியன் வடிவுகளில் மாறியுள்ளது. /*ḻ/ ஒலியன் /v/ ஒலியனாக மாறிவருவது தவிர்த்து, ஏனைய ஒலியன் மாற்றங்கள் மற்ற மொழிகளில் காணப்படினும், /v/ ஒலியனாக /*ḻ/ மாறியுள்ளது பணியர் மொழியில் மட்டுமே காணப்படுகிறது.

3. பன்மைச் சொற்களில் உள்ள /ḷ/ ஒலியன் பணியர் மொழியில் மறைந்து உள்ளது. இவ்வகை மயக்கம் ஏனைய மொழிகளில் காணப்படினும், பன்மைச் சொற்கள் கொடைப்பொருள் வேற்றுமை உருபை ஏற்கும்போது /ḷ/ ஒலியன் மாறவில்லை. ஆனால பணியர் மொழியில் பன்மைச் சொற்கள் இவ்வேற்றுமை உருபை ஏற்குமபோது /ḷ/ ஒலியன் மறைந்து விடுகிறது.

   (உ.ம்.) ningal-kk > ningakk ‘உனக்கு’

4. பணியர் மொழியில் பெண்பால், பெண்பால் அல்லாதன, பன்மை ஆகிய மூன்று வகைப் பால்-எண் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உயர்திணை மற்றும் அஃறிணையில் பெயர்ச் சொற்களிடையே பெரிய உருவ அமைப்புடைய பெயர்களில் பெண்பால் பிரிவு தெளவாக உணர்த்தப்படுகிறது. ஏனைய பெயர்ச் சொற்களில் 'பெண்பால் அல்லாத பிரிவு' ஆண்பால், பெண்பால் இரண்டையும் உள்ளடக்கியுள்ளது.

(உ.ம்)	பெண்பால் :	aboḷu	'அவள்'
		ko:yi	'பெட்டைக்கோழி'
	பெண்பால் அல்லாதன :	aben	'அவன்'
		pakki	'பறவை'
		mara	'மரம்'

இவ்வகை பால்வேறுபாடு மற்ற திராவிட மொழிகள் எவற்றிலும் காணப்படவில்லை. தெலுங்கு தவிர்த்த ஏனைய மத்திய திராவிட மொழிகளில் பெண்பால் அஃறிணைப்பிரிவோடு இணைந்துள்ளது. ஆனால் பெண்பால் அல்லாதன அஃறிணையோடு இணைய வில்லை.

5. பணியர் மொழியில் பெண்பால் அல்லாத மூவிடப் பெயர்களாவன:

ayin	'அவன்/அது'
aben	'அவன்/அது'
ben	'இவன்/இது'
minnu	'இவன்/இது'

இவற்றுள் /minnu/, ayin/ ஆகிய சொற்கள் வேறு மொழி களில் காணப்படவில்லை.

6. பணியர் மொழியில் பெண்பால் மூவிடப் பெயர் களாவன:

abolu 'அவள்/அது'

ibolu 'இவள்/இது'

bollu 'இவள்/இது'

7. பணியர் மொழியில் படர்க்கைப் பன்மை மூவிடப் பெயர்களாவன:

abera 'அவர்கள்'

ibera 'இவர்கள்'

be:ra 'இவர்கள்'

இவற்றுள் /be:ra/ என்னும் சொல் வேறு மொழிகளில் காணப்படவில்லை.

8. இம்மொழியில் இடவேற்றுமை 'இல், 'மேல்' ஆகிய இரு பொருள்களும் தனித்தனி வேற்றுமை உருபுகளால் சுட்டப்படுகின்றன. அதாவது /-ava:ṭṭu/, /-avuḷa:ṭṭu/ ஆகிய உருபுகள் 'இல்' பொருளை உணர்த்துகின்றன. /-li/ /-mbe, -umbe/ ஆகிய இரு உருபுகளும் 'மேல்' எனும் பொருளை உணர்த்துகின்றன. மேற்கண்ட வேற்றுமை உருபுகளில் /li/ உருபு மட்டும் குடகு மொழியில் காணப்படுகின்றது.

9. காரணவேற்றுமை உருபு, கொடைப்பொருள் வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச் சொற்களோடு இணைந்து காரண வேற்றுமையை உணர்த்துகிறது.

10. வினாவிடப் பெயர்கள் இரு ஒலியமைப்புடன் உள்ளன. அவையாவன:

e:ben	eben	'எவன்'
e:boḷu	eboḷu	'எவள்'
e:bera	ebera	'யார்' (பன்மை)
e:d̲u	ed̲u	'எது'

இவற்றுள் குறில் ஒலியனுடைய வேற்றுமைத் திரிபுச் சொற்களாக உள்ளன.

11. பணியர் மொழியில் ஏவல் வினைச் சொற்கள் பால் காட்டுவன, பால் பாகுபாடு காட்டாதன என இரு பிரிவுகளாக உள்ளன. பால் காட்டும் ஏவல் வினைச் சொற்கள் (அதாவது பெண்பால், பெண்பால் அல்லாதன) சிறுமி, சிறுவர்களிடம் பேசும்போது முறையே பயன்படுத்தப்படுகின்றன. இவை பொதுவாக, ஏவல் விகுதியை எடுக்காத ஏவல் வினைகளுடன் பொருளிலா மாற்றங்கொண்டுள்ளன. (free-variation)

po:t̲ t̲ama 'போ (பெண்பால்)'

po:t̲ t̲ava 'போ (பெண்பால் அல்லாதன)'

